
# அறம் வளர்த்த அம்மா

டாக்டர் டி.எஸ். சௌந்திரம் வாழ்க்கை வரலாறு

பி.எஸ். சந்திரபிரபு எம்.ஏ., எம்.ஃபில்.,



வெளியீடு :

லெட்சுமி சேவா சங்கம்

காந்திகிராமம் - 624 302.

The Gandhigram
Rural Institute Library
BOOK POCKET
*GANDHIGRAM*
please do not meddle
with this pocket
or the card inside

# 'அறம் வளர்த்த அம்மா'

டாக்டர் டி.எஸ். சௌந்திரம் வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் :
பி.எஸ். சந்திரபிரபு எம்.ஏ., பி.எச்.டி
இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி
இராஜபாளையம் – 1.

வெளியீடு :
காந்திகிராம அறக்கட்டளை
காந்திகிராமம் – 624 302
திண்டுக்கல் மாவட்டம்
✆ (0451) 2452326

**'Aram Valartha Amma'**
-The Biography of Dr. T.S. Soundram


First Edition : 1988 1000 / Copies
Reprint : 2003 500 / Copies



RURAL UNIVERSITY
Dr. G.R. LIBRARY
GANDHIGRAM.



Price Rs. : 40/-



98617



Dr. P.S. Chandraprabhu M.A., Ph.D.,



**Published by :**
GANDHIGRAM TRUST
Gandhigram - 624 302
Dindigul District

**Printed at :**
Lakshmi Seva Sangham,
Gandhigram Offset Press,
Gandigram - 624 302
© (0451) 2453347




Dr. T.S. சௌந்திரம்

**சமர்ப்பணம்**

*மனித குலத்தின், குறிப்பாக*
*அபலைப் பெண்கள் மற்றும்*
*ஆதரவற்ற குழந்தைகளின்*
*மேன்மைக்காக வாழ்ந்து*
*அமரரான அம்மாவின்*
*மலர்ப் பாதங்களுக்கு...*

# அணிந்துரை

(முதற் பதிப்பு)



**வெ. பத்மநாபன்**

கவிஞர்கள், காவிய நாயகர்களாகப் புகழ் பெறுவோரின் கண்ணியத்தையும், புண்ணியத்தையும் நுணுக்கமாகக் கண்டு தேர்ந்து, அதனைத் தெளிவாகப் படம் பிடித்து எளிதாக விவரித்துக் கூறும் கலையில் கைதேர்ந்தவர்கள். இதோ 19–ம் நூற்றாண்டின் சிறந்த ஆங்கிலக் கவிஞரான கார்டினல் ந்யூமென் 'கௌரவத்திற்குரிய கனவானின்' சிறந்த குண நலன்களைக் கோடிட்டுக் காட்டுவதைக் காண்போம்.

இதைப் படிக்கும்போது, நாம் பழகிய, நம்மால் உணர்ந்து அறியப்பட்ட ஒரு ஆன்மாவின் திருவுருவம் நமது அகக்கண்ணில் நிழலாடுவது நிச்சயம். கவிஞரின் பாடற் கருத்துகள் தொடங்குகின்றன; கேட்போம்.

*"உண்மையான நற்பாண்பாளர் தம்முடன் தொடர்பு கொண்டவர்களுடன் பழகும்போது அதிர்ச்சியையோ, ஐயத்தையோ தருகின்ற கருத்துமாறுபாடு, உணர்ச்சிமோதல், கட்டுப்பாடுகள், சந்தேகம், கவலை, ஆத்திரம் ஆகிய இவை எதனையும் எச்சரிக்கையுடன் தவிர்த்து விடுகின்றார். தன்னைச் சுற்றியிருப்போர் அனைவரும், சுயேச்சையாகவும் இயல்பாகவும் இருக்கவே அவர் விரும்புவார். தன் கூட்டாளிகளின் பேரில் அவரது அன்புப் பார்வையும், கவனமும் எப்போதும் இருக்கும்.*

*சகஜமாகப் பழகும் தன்மை இல்லாத கூச்ச சுபாவம் உடையவர்களிடம் தாமாகவே முன்வந்து பழகி அவர்களைத் தன்னவர்களாக்கிக் கொள்ளும் அவரது இனிமையான பண்பும், தன்னைச் சந்திக்க விரும்பாதவர்களையும், அறியாத்தனத்தால் தம்மிடமிருந்து விலகி இருப்போரையும் காந்தமெனக் கவரும் அவரது அருள் ததும்பும் உள்ளமும் நம் மனதைவிட்டு என்றும் அகலாதவை. தன்னுடன் உரையாடும் அன்பர்களின் கருத்துக்களைப் புரிந்து கொண்டு அவர்களைத் தன்வசப்படுத்தும் தன்மை அவருக்குக் கைவந்த கலை. எவருடனும் உரையாடும் போது கோபமூட்டும், பொருந்தாத வார்த்தைகள் எதுவும் தன்னுள் எழாதபடி அவர் தம்மைக் காத்துக் கொள்வார். தம்மை ஒரு முக்கியமானவராகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்ற தற்பெருமை அவரது உரையாடலில் தலைகாட்டாது. சொற்சோர்வு சிறிதுமின்றி செவிகைப்பச் சொற்பொறுக்கும் தன்மையிலும் அவர் தம்மை நிலை நிறுத்திக் கொள்வார்.*

*வற்புறுத்தப்பட்டாலன்றி தம்மைப் பற்றி அவர் பேசுவதில்லை. மறுத்துப்பேசி தனது நியாயத்தை உறுதிப்படுத்தி நிலை நாட்ட எப்போதும் அவர் விரும்புவதில்லை. அவதூறுகளுக்கும் வீண் வம்புகளுக்கும் செவிசாய்ப்பதில்லை. தம் விஷயத்தில் காரணமின்றித் தலையிடுவோரை மடக்கி வெற்றி காண்பதிலும் அவர் அக்கறை காட்டுவதில்லை. வாக்குவாதங்களில் சிறுமையும் அற்பத்தனமும் தன்னை அணுகுவதற்கு அவர் சிறிதும் இடம் கொடுப்பதில்லை. முறையற்ற எவ்விதச் சலுகைகளையும் எவரிடமும் எப்போதும் பெற அவர் விழைவதில்லை. தாம் உதவி பெறுகின்றோம் என்ற உணர்வைத் தேவையுள்ளவர்களிடம் ஏற்படுத்தாமலேயே கைகொடுத்து ஆதரிக்கும் அன்புள்ளம் அவரிடமுண்டு. முரண்பாடுகளின்போது நியாயமற்ற முறையில் எதையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள அவர் முயலுவதில்லை. வெளியிடுவதற்குத் தகாத எந்த விபரீதமான எண்ணங்களையும் தம் மனதில் இடம்பெற அவர் அனுமதிப்பதில்லை. தொலை நோக்குள்ள அறிவாற்றல் அவரிடம் இயல்பாக அமைந்திருப்பதால், இன்று பகைமை பாராட்டுபவர் நாளையதினம் நமது நண்பராகி விடுவார் என்ற நம்பிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்ற பண்டைக்கால ஞானியின் பொன்மொழியைப் போற்றிப் பின்பற்றுபவராக இருப்பார்"* பெருங்கவிஞர் கார்டினல் ந்யூமென் தனக்கே உரித்தான சிறப்பான நடையில் இவ்வாறு எடுத்துக் காட்டியுள்ள இலக்கணங்களை உடைய ஒரு பெருந்தகையாளரைக் காண்பது அரிதென நமக்குத் தோன்றலாம்.

ஆனால் **அம்மா** என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்பட்ட அமரர் டாக்டர் சௌந்திரம் அவர்களுடன் பணியாற்றும் நற்பேறு பெற்றவர்களுக்கு மேற்குறிப்பிட்ட கவிஞர் படம் பிடித்துக் காட்டிய பண்பாளரைக் காட்டிலும் மேலான ஒருவருடன் பழகிய அனுபவம் கிடைத்திருக்கும். தியாகம், அர்ப்பணிப்பு எனும் தனது இரு நீண்ட அன்பின் கரங்களால் சேவை புரிவதில் அம்மா அவர்கள் பேரானந்தம் கொண்டார். பரோபகாரத்தில் அன்னை தெரஸாவாகவும் தன்னலமற்ற உதவி புரிவதில் பாரி போன்றும் அவர் விளங்கினார். தான் சந்திக்கும் ஒவ்வொருவரிடத்திலும் மானிடத்தின் மாட்சியினையும் இறைவனின் இன்பக் காட்சியினையும் அவர் கண்டார். அறப்பண்பில் இமயமென உயர்ந்து நின்றவர் நமது அம்மா. பாசத்தையும் உயர் நேசத்தையும் பண்பாகக் கொண்டதால் அனைவராலும் அன்பு அன்னையாக உணரப் பெற்றார்.

**காந்திகிராமம்** எனும் அரிய நிறுவனமானது மதிப்பிற்குரிய அம்மா அவர்களின் நினைவிற்குரிய ஒரு பொருத்தமான காணிக்கையாகுமெனப் பலருக்குத் தோன்றலாம். ஆனாலும், அம்மா அவர்கள், தான் உருவாக்கிய இந்த நிறுவனத்தைக் காட்டிலும் நெடிதுயர்ந்தவராவார். நமது அம்மா அவர்களின் நெகிழ்ந்த அன்புள்ளத்தில் ஆயிரக்கணக்கான துன்புற்ற மனிதர்களும் குறிப்பாகப் பாதிக்கப்பட்ட தாய்மாரும், குழந்தைகளும் ஒரு



தெய்வீகமான மாளிகையைத்தான் கண்டார்கள். அம்மா அவர்கள் தனக்கென்று ஒரு நினைவுச் சின்னம் அமைப்பதையோ தனது வாழ்க்கை வரலாற்றை எழுதி வெளியிடுவதையோ சிறிதும் விரும்பியவரல்லர்; உண்மையில் இவைகளை அவர் எதிர்க்கவே செய்தார். என்றாலும், அவரது இந்த குண நலத் தன்மைதான் நன்றியுணர்வுள்ள ஒரு குழுவினைத் தூண்டி, அவர்தம் வரலாற்றை எதிர்காலத்தவர்க்கு எடுத்துரைக்கும் ஒரு செயலில் இறங்கக் கட்டாயப்படுத்தியது. நமது தேசப்பிதா மகாத்மா காந்தி அடிகளாரின் வழி நடந்த இந்த உன்னதமான ஆத்மாவின் பல்வேறுபட்ட குணாதிசயங்களை ஒருமுகப்படுத்தி ஒரு நூலின் வாயிலாக தருவதென்பது அரிய செயல்தான்.

இந்த அருஞ்செயலை முடித்த பெருமை, இவ்வாழ்க்கைச் சரித்திரத்தை எழுதிமுடித்த இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரியின் பேராசிரியர் திரு. சந்திரபிரபு அவர்களையே சாரும். இந்த வாழ்க்கைச் சரித நூலை உருவாக்குவதற்காக இந்த அன்பர் செய்திகளைச் சேகரிப்பதற்குத் தளராத ஆர்வத்துடனும் சலிப்படையாத முயற்சியுடனும் டாக்டர் சௌந்திரம் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும், அவருடன் அரசியலில் நெருக்கமாக இருந்தவர்களையும், ஆதரவற்ற நிலைமையையும் வறுமையினையும் எதிர்த்துப் போராடித் துணிகரமான செயலில் அவருடன் தோளோடு தோள் நின்று உழைத்த அன்பர்களையும், பல்வேறுபட்ட சிக்கலான தன்மை கொண்ட நபர்களையும் சந்தித்துள்ளார். சௌந்திரம் அம்மா எனும் அருமையானவரின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒரு உன்னத சகாப்தத்தின் வடிவமாக கோர்வையுடன் ஒருமுகப்படுத்தி எழுதிய சாதனையில் அயராத முயற்சியுடைய இந்த இளம் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார்.

திரு. சந்திரபிரபு அவர்கள் இதற்கான உத்வேகத்தையும் அறிவுரைகளையும் கல்லுப்பட்டி திரு. ஸ்ரீனிவாஸன் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார். திரு. கல்லுப்பட்டி ஸ்ரீனிவாஸன் அன்பிற்குரிய அம்மா அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பற்றிய ஆதாரச் செய்திகளை சேகரிப்பதில் இருமடங்கு உழைத்துள்ளார். காந்திகிராம அறக்கட்டளை திரு. சந்திரபிரபு அவர்களுக்கும் திரு. கல்லுப்பட்டி ஸ்ரீனிவாஸன் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்துக் கெள்கின்றது. இந்த நூல் அம்மா அவர்களுடன் உழைத்தவர்களை அவர்களது பணிக்கால நினைவலைகளினூடே கொண்டு செல்வதுடன், எதிர்காலத்தில் சேவைக்கான ஆர்வத்தையும் ஆற்றலையும் பெற விரும்பும் ஒவ்வொருவருக்கும் உணர்ச்சியூட்டி வழிகாட்டி உதவுமென நம்புவோமாக!

*வெ. பத்மநாபன்*
நிர்வாக அறங்காவலர்
காந்திகிராம அறக்கட்டளை

காந்திகிராமம்
15–10–88



# அணிந்துரை

(மறுபதிப்பு)

Dr. R. கௌஸல்யா தேவி
*நிர்வாக அறங்காவலர்*

அம்மா, டாக்டர் சௌந்தரம் அவர்களின் வாழ்க்கை மிகவும் மேன்மையானது. அவருடன் பழகவும், உடன் பணிபுரியவும் கிடைத்த வாய்ப்பு, நிறையப்பேர் வாழ்க்கையை மேம்படுத்தவும் தொண்டுள்ளத்துடன் பணிபுரியவும் வழி காட்டிக் கொண்டிருக்கிறது.

பல அரிய சாதனைகளைப் புரிந்த அந்தத் தாய் அவ்வாறு பணிபுரிய தனக்கு பகவான் துணை நின்றதாகக் கூறுவார். தன் பணிகளுக்கு வழிபாட்டிய மூவரை அவர் அடிக்கடி நினைவு கொள்வார். முதலில் தன் தாய், திருமதி லெட்சுமி அவர்கள்; இரண்டாவது மருத்துவ சேவைக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்கள்; மூன்றாவதாகவும் மிகவும் முக்கியமாகவும் மகாத்மா காந்தி அவர்கள். சிறுவயது முதலே ஜாதி, மத பேதமின்றி எல்லோரையும் மிக்க அன்புடன் நடத்தியவர் அந்தத் தாய். மருத்துவ சேவையில் தொண்டுள்ளத்துடன் வாழ்க்கையில் வசதி குறைந்த கிராம மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய வழி காட்டியவர் டாக்டர் முத்துலட்சுமி. தான் டாக்டர் என்பதால் மருத்துவத் தொழில் மட்டும் சேவை மனப்பான்மையுடன் செய்தால் போதாது. தன் சேவை ஒருங்கிணைந்த கிராமத் தொண்டாக (Integrated Rural Development) இருக்க, சுகாதாரம், கல்வி, வருமான முன்னேற்றம், சமூக சேவை இவைகளை இணைந்த தொண்டாக இருக்க வேண்டும் என்ற முக்கியத்துவத்தை சொல்லிக்கொடுத்து வழிகாட்டியவர் மகாத்மா காந்தி என்பார்.

பொதுவாக பேசிக்கொண்டிருக்கும்பொழுது மிகவும் நெருங்கிய நண்பர்கள் அல்லது உடன் பணி செய்தவர்கள் "அம்மா, நீங்கள் இந்த ஜென்மத்தில் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள்; இன்னொரு ஜென்மம் எடுத்தால் நீங்கள் எப்படி இருக்க ஆசைப்படுகிறீர்கள்" என்று கேட்டால் அம்மாவிடமிருந்து பதில் மிக வேகமாக வரும் "ஒரு ஜென்மம் என்ன? ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும் நான் இப்படியே பணி செய்ய பகவான் வழிகாட்ட வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்" என்பார்.

தன்னைப் பற்றி மற்றவர்கள் பெருமையாகப் பேசினால் அதைப் பொறுக்காத அவர், தன்னுடன் பணி செய்தவர்களின் பணி, சேவையை பெருமைப்படுத்துவார். பெண்ணிற்கு பெருமைதேட உதவி, வழிகாட்டியவர்; குழந்தைகள்பால் ஆழ்ந்த அன்பு கொண்டவர்.



தான் இறந்தபின் அஸ்தியை திருப்புல்லாணியில் கரைக்கவும், ஒரு சிறுபகுதியை காந்திகிராமத்தில் குழந்தைகள் விடுதி அருகில் தன் நினைவுச் சின்னமாக வைக்கவும் அனுமதி கொடுத்தார்.

அம்மா அவர்களின் குறையாத அன்பும், தீராத சேவையும் எல்லோருக்கும் தொடர்ந்து வழி காட்டவும், அவரை நேரில் தெரியாத இளைய தலைமுறையினர் அவர் வாழ்க்கையை ஊன்றிப் படித்து முன்னேறவும், பணி செய்யவும் உதவியாக இருக்கவே "அறம் வளர்த்த அம்மா" என்ற இந்த வழிகாட்டும் வாழ்க்கை வரலாறு மறுபதிப்பாக வெளிவருகிறது.

*ர. கௌஸல்யா தேவி*

| | |
|---|---|
| காந்திகிராமம் | நிர்வாக அறங்காவலர் |
| 15-02-2003 | காந்திகிராம அறக்கட்டளை |



# என்னுரை

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா.

-கவிமணி

Dr. P.S. சந்திரபிரபு
*ஆசிரியர்*

மகாத்மா என்று உலகமே போற்றும் உத்தமர் நமது தேசப்பிதா காந்தியடிகள். அவரைப் பற்றி உலகம் அறியும். அதனால் அவரை மகாத்மா என்றழைக்க இவ்வுலகம் தயங்கவில்லை. அதேசமயம் எவ்வித சுய விளம்பரமுமின்றி, சொந்த பந்தங்களையெல்லாம் மறந்து, இன்ப துன்பங்களையெல்லாம் துறந்து, தங்கள் வாழ்நாள் முழுவதையும் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காகவும் தியாகம் செய்து பல மகாத்மாக்கள் நாடு முழுவதும் ஆங்காங்கே தோன்றி வாழ்ந்துவந்தார்கள் என்பதையும் வரலாறு நமக்குத் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. அத்தகைய பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரிய பெரியோர்களில் சௌந்திரம் அம்மையாரும் ஒருவராவார். எளிய வாழ்க்கை, உயரிய சிந்தனை, அயராத உழைப்பு, நம்பிக்கை, தன்னலமற்ற சேவை ஆகியவற்றிற்கு தளராத இலக்கணமாக விளங்கியவர் இவர்.

இந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாகும். இந்த காலகட்டத்தில்தான் நாடெங்கும் பல தேசத் தலைவர்கள் தோன்ற ஆரம்பித்தார்கள். காந்தியடிகளின் தலைமையின் கீழ் பலர் குடும்பம் குடும்பமாக சுதந்திரப் போரில் பங்கு கொண்டனர். சுதந்திரப் போராட்டம் என்ற நீரோட்டத்தில் பல குடும்பங்கள் தங்களை ஒருங்கிணைத்துக் கொண்டன. அத்தகைய குடும்பங்களில் ஒன்றுதான் மதுரையில் வாழ்ந்த டி.வி. சுந்தரம் அய்யங்காரின் குடும்பம். இக்குடும்பத்தில் பிறந்த சௌந்திரம் இளம் வயதிலேயே தேசப் பற்றுடையவராக விளங்கினார். அப்போதிருந்த அரசியல் சூழ்நிலையில், பெரும்பாலும் ஆண்களே சுதந்திரப் போரில் பங்கெடுத்துக்கொண்டு வந்தனர். தமிழ் நாட்டிலும் இதே நிலைதான் காணப்பட்டது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மதுரையிலுள்ள பெண்களையெல்லாம் ஒன்று திரட்டி, சுதந்திரப் போரில் பெண்களின் பங்கு குறைந்ததல்ல என்று கூறும் அளவிற்கு கதர்ப் பணி, அந்நியத் துணி பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியல் போன்ற போராட்டங்களில் சௌந்திரம் ஈடுபட்டு வந்தார். பெரும் செல்வக் குடும்பத்தில் பிறந்த சௌந்திரமே போர்க்களத்தில் நின்று போராடியதால் ஏனைய பெண்கள் அவரது தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டனர் தமிழ் நாட்டில் மட்டுமல்லாது தென்னிந்தியாவிலேயே மதுரை நகரில் தான் ஏராளமான



பெண்கள் சுதந்திரப் போரில் தீவிரமாகப் பங்குகொண்டு சிறை சென்றனர். அத்தகைய பெருமைக்குக் காரணமாக விளங்கியவர்கள் சௌந்திரமும் அவரது குடும்பத்தாரும் ஆவர்.

இளமைப் பருவத்தில் சுதந்திரப் போரில் பங்கு கொண்ட சௌந்திரம், தனது மருத்துவப் படிப்பை முடித்த பின் கிராம சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அதனைத் தொடர்ந்து கஸ்தூரிபா காந்தி தேசீய நினைவு நிதியின் தமிழ்நாட்டுக் கிளையில் அதன் பிரதிநிதியாகச் செயல்படத் துவங்கினார். இத்தருணத்தில் கிராம சேவைக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் இவரது தலைமை மிகவும் இன்றியமையாததாக விளங்கியது. கிராமப்புறங்களில் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி, சௌந்திரம் முழுமையாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். இதனால் காந்தியடிகள் உள்பட பல தேசத் தலைவர்களின் ஆசியும், ஆதரவும் அபரிமிதமாக அவருக்கு கிடைத்தன. ஒரு பெண்ணால் அதிகபட்சமாக எவ்வளவு தூரம் மானிட சேவை செய்ய முடியுமோ அந்த அளவிற்கு சேவையாற்றித் தென்னகத்திலே தன்னிகரற்ற தியாகச் சுடராக விளங்கியனார்.

ஆதாரக் கல்வியில் பல அற்புதங்களைச் செய்தவர் சௌந்திரம். படித்த மாணவர்களிடையே சுய வேலை வாய்ப்பை உருவாக்கவும், படித்த கல்வியானது வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க வகையில் இருத்தல் வேண்டும் என்பதற்காகவும் காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகத்தை உருவாக்கி ஆதாரக் கல்வியில் தென்னகத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்தியவர் சௌந்திரம். தாய் தந்தையர் யார்? என்று கூட அறியாத ஏராளமான அனாதைக் குழந்தைகளுக்குக் கல்வி கொடுத்து, அவர்களையும் சிறந்த குடிமக்களாக உருவாக்கினார். சமுதாயத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்ட பெண்களுக்கு கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளைக் கொடுத்து கௌரவத்தோடும், கண்ணியத்தோடும் வாழ வழிவகை செய்து, சமுதாய மறுமலர்ச்சிக்குப் பச்சைக் கொடி காட்டியவர் சௌந்திரம். பெண்களின் முன்னேற்றத்திற்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக்கொண்ட சௌந்திரத்திற்கு 1962ம் ஆண்டு "பத்மபூஷண்" என்ற விருதை இந்திய அரசு வழங்கிக் கௌரவித்தது. இவ்விருது வழங்கப்பட்டதிலிருந்து இந்திய சமுதாயத்திற்கு சௌந்திரம் செய்த தியாகம் எத்தகையதாக இருந்து வந்திருக்கிறது என்பது நன்கு புலனாகிறது.

காந்திகிராமம் ஸ்தாபிக்கப்பட்ட காலம் தொட்டு கிராம சுகாதாரத்திற்கும், கதர் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திக்கும் சௌந்திரம் சிறந்த தொண்டாற்றி வந்தார். கஸ்தூரிபா மருத்துவ மனையை ஏற்படுத்தி அதன்மூலம் கிராம மக்களின் சுகாதார வாழ்விற்காக மருத்துவ சேவை செய்து வந்தார். அதே போன்று நூற்பு, நெசவு, கிராமக் கைத்தொழில் போன்றவற்றில் பயிற்சியளித்து

ஆயிரக்கணக்கான கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்து கொடுத்தார். சென்னை சட்டசபை உறுப்பினராக இருந்தபோதும், மத்திய துணை அமைச்சராகப் பணியாற்றிய போதும் அப்பழுக்கற்ற அரசியல் வாழ்க்கை வாழ்ந்து காட்டினார். தமிழ் நாட்டின் தொழில் மற்றும் விவசாய வளர்ச்சிக்காகப் பல முன்னோடித் திட்டங்களை அரசுக்கு வகுத்துக் கொடுத்ததோடு அவைகளை செயல்படுத்தவும் செய்தார்.

சௌந்திரம் ஒரு அமைதியின் பாதுகாவலர். இவரது சேவை ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் விடிவெள்ளியாக அமைந்திருந்தது. ஆயிரக்கணக்கான ஹரிஜனங்களின் உயிரைக் காப்பாற்ற இறைவனால் அனுப்பப்பட்ட தூதுவராக சௌந்திரம் விளங்கினார். அவர் ஹரிஜனங்களுக்காகச் செய்த சேவைகள் மகத்தானவை. தமிழ் நாடெங்கும் பல்வேறு காலகட்டங்களில் அவ்வப்போது நடைபெற்ற சமூகக் கலவரங்களின்போது தனது உயிருக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாது அமைதிப் பணியாற்றினார். ஹரிஜனங்களுக்குச் சமநீதி கிடைக்கவும், சமூகக் கொடுமைகளிலிருந்து பாதுகாக்கவும் மத்திய, மாநில அரசுகளோடு போராடினார். அதில் பல வெற்றிகளையும் பெற்றார்.

சௌந்திரம் ஒரு சிறந்த வெற்றியாளர். வாழ்க்கையில் தன்னை எதிர்த்து நின்ற அனைத்துச் சவால்களையும் துணிவுடன் எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றார். ஆரம்பகாலத்தில் பெற்றோர்களும், பிற்காலத்தில் காந்திகிராம ஊழியர்களும் அவரது சாதனைகளுக்கு உறுதுணையாய் விளங்கினர். தன் வாழ்நாள் முழுவதையும் தேசத்திற்குப் பயன்படத்தக்க வகையில் செலவு செய்துவந்தார். தான் ஒரு சமூக சேவகியாக இருந்ததோடு மட்டுமல்லாது தன்னலமற்ற பல சமூக சேவகிகளையும் நாட்டிற்கு உருவாக்கிக் கொடுத்தார். இவரது வாழ்க்கையும், பணிகளும் இக்கால இளைஞர்களுக்கு முன் மாதிரியாக விளங்குகின்றன. சுதந்திரப் போராட்ட காலத்திலும், சுதந்திரத்திற்குப் பின்பும் எப்படிப்பட்ட தியாகிகள் தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதைத் தற்போது இளைய தலைமுறையினர் அறிந்துகொள்வதற்கு சௌந்திரம் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. குறிப்பாகப் பெண்கள் அனைவரும் சௌந்திரத்தின் வாழ்க்கையை அறிந்துகொள்வது இன்றியமையாததாகும். செல்வக் குடும்பத்தில் பிறந்து உயர் கல்விகற்றுப் பல பட்டங்களையும் பெற்றாலும் கூட, ஒரு பெண் என்பவள் நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ள பல சேவைகளைச் செய்து, நாடு போற்றும் புதுமைப் பெண்ணாகத் திகழ முடியும் என்ற நம்பிக்கையை இக் காலப் பெண்களுக்குப் புகட்டும் விதத்தில் சௌந்திரத்தின் வாழ்க்கை அமைந்துள்ளது.



சௌந்திரத்தின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பணியை எனக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியமாகவே நான் கருதுகிறேன். இந்தப் பாக்கியத்தை எனக்குக் கொடுத்தவர் காந்திகிராம அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் திரு. வெ. பத்மநாபன் அண்ணா அவர்களாவார். இந் நூல் வடிவமைக்கும்போது அதன் ஒவ்வொரு நிலையிலும் எனக்குத் தேவையான குறிப்புகளை வழங்கி, உற்சாகப்படுத்திய அண்ணா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந் நூலைத் தயாரிக்கும்போது அருகிலிருந்து சகல உதவிகளையும் செய்து கொடுத்த எனது பெற்றோர்களுக்கும் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன். இந் நூல் எனது ஓராண்டுகால விடாமுயற்சியினால் கிடைத்த பலன் என்று கூறலாம். இம் முயற்சியின் போது காந்திகிராமத்தின் ஒவ்வொரு யூனிட்டிலும் பணியாற்றும் ஊழியர்கள் அனைவரும் எனக்கு மிகுந்த உதவியாக இருந்து பல குறிப்புகளை வழங்கி உற்சாகப்படுத்தினார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது எழுத்தாற்றலை ஊக்கப்படுத்திவரும் இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி நிர்வாகத்தினருக்கும், ஆசிரிய நண்பர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. மிகக் குறுகிய காலத்திற்குள் தெளிவான முறையில் இந் நூலை அச்சிட்டபோது பிழைகளை திருத்தி உதவிய தம்பித்தோட்டம் மேல்நிலைப்பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் திரு.கோ. இராமர் எம்.ஏ.பி.எட். அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராஜபாளையம்

10-9-88 *பி.எஸ். சந்திரபிரபு*

## உள்ளே


| | | |
|---|---|---|
| அணிந்துரை (முதற் பதிப்பு) | ... | (i) |
| அணிந்துரை (இரண்டாம் பதிப்பு) | ... | (iv) |
| என்னுரை | ... | (vi) |
| சௌந்திரத்தின் இளமைப் பருவம் | ... | 1 |
| சுதந்திரப் போரில் சௌந்திரம் | ... | 21 |
| அடையாறில் அம்மா | ... | 34 |
| காந்திகிராமும் கல்விப் பணியும் | ... | 47 |
| சௌந்திரமும் சௌபாக்கியமும் | ... | 66 |
| அம்மாவின் ஆக்கப் பணிகள் | ... | 84 |
| அம்மாவும் ஔவை ஆசிரமமும் | ... | 106 |
| ஹரிஜன நலப்பணியில் அம்மா | ... | 120 |
| சட்டமன்றத்தில் சௌந்திரம் | ... | 140 |
| அமைச்சராக அம்மா | ... | 161 |
| தியாகச் சுடர் | ... | 174 |

RURAL UNIVERSITY
Dr. G.R. LIBRARY
GANDHIGRAM
98619

# 1. சௌந்திரத்தின் இளமைப் பருவம்

தூய கதராடை, எளியதோற்றம், உறுதியான தேகம், நிமிர்ந்த நடை, புன்னகை தவழும் பரந்த முகம், விரிந்த நெற்றி, கனிவான கண்கள், வெள்ளை உள்ளம், அன்புக் கரங்கள். இவர்தான் நூற்றுக்கணக்கான குழந்தைகளால் அம்மா... அம்மா... என்று வாயார வாழ்த்தப்பட்ட அன்னை சௌந்திரம். இவரது தகப்பனார் பிரபல தொழில்அதிபரான டி.வி.எஸ். என்று அழைக்கப்பட்ட டி.வி.சுந்தரம் அய்யங்கார் ஆவார். தாயார் லட்சுமி அம்மாள். தென்பாண்டிச்சீமை திருநெல்வேலி மாவட்டத்தின் தென் பகுதியில் அமைந்துள்ள திருக்குறுங்குடி என்ற அழகிய கிராமம்தான் டி.வி.எஸ். ஸின் சொந்த ஊர். திருக்குறுங்குடி ஒரு வைஷ்ணவத் திருத்தலமாகும். இக்கிராமத்தில் எங்கு நோக்கினாலும் இயற்கையின் ஆட்சியைக் காணலாம். ஊரின் நடுவில் உயர்ந்து நிற்கும் அழகிய கோபுரம்; சிற்பங்கள் மலிந்த மண்டபம் இம் மண்டபத்தின் மத்தியில் இறைவன், நம்பி என்ற பெயரில் பொலிவுடன் நின்று திருக்கோலத்தில் காட்சி தருகின்றார். காண்போரைக் கவரும் காந்த சக்தியுடைய நம்பியின் திருவுருவ வடிவழகிலே தங்களை மறந்த நிலையில் ஆழ்ந்து போனதினால்தான் ஆழ்வார்கள் என்ற பெயர் பெற்றார்கள். அவர்களில் நம்பியாழ்வார் முதல் திருமங்கையாழ்வார் வரை பல ஆழ்வார்கள் நம்பியின் திருவழகிலே தங்களை மறந்து ஈடுபட்டு, அனுபவித்துத் திளைத்து பல பாமாலைகளை வழங்கியருளி உள்ளார்கள். இத்தகைய சிறப்புக்களைக் கொண்டது திருக்குறுங்குடியாகும்.

வேதங்களைக் கற்றறிந்து சிறந்த ஞானிகளாக விளங்கிய பல வைதீகப் பிராமணக் குடும்பங்கள் இவ்வூரில் வாழ்ந்து வந்தன. அத்தகைய சிறந்த கல்வியும் பரந்த ஞானமும் கொண்ட குடும்பங்களில் ஒன்றுதான் சுந்தரம் அய்யங்காரின் குடும்பமாகும். சுந்தரம் அய்யங்காரின் தகப்பனார் அக்காலத்தில் ஒரு பிரபலமான வழக்கறிஞர். இவரது முன்னோர்கள் அனைவருமே கல்விக்கு அதிபதியான அன்னை சரஸ்வதியின் அருள் பெற்றவர்கள். இவரது துணைவியார் திருமதி லட்சுமி அம்மையார் நாகர்கோவிலுக்கு அருகிலுள்ள வடிவீஸ்வரம் என்ற இடத்தைச் சார்ந்தவர். லட்சுமி அம்மையாரின் குடும்பம், கல்வியிலும் செல்வத்திலும் திளைத்த பண்பான குடும்பமாகும். லட்சுமி அம்மையாரைப்பற்றி நிறையக் கூறலாம். இவர் தனது இல்லற வாழ்க்கையில் எட்டுக் குழந்தைகளுக்குத் தாயானவர். இல்லத் தலைவிகளுக்கு இலக்கணமானவர்; அன்புள்ளம் கொண்டவர்;

சிறந்த பக்திமான்; கடமைப்பற்று மிக்கவர்; தெளிவான சிந்தனையுடையவர்; முற்போக்கான கொள்கைகளையுடையவர்; தொண்டுள்ளம் கொண்ட சேத பக்தர்; சுந்தரம் அய்யங்காரின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும் உறுதுணையாய் நின்றவர். இப்படியாகக் கூறிக் கொண்டே செல்லலாம். சுந்தரம் அய்யங்கார் தனது இளம்பிராயத்திலிருந்தே கல்வியில் ஆர்வம் உடையவர். திருநெல்வேலிக்கருகில் பேட்டை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்த சமயம் மோட்டார் தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது. படிப்பை நிறுத்திவிட்டு சிறிய அளவில் தொழில் ஆரம்பித்தார். நாளடைவில் பல்கிப் பெருகி ஒரு பெரிய மோட்டார் நிறுவனமாக வளர்ந்தது. இதனால் இவரது இல்லத்தில் செல்வத்தரசி லட்சுமி குடிபுக ஆரம்பித்தாள். சுந்தரம் அய்யங்கார் தொழிலில் பற்றுடையவர்; விடா முயற்சியுடையவர்; கடமையைத் தெய்வமாக மதித்துப் போற்றியவர், தயாளகுணம் படைத்தவர். இத்தகைய சிறந்த குண நலன்களைக் கொண்ட தம்பதிகளுக்கு 1905 ஆகஸ்ட் மாதம் 18 ம் தேதி ஒரு பெண் குழந்தை பிறந்தது. காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் குழந்தை அழகாக இருந்ததால் பெற்றோர்கள் சௌந்திரம் எனப் பெயரிட்டார்கள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக குழந்தை வளர்ந்தது. சௌந்திரம் குழந்தைப் பருவத்திலேயே கூரிய மதிநுட்பமும் சுறுசுறுப்பும் மிக்கவராகக் காணப்பட்டார். சௌந்திரத்திற்கு ராஜம், துரைச்சாமி, கிருஷ்ணா, சந்தானம், ஸ்ரீனிவாசன் ஆகிய சகோதரர்களும், அம்மு அம்மாள், ரெங்கநாயகி என்ற இரு சகோதரிகளும் இருந்தனர். சௌந்திரம் தனது சகோதர, சகோதரிகளுடன் மிகுந்த பாசத்தோடு பழகுவார். எப்பொழுதும் சிரித்து மகிழ்ந்து கலகலப்பாக இருப்பார். தனது சகோதரர்களைக் கேலியும் கிண்டலும் செய்து மகிழச்செய்வார். எதற்கெடுத்தலும் பல கேள்விகளைக் கேட்டு தனது சகோதரர்களைத் திணறடிப்பார். பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வமும், வீணாகப் பொழுதைக் கழிக்காமல் ஏதாவது வேலை செய்து கொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வும் இளம் வயதிலேயே சௌந்திரத்திடம் காணப்பட்டது.

லட்சுமி அம்மையார் தன் மகளுக்கு அவ்வப்போது பல நீதிக்கதைகளைச் சொல்லுவார். வேதங்கள், புராணங்கள் போன்றவற்றிலிருந்து பல நிகழ்ச்சிகளை விளக்கிக் கூறுவார். சங்ககாலப் பெண் புலவரான ஔவைப்பிராட்டியின் வாழ்க்கை வரலாற்றையும் ஆத்திசூடி போன்ற அவரின் பாடல்களையும் கற்றுக்கொடுப்பார். இதன் கராணமாக சிறுவயதிலேயே ஔவைப்பிராட்டியின் மீது சௌந்திரத்திற்குப் பற்றும் மரியாதையும் ஏற்பட்டது. புரட்சிக் கவிஞர் சுப்பிரமணி பாரதியின் பாடல்களென்றால் லட்சுமி அம்மையாருக்கு அதிகப் பிரியம். பாரதியின் பாடல்



புத்தகங்களை அதிகமாக வாங்கிப் படிப்பார். தான் படித்ததோடு மட்டுமல்லாது தனது மகள் சௌந்திரத்திற்கும் சொல்லிக்கொடுப்பார். சொல்லிக்கொடுத்த பாடல்களை சௌந்திரத்தைப் பாடச் செய்து கேட்டு மகிழ்வார். சௌந்திரத்தின் குரல் இனிமையைக் கேட்டுத் தாயார் அகமகிழ்வார். இதன் காரணமாக சௌந்திரத்திற்கு பாரதியார் மீதும், அவரது பாடல்கள் மீதும் உயரிய பக்தி ஏற்பட்டது. மேலும், தனது தாய் கொடுத்த பயிற்சியால் சிறு குழந்தையாக இருந்தபோதே பாரதியின் பாடல்கள் பலவற்றையும் நன்கு மனப்பாடம் செய்துகொள்ளவும் முடிந்தது. தாயைப்போல சௌந்திரமும் பாரதியின் பாடல்களில் தன்னை ஒருங்கிணைத்துக் கொண்டார். சௌந்திரத்தின் குரல் இனிமையைக் கண்டு மகிழ்ந்த லட்சுமி அம்மையார், அவருக்கு சங்கீதம் கற்றுக்கொடுக்க விரும்பினார். சௌந்திரத்திற்கும் சங்கீதம் கற்றுக் கொள்ள ஆர்வம் இருந்தது. தாயின் இசைஞானம் மகளுக்கும் அப்படியே இருந்தது. திருக்குறுங்குடியில் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே மிகவும் புகழ்பெற்று விளங்கிய வீணை வித்வான் திரு. முத்தையா பாகவதர் அவர்களிடம் சங்கீதம் கற்றுக்கொள்ள சௌந்திரம் அனுப்பப்பட்டார். பத்து வயது சிறுமியாக இருந்தபோதே நன்கு பாடவும், வீணை மீட்டவும் சௌந்திரம் கற்றுக்கொண்டார்.

லட்சுமி அம்மையார் நம்பியை வழிபட நாள்தோறும் கோவிலுக்குச் செல்வார். அப்போது சௌந்திரத்தையும் உடன் அழைத்துச்செல்வார். அச்சமயங்களில் நம்பி எழுந்தருளியதன் வரலாற்றையும், திருத்தலப் பெருமைகளையும் தனது மகளுக்கு விளக்கிக் கூறுவார். தனது மகள் பக்தியுள்ளம் கொண்டவளாக இருக்க வேண்டுமென விரும்பினார். அவ்வாறே சௌந்திரமும் தெய்வப் பற்றுடையவராக வளர்ந்து வந்தார். அதேவேளையில் மூடப்பழக்க வழக்கங்களை ஒருபோதும் தன் மகளுக்கு கூறமாட்டார். தெரிந்தோ தெரியாமலோ தேவையற்ற சாத்திரம் சம்பிரதாயங்களைப் பின்பற்ற தனது மகளை அனுமதிக்கவே மாட்டார். அச்சம், கோழைத்தனம் என்றால் என்ன என்பது கூட அறியாவண்ணம் வளர்த்து வந்தார். இதனால் சௌந்திரத்திற்கு அவரது பாலிய வயதிலேயே துணிவு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கூடியவரை பிறரைச் சார்ந்திராத தன்மை, சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் மனப்பக்குவம் போன்ற நற்பண்புகள் வளர்ந்தோங்கின. குறிப்பாகச் சொல்லப்போனால் லட்சுமி அம்மையார் தன் மகளை வளர்த்து வந்தார் என்பதைவிட பயிற்சியளித்து வந்தார் என்றே கூறலாம்.

நிறையப் புத்தகங்கள் படிப்பது, பாடுவது, நீந்துவது போன்றவை சௌந்திரத்தின் பொழுது போக்குகளாகும், திருக்குறுங்குடியில் ஓடுகின்ற ஆற்றிற்கு நம்பியாறு என்று பெயர். விடுமுறை நாட்களில் தனது தோழிமார்களை அழைத்துக்கொண்டு ஆற்றிற்குக்

குளிக்கச்செல்வார். நீந்துவதில் சௌந்திரத்திற்கு நல்ல ஆர்வம் உண்டு. ஆசைதீர நீந்தி விளையாடுவார். சிறுவயதிலேயே குழந்தைகள் மத்தியில் சௌந்திரத்திற்கு நல்ல செல்வாக்கு உண்டு. காரணம், விளையாடுவதிலும், மற்ற பொழுது போக்குகளிலும் ஏனைய குழந்தைகளை நெறிப்படுத்துவது சௌந்திரம்தான். பிறரை வழி நடத்திச் செல்லும் ஆளுமைப் பண்பு சௌந்திரத்திடம் இருந்தது. ஒரு சமயம், சகதோழிகளுடன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தபோது ஒரு யானை வந்தது. யானைப் பாகனும் அதனருகில் வந்து கொண்டிருந்தான். ஆனால் குழந்தைகளுக்கோ யானையைக் கண்டதும் ஒரே அச்சம். விளையாட்டை விட்டுவிட்டு குழந்தைகள் ஓட ஆரம்பித்தன. எல்லாக் குழந்தைகளும் வீடுகளுக்குள் சென்று ஒளிந்து கொண்டன. ஆனால் சௌந்திரமோ அவ்வாறு ஓடி ஒளியாமல் யானை அசைந்து வருவதை நடுத்தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். யானை சௌந்திரத்தை நெருங்கி வந்து கொண்டிருந்தது. அப்போது கூட ஓடவில்லை. சிறு குழந்தை யானை வரும்போது நடுத்தெருவில் நின்று கொண்டிருக்கிறதே என்பதைக் கண்ட ஒரு பெரியவர், உடனே சௌந்திரத்தை ஓரமாக அழைத்துச்சென்று வீட்டில் கொண்டுவந்து விட்டுச் சென்றார். அதாவது, யானை வந்தால் ஓடிவிட வேண்டும் என்ற அச்ச உணர்வே சௌந்திரத்திடம் இல்லை. அதே போன்று மற்றொரு நிகழ்ச்சியும் குறிப்பிடலாம். அதாவது, அக்காலத்தில் கிராமங்களில் வருடா வருடம் திருவிழாக்கள் நடக்கும். அப்போது அருகிலுள்ள கிராம மக்கள் மாட்டுவண்டிகளில் சென்று திருவிழாவைக் கண்டுகளித்து வருவார்கள். மாட்டுவண்டிகள் செல்லும்போது வண்டிக்கு முன் ஒரு பலம் வாய்ந்த ஆள் கையில் ஒரு தடியுடன் சென்று கொண்டிருப்பார். பாதுகாப்பிற்காக அவ்வாறு செல்வது வழக்கம். ஒரு சமயம், அருகிலுள்ள ஒரு கிராமத் திருவிழாவிற்கு சௌந்திரம் வீட்டிலிருந்து மாட்டு வண்டியில் சென்றனர். சௌந்திரம் மாட்டு வண்டியில் உட்கார்ந்துகொண்டு வெளியில் வேடிக்கை பார்த்துக்கொண்டு வரவில்லை. மாறாக வண்டியிலிருந்து இறங்கி, வண்டிக்கு முன் சென்று கொண்டிருந்த ஆளுக்கு முன்னதாக நடந்து சென்றார். சௌந்திரத்தின் தைரியத்தைக் கண்டு வண்டிகளில் அமர்ந்திருந்த அனைவரும் ஆச்சரியமடைந்தனர். இயற்கையிலேயே அமையப்பெற்ற இத்தகைய தைரியமும் தன்னம்பிக்கையும்தான் பிற்காலத்தில் லட்சக்கணக்கான கிராம மக்களை வழிநடத்திச் செல்லும் ஒரு தலைவியாக சௌந்திரத்தை மாற்றியமைத்தன,

சுந்தரம் அய்யங்கார் வீடு ஊரிலேயே ஒரு முக்கியமான வீடு, அதுமட்டுமல்லாது, சுந்தரம் அய்யங்கார் பல பொதுநலக் காரியங்களுக்குத் தாராளமான உதவிகளைச் செய்து வந்தார்.



அரசியலிலும் ஓரளவு ஈடுபாடுகொண்டிருந்தார். லட்சுமி அம்மையாரும் தேச உணர்வு மிக்கவராக விளங்கினார். இதனால், அவ்வப்போது பல சுதந்திரப் போராட்டத் தலைவர்களும், தொண்டர்களும் வந்து போய்க்கொண்டிருந்தனர். குறிப்பாக, சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி போன்றவர்கள் சுந்தரம் அய்யங்காரைச் சந்திப்பதற்காக வருவார்கள். சில சமயம், வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பார்கள். லட்சுமி அம்மையாரும் வந்தவர்களை இன்முகம் காட்டி நன்கு உபசரிப்பார். இருவருமே நாட்டின் அரசியல் மற்றும் சுதந்திரப் போராட்ட நிலைமைகளை கேட்டறிவர். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சௌந்திரம், சிவாவையும் பாரதியையும் நேரில் காணும் வாய்ப்பைப் பெற்றார். குழந்தையாக நின்றுகொண்டிருந்த சௌந்திரத்தை அழைத்து அவர்களும் ஏதாவது பேசுவார்கள். சௌந்திரமும் ஏதாவது பதில் கூறுவார். இத்தகைய சூழ்நிலைகள் சௌந்திரத்தின் பிஞ்சுமனதில் தேசப்பற்று வளர்வதற்கு காரணமாக இருந்தது.

சௌந்திரம் தனது ஆரம்பக் கல்வியை திருக்குறுங்குடியிலேயே கற்றார். சௌந்திரத்திற்கு படிப்பில் நல்ல ஆர்வம் உண்டு. ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிந்து பணிவாக நடப்பார். ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதைக் காதால் கேட்டு அப்படியே மனப்பாடமாக ஒப்பிப்பார். மற்ற குழந்தைகளைவிட படிப்பிலும், விளையாட்டிலும் முதலிடம் வகிப்பார். இளம் வயதில் சௌந்திரம் மிக அழகாக இருப்பார். தன் மகளை சீவி, சிங்காரித்து பலவித ஆடைகளை அணிவித்துப் பார்ப்பதில் தாய்க்கு விருப்பம். ஆனால் சௌந்திரம் அந்தச் சிறுவயதிலேயே ஆடம்பரத்தை விரும்பமாட்டார். ஒரு நாள், சௌந்திரம் பள்ளிக்குத் தயாராகிக் கொண்டிருக்கும்போது விலை உயர்ந்த புது ஆடைகளைத் தன் மகளுக்கு அணிவிக்க தாயார் எடுத்துவந்தார். சௌந்திரம் தன் தாயை நோக்கி "அம்மா, எனக்கு ஆடம்பரமான துணிகள் வேண்டாம். நான் அவைகளை உடுத்திச் சென்றால் வகுப்பிலுள்ள மற்ற பெண்கள், நான் பணக்கார வீட்டுப் பிள்ளை என்று எண்ணிக்கொண்டு என்னிடம் சரியாகப் பழகமாட்டேன் என்கிறார்கள். பக்கத்தில் வரக்கூடப் பயப்படுகிறார்கள். எனவே, எனக்குப் பழைய துணிகள்தான் வேண்டும்," எனத் தன் தாயிடம் கூறினார். பிற ஏழைக் குழந்தைகளின் மனதைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவம் தன் மகளுக்கு இருப்பதைக் கண்டு தாய் ஆச்சரியமடைந்தார். சௌந்திரத்தின் இந்த மனோபாவம்தான் பிற்காலத்தில் ஏழைகளின்பால் அன்புகொள்ளவும், அவர்களுக்காகவே தனது உடைமைகளையெல்லாம் வாரிவாரி வழங்கவும் செய்தது.

அக்கால சமுதாயத்தில், குறிப்பாக உயர் வகுப்பினரிடையே பாலிய விவாக முறை என்பது கடைபிடிக்கப்பட்டு வந்தது. அதன்படி, குழந்தைகளாக இருக்கும்போதே சிறுமிக்கும் பையனுக்கும் பெற்றோர்கள் திருமணம் செய்துவைத்து விடுவார்கள். பல வருடங்கள்

கழித்துப் பெரியவர்களாக வளர்ந்து, பருவம் அடைந்த பின் இருவரும் கணவன் மனைவியாக வாழ்க்கை நடத்துவார்கள். சௌந்திரம் பன்னிரெண்டு வயதை எட்டினார். சுந்தரம் அய்யங்கார் வழக்கப்படி சௌந்திரத்தின் திருமணத்திற்கு முயற்சிசெய்து கொண்டிருந்தார். சுந்தரம் அய்யங்காருக்கு இரு சகோதரிகள் உண்டு. ஒருவர் வீரவநல்லூரில் தன் குடும்பத்துடன் வசித்துக்கொண்டிருந்தார். அவருக்கு ஒரு பையன் இருந்தார். பெயர் சௌந்தரராஜன். படிப்பை முடித்துக்கொண்டு சிறுதுகாலம் ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டு வந்தார். சுந்தரம் அய்யங்காருக்கு தன்மகளை அவளது முறைமாப்பிள்ளைக்குத் திருமணம் செய்துகொடுக்க விருப்பமில்லை. ஆனால், லட்சுமி அம்மையாருக்கோ தன் மகளை சௌந்தரராஜனுக்கே கொடுக்க வேண்டுமென்று விரும்பினார். தனது கணவரிடம் லட்சுமி அம்மையார் பலமுறை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். இறுதியில் தனது கணவரின் சம்மதத்தையும் பெற்றார். சௌந்தரராஜனுக்கும் அவரது பெற்றோர்களுக்கும் இந்த சம்பந்தத்தில் விருப்பமிருந்தது. திருமண ஏற்பாடுகள் தடபுடலாக செய்யப்பட்டது. அந்த நேரத்தில் சுந்தரம் அய்யங்கார் மதுரையில் தொழில் நடத்தி வந்தார். புதிய வீடு ஒன்றையும் சந்தைப்பேட்டைத் தெருவில் கட்டியிருந்தார். எனவே மதுரையில் திருமணத்தை வைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டது. 1918 ம் ஆண்டு 16 வயது சௌந்திரராஜனுக்கும் 12 வயது சௌந்திரத்திற்கும் திருமணம் கோலாகலமாக நடந்தது.

சௌந்தரராஜன் நல்ல குணம் படைத்தவர். அனைவருடனும் இனிமையாகப் பழகும் பண்புமிக்கவர். இண்டர்மீடியட் வரைப் படித்து மருத்துவக் கல்லூரியில் சேருவதற்கு முயச்சி செய்து கொண்டிருந்தார். இதற்கிடையில் சொந்த ஊரிலேயே ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். திருமணத்திற்கு சில தினங்களுக்கு முன்புதான் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான அனுமதி கிடைத்தது. எனவே, திருமணத்திற்குப் பின் தனது இளம் மனைவியுடன் சென்னை, திருவல்லிக்கேணியில் தனது உறவினர் ஒருவர் வீட்டில் தனிக் குடித்தனம் நடத்தலானார். அங்கிருந்துகொண்டே கல்லூரிக்குப் போய்வந்து கொண்டிருந்தார். சௌந்திரத்தின் மீது அவரது கணவர் அளவற்ற அன்பு வைத்திருந்தார். அன்றாட நடவடிக்கைகளில் சௌந்திரத்தின் புத்திக் கூர்மையைக் கண்டு வியப்படைந்தார். தனது மனைவி விருப்பமுடன் கேட்ட பொருட்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தார். சௌந்திரத்தின் தேவைகளும் நியாயமானதாகவே இருந்தது. அனாவசியச் செலவுகளுக்குச் சிறிதும் இடமளிக்கமாட்டார். சௌந்திரத்தின் இலட்சிய வாழ்வை எண்ணி பெருமிதம் கொண்டார். சௌந்திரம் தனக்கு மனைவியாக அமைந்தது, தான் பெற்ற பாக்கியமாகவே கருதினார். சௌந்திரமும் தனது கணவர் மீது உயிரையே வைத்திருந்தார், கணவரின் விருப்பு வெறுப்புகளை



உணர்ந்து சிறந்த இல்லத்தரசியாக விளங்கினார். கல்லூரி விடுமுறை நாட்களில் இருவரும் வீரவநல்லூருக்கு வருவார்கள். சௌந்திரம் ஊருக்கு வந்திருக்கிறார் என்றால் அவரைக் காண்பதற்காகவே வீட்டில் பெரிய கூட்டம் கூடிவிடும். சௌந்திரம் அவ்வளவு அழகாக இருப்பார். தனது கணவரின் பெற்றோர்களிடம் பணிவாகவும் அன்பாகவும் நடந்து கொள்வார். எப்போதும் எதையாவது வேடிக்கையாகப் பேசிக்கொண்டு அனைவரையும் மகிழ்விப்பார். சௌந்தரராஜனுக்கு நாட்கள் செல்வதே தெரியாது. விடுமுறையில் சில நாட்கள் திருக்குறுங்குடிக்கும் மதுரைக்கும் சென்று வருவார்கள். இவ்வாறு உல்லாசமாக நாட்கள் நகர்ந்தன.

தனது இல்லற வாழ்க்கையின் பயனாக தன் பதினாறாவது வயதில் சௌந்திரம் தாய்மைப்பேறு அடைந்தார். 1922ம் ஆண்டு சௌந்தரத்திற்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. சிறுவயதிலேயே சௌந்திரம் தாய்மையடைந்ததால் பிறந்த குழந்தை சரியான உடல் வளர்ச்சியும், மூளை வளர்ச்சியும் இல்லாமல் மெலிந்து காணப்பட்டது. குழந்தையை மருத்துவர்களிடம் காட்டினார்கள். சரியான உடல் வளர்ச்சியில்லாததால் அதிக நாட்கள் இக்குழந்தை பிழைப்பதற்கு வாய்ப்பில்லையென பல மருத்துவர்களும் கூறினார்கள். இருப்பினும் போதிய மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்பட்டது. ஆனால், மருத்துவர்கள் கூறியது பொய்க்கவில்லை. சரியாக எட்டு மாதங்களில் அக்குழந்தை இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டது. சௌந்திரத்திற்கும் அவரது குடும்பத்தினருக்கும் இது பெரிய வருத்தத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக பெண்கள் அனைவருமே ஆழ்ந்த சோகத்தில் மூழ்கினார்கள். சௌந்தரராஜனுக்கு தனது தலைக்குழந்தை இப்படி ஆகிவிட்டதே என்று அளவற்ற மனவேதனை. சௌந்திரத்தை இந்த இளம் வயதிலேயே தாய்மையடையும் நிலையை உருவாக்கி விட்டோமே என்று வருந்தினார். சௌந்தரராஜன் தனது குழந்தை பிரிந்த துயரை விட சௌந்திரம் அனுபவிக்கும் துயரை எண்ணியே அதிகமாக வருந்தினார். சௌந்திரத்தின் உடல் நலனும், மன அமைதியும்தான் தனக்கு முக்கியமானதென்றும், எனவே இனிமேல் இல்லறவாழ்வில் பிரம்மச்சரியம் கடைபிடிக்கப் போகதாக சௌந்தரராஜன் உறுதிபூண்டார்.

தனது குழந்தையின் பிரிவிற்குப்பின் சௌந்திரத்தை மதுரையில் அவரது பெற்றோரிடம் தங்கச் செய்துவிட்டு சென்னை சென்று படிப்பில் ஆர்வம் காட்டினார். 1923ம் ஆண்டு கல்லூரியிலேயே ஒரு சிறந்த மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அதனைத் தொடந்து மதுரை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராகப் பணியில் அமர்ந்தார். அப்போது, அங்கு புகழ்பெற்ற மருத்துவரான டாக்டர் ஹார்வி என்பவர் தலைமை மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்.

சௌந்தரராஜனின் திறமையைக் கண்டு வியந்தார். அதற்கு ஏற்றார்போல் நோயாளிகளைக் கவனிப்பதிலும், பல சிக்கலான நோய்களைக் குணப்படுத்துவதிலும் சௌந்தரராஜன் திறமையாகச் செயல்பட்டு வந்தார். இவருடன் பணியாற்றும் எல்லா மருத்துவர்களுமே இவர் மீது நல்ல மதிப்பும் அன்பும் கொண்டிருந்தனர். தனது கடமையில் கண்ணும் கருத்துமாயிருந்து அனைவரது நன்மதிப்பையும் பெற்றார். இது தவிர, மதுரையிலேயே கிழக்கு வெளி வீதியில் சொந்தமாக ஒரு மருத்துவ மனையும் நடத்திவந்தார். ஓய்வு நேரங்களில் இதன்மூலம் ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சேவை செய்து வந்தார். நோயைப்பற்றி நன்கு அறிந்து சரியான வைத்தியம் செய்ததால் நோயாளிகள் எளிதில் சுகமடைந்தனர். இதனால், டாக்டர் சௌந்தரராஜன் மிகவும் கைராசிக்காரர் என்ற பெயரையும் பெற்றார். அச்சமயம் மதுரை இந்து மாதர்சங்கம் மதுரையில் பல சமூக சேவைகளைச் செய்துவந்தது. அச்சங்கத்தில் சௌந்திரமும் இணைந்து கொண்டு சமூக நலப் பணிகளில் ஆர்வம் காட்டி வந்தார். சௌந்தரராஜன் தன் மனைவியின் தொண்டுள்ளத்தைக் கண்டு மகிழ்ந்து சௌந்திரத்தை ஊக்கப்படுத்தினார். தனது மருத்துவமனையின் மூலம் கிடைக்கும் வருமானத்தை சமூக சேவைக்காகப் பயன்படுத்தப் போவதாகவும் தனது மனைவியிடம் கூறினார். தனது கணவர் தனது விருப்பப்படியெல்லாம் நடந்து கொள்கிறார் என்பதில் சௌந்திரத்திற்கு அளவற்ற ஆனந்தம். இவ்வாறு பொதுச் சேவையில் ஒருவரையொருவர் ஊக்கப்படுத்திக் கொண்டு திவ்வியமாக வாழ்க்கை நடத்தி வந்தனர்.

1925 ஆம் ஆண்டு மதுரை நகர் இயற்கையின் சீற்றத்திற்கு உள்ளாகியது. அதாவது, பிளேக் என்னும் கொடிய நோய் பரவத் தொடங்கியது. இந்நோய் மிக விரைவாகப் பரவி ஏராளமான மக்களின் உயிரைப் பறித்துக் கொண்டிருந்தது. மருத்துவமனைகளில் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் குவிந்தவண்ணமிருந்தனர். ஊரே பீதியடைந்தது. ஏராளமானோர் ஊரைவிட்டே செல்லத்தொடங்கினர், நகரிலுள்ள அனைவருமே இந்தக் கொடிய நோயோடு போராடிக்கொண்டிருந்தனர். சௌந்தரராஜன் போன்ற சமூக நலத்தில் அக்கரையுடைய பல மருத்துவர்கள் இரவு பகலாக ஓய்வின்றி நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் பிளேக் நோயாளி ஒருவருக்கு சௌந்திரராஜன் அறுவைச் சிகிச்சை செய்வதாக இருந்தது, சௌந்திரராஜனும் தயாரானார். சிகிச்சை தொடங்கியது. ஆபரேஷன் நடந்துகொண்டிருந்த சமயம் கையில் அணிந்துள்ள கையுறையில் கண்ணுக்குத் தெரியாத ஒரு சிறு துவாரத்தின் வழியாக நோயாளியிடமிருந்து பிளேக் நோய்க் கிருமி சௌந்தரராஜன் உடம்பிலும் பரவத் தொடங்கியது. ஆபரேஷனுக்கு முன்பு யாரும் அந்தக் கையுறையிலிருந்த மயிரிழைத் துவாரத்தைக் கவனிக்கவில்லை.



சௌந்தரராஜன் உடம்பில் நோய் தொற்றி வேகமாகப் பரவியது. உடனே சௌந்தரராஜனுக்கு சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும், நோயின் வேகத்தை மருத்துவர்களால் கட்டுப்படுத்த இயலவில்லை. தான் இனிமேல் உயிர் வாழ்வது சிறுது நேரம்தான் என்பது சௌந்தரராஜனுக்குத் தெரிந்துவிட்டது. சற்றும் தாமதிக்காமல் சௌந்தரராஜனை அவரது வீட்டிற்கு காரில் அழைத்து வந்தனர். சௌந்திரமும், வீட்டிலிருந்த அனைவரும் அலறியடித்துக்கொண்டு ஓடிவந்தனர். பெண்கள் அனைவரும் அழுது புலம்பினர். வாழ்வின் இறுதிக்கட்டத்தில் பிரவேசிக்கும் தனது கணவரைக் கண்டதும் கண்களிலிருந்து கண்ணீர் தாரைதாரையாகக் கொட்டியது. பேச்சு வரவில்லை என்னசெய்வதென்றும் தெரியவில்லை. குடும்பதினர் அனைவரும் சோகத்தில் மூழ்கினர். ஆனால், சௌந்தரராஜன் எவ்வித மனக் கலக்கமோ, வருத்தமோ இன்றி தனது மனைவியின் கண்ணீரைத் தன் கைகளால் துடைத்துக் கொண்டு, "சௌந்திரம் நீ அழக்கூடாது. நீ சாதிக்கப் பிறந்தவள். மனிதர்கள் பிறப்பதும் இறப்பதும் இயற்கையின் விதி. நான் சிறிது நேரத்திற்குள் போய்விடுவேன். அதன் பின் நீ வீட்டிற்குள்ளேயே அடங்கிக் கிடந்து வாழ்க்கையை வீணடித்து விடாதே. தொடர்ந்து படித்து என்னைப் போன்று மருத்துவராகி, மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். நீ விரும்பினால் மறுமணம் செய்துகொள். இந்த நாடே மெச்சும்படியாக சிறந்த சமூக சேவகியாக நீ வரவேண்டும். இதுவே என் விருப்பம்" என்று கூறிக்கொண்டே நித்திரையில் ஆழ்ந்தார். தான் இன்னும் ஐந்து நிமிடத்திலோ அல்லது பத்து நிமிடத்திலோ இறந்து விடுவோம் என்ற நிலையிலும் கூட அதனைப் பற்றி சிறிதும் கவலைப்படாத சௌந்தரராஜனின் மன உறுதியையும், மனப்பக்குவத்தையும் எங்ஙனம் கூறுவது! தனது உயிரைக் கூட பொருட்படுத்தாமல் தனது அன்பு மனைவியின் வருங்கால வாழ்க்கைக்கு ஒரு பெரிய திட்டத்தை தயாரித்துக் கொடுத்தாரென்றால் சௌந்திரத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பை எப்படி அளப்பது? சௌந்திரத்தின் உயிர்தான் தன் உயிர். சௌந்தரம் வாழ்ந்தால், தான் வாழ்ந்தது போன்று. தான் செய்யவேண்டிய பணிகளையெல்லாம் சௌந்தரம் செய்வாள். ... மரணத்தின் வாயிலில் கூட எவ்வளவு தன்னம்பிக்கை. சௌந்தரராஜனின் ஒவ்வொரு வார்த்தையும் தீர்க்கதரிசனம். அவர் கூறிய அனைத்தும் நிறைவேறியது.

தனது மனைவியின் மீது இவ்வளவு அன்பு செலுத்தும் ஒரு கணவனை நாம் வேறெங்கும் காண இயலாது. சௌந்தரராஜன்–சௌந்திரம் தம்பதிகளின் இல்லற வாழ்க்கை குறுகியதாக இருந்தாலும் இது ஒரு புனிதமான வாழ்க்கை. தனது ஆருயிர் கணவனை இழந்த சௌந்திரம் துயரத்தால் துடித்தார். 'கணவனை இழந்தவருக்குக் காட்டுவது இல்' என்பது அன்றைய சமுதாயத்தின் வேதாந்தம். கணவனை இழந்த பெண்கள் சமூகத்தால் பழிக்கப்பட்டனர். எஞ்சிய



இளம் வயதில் அம்மா அவர்கள்



வாழ்நாள் முழுவதும் வீட்டிலேயே அடைபட்டுக்கிடந்து துன்பப்படுத்தப்பட்டனர். இவ்வளவும் படம்போல் சௌந்திரத்தின் மனக்கண்முன் ஒரு கணம் காட்சியாகத் தோன்றியது. கணவனை இழந்தபின் உயிர்வாழ்தல் கூடாது என்ற முடிவை சௌந்திரம் மேற்கொண்டார். உடனடியாக அருகிலிருந்த அறையை நோக்கி ஓடிச்சென்று கதவுகளைத் தாழிட்டுக் கொண்டார். சௌந்திரத்தின் இச்செயல் அனைவரையும் திடுக்கிடச் செய்தது. கூடியிருந்த பெண்கள் அனைவரும் கூக்குரலிட்டனர். உடனே கதவைத் தள்ளினார்கள். திறக்க முடியவில்லை. பலமாகக் கதவை உடைத்து அறையினுள் பார்த்தார்கள். அனைவரும் திடுக்கிட்டது போலவே விஷத்தை அருந்தி மயங்கிய நிலையில் தரையில் கிடந்தார் சௌந்திரம். உடனே மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டனர். குடித்த விஷம் இரைப்பையைத் தாண்டி குடலுக்குள் செல்வதற்கு முன்னமே சரியான நேரத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டதால் உயிர் காப்பாற்றப்பட்டது. சௌந்திரம் பிழைத்துக்கொண்டார். சௌந்திரம் முயன்றாலும்கூட அவரது உயிர் அவரைவிட்டுப் பிரிய மறுத்தது. இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மனித குலமே பாராட்டக்கூடிய பல சாதனைகளைப் புரிந்து நற்பேறு அடையும் வரை சௌந்திரத்தைவிட்டு பிரிவதில்லையென அவ்வுயிர் உறுதியெடுத்துக் கொண்டிருந்தது. இயற்கையின் விருப்பத்தை யாரால் மாற்ற முடியும்? மயங்கிய நிலையிலிருந்த சௌந்திரம் புத்துயிர் பெறத்தொடங்கினார். சௌந்திரம் பிழைத்துக் கொண்டார் என்ற செய்தி அனைவரது காதுகளிலும் அமிர்தமாக ஒலித்தது. நினைவு திரும்பியபின் தான் மேற்கொண்ட செயலை எண்ணி நாணித் தலைகுனிந்தார். கணவர் கூறிய கடைசி வார்த்தைகள் மனதில் ஒலிக்கத் தொடங்கியது. கணவரின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கென்றே இனி உயிர்வாழப் போவதாக உறுதிபூண்டார்.

அக்கால வழக்கப்படி விதவைகள் வெளியில் செல்வதுகூட விரும்பத்தகாத செயலாகக் கருதப்பட்டது. சௌந்திரம் சிறிதுகாலம் அமைதியாக வீட்டிலேயே இருந்து வந்தார். பல பெரியவர்கள் வந்து ஆறுதல் கூறிச் சென்றனர். ஒரு நாள் சுப்பிரமணிய சிவா வீட்டிற்கு வந்திருந்தார். இளம் வயதில் சௌந்திரத்திற்கு ஏற்பட்ட சோதனையைக் கண்டு வருந்தினார். "சௌந்திரத்தை வீட்டிற்குள்ளே பூட்டிவைத்து வாழ்க்கையை வீணடிக்கச் செய்து விடாதீர்கள். பள்ளிக்கு அனுப்பி கல்வியைத் தொடரச் செய்யுங்கள்" என்று சிவா சௌந்திரத்தின் பெற்றோர்களிடம் கூறிச் சென்றார். சௌந்திரத்திற்கும், தனது கணவர் கூறியதைப் போன்று, தொடர்ந்து படிக்க வேண்டுமென்ற விருப்பமும் ஏற்கெனவே இருந்து வந்தது. ஆனால், பெற்றோர்கள் சௌந்திரத்தை வெளியில் அனுப்பத் தயங்கினார்கள். இப்போது சுப்பிரமணிய சிவாவே நேரடியாக வந்து கூறியதால், லட்சுமி அம்மையார் தன் மகளைப்

பள்ளிக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்தார். இடையில் பல வருடங்கள் தொடர்ச்சியாகக் கல்வி கற்காததின் கராணமாக கல்வி அதிகாரிகளிடம் விஷேச அனுமதியும் பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து மதுரை மங்கள புரத்திலுள்ள கேப்ரன் ஹால் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் செளந்திரம் சேர்க்கப்பட்டார்.

செளந்திரம் படிப்பில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். பாடப் புத்தகங்கள் தவிர ஏராளமான வேறு புத்தகங்களையும் படித்தறிந்தார். அதனால் செளந்திரத்தின் பொது அறிவும், ஆங்கிலப் புலமையும் வளர்ந்தது. பள்ளிக்குச் செல்லும்போது தூய கதராடை அணிந்து மிடுக்காகச் செல்வார். எப்போதும் பள்ளிக்குக் குதிரை வண்டியில் வருவதே வழக்கம். குதிரை வண்டியிலிருந்து கீழே இறங்கும்போது மாணவிகள் அனைவரும் அதிர்ந்து போவார்கள். வானத்திலிருந்து ஒரு அழகிய தேவதை பூமியில் இறங்குவது போலிருக்கும். செளந்திரம் தனது சக மாணவிகளிடம் அன்பாகப் பழகுவார். தன்னிடமிருக்கும் பொருட்களை யார் கேட்டாலும் உடனே கொடுத்து உதவுவார். குறிப்பாக ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவிகளிடம் நெருங்கிப் பழகி அதரவு காட்டுவார். மதிய வேளையில் தனது வீட்டில் தயாரித்துக் கொடுத்த விதவிதமான ருசியான உணவுப் பதார்த்தங்களை தனது தோழிகளுக்குக் கொடுத்து உண்ணச் செய்வார். அதேபோன்று அவர்கள் கொண்டுவரும் எளிய உணவை ருசித்து உண்பார். மாலையில் பள்ளிக்கூடம் முடிந்ததும் தனது தோழிகளை வீட்டிற்கு அழைத்துச் சென்று தனது தாயிடம் அறிமுகம் செய்து வைப்பார். தனது நண்பர்களை தாய்க்கு அறிமுகம் செய்து வைப்பதில் செளந்திரத்திற்கு அளவற்ற மகிழ்ச்சி. இப்பழக்கம் இளமைக் காலம் முதல் செளந்திரத்திடம் காணப்பட்டது. தான் பிற்காலத்தில் மந்திரியாக இருந்தபோதும், தனக்குத் தெரிந்த சாதாரணக் குடியானவர் வந்தால் கூட அவரை அருகில் உள்ளவர்களிடம் அறிமுகம் செய்துவைத்து அவரைப்பற்றிப் பெருமையாகக் கூறுவார்.

சில சமயங்களில் வகுப்பாசிரியர், மாணவர்கள் அனைவரையும் புது நோட்டுக்கள் வாங்கிவரும்படி கூறுவார். அடிக்கடி புது நோட்டுகள் வாங்க வேண்டியிருப்பதால் சில ஏழை மாணவிகள் கஷ்டப்படுவார்கள். அம்மாணவிகளின் கஷ்டத்தை செளந்திரம் குறிப்பால் அறிந்து கொள்வார். செளந்திரம் யாரையும் ஒருதடவை பார்த்து விட்டால் போதும், அவரைப்பற்றி துல்லியமாகக் கணித்து விடுவார். இதில் செளந்திரம் வல்லவர். மாலையில் வீட்டிற்குச் சென்றதும் தனது தாயிடம் இரண்டு புதிய நோட்டுகள் வேண்டுமென்று கூறுவார். மறுநாள் காலை பள்ளிக்குச் செல்லும் சமயம் இரண்டு நோட்டுகள் தயாராக இருக்கும். பள்ளி வந்தவுடன் அந்த ஏழை மாணவியிடம் சென்று ஒருநோட்டைக் கொடுத்துவிட்டு மற்றொன்றை தனக்கென



வைத்துக் கொள்வார். செளந்திரத்திடம் தனது கஷ்டத்தைச் சொல்லாமலிருந்த அம்மாணவிக்கு, திடீரென செளந்திரம் நோட்டைக் நீட்டும்போது ஆனந்த அதிர்ச்சியில் மூழ்கிவிடுவார். யாராவது கஷ்டப்படுகிறார்கள் என்றால் அவர்களது தேவை என்ன என்பதை உணர்ந்து, கேட்பதற்கு முன்னமே உதவி செய்வதில் செளந்திரத்திற்கு தனி ஆர்வம். அதே போன்று உதவி பெறுபவர் தன்னிடம் வந்துதான் பெற்றுச்செல்ல வேண்டுமென ஒருபோதும் கருதமாட்டார். உதவி வேண்டுவோரின் இடத்திற்குச் சென்று உதவி செய்வார். மேலும் ஒருவருக்கு உதவி செய்யவேண்டுமென்றால் எவரும் பாதிப்படையாத வண்ணம் எல்லாவிதமான யுக்திகளையும் கையாளத் தயங்கமாட்டார். உதவி செய்கிறேன் என்று கூறிவிட்டால் எவ்வளவு கஷ்டங்கள் குறுக்கிட்டாலும் அத்தனையும் சமாளித்து அந்த உதவியைச் செய்து கொடுப்பார். இத்தகைய நற்பண்புகள் இளம் வயதிலேயே செளந்திரத்திடம் கொட்டிக்கிடந்தன.

1930-ஆம் ஆண்டு செளந்திரம் தனது உயர்நிலைப்பள்ளித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்தார். அடுத்து மேற் படிப்பிற்குச் செல்லவேண்டும். "செளந்திரம் நீ என்னைப் போன்று மருத்துவராகி மக்களுக்குச் சேவை செய்யவேண்டும்" என்ற தனது கணவரின் வார்த்தைகள் செளந்திரத்தின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது. எனவே, மருத்துவப் படிப்பில் சேருவதற்கு செளந்திரம் விரும்பினார். பெற்றோர்களும் தங்கள் மகளின் விருப்பத்திற்கு இசைவு தெரிவித்தனர். டில்லியிலுள்ள புகழ்பெற்ற **'லேடி ஹார்டிஞ்ச்'** மருத்துவமனைக்கு செளந்திரம் மனுச் செய்தார். இடமும் கிடைத்தது. உடனே டில்லி புறப்பட்டுச் சென்று மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பயிலலானார். இக்கல்லூரியில் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் மாணவ மாணவியர் வந்து தங்கிப் படித்தனர். தெரிந்தவர்கள் யாரும் இக்கல்லூரியில் பயிலாததால், சேர்ந்த புதிதில் செளந்திரத்திற்கு மற்றவர்களுடன் பழகுவதற்குச் சிரமாக இருந்தது. இயற்கையாகவே அனைவருடனும் இனிமையாகப் பழகும் குணம் படைத்தவராகையால் சிறிது காலத்திற்குள் செளந்திரத்திற்கு ஏராளமான நண்பர்கள் பழக்கமாயினர். அத்தகைய நண்பர்களில் மிகவும் முக்கியமானவர் சுசிலா நய்யார் என்பவராவர். இவர் அண்ணல் காந்தியடிகளின் தனி மருத்துவராகப் பணியாற்றியவர், சுதந்திரப் போரில் பங்குபெற்று பலமுறை சிறை சென்றவர். செளந்திரம் சுசிலா நய்யாரைவிட வயதில் மூத்தவர். இருவரும் ஒருதாய் பெற்ற பிள்ளைகளைப்போல் பழகி வந்தனர். வசதிபடைத்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பயிலும் இந்த மருத்துவக் கல்லூரியில் செளந்திரமும் சுசிலா நய்யாரும் கதர்ப் புடவைகளையே எப்போதும் அணிந்திருப்பர். இதனால், சக மாணவிகள் மத்தியில் இருவருக்கும் நல்ல மதிப்பு நிலவியது. செளந்திரம் எல்லா மாணவிகளுடனும் நன்கு பழகுவார். வசதியான

மாணவிகள் படித்த இக்கல்லூரியில் பல ஏழை மாணவிகளும் படித்து வந்தனர். அத்தகைய ஏழை மாணவிகளின் கஷ்டங்களில் சௌந்திரம் தானும் பங்கெடுத்துக் கொள்வார். பல உதவிகளைத் தயங்காமல் செய்தும் கொடுப்பார். தன்னுடன் பயிலும் மாணவிகளுக்கு கதரின் பெருமையைக் கூறி, கதர்ப் புடவை அணியும்படிச் செய்வார். விடுதி நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கடைபிடிக்குமாறு பார்த்துக் கொள்வார். ஏனெனில், விடுதியில் தங்கிப்படிக்கும் மாணவிகளில் பலர் ஏழைக் குடும்பத்திலிருந்து வந்திருந்தனர். உணவுக் கட்டணத்தைக் குறைப்பதற்குப் பல வழிகளை உருவாக்கிக் கொடுத்தார். விடுதியை ஒட்டி அருகிலுள்ள காலியிடத்தில் காய்கறிகளைப் பயிரிடச் செய்தார். இதனால், உணவுக் கட்டணம் கணிசமான அளவு குறைந்தது. அதோடு மட்டுமல்லாது தென்னிந்திய உணவு வகைகளையும் விடுதியில் அறிமுகப்படுத்தினார். பல வடஇந்திய மாணவர்கள் சௌந்திரத்தின் இந்த ஏற்பாட்டைப் பாராட்டி தென்னிந்திய உணவு வகைகளைப் பிரியமுடன் சாப்பிடத் தொடங்கினர். சௌந்திரம் படித்துக் கொண்டிருந்த சமயம் அவரது பெற்றோர்கள் டில்லி வந்து செல்வார்கள். சௌந்திரத்தின் குடும்பம் வசதியானதென்பது அவருடன் பழகும் அனைவருக்கும் தெரியும். இருந்தபோதிலும் அவரது பெற்றோர்களின் எளிமையைக் கண்டு மாணவிகள் அனைவரும் ஆச்சரியமடைவர். சௌந்திரத்தின் பெற்றோர்கள் தேசபக்திமிக்கவர்கள் என்பது அப்போதுதான் பலருக்கும் புரிந்தது.

மருத்துவக் கல்லூரியிலும் அதன் விடுதிகளிலும் பணிபுரியும் எராளமான கடைநிலை ஊழியர்களும் அவர்களது குழந்தைகளும் கல்வியறிவு இல்லாதவர்களாகக் காணப்பட்டனர். இவர்களுக்குக் கல்வியறிவு புகட்ட வேண்டுமென சௌந்திரமும் சுசிலா நய்யாரும் விரும்பினர். இருவரும் ஒரு திட்டத்தை வகுத்தனர். அதன்படி இருவரும் தினமும் மாலை நேரங்களில் அவ்வூழியர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுப்பதென தீர்மானித்தனர். அவ்வாறே, இருவரும் மாலை நேரங்களில் கல்வி கற்றுக்கொடுத்து வந்தனர். அதோடு மட்டுமல்லாது அவர்களுக்குத் தேவையான நோட்டு, புத்தகங்கள், எழுதுபொருட்கள் போன்றவற்றையும் இலவசமாகத் தங்கள் பணத்திலேயே வாங்கிக் கொடுத்தார்கள். இத்தகைய சேவையின் காரணமாகப் பல கடைநிலை ஊழியர்கள் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டார்கள். அவர்களது குழந்தைகளும் பயனடைந்தனர். சௌந்திரத்தின் சேவை உடன்பயிலும் மாணவிகளாலும் ஆசிரியர்களாலும் பாராட்டப்பட்டது. அச்சமயம் காந்தியடிகள் அடிக்கடி டெல்லி வந்து கொண்டிருந்தார். சுசிலா நய்யாரின் குடும்பம் ஏற்கனவே காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. காந்தியடிகள் தலைநகருக்கு வருகின்ற போதெல்லாம் சுசிலா நய்யார் அவரைச் சந்திக்கச் செல்வார். அவ்வாறு போகும்போது



சௌந்திரத்தையும் உடன் அழைத்துச் செல்வார். இதனால் டில்லியில் படித்துக்கொண்டிருந்த சமயம் அடிக்கடி காந்தியடிகளைச் சந்தித்து அவரது ஆசியைப் பெறும் பாக்கியம் சௌந்திரத்திற்குக் கிட்டியது. நாளடைவில் பல காங்கிரஸ் தலைவர்களின் நட்புறவும் சௌந்திரத்திற்கு கிடைக்க ஆரம்பித்தது. அவர்கள் அனைவரும் சௌந்திரத்தின் சேவை மனப்பான்மையைக் கண்டு வியந்தனர்.

சேவா கிராமத்தில் காந்தியடிகள் ஆசிரமம் ஒன்றை ஏற்படுத்தி சேவை செய்து கொண்டிருந்தபோது, அவரது நிர்மாணப் பணிகளால் கவரப்பட்ட பல படித்த இளைஞர்கள் காந்தியடிகளின் ஆசிரமத்தில் சேர்ந்து அவரிடம் நேரடிப் பயிற்சி பெற்று வந்தனர். அத்தகைய இளைஞர்களில் ஒருவர் ஜி. இராமச்சந்திரன் என்பவராவார். அவர் கேரள மாநிலத்தைச் சார்ந்தவர். கூரிய மதி நுட்பமும் உழைப்பில் ஆர்வமும் உடையவர். காந்தியடிகளிடம் சேவா கிராமத்தில் பயிற்சிக்குச் சேரும் முன்பு அகில உலகப் புகழ்பெற்ற கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதனில் உயர் கல்வி கற்றார். இவர் ஆங்கிலத்தில் சிறந்த புலமை படைத்தவர். நிர்மாணப் பணிகளையே தனது தொழிலாகக் கொண்ட இவருக்கு காந்தியடிகளுடனும் மூத்த காங்கிரஸ் தலைவர்களுடனும் நெருங்கிய பழக்கம் இருந்து வந்தது. ஒருநாள் பிரபல காந்தியவாதியும், அரிசனப் பணியில் தன்னை முழுக்க அர்ப்பணித்துக் கொண்டவருமான திரு. தக்கர் பாபா அவர்களின் உதவியாளர் இராமச்சந்திரனைச் சந்தித்தார். அப்போது அவர், "தமிழ்நாட்டில் மதுரையிலிருந்து ஒரு பெண் டில்லியில் மருத்துவக் கல்வி பயின்று வருகிறாள். சிறந்த சமூக சேவகியாகவும் விளங்குகிறாள். நீங்களும் தென்னிந்தியாவிலிருந்து தானே வந்துள்ளீர்கள். எனவே, நீங்கள் அவரைச் சந்தித்தால் நலமாக இருக்குமென," இராமச்சந்திரனிடம் கூறினார். "சந்திக்க முயற்சி செய்கிறேன்," என இராமச்சந்திரனும் பதில் கூறினார். அதனைத் தொடர்ந்து சிறிது காலத்திற்குள் அரிசன சேவா சங்கத்தின் மாநாடு ஒன்று டெல்லியில் நடைபெற்றது. அம் மாநாட்டில் கலந்துகொள்ள இராமச்சந்திரன் டில்லி பயணமானார். காந்தியடிகள் உட்பட ஏராளமான காங்கிரஸ் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தது. வழக்கம்போல காந்தியடிகளைச் சந்திக்க சுசிலா நய்யாரும் சௌந்திரமும் அந்த மாநாட்டிற்குச் சென்றனர். சுசிலா நய்யார் தனக்குத் தெரிந்த அனைவரிடமும் சௌந்திரத்தை அறிமுகம் செய்துவைத்தார். அப்போதுதான் இராமச்சந்திரன் முதல் முறையாக சௌந்திரத்தைச் சந்தித்தார். ஒருவரை ஒருவர் விசாரிக்கவோ பேசிக்கொள்ளவோ இயலவில்லை. அதற்கு நேரமும் அனுமதிக்கவில்லை. இதுதான் இருவருக்கும் முதல் சந்திப்பு என்று கூறலாம். இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் வேலையின் காரணமாகப் பலமுறை இராமச்சந்திரன் டில்லி வந்து போய்க்கொண்டிருந்தார். ஒரு நாள்

அவ்வாறு டில்லி வந்தபோது சௌந்திரத்தைக் காண அவரது அறைக்குச் சென்றார். சௌந்திரம் தங்கியிருந்த அறையை நெருங்கும்போது இனிமையான வீணை இசை காற்றில் தவழ்ந்து வந்தது. வீணை இசையை ரசித்தவண்ணம் அறைக்குள் சென்றார். மஹாலட்சுமி போன்று அமர்ந்து வீணையைக் கையில் ஏந்தி அதனை மீட்டும் அழகைக் கண்ட இராமச்சந்திரன் ஒரு கனம் திகைத்து அப்படியே நின்று விட்டார். சௌந்திரம் அவ்வளவு அழகாகக் காட்சியளித்தார். இராமச்சந்திரன் வாசலுக்கு அருகில் வந்ததும் சௌந்திரம் வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டு அவரை வரவேற்றார். "தங்களுக்கு வீணை மீட்டத் தெரியுமா?" என இராமச்சந்திரன் வினவினார். அதற்கு சௌந்திரம் ஆம் என்ற பாவனையில் தலையை அசைத்தார். "அப்படியானால் தொடர்ந்து வீணையை மீட்டுங்களேன்" என்று வேண்டினார். தயக்கம், பயம் போன்றவைதான் சௌந்திரத்திற்குச் சற்றும் கிடையாதே. உடனே வீணையை மடியில் வைத்துக் கொண்டு மீட்டத் தொடங்கினார். இராமச்சந்திரனுக்கு அது ஒரு இசை விருந்தாகவே அமைந்தது. அழகாக வீணைமீட்டும் சௌந்திரத்தை இராமச்சந்திரன் பாராட்டினார். அதன் பின்னர் ஒருவரை ஒருவர் விசாரித்துக் கொண்டனர். சிறிது நேரத்திற்குள் இராமச்சந்திரன் விடை பெற்றுச் சென்றார். இது இரண்டாவது சந்திப்பாகும். இதற்குப் பின் இருவரும் பல காங்கிரஸ் கூட்டங்களிலும், சொற்பொழிவு மன்றங்களிலும் ஒருவரையொருவர் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றார்கள்.

1936-ல் சௌந்திரம் லேடி ஹார்டிஞ்ச் மருத்துவக் கல்லூரியில் முதல் மாணவியாகத் தேர்ச்சிபெற்றார். இச் செய்தி கேட்டு வீட்டிலுள்ள பெற்றோர்கள் அனைவரும் மகிழ்ச்சியுற்றனர். சௌந்திரத்தின் தாயும் தந்தையும் சென்னையில் மருத்துவப் பணி செய்யுமாறு கூறினர். தொடர்ந்து சென்னையில் தனது சகோதரர் டி.எஸ். சந்தானம் வீட்டில் சௌந்திரம் தங்கினார். சிறிது காலத்திற்குள், சென்னையில் தனியாக ஒரு மருத்துவமனையை ஆரம்பித்துப் பணியாற்றி வந்தார். இந்த நேரத்தில் தமிழ்நாடு ஹரிஜன சேவா சங்கத்தின் காரியதரிசியாக இராமச்சந்திரன் நியமிக்கப்பட்டு சென்னை வந்து சேர்ந்தார். இருவரும் இப்போது சென்னையில் இருப்பதால் மீண்டும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது. சௌந்திரம் நிறையப் புத்தகங்கள் படிப்பார். இராமச்சந்திரன் ஏராளமான புத்தகங்களை சௌந்திரத்திற்குக் கொண்டுவந்து கொடுப்பார். சௌந்திரம் அவற்றையெல்லாம் படித்து முடிப்பார்.இவ்வாறு பழக்கம் அதிகமாயிற்று.

சௌந்திரத்திற்கு 1938 ல் மதுரை அரசு மருத்துவமனையில் கௌரவ உதவி மருத்துவராகப் பணியாற்ற அழைப்பு வந்தது. மேலும் சௌந்திரத்தின் பெற்றோர்களும் மதுரையில் வந்து பணிபுரியும்படி தன்



மகளைக் கேட்டுக் கொண்டனர். இதன் நிமித்தமாக சௌந்திரம் மதுரைக்கு வந்து பணியாற்றலானார். கிழக்கு வெளி வீதியில் சொந்தமாகவும் ஒரு மருத்துவமனை ஆரம்பித்தார். தனது சொந்த மருத்துவமனையின் மூலம் ஏழை மக்களுக்கு மருத்துவ சேவை செய்யத் தொடங்கினார். அந்த நேரத்தில் மதுரையில் பெண் டாக்டர்களே கிடையாது. மதுரை நகர் தோன்றிய காலத்திலிருந்து பெண் டாக்டர்களே இல்லாததால் மக்கள் மத்தியில், குறிப்பாகப் பெண்கள் மத்தியில் சௌந்திரத்தின் பெயர் வெகு சீக்கிரத்தில் பிரபலமாகியது. சௌந்திரம் தனது மருத்துவமனைக்குக் காரில் வருவதை மக்கள் அனைவரும் அதிசயமாகப் பார்ப்பார்கள். மதுரை நகரில் முதன் முதலாகக் கார் ஓட்டிய பெண்மணி சௌந்திரம்தான். இந்தச் சமயத்தில் மதுரையில் ஆலயப் பிரவேசப் பணிகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டு வந்தது. காலஞ்சென்ற திரு.வைத்தியநாதஅய்யர் ஹரிஜனங்களை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் அழைத்துச்செல்ல அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தார். ஆகவே, ஆலயப் பிரவேசப் பணிகளின் காரணமாக இராமச்சந்திரன் மதுரைக்கு மாற்றப்பட்டார். மதுரையில் பிரபல வழக்கறிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான திரு.கிருஷ்ணசாமி பாரதியின் வீட்டில் தங்கியிருந்து ஹரிஜன சேவா சங்கத்தின் பணிகளைச் செய்து வந்தார். மதுரையில் பல்வேறு இடங்களில் தீண்டாமை ஒழிப்பு, காங்கிரஸ் பணி, நிர்மாணப் பணிகள் போன்றவை பற்றிய கூட்டங்கள் அடிக்கடி நடைபெற்று வந்தன. அக்கூட்டங்களிலெல்லாம் இராமச்சந்திரன் உரையாற்றுவார். இராமச்சந்திரன் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கெல்லாம் சௌந்திரமும் செல்வார். இராமச்சந்திரனின் சரளமான ஆங்கிலச் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்வார். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் ஒருவரை ஒருவர் சந்தித்து வந்தனர். இருவரும் திருமணம் செய்துகொள்ளும் முடிவிற்கு வந்தனர். சௌந்திரம் பல காரணங்களுக்காக இராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். அதாவது தான் வருங்காலத்தில் செய்யப்போகும் சமூக சேவைக்கு ஒரு பொருத்தமான ஆண் துணை தேவை என்பதை சௌந்திரம் நன்கு உணர்ந்திருந்தார். இராமச்சந்திரன் ஏற்கெனவே காந்தியடிகளிடம் முறைப்படி பயிற்சி பெற்றதோடு மட்டுமல்லாது, நிர்மாணப் பணிகளைச் செய்வதே தனது தொழிலாகக் கொண்டிருந்தார். மேலும், காந்தியடிகளுடனும் இந்தியா முழுவதிலுமுள்ள ஏராளமான காங்கிரஸ் தலைவர்களுடனும் நல்ல உறவை ஏற்படுத்திக்கொண்டு நற்பெரும் பெற்றிருந்தார். இதன் காரணமாக இராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டால் தனது சேவைகளுக்கு பல வழிகளிலும் பெரும் உதவியாக இருக்கும் என்பது சௌந்திரத்தின் கருத்து. மேலும், இளம் வயது முதலே சௌந்திரத்திற்கு ஆங்கில மொழியின் மீது அளவற்ற பற்று உண்டு. இராமச்சந்திரனோ

ஆங்கிலத்தில் சிறந்த புலமை பெற்றவர். இதுபோன்ற பல காரணங்களால் இராமச்சந்திரனை திருமணம் செய்து கொள்ள சௌந்திரம் விரும்பினார். இராமச்சந்திரனுக்கோ சௌந்திரம் அழகானவர், பண்புள்ளவர், சமூக சேவையில் ஆர்வம் மிக்கவர். இவரைத் திருமணம் செய்து கொண்டால் தனது வாழ்க்கைக்கும், சேவைகளுக்கும் நல்ல துணையாக இருப்பார் என்ற நம்பிக்கையின் காரணமாக இராமச்சந்திரன் சௌந்திரத்தை திருமணம் செய்துகொள்ள விரும்பினார். ஏற்கனவே தான் திருமணமாகிக் கணவரை இழந்தவர் என்பதை சௌந்திரமே இராமச்சந்திரனிடம் ஆரம்பத்திலேயே கூறியிருந்தார். அப்படித் தெரிந்திருந்தும். இராமச்சந்திரன் சௌந்திரத்தின் மீது அளவற்ற அன்பு வைத்திருந்தார்.

சௌந்திரமும் இராமச்சந்திரனும் பழகிவருவது மதுரையில் பலருக்கும் பிடிக்கவில்லை. அதிலும் இருவரும் திருமணம் செய்து கொள்ள எண்ணியுள்ளார்கள் என்பதை அறிந்ததும் பலமான எதிர்ப்புக் கிளம்பியது. சௌந்திரத்தின் பெற்றோர்களும் தங்கள் மகளின் மறுமணத்திற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. அதேசமயம் சில காங்கிரஸ் பிரமுகர்கள் திருமணத்தை ஆதரித்துப் பேசினர். இப்படியாகப் பல கருத்துக்கள் நிலவி வந்தது. இருப்பினும் சௌந்திரமும் இராமச்சந்திரனும் திருமணம் செய்து கொள்வது என்ற முடிவில் உறுதியாக இருந்தனர். இச்செய்தி மூதறிஞர் இராஜாஜியின் காதுகளை எட்டியது. அந்த நேரம் இராஜாஜி காங்கிரஸ் கட்சி வேலை நிமித்தம் மதுரை வந்திருந்தார். "பெண்கள் பெற்றோர்களின் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமென்றால் அவர்களைப் படிக்கவைத்தல் கூடாது. அவ்வாறு படிக்கவைத்தால் அப்பெண்களின் உரிமைகளுக்கும், உணர்ச்சிகளுக்கும் பெற்றோர் மதிப்பளிக்க வேண்டும். ஆகவே, சௌந்திரத்தின் திருமணத்தை உடனே செய்து வைக்க வேண்டும்," என இராஜாஜி சௌந்திரத்தின் பெற்றோர்களிடம் கூறினார். இருப்பினும் பலன் ஏதுமில்லை. சிறிது நாட்கள் கழித்து சென்னையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கு கொள்ள திரு. தக்கர் பாபா வந்திருந்தார். இராமச்சந்திரனின் திருமணப் பிரச்சினை அவரிடம் தெரிவிக்கப்பட்டது. சென்னையில் தனது அலுவல்களை முடித்துக்கொண்டு தக்கர் பாபா மதுரை வந்து சௌந்திரத்தின் பெற்றோர்களைச் சந்தித்தார். சௌந்திரத்தின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து தரும்படி வேண்டினார். அதற்கும் வழக்கமான பதில்தான் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பல தலைவர்கள் சுந்தரம் அய்யங்காருடன் தொடர்பு கொண்டு பேசிப்பார்த்தனர். இறுதியில் இச்செய்தி காந்தியடிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. காந்தியடிகள் இராமச்சந்திரனுடனும் சௌந்திரத்திடமும் நேரடியாகப் பேசுவதற்கு சேவா கிராமத்திற்கு அழைத்தார். இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதாகவும் திருமணம் செய்து கொள்ளச் சம்மதிப்பதாகவும்



காந்தியடிகளிடம் கூறினார்கள். அதன்பின் காந்தியடிகள் சுந்தரம் அய்யங்காருக்கு ஒரு கடிதம் எழுதினார். இராமச்சந்திரனும் சௌந்திரமும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தன்னிடமே கூறினார்கள் என்றும், இவர்களது திருமணத்தை உடனடியாக நடத்திவைக்கும்படியும் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டிருந்தார். அவ்வாறு திருமணம் செய்துவைக்காவிட்டால் நானே எனது தலைமையில் திருமணம் செய்து வைப்பேன் எனவும் குறிப்பிட்டிருந்தார். காந்தியடிகளின் கடிதத்தைக்கண்ட பின்னரும்கூட சௌந்திரத்தின் பெற்றோர்கள் திருமணத்திற்குச் சம்மதிக்கவில்லை. இதற்கிடையில் இத்திருமண விஷயம் எல்லா இடங்களிலும் பேசப்பட்டது. பலர் இத்திருமணத்தை ஆதரித்தும், பலர் எதிர்த்தும் பேசி வந்தனர். எவ்வாறாயினும் சௌந்திரமும் இராமச்சந்திரனும் திருமணம் செய்து கொள்வதில் வழக்கம்போல் உறுதிப்பாடு உடையவர்களாகக் காணப்பட்டனர்.

மதுரையில் தெற்குமாசி வீதியிலுள்ள சௌந்திரத்தின் மருத்துவமனைக்கு இராமச்சந்திரன் அடிக்கடி வருவார். சற்றுநேரம் பேசிவிட்டுச் செல்வார். திடீரென ஒருநாள் இராமச்சந்திரன் சேவா கிராமத்திற்கு பயணமானார். சௌந்திரம் தனது காரில் மதுரை ரயில் நிலையம் வரை வந்து அவரை வழியனுப்பி வைத்தார். அதனையடுத்து ஓரிரு தினங்கள் கழித்து தனது ஆடை, பொருட்களையெல்லாம் ஒரு பெட்டியில் வைத்துக்கொண்டு வெளியூருக்குப் பயணமாவது போன்று காணப்பட்டார். அப்போது மருத்துவமனையில் சௌந்திரத்துடன் சில பெண்களும் தங்கிப் படித்து வந்தனர். சௌந்திரத்தின் திடீர்ப் பயணம் அம்மாணவிகளுக்குப் புரியவில்லை. சேவா கிராமத்திற்குச் செல்வதாக தாயார் லட்சுமி அம்மையாரிடம் கூறினார். அடிக்கடி சேவாகிராமம் சென்று காந்தியடிகளைக் கண்டு வருவதால் தாயார் இப்போது சௌந்திரத்தின் பயணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. லட்சுமி அம்மையார் ரயில் நிலையம் வரை காரில் வந்து மகளை வழியனுப்பிவைத்தார். இரண்டு தினங்கள் கழித்து பத்திரிக்கைகளில் முதல் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த ஒரு செய்தி பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இராமச்சந்திரனும் சௌந்திரமும் காந்தியடிகளின் தலைமையில் சேவா கிராமத்தில் திருமணம் செய்து கொண்டனர் என்பதே அச்செய்தியாகும். ஆம், 1940 நவம்பர் 2 ம் நாள் காங்கிரஸ் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் காந்தியடிகள் தலைமையில் சேவா கிராமத்தில் கூடியது. அதே கூட்டத்தில் தான் தேசத் தலைவர்கள் அனைவரும் வாழ்த்துக்கூற, காந்தியடிகளின் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நடைபெற்றது. காந்தியடிகள் தன் கையால் இராட்டையில் நூற்ற நூலிலிருந்து மாங்கல்ய நாண் தயாரித்து அதில் மஞ்சள் தடவிக் கொடுத்தார். தான் நூற்ற நூலிலிருந்து நெய்த வேஷ்டியை இராமச்சந்திரனுக்கும்,

அன்னை கஸ்தூரிபா நூற்ற நூலிலிருந்து நெய்த புடவையை சௌந்திரத்திற்கும் கொடுத்து முகூர்த்த ஆடையாக அணியச் செய்து திருமணத்தை நடத்திக் கொடுத்து மணமக்களை ஆசீர்வதித்தார். சேவா கிராம ஊழியர்கள் அனைவரையும் இத்திருமணத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாடும்படியும் அன்று மதியம் வழக்கமான உணவுடன் பாயாசம் வழங்கப்படும் எனவும் காந்தியடிகள் கூறினார். காந்தியடிகளே தங்களது திருமணத்தை நடத்திவைத்தார் என்பதில் புதுத் தம்பதியினருக்கு அளவிலா மகிழ்ச்சி.

சௌந்திரம்-இராமச்சந்திரன் திருமணம் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டிருந்தது. சௌந்திரம் ஏற்கெனவே இளம் வயதில் திருமணம் செய்து கொண்டு விதவையானவர். இப்போது இராமச்சந்திரனை திருமணம்செய்து கொண்டதின் மூலம் இது ஒரு விதவை மறுமணமாக அமைந்திருந்தது. அக்காலச் சூழ்நிலையில் இதுபோன்ற திருமணங்கள் கற்பனையில்கூட காண முடியாது. மேலும் இத்திருமணம் ஒரு கலப்புத் திருமணம் என்ற சிறப்பையும் பெற்றது. இராமச்சந்திரனும் சௌந்திரமும் பிறப்பால் வெவ்வேறு இனத்தைச் சார்ந்தவர்கள். இத்திருமணத்தின் மூலம் இந்திய மக்களிடையே கலப்பு மணத்தை ஊக்குவிக்க முன்னுதாரணமாக இத்தம்பதிகள் விளங்கினர். மேலும், இருவரும் வெவ்வேறு மாநிலத்தைச் சார்ந்தவர்கள். வெவ்வேறு தாய்மொழிகளையும் பேசுபவர்கள். அதோடு மட்டுமல்லாது காந்தியடிகள் தன் வாழ்நாளில் செய்து வைத்த திருமணங்களிலேயே இத்திருமணத் தம்பதிகள்தான் அதிக வயதில் திருமணம் செய்துகொண்டவர்கள். இத்திருமணம் இத்தகைய முக்கியத்துவம் பெற்றதாகக் கருதப்பட்டது.

திருமணம் முடிந்தபின் ஓரிரு நாட்களில் புதுத்தம்பதிகள் சேவா கிராமத்திலிருந்து புறப்பட்டு சென்னை வந்தனர். மதுரைக்குச் சென்றால் பெற்றோர்களும் உறவினர்களும் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். இதனால் நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்று எண்ணி சென்னையிலேயே தனிக்குடித்தனம் நடத்த ஆயத்தமாயினர். ஏற்கனவே, சென்னையில் சமூகப் பணி செய்து வந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சௌந்திரத்திற்கு அறிமுகமானவராக இருந்தார். எனவே, அவருடன் இணைந்து கிராம மருத்துவ சேவையில் சௌந்திரம் ஈடுபடலானார். இராமச்சந்திரன் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்ற ஆங்கிலத் தினசரியின் ஆசிரியராகப் பணியில் அமர்ந்தார். இவ்வாறாகப் புதுத் தம்பதிகள் தங்கள் திருமணத்தின் மூலம் ஒரு பெரும் புரட்சியே செய்துவிட்டனர்.



## 2. சுதந்திர போரில் சௌந்திரம்

காந்தியடிகளின் அரசியல் பிரவேசம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தென்னாப்பிரிக்காவில் தனது சத்தியாக்கிரகப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து, இந்தியா திரும்பியபோது 1919ல் நிகழ்ந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை காந்தியடிகளின் மனதை வருத்தியது. ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து அறப்போராட்டத்தைத் துவங்க முடிவு செய்தார். இந்தியாவிலும் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் துவங்கும் முன் நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு மக்களின் ஆதரவைப் பெறவிரும்பினார். அதே ஆண்டு காந்தியடிகள் சென்னைக்கு வருகைதந்தார். இராஜாஜி போன்ற அப்போதைய அரசியல் தலைவர்களின் அழைப்பின் பேரில் சென்னை வந்திருந்தார். தமிழ்நாட்டின் பல தலைவர்கள் காந்தியடிகளின் தலைமையில் போராட ஆயத்தமாயினர்.

அக்காலக் கட்டத்தில் காந்தியடிகளின் அரசியலில் பிரவேசித்த சமயம் இந்தியாவில் பல்வேறு சமூக நல ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவந்தன. அத்தகைய ஸ்தாபனங்களும் காந்தியடிகளின்பால் ஈர்க்கப்பட்டது. மதுரையில் 'இந்து மாதர் சங்கம்' என்ற ஒரு சங்கம் இயங்கி வந்தது. நகரிலுள்ள நடுத்தர மற்றும் வசதிபடைத்த பெண்கள் இதில் அங்கத்தினர்களாகச் சேர்ந்துகொண்டு ஒரு சில சமூகப் பணிகளைச் செய்து வந்தனர். இச்சங்கத்தின் தலைவியாக டி.வி.எஸ்.ஸின் துணைவியார் லட்சுமி அம்மையார் இருந்தார். இவர் ஒரு சிறந்த தேசபக்தர். இரக்க சிந்தனை மிக்கவர். இந்து மாதர் சங்கத்தின் மூலம் பல ஏழைப் பெண்களின் கல்விக்காக பல உதவிகளைச் செய்து வந்தார். ஜாலியன் வாலாபாக் நிகழ்ச்சியினைக் கண்டித்து மதுரையில் ஒவ்வொருநாளும் ஊர்வலங்களையும் கண்டனக் கூட்டங்களையும் சங்கத்தின் மூலம் லட்சுமி அம்மையார் நடத்தி வந்தார். எண்ணற்ற பெண்கள் இவரின் தலைமையில் மதுரையில் போர்க்கொடி பிடித்தனர். மதுரையில் மட்டுமல்லாது கிராமப்புறங்களிலும் பெண்களைத் திரட்டி ஊர்வலங்களை நடத்தி வந்தார். தமிழ்நாட்டில் மதுரையில் தான் முதன்முறையாக பெண்களால் போராட்டம் நடத்தப்பட்டது. லட்சுமி அம்மையாருக்கு திருமதி தாயம்மாள், திருமதி பத்மாஸினி போன்றோர்கள் பக்கபலமாக இருந்து பணியாற்றி வந்தனர். லட்சுமி அம்மையாரின் அறப்போராட்டம் தேசத் தலைவர்களின் கவனத்தைப் ஈர்த்தது. எனவே, இவரது அரசியல் பணிகளுக்கு காங்கிரஸ் கட்சியின் ஆதரவு தாராளமாகக் கிடைத்தது. லட்சுமி அம்மையாரின் அயராத பணியின்

காரணமாக அவரது புகழ் வளர்ந்தது. மதுரை இந்து மாதர் சங்கம் அம்மையாரின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. ஒரு நாள் மாதர் சங்கத்தில் ஒரு சின்ன விவாதம் ஏற்பட்டது. அதாவது சங்கத்தின்செயல் முறைகளில் ராஜபக்தி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதா? அல்லது தேசபக்தி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதா? என்பதில் சங்கத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சில பெண்கள் ராஜபக்தி என்ற வார்த்தையை மட்டும் பயன்படுத்த வேண்டும். அதாவது இச்சங்கமானது அரசியல் நடவடிக்கைகளில் பங்கு கொள்ளக்கூடாது. சமூக நலப் பணிகளை மட்டும் செய்து வர வேண்டுமென்று கூறினார். அப்போது லட்சுமி அம்மையார், "தற்போது இந்திய தேசம் சென்று கொண்டிருக்கும் நிலையில் நாம் செய்ய வேண்டிய பிரதான காரியங்கள் இரண்டு. ஒன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஆங்கிலேயரிடமிருந்து அரசியல் சுதந்திரம் பெறுவது. மற்றொன்று, சமூகத்தில் மலிந்து காணப்படும் வேற்றுமைகளைக் களைவது; அதன் முன்னேற்றத்திற்காக நற்பணியாற்றுவது. ஆகவே, அரசியல் என்பது நமது சுதந்திரப் போராட்டமேயொழிய வேறொன்றுமில்லை.அரசியலும் சுதந்திரப் போரும் பிரிக்கமுடியாதவை. எனவே, நாம் செய்துவரும் பணிகளுக்கு தேசபக்தி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதுதான் நல்லது," எனக் கூறினார். அம்மையாரின் கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்ட சங்க உறுப்பினர்கள் தேசபக்தி என்ற வர்த்தையைப் பயன்படுத்தலாயினர்.

இந்த காலகட்டத்தில்தான் காந்தியடிகள் இராட்டையை இந்திய மக்களுக்கு அறிமுகம் செய்தார். நமக்குத் தேவையான துணிகளை இந்தியர்களாகிய நாமே தயாரித்துக் கொள்ள வேண்டும் என காந்தியடிகள் கூறிவந்தார். காந்தியடிகளின் அறப்போராட்டத்தில் இராட்டை ஒரு முக்கிய அங்கம் வகித்தது. காங்கிரஸ் தொண்டர்களும் இராட்டையால் நூற்க வேண்டும்; கதர் ஆடைகள் அணிய வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மதுரை மாதர் சங்கத்தில் அனைவரும் கதர் அணியும்படி லட்சுமி அம்மையார் வேண்டிக்கொண்டார். அம்மையாரின் முயற்சியால் கதர் நூல் நூற்கவும், துணி நெய்யவும் சங்கத்தினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. சங்க உறப்பினர்கள் அனைவரும் ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு நூல் நூற்க வேண்டுமென கட்டாயப் படுத்தப்பட்டது. பெண்களும் உற்சாகத்துடன் நூற்க ஆரம்பித்தனர். பெரும்பாலும் சமூக சேவையில் நாட்டம் உடையவர்களே உறுப்பினர்களாக இருந்தமையால் உற்சாகத்துடன் நூற்க ஆரம்பித்தனர். அம்மையார் மாதர் சங்க உறுப்பினர்களை மட்டும் நூற்கும்படி செய்யவில்லை. தனது குடும்பத்தினருக்கும் நூற்கக் கற்றுக் கொடுத்து நூற்கச் செய்தார். தனது குழந்தைகள் அனைவரையும் நூற்கச் செய்தார். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் அன்றாடம் நூற்க வேண்டிய அளவு நூற்று முடித்தால்தான் இரவில் உறங்கச் செல்ல அனுமதிப்பார். சௌந்திரம் உட்பட அனைவருமே நூற்று வந்தனர். வீட்டில் அனைவருக்கும் கதர் உடைகள் தான்.



அப்போதெல்லாம் கதர் சாக்குப்போன்று முரடாக இருக்கும். பெண்கள் இடுப்பில் கட்டினால் புண்கள் கூட ஏற்படும். அப்படியிருந்த போதிலும்கூட வீட்டிலுள்ள அனைவரையும் கதர் உடுத்தச் செய்தார். இதன் காரணமாக டி.வி.எஸ். வீட்டிற்கு மூட்டை மூட்டையாகக் கதர் துணிகள் வந்துகுவிந்தன. அது மட்டுமல்லாது கதர் விற்பவர்கள் கூட வீட்டில் எப்போதும் குழுமியிருந்தார்கள். டி.வி.எஸ். வீடு ஒரு கதர் கொட்டகை போலவே காட்சியளித்தது. வீட்டில் பயன்படுத்தும் பொருள்கள் அனைத்துமே சுதேசிப் பொருள்கள் தான்.

மதுரை இந்து மாதர் சங்கம் கதர் உற்பத்தியில் தீவிரம் காட்டியதால் உற்பத்தி பெருகியது. கதர் நூல் உற்பத்தி பெண்களிடம் ஊக்குவிக்கப்பட்டது. சங்கத்தின் மூலமாக ஏராளமான இராட்டைகள் செய்யப்பட்டு குடும்பப் பெண்களுக்கு வினியோகம் செய்யப்பட்டது. இதனால் உற்பத்தி அதிகரித்தது. கதர் துணிகளை விற்பனை செய்யும் பணியில் சங்கம் முற்பட்டது. லட்சுமி அம்மையார் ஏனைய பெண்களைத் திரட்டிக் கொண்டு கதர் துணிகளைத் தலையில் சுமந்துகொண்டு மதுரை வீதிகளில் தெருத்தெருவாகச் சென்று விற்கத் தொடங்கினார். அவர்கள் கதர் துணிகளை விற்கின்றபோது கதரின் மேன்மையையும் முக்கியத்துவத்தையும் பொதுமக்களுக்கு எடுத்துரைத்து வந்தனர். கதர் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் கருவியெனப் பிரச்சாரம் செய்து வந்தனர். அதோடு மட்டுமல்லாது கிராமங்களுக்கும் சென்று இராட்டையை அறிமுகம் செய்து வைத்தனர். பஞ்சிலிருந்து எப்படி நூல் தயாரிப்பது என்பதையும் கற்றுக் கொடுத்தார்கள். கிராம மக்களையும் கதர் அணியும்படி ஊக்குவித்தார்கள். அதேசமயம் காந்தியடிகளின் தேச சேவையையும் அச்சேவையில் தங்கள் சங்கத்தின் பணிகளையும் எடுத்துக் கூறி சங்கத்திற்கு அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களையும் சேர்த்தார்கள். லட்சுமி அம்மையாரின் கதர் பணியினால் கதர் உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்தது. பெண்கள் கதர் வாங்கி தங்கள் குடும்பத்தினரையும் அணியச் செய்தார்கள். தென் மாவட்டங்களில் மதுரையில்தான் அதிகமாக கதர் உற்பத்தியும் விற்பனையும் நடந்தது. இதன் காரணமாக இந்திய காங்கிரஸ் கட்சியின் சிறப்பு விருது மதுரை காங்கிரஸ் கமிட்டிக்கு வழங்கப்பட்டது.

கதர் பணியில் ஆர்வமுடன் செயல்பட்டுக்கொண்டிருந்த சமயத்தில் 1921 ம் ஆண்டு காந்தியடிகள் மதுரைக்கு விஜயம் செய்தார். திரு. துளசிராம், திரு. ஜார்ஜ், திரு. ஜோசப், திரு. வைத்தியநாத அய்யர், டி.வி.எஸ். சுந்தரம் அய்யங்காரின் குடும்பத்தினர் போன்றவர்கள் காந்தியடிகளை வரவேற்றார்கள். மதுரையில் காந்தியடிகள் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார். காந்தியடிகள் ஆற்றிய உரை மதுரை நகரில் ஏராளமான இளைஞர்களின் மனத்தைத் தட்டி எழுப்பியது. இதன் பயனாக மதுரையில் ஏராளமான காங்கிரஸ்

தொண்டர்கள் கட்சியில் சேர்ந்தனர். நாட்டின் விடுதலைக்காவும், சமூக சேவைக்காவும் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள இளைஞர்கள் முன் வந்தார்கள். இதன் காரணமாகத்தான் தமிழ்நாட்டில் மதுரையானது காங்கிரஸ் கோட்டையாக விளங்கியது. அதன்பின் நடைபெற்ற சுதந்திரப் போராட்டங்களில் இந்நகர் முதன்மை வகித்தது. பொதுக் கூட்டம் முடிந்த பின்பு மதுரை இந்து மாதர் சங்கம் சார்பில் லட்சுமி அம்மையார் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். அக் கூட்டத்தில் கலந்துகொள்ள காந்தியடிகள் வந்திருந்தார். சுமார் ஒரு மணி நேரம் பிரார்த்தனை முடிந்தபின் லட்சுமி அம்மையார் வேறுபல சங்கப் பிரதிநிதிகளுடன் காந்தியடிகளைச் சந்தித்தார். அப்போது தங்கள் இயக்கம் செய்துவரும் சமூக மற்றும் கதர் பணிகளையும், செயல் திட்டங்களையும் காந்தியடிகளிடம் கூறினார். அதனைக் கேட்டு காந்தியடிகள் மகிழ்ச்சியுற்றார். லட்சுமி அம்மையாருடன் அவரது மகள் சௌந்திரமும் அருகில் நின்று கொண்டு காந்தியடிகளை அதிசயமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். காந்தியடிகள் லட்சுமி அம்மையாரைப் பார்த்து, "நீங்கள் உங்கள் குடும்பத்திலிருந்து தேச சேவைக்கு என்ன செய்யப் போகிறீர்கள்," என வினவினார். "எனக்கு எட்டுக் குழந்தைகள்; அவர்களில் என் மகள் சௌந்திரத்தை தேசப்பணிக்காக கொடுக்கிறேன்," என அருகிலிருந்த சௌந்திரத்தைச் சுட்டிக் காட்டி பளிச்சென பதில் கூறினார் லட்சுமி அம்மையார். "வேறு என்ன கொடுப்பீர்கள்?" எனக் காந்தியடிகள் கேட்டார். "ஒவ்வொரு குடும்பமும் ஒரு குழந்தையைத் தரட்டும்; இரண்டாவதாக என் முறை வரும்போது நீங்கள் கேட்டதைத் தருகிறேன்," என்று சொல்லி காந்தியடிகளையும் அருகிலிருந்தவர்களை யும் சிரிக்க வைத்தார். இந்த உரையாடல்களை அருகிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த சௌந்திரம் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது. காந்தியடிகளிடமே என்னைத் தேசத்திற்காக தருவதாக அம்மா கூறிவிட்டார்களே என்பதை எண்ணி சௌந்திரம் மகிழ்ந்தார். அன்று முதல் லட்சுமி அம்மையார் தன் மகள் சௌந்திரத்தை தேசப்பணிக்கு அர்ப்பணித்தார். சமயம் கிடைக்கும்போதெல்லாம் சமூகப் பணிகளிலும் தேசப் பணிகளிலும் சௌந்திரத்தை ஈடுபடச் செய்து உற்சாகப்படுத்தினார். இப்படியாக சௌந்திரம் தன் தாயிடமிருந்து நல்ல பயிற்சியைப் பெற்று வந்தார்.

மதுரையில் பல படித்த இளைஞர்கள் சுதந்திரத் தியாக வேள்வியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு இரவு பகலாக செயல்பட்டு வந்தனர். இந்த இளைஞர்கள் இந்தியா முழுவதும் பல தேசத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். அத்தகைய இளைஞர்களுக்குத் தலைவராக விளங்கியவர் சிதம்பர பாரதி என்பவராவார். இவர் தீவிரவாதக் கொள்கையில் பற்றுடையவர். சுப்பிரமணிய சிவா, சுப்பிரமணிய பாரதி, அரவிந்தர் போன்றோருடன்



நெருங்கிய தொடர்புடையவராக இவர் விளங்கினார். சுதந்திரப் போராட்டத்தை நடத்திச் செல்ல இளைஞர்களைத் தட்டியெழுப்புவதே இவரது முக்கியப் பணி. அதற்காக தேசமெங்கும் கிடைத்த முக்கிய நூல்களை, அதிலும் சுதந்திர வேட்கையைத் தூண்டும் பல அரிய நூல்களை இரகசியமாக வரவழைத்து இளைஞர்களுக்குப் படிக்கக் கொடுத்து வந்தார். ஏராளமான இளைஞர்களும் கற்றவர்களும் நிறையப்பேர் படிக்க ஆரம்பித்தனர். இதனால் ஒரு பெரிய நூல்நிலையம் ஒன்றையே ஏற்படுத்தினார். இந்நூல் நிலையத்திற்கு "பாரதி சுற்றுப் புத்தக சாலை" எனப் பெயரிட்டார். இதனை ஒரு இயக்கமாகவே சிதம்பர பாரதி நடத்தி வந்தார். லட்சுமி அம்மையாருக்கும் ஏராளமான புத்தகங்களைக் கொடுத்து வந்தார். பாரதியின் பாடல் புத்தகங்களை ஏராளமாக வாங்கிப் படிப்பார். தன் மகள் சௌந்திரத்திற்கும் அப்பாடல்களைச் சொல்லிக் கொடுத்து, பாடச்சொல்லிக்கேட்டு மகிழ்வார்.

காந்தியடிகள் எழுதிய "ஆரோக்கிய வழி" என்ற நூலை புத்தக சாலையிலிருந்து அம்மையார் வாங்கிப் படித்தார். அதன் பயனாக வித விதமான, அதே சமயம் எளிய முறையில் சத்தான, ஆரோக்கியமான உணவு வகைகளைத் தயாரித்து தனது குடும்பத்திற்குப் பரிமாறினார். தினந்தோறும் புது வகையான காப்பிகளைத் தயாரித்துக் கொடுத்தார். சுந்தரம் ஐயங்கார் உட்பட அனைவருமே சற்றும் முகம் சுளிக்காமல் அதனைப் பருகி மகிழ்ந்தனர். அம்மையார் படித்தறிந்த மற்றொரு முக்கிய நூல் "நம் நாடு இழந்த தனம்" என்பதாகும். இந்தியத் திருநாட்டின் இயற்கை வளங்கள் அந்நியர்களால் எவ்வாறெல்லாம் சுரண்டப்படுகிறது ; இந்தியர்களின் மூலதனம் வெளிநாடுகளில் எப்படியெல்லாம் வீணடிக்கப்படுகிறது என்று பல விவரங்களைப் புள்ளி விவரத்துடன் விளக்கும் வகையில் அந் நூல் அமைந்திருந்தது. இப்புத்தகத்தின் கருத்துக்கள் அம்மையாரின் மனதை மிகவும் பாதித்தது. அதன் பின் தன் கணவருடன் நேரம் கிடைக்கும்போதெல்லாம் இந்தியாவின் பொருளாதாரத்தைப்பற்றிப் பேசிவருவார். ஒருநாள் தன் கணவரிடம், நம் நாட்டுச் செல்வம் மோட்டார் தொழிலின் மூலமாக வெளிநாடுகளில் மூலதனம் செய்யப்படுகிறது. இதனால் வெளிநாடுகள்தான் பொருளாதாரத்தில் முன்னேறிச் செல்கிறது. எனவே, நமது நாட்டில் கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டே தொழில் தொடங்குவது நல்லது. இதனால், நமது நாட்டில் வேலை வாய்ப்பு அதிகரிக்கும். வறுமையில் வாடும் மக்களை முன்னேற்றவும் உதவும் என்பதோடு நமது வருவாயில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை சமூக சேவைக்காகப் பயன்படுத்த வேண்டுமென அம்மையார் கூறினார். மனைவியின் கருத்தை சுந்தரம் அய்யங்கார் முழு மனதோடு ஏற்றுக் கொண்டார். அதன் பின் தனது வருமானத்தில் ஒரு பகுதியை தேசிய இயக்கத்திற்கும், பல்வேறு சமூக

நலப் பணிகளுக்கும் வழங்கலானார். இவ்வாறு லட்சுமி அம்மையார், தான் மட்டும் தேசிய வேலைகளில் பங்கு கொண்டதோடு மட்டுமல்லாது தனது கணவரையும், குழந்தைகளையும் அதில் ஈடுபடச் செய்தார்.

சிதம்பர பாரதி ஒரு சமயம் காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்ள சென்னை சென்றார். வட இந்தியாவிலிருந்தும் அவரது நண்பர்கள் வந்திருந்தார்கள். அப்போது, தன் நண்பர்களிடமிருந்து திரு. சவர்க்கர் என்பவரால் எழுதப்பட்ட "முதல் இந்திய சுதந்திரப் போர்" என்ற ஆங்கில நூலை இரகசியமாகப் பெற்றுவந்தார். இந்நூல் 1857 நடைபெற்ற சிப்பாய்க் கலகத்தின் வரலாறாகும். அப்புத்தகம் ஆங்கில அரசால் தடை செய்யப்பட்டிருந்தது. இந்நூலை வைத்திருப்பவர்களும், படிப்பவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். சிதம்பர பாரதி அந்நூலை சௌந்திரத்திடம் படிக்கக் கொடுத்தார். சௌந்திரம் அந்நூலை திரும்பத் திரும்பப் படித்தார். படித்ததோடு மட்டுமல்லாது அந்நூலை தமிழில் மொழி பெயர்க்கவும் விரும்பி, தன் கருத்தை சிதம்பர பாரதியிடம் தெரிவித்தார். அதற்கு அவரும் இசைவு கொடுத்தார். தமிழில் மொழி பெயர்த்து புத்தகமாக்கி வெளியிட்டால் தமிழ்நாட்டிலுள்ள அனைவருமே அதனைப் படித்தறிய முடியும் என்பதால் சௌந்திரம் இம் முயற்சியில் ஈடுபட்டார். உடனடியாக மொழிபெயர்ப்பைத் தொடங்கினார். சுமார் 16 பக்கங்கள் மொழி பெயர்ப்பு வேலை முடிந்த வேளையில் மதுரைக்கு சுப்பிரமணிய சிவா விஜயம் செய்தார். சௌந்திரம் மொழிபெயர்த்திருந்த பக்கங்களை சிவாவிடம் சிதம்பர பாரதி காண்பித்தார். அதனைப் படித்துப் பார்த்த சிவா, "பேஷ்...பேஷ் நன்றாக மொழி பெயர்த்திருக்கிறார். தொடர்ந்து எல்லாவற்றையும் மொழி பெயர்க்கச் சொல்லுங்கள். எனது பாராட்டுக்களையும் தெரிவியுங்கள்," என சிதம்பர பாரதியிடம் கூறினார். சிதம்பர பாரதி சௌந்திரத்தைச் சந்தித்தபோது நடந்தவற்றைக் கூறினார். சுப்பிரமணிய சிவா தனது மொழிபெயர்ப்பைப் பாராட்டினார் என்பதில் சௌந்திரத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. தொடர்ந்து உற்சாகத்துடன் மொழிபெயர்த்தார். இறுதியில் புத்தகம் தயாரிக்கப்பட்டு "எரிமலை" என்ற பெயரில் சிதம்பர பாரதி வெளியிட்டார். ஆயிரக்கணக்கான பிரதிகள் இரகசியமாக அச்சிடப்பட்டு வெயியிடப்பட்டன. இளைஞர்கள் மத்தியில் இப்புத்தகம் எழுச்சியை ஏற்படுத்தியது. ஆங்காங்கே இளைஞர்கள் கொதித்தெழுந்தனர். இதற்கிடையில் இப்புத்தகத்தைப் பற்றி ஆங்கில அரசிற்குத் தெரிய வந்தது. இந்நூலை மொழிபெயர்த்துக் கொடுத்தவர் சௌந்திரம் என்பது எப்படியோ தெரிந்துவிட்டது. உடனடியாக போலீஸ் அதிகாரிகள் டி.வி.எஸ். வீட்டிற்கு படையெடுத்துச் சென்று வீட்டை சோதனையிட்டனர். ஆனால் பயனில்லை. எதுவும் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பினர். இந்த எரிமலை என்ற நூல் பின்பு சென்னையில் நீலன் என்ற ஆங்கிலக் கவர்னரின் சிலை உடைப்பிற்கு



காரணமாக அமைந்தது. அவ்வளவு தூரம் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பும் வகையில் சௌந்திரத்தின் மொழிபெயர்ப்பு அமைந்திருந்தது. நூலைப் படித்த அனைவருமே சௌந்திரத்தைப் பாராட்டினர். இதனைத் தொடர்ந்து ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டிருந்த பல சுதந்திரவேட்கை நூல்களையும், தேசத் தலைவர்களின் ஆங்கில உரைகளையும் தமிழில் மொழி பெயர்த்து புத்தகங்களாக வடித்துக் கொடுத்தார். இப்படியாக நாளடைவில் மொழிபெயர்ப்பு சௌந்திரத்தின் ஒரு பொழுதுபோக்காகவே அமைந்துவிட்டது.

லட்சுமி அம்மையாரின் சேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்தது. அதே போன்று சௌந்திரத்தின் மனதிலும் தேசப்பற்று வளர்ந்தோங்கியது. தேசத் தொண்டு செய்வதில் சௌந்திரம் ஆர்வம் காட்டினார். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில், தன் தாயின் ஆதரவுடன் கதர் பிரச்சாரம், தீண்டாமை ஒழிப்பு வேலைகள் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். லட்சுமி அம்மையாரும் தன் மகளுக்கு தேசிய வாழ்வில் ஈடுபட வழி முறைகளையும், யோசனைகளையும் வழங்கி நெறிப்படுத்தினார். "தாயிடம் தான் பெற்ற பயிற்சிதான் பிற்காலத்தில் தான் ஒரு தேசியவாதியாகத் திகழ்வதற்கு காரணமாயிருந்தது" என பல சந்தர்ப்பங்களிலும் தன் தாயைப்பற்றி சௌந்திரம் குறிப்பிட்டுவந்தார். தன் மகளும் தன்னைப் போன்றே தேசப்பணி செய்கிறாள் என்பதைக் கண்டு லட்சுமி அம்மையார் மகிழ்ச்சியடைந்தார். ஒரு நாள் சௌந்திரத்திடம், "நம் குடும்ப பாரம் பெரிது. எனக்கு தேசிய வாழ்வில் தீவிரமாக இறங்க முடியாது. ஆகவே, தேசப்பணி செய்ய நீ தான் என் வாரிசு," என்று லட்சுமி அம்மையார் கூறினார். சௌந்திரம் தன் தாயின் அவாவிற்கிணங்கி அவரது ஆசியுடன் தேசிய வாழ்வில் பங்கேற்றுவந்தார்.

மதுரை நகரில் பிரபல செல்வந்தரான டி.வி.எஸ். ஸின் குடும்பமே சுதந்திரப் போரில் தீவிரமாகப் பங்காற்றி வருவது அந்நகரின் மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அதனால் நாட்கள் செல்லச்செல்ல காங்கிரஸ் இயக்கம் நகரில் தீவிரமாகியது. டி.வி.எஸ். குடும்பத்தின் தேசியப்பணிகள் தேசத் தலைவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றது. இதனால் இக்குடும்பத்தினருக்குப் பல தேசியத் தலைவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. பல தலைவர்கள் அவ்வப்போது வந்து போகத் தொடங்கினர். சிறிது நாட்களுக்குள் டி.வி.எஸ். வீடு தேசத் தலைவர்களின் மணிமண்டபமாக விளங்கத் தொடங்கியது. பெரிய தேசத் தலைவர்கள் மட்டுமல்லாது கதர் விற்பவர்கள், காங்கிரஸ் தொண்டர்கள், கிராமப்புற ஏழை எளியோர் ஆகியோரின் அடைக்கல இல்லமாகவும் விளங்க ஆரம்பித்தது.

காந்தியடிகள் தனது அறப்போராட்டத்தின் ஒரு பகுதியாக 1930 மார்ச் மாதம் ஆங்கியேலரின் உப்பு வரியை எதிர்த்து சபர்மதி ஆசிரமத்திலிருந்து மேற்கு கடற்கரை நகரமான தண்டியை நோக்கி தண்டியாத்திரையை மேற்கொண்டார். காந்தியடிகளின் தண்டி யாத்திரையைப் போன்று தமிழகத்திலும் ஒரு உப்பு சத்தியாக்கிரகம் நடத்த வேண்டுமென இராஜாஜி அவர்கள் விரும்பினார். தமிழகக் காங்கிரஸின் அரணாக விளங்கிய மதுரைக்கு இராஜாஜி வந்து, திரு. வைத்தியநாத அய்யர், திரு. நா.ம.ரா. சுப்பராமன் ஆகியோருடன் கலந்தாலோசித்தார். அன்று முதல் இன்று வரை சென்னை நகர் தமிழ் நாட்டின் நிர்வாகத் தலைநகராகவும் மதுரை நகர் அரசியல் தலைநகராகவும் விளங்குவதைக் காணலாம். இராஜாஜியின் தலைமையில் திருச்சியிலிருந்து புறப்பட்டு வேதாரண்யம் சென்று உப்பு சத்யாக்கிரகம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. இராஜாஜியுடன் 100 சத்யாகிரகிகள் செல்வதாகவும், அதில் 33 பேர் மதுரையிலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி மதுரையிலிருந்து செல்கின்ற 33 சத்தியாகிரகிகளுக்கும் லட்சுமி அம்மையார் சொந்த பொறுப்பில் கதர் வேஷ்டி, சட்டை, குல்லாக்கள் போன்றவற்றை வழங்கி மாதர் சங்கத்தின் சார்பில் வழியனுப்பு விழா நடத்தி வாழ்த்தி அனுப்பினார். அதோடு மட்டுமல்லாது உப்பு சத்யாகிரகத்திற்கென பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்யப்பட்டபோது தனது குடும்பத்தின் சார்பாக தாராளமாகப் பண உதவியும் செய்தார்.

உப்பு சத்தியாகிரகத்தைத் தொடர்ந்து நாடெங்கும் அந்நியப் பொருள்கள் பகிஷ்கரிப்பு, கள்ளுக்கடை மறியல் போன்ற அறப்போராட்டங்கள் நடைபெற்றன. இவ்வேளைகளில் சௌந்திரம் தானே முன்னின்று பல போராட்டங்களை நடத்தினார். கிராமங்களுக்குச் சென்று நூற்றுக்கணக்கான பெண்களைத் திரட்டி வந்து தினந்தோறும் அந்நியத்துணி பகிஷ்கரிப்பு ஊர்வலங்களை மதுரையில் நடத்தினார். வெளியூர்களிலிருந்து வந்துள்ள பெண் சத்தியாக்கிரகிகளுக்கு உணவு, தங்குமிடம் போன்ற வசதிகளை மாதர் சங்கம் மூலம் லட்சுமி அம்மையார் செய்து கொடுத்தார். சௌந்திரம் தனது தலைமையில் இந்தப் பெண் தொண்டர்களை அழைத்துக்கொண்டு வீடுவீடாகச் சென்று அந்நிய நாட்டின் மில் துணிகளைப் பெற்று, அதற்குப் பதிலாக கதர் துணிகளை வழங்கிவந்தார். இவ்வாறு கதரைக் கொடுத்து பெற்ற அந்நிய துணிகளை நகரின் முக்கிய இடங்களில் தீயிட்டுக் கொளுத்தினார். இவ்வேலை தினந்ததோறும் நடைபெற்று வந்தது. ஒருநாள் சௌந்திரம் தன்னுடன் ஏராளமான பெண்களைத் திரட்டிக்கொண்டு கையில் தக்ளி ஏந்தி நூல் நூற்ற வண்ணமாக தேசிய கீதங்களைப் பாடிக்கொண்டு மதுரை நகரில் ஊர்வலமாக வந்தார். வசதியான





மதுரையில் நூற்பு வேள்வியில் பல நூறு பெண்களை ஈடுபடவைத்த அம்மா அவர்கள்

குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், ஊர்வலம் நடத்துவதைக் கண்ட போலீஸார் என்ன செய்வதென்று அறியாமல் பரிதாபமாகக் காட்சியளித்தனர். போராட்டங்களில் ஈடுபடும் வசதியான பெண்களைப் போலீஸ் கைது செய்வது கிடையாது. அப்படிக் கைது செய்தால் அவப்பெயர் ஏற்படுமெனக் கருதினர். இதை அறிந்த சௌந்திரம் தனது தயாரின் உதவியுடன் வீட்டிலிருந்த ஏராளமான நகைகளையும் ஆபரணங்களையும் எடுத்து வந்து போராட்டத்தில் கலந்து கொள்ளும் பெண்களுக்கு அணிவித்து ஊர்வலங்களையும் மறியல்களையும் நடத்தி வந்தார். சௌந்திரத்தின் தலைமையில் நூற்றுக்கணக்கான பெண்கள் தூய கதர் ஆடை உடுத்தி, காது, கழுத்தில் ஏராளமான நகைகளையணிந்து கம்பீரமாக தேசியக் கொடியைக் கையிலேந்தி ஊர்வலமாக வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. போலீஸார் மட்டுமின்றி பொது மக்களும் திகைப்பில் ஆழ்ந்தனர். ஊர்வலமாகச் சென்ற இவர்கள் நகரின் முக்கிய ஜவுளிக் கடைகள் முன் அமர்ந்துகொண்டு சித்தியாக்கிரகம் செய்து கடைகளை மூடச் செய்தனர். ஒரு நாள் ஒரு பெரிய ஊர்வலம் ஒன்றிற்கு சௌந்திரம் தலைமை தாங்கிக்கொண்டிருந்தார். தினந்தோறும் பெண்கள் ஊர்வலம் நடத்தி மறியல் செய்வதால் போக்குவரத்து மற்றும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது என்பதால் இவ் ஊர்வலத்தைக்

கலைக்க போலீஸார் பல லாரிகளில் விரைந்து வந்தனர். போலீஸ் லாரிகளைக் கண்டு அஞ்சாமல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தார் சௌந்திரம். ஏராளமான போலீஸார்கள் ஊர்வலத்தைத் தடுப்பதற்காக வரிசையாக தெருக்களில் நின்றனர். ஆனால் பெண்களோ தேசியப் பாடல்களையும், பாரதியின் பாடல்களையும் பாடிக்கொண்டே முன்னேறிச்சென்றனர். உடனே போலீஸார் ஊர்வலத்திற்குள் புகுந்து முன்னணியில் தலைமை வகித்துச் சென்ற சௌந்திரத்தையும் மற்ற முக்கியப் பெண்களையும் விட்டுவிட்டு ஏராளமான பெண் தொண்டர்களைக் கைது செய்து லாரிகளில் ஏற்றினர். லாரிகளில் ஏறும்போது "காந்திக்கு ஜே... காந்திக்கு ஜே" என்ற பெண்களின் முழக்கம் விண்ணைப் பிளந்தது. கைது செய்யப்பட்ட பெண்கள் ஊருக்கு வெளியே வெகுதூரம் கொண்டு சென்று அரை குறையாக ஆடைகளைக் களைந்து நடக்கச் செய்து கொடுமைப்படுத்தினார்கள். அருகிலிருந்த கிராமத்தைச் சேர்ந்த பெண்கள் போலீஸாரின் இந்த கொடூரச் செயலைக் கேள்விப்பட்டு, ஓடோடி வந்து உதவி செய்தனர். போலீஸாரின் மனிதாபிமானமற்ற இச் செயலை தமிழ்நாட்டு மக்கள் அனைவருமே வன்மையாகக் கண்டித்தனர். மறுநாள் போலீஸாரின் கொடுஞ்செயலைக் கண்டிக்கும் வகையில் மாதர் சங்கத்தின் சார்பாக லட்சுமி அம்மையார் ஒரு பெரிய கண்டன ஊர்வலத்தை நடத்தினார். இவ்வாறு ஆங்கிலேயரின் அடக்குமுறையை எதிர்த்து தினந்தோறும் ஊர்வலங்களும் மறியல்களும் மதுரையில் நடந்த வண்ணமிருந்தன.

மதுரையில் வைகையாற்றின் வடக்குக் கரையில் ஒரு மண்டபம். கோபுளா மண்டபம் என்று பெயர். இங்குதான் கள்ளுக்கடை மறியலில் ஈடுபடும் சத்தியாக்கிரகிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. எப்படி அணிவகுத்துச் செல்ல வேண்டும்; யார் யார் எந்த இடங்களில் மறியல் செய்ய வேண்டுமென்ற பயிற்சிகள் இம் மண்டபத்தில் கொடுக்கப்பட்டது. ஒரு நாள் இம் மண்டபத்திலுள்ள தொடர் முகாமில் காங்கிரஸ் கொடியேற்றிவைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கொடிவணக்கத்திற்கு ஆண் தொண்டர்களும் மாதர் சங்கத்தினரும் கலந்துகொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தகவலையறிந்த ஆங்கில அரசு பொதுக்கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடை விதித்தது. நகரமெங்கும் ஆயுதம் தாங்கிய போலீஸார் குவிக்கப்பட்டனர். லட்சுமி அம்மையார் கொடிவணக்கத்திற்கு வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையில் கொடிவணக்கத்திற்காக வந்து கொண்டிருந்த் சத்தியாக்கிரகிகள் மீது போலீஸார் தடியடிப் பிரயோகம் செய்தனர். இதனால் நகரமெங்கும் பீதி நிலவியது. இத்தருணத்தில் டி.வி.சுந்தரம் அய்யங்கார் தனது மனைவிக்கு அலுவலகத்திலிருந்து ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினார். ஊர் அமளிப்படுகிறது. நீ கொடிவணக்கத்திற்கு செல்ல வேண்டாமென



அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அக்கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த வேளையில் டாக்டர் பிச்சைமுத்து என்பவர் விரைந்து வந்து வீட்டிற்குள் வந்துகொண்டிருந்தார். "அம்மா, பெண்கள் எல்லோரும் பயந்துகொண்டு கொடிவணக்கத்திற்கு வரமறுக்கிறார்கள். நீங்கள் முதலில் வந்தால்தான் அவர்கள் வருவார்கள்போல் தோன்றுகிறது. அதற்காகத்தான் நான் உங்களை அழைத்துப்போக வந்தேன்" என்று வந்தவர் கூறினார். "என் வீட்டுக்காரர் நான் வெளியே செல்லவேண்டாமெக் கூறி கடிதம் கொடுத்தனுப்பியுள்ளார். அதையும் மீறி நான் வருவது நன்றாக இருக்காது" என்று கூறி அருகிலிருந்த சௌந்திரத்தை அழைத்து, "சௌந்திரம் நான் உனக்கு அனுமதி தருகிறேன். நீ சென்று வா" என்றார். சௌந்திரத்திற்கு எல்லையற்ற மகிழ்ச்சி. தனது தாயார் அவரது ஸ்தானத்தில் தன்னை அனுப்புகிறார் என்ற ஆனந்தம் மனதில் பொங்க டாக்டர் பிச்சைமுத்துவுடன் புறப்பட்டார். கொடிவணக்கத்திற்கு இந்தச் சூழ்நிலையில் சென்றால் என்ன நடக்கும் என்பது தாய்க்கும் மகளுக்கும் நன்றாகவே தெரியும். தனது மகளின் உயிருக்கே ஆபத்தான நிலையில் அதனைப் பொருட்படுத்தாது தன் மகளை லட்சுமி அம்மையார் அனுப்பினார் என்றால், அவரது தேச பக்தியை எங்ஙனம் கூறுவது. அதே போன்று தாயினுடைய ஆணைக்கு எவ்வித மறுப்பும் தெரிவிக்காமல் ஆனந்தமாக உடனடியாக புறப்பட்டுச் சென்ற சௌந்திரத்தின் மன தைரியத்தையும், தேசப்பற்றையும் என்னவென்று சொல்வது! சௌந்திரம் கொடி வணக்கத்திற்கு வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டதும், ஆங்காங்கே நின்று கொண்டிருந்த பெண் தொண்டர்கள் முகாமிற்கு வரலாயினர். நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் கதர் ஆடை அணிந்து அணியணியாக நின்றனர். குறிப்பிட்ட நேரத்தில் கொடியேற்றம் ஆரம்பமாயிற்று. கொடிக் கம்பத்தில் கொடி கீழிருந்து மேலாக ஏறிக்கொண்டுசென்றது. "வந்தே மாதரம்... மகாத்மா காந்திக்கு ஜே..." என்ற முழக்கம் விண்ணைத் தொட்டது. அதே சமயம் மறுகரையில் அணிவகுத்து நின்ற போலீஸார் ஆண்கள் பகுதியின் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். சத்தியாக்கிரகிகளும் பொது மக்களும் தலை தெரிக்க ஓடினர். எத்தனை பேர் மாண்டார்கள்? எத்தனைபேர் காயம்பட்டார்கள்? என்பதற்கு அளவே கிடையாது. குண்டடிபட்ட காயத்தினால் சிலர் ஓடமுடியாது வழியில் உருண்டனர். சிலர் மார்பில் குண்டுகளைத் தாங்கிக் கொண்டும் கையினால் பொத்திக் கொண்டும் ஓடினர். சௌந்திரமும் ஏனைய பெண்களும் பத்திரமாக வீடுவந்து சேர்ந்தனர். தன் தாயிடம் முகாமில் நடந்தவற்றை சௌந்திரம் ஒன்று விடாமல் கூறினார். தன் மகள் எவ்விதக் காயமுமின்றி பத்திரமாக வீடு வந்து சேர்ந்தாளே என்பதைக்கூட கண்டுகொள்ளாமல் "கொடியேற்று விழாவில் கலந்து கொள்ள நீயாவது தக்க சமயத்தில் ஊரில் இருந்தாயே" என்று தன் மகளைப் பாராட்டினார்.

காயம்பட்ட ஏராளமான தொண்டர்கள் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பாடாமல் துன்புறுகிறார்கள் என்ற செய்தி லட்சுமி அம்மையாருக்கு தெரிவிக்கப்பட்டது. உடனே தனது மகளை அழைத்து, "சௌந்திரம், குண்டடிபட்டவர்களுக்கு சிகிச்சைக்கு உடனடியாக சிகிச்சைக்கு ஏற்பாடு செய்," என்று கூறி காரின் சாவியை எடுத்துக் கொடுத்தார். காயம்பட்டவர்களின் வீட்டை விசாரித்து, காரில் சென்று அவர்களை ஏற்றிக் கொண்டு வடக்குவெளி வீதியிலுள்ள ஒரு வீட்டிற்கு கொண்டு வந்து சேர்த்தார். இதற்கிடையில் லட்சுமி அம்மையார் தன் வீட்டிலிருந்து பல மருத்துவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார். தேசப்பற்று மிக்க பல டாக்டர்கள் இரகசியமாக வந்து வைத்தியம் செய்தனர். நோயாளிகள் மட்டுமல்லாது பொது மக்கள் அனைவருமே சௌந்திரத்தையும் அவரது குடும்பத்தினரையும் வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்தார்கள்.

1942–ல் நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திலும் சௌந்திரத்தின் சேவை மகத்தானது. 1940 ல் சௌந்திரம் திரு.இராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டபின் சிறிது காலம் சென்னையிலிருந்தார். அதன்பின் திருவனந்தபுரம் சென்று தனது இல்வாழ்க்கையை நடத்தினார். அச்சமயம் திருவனந்தபுரத்தில் தைக்காடு என்ற இடத்தில் "சாந்தி கிளினிக்" என்ற பெயரில் ஒரு மருத்துவமனையை நடத்தி வந்தார். அப்பகுதியிலுள்ள ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ சேவை செய்து வந்தார். சௌந்திரத்தின் சேவையைப் பாராட்டிய மக்கள், அவருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கினர். சுகாதாரம், குழந்தைகள் நலன், பெண்கள் முன்னேற்றம் பற்றி அப்பகுதி மக்களுக்கு எடுத்துரைத்தார். அதுமட்டுமல்லாது, அப்பகுதியில் உள்ளவர்களுக்கு இராட்டையில் நூல் நூற்கக் கற்றுக் கொடுத்து தேசியத்தையும் அவர்கள் மனதில் வளர்த்தார். இத்தருணத்தில் 1942 ஆகஸ்ட் 9ம் நாள் காந்தியடிகள் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்தார். அதனைத் தொடர்ந்து காந்தியடிகள் உள்பட நாடு முழுவதும் ஆயிரக்கணக்கான தேசத்தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். திருவனந்தபுரத்தில் திரு. இராமச்சந்திரன் தனது தலைமையில் மக்களை ஒன்று திரட்டி போராட்டம் நடத்தினார். சௌந்திரமும் போராட்டத்தில் தன் கணவருடன் கலந்து கொண்டார். ஆங்கில அரசின் உதவியுடன் திருவிதாங்கூர் அரசு இராமச்சந்திரனைக் கைது செய்து சிறையில் அடைத்தது. தன் கணவர் கைது செய்யப்பட்டதால் போராட்டம் நின்றுவிடக்கூடாது, தொடர்ந்து நடக்க வேண்டுமென சௌந்திரம் விரும்பினார். வீடுவீடாகச் சென்று காங்கிரஸ் தொண்டர்களைத் திரட்டினார். இரகசியமாக கூட்டங்களை நடத்தி போராட்டம் பற்றிய செயல் திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். இதனால் சத்தியாகிரகிகள் கைது செய்யப்பட்டனர். இருப்பினும்



ஊர்வலங்களும் போராட்டங்களும் தொடர்ந்து நடைபெற்றன. திருவிதாங்கூர் அரசு இப்போராட்டங்கள் தொடர்ந்து நடப்பதற்கான காரணங்களை ஆராய முற்பட்டது. இறுதியில் சௌந்திரம்தான் தொண்டர்களைத் தயார் செய்து போராட்டத்திற்கு அனுப்புகிறார் என்பதைக் கண்டறிந்தது. திருவிதாங்கூர் அரசின் திவான் சி.பி.இராமசாமி ஐய்யர் சௌந்திரத்தைக் கைது செய்ய ஆணையிட்டார். உடனடியாக சௌந்திரம் கைது செய்யப்பட்டார். ஒரு பெண்ணைக் கைது செய்து என்ன செய்வது? இராமசாமி ஐய்யரின் தீவிர ஆலோசனைக்குப்பின் சௌந்திரத்தை தங்களது எல்லையிலிருந்து வெளியேற்றுவதெனத் தீர்மானித்தனர். அதன்படி செங்கோட்டை நகர்வரை சௌந்திரம் கொண்டுவரப்பட்டு விடுவிக்கப்பட்டார். இனிமேல் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் எல்லைக்குள் நுழையக்கூடாதெனவும் எச்சரிக்கப்பட்டார். போராட்டமானது மிகவும் வலுப்பெற்று, சட்டங்களை மீறி சிறைபுக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்டாலொழிய பெண்கள் சிறை செல்லக்கூடாது. மேலும், போராட்ட காலங்களில் பெண்கள் வெளியே இருந்து போராட்டங்களுக்கான உதவிகளைச் செய்துதர வேண்டும் என்பது ஏற்கனவே அனைவராலும் எற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். எனவேதான் சௌந்திரம் தொடர்ந்து வெளியிலிருந்த வண்ணமே போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார்.

செங்கோட்டையில் விடுவிக்கப்பட்ட சௌந்திரம் நேராகச் சென்னை சென்று தனது உறவினர்கள் வீட்டில் தங்கினார். சென்னையில் நடைபெற்ற போராட்டங்களை ஊக்கப்படுத்தினார். சென்னையில் ஏற்கனவே பல தலைவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். வசதி படைத்த தலைவர்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களது குடும்பங்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படவில்லை. ஆனால், நடுத்தர மற்றும் வசதியற்ற சத்தியாக்கிரகிகளின் குடும்பங்கள் வறுமையில் வாடின. அப்படிப்பட்ட குடும்பங்களை விசாரித்து நேரில் சென்று தேவையான வசதிகளை சௌந்திரம் செய்து கொடுத்தார். இவ்வாறு இந்திய சுதந்திரப் போரில் சௌந்திரமும் அவரது குடும்பமும் ஆற்றிய பணிகள் மகத்தானது. குறிப்பாக வேறெங்கும் இல்லாத அளவிற்கு மதுரையில் பெண்களை ஒன்று திரட்டி அவர்களையும் சுதந்திரப் போரில் பங்கு கொள்ளச் செய்து, தமிழகத்திற்கு பெருமை சேர்த்தது டி.வி.எஸ். ஸின் குடும்பமென்றால் அது மிகையாகாது.

# 3. அடையாறில் அம்மா

1942ல் சௌந்திரத்திற்கு வயது 36. 1942 இயக்கத்தில் இராமச்சந்திரன் கைது செய்யப்பட்டபின் திருவிதாங்கூர் அரசு சௌந்திரத்தையும் மாகாணத்தைவிட்டு வெளியேற்றியது. சௌந்திரம் நேரடியாகச் சென்னைக்கு வந்து தனது உறவினர்கள் வீட்டில் தங்கினார். அதன்பின் சென்னை மருத்துவக் கல்லூரியில் மகப்பேறு டிப்ளமோ வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். ஓராண்டு காலம் பயின்றார். அப்போது மகப்பேறு மருத்துவத்தின் நுணுக்கங்களைக் கற்றறிந்தார். அதற்கான தேர்விலும் வெற்றி பெற்று, சிறந்த புலமையும் பெற்றார். இச்சமயம் சென்னையில் பல மருத்துவர்கள் சௌந்திரத்திற்கு பழக்கமாயினர். குறிப்பாக தென்னிந்தியாவிலேயே பெயர்பெற்று விளங்கிய திருமதி முத்துலட்சுமி ரெட்டியவர்களைச் சந்தித்துப் பழகும் வாய்ப்பு சௌந்திரத்திற்குக் கிடைத்தது. ஆரம்பத்தில் சாதாரண நிலையிலிருந்த அவர்களது நட்பு நாளடைவில் விரிவடைந்து, மருத்துவ சேவையில் முத்துலெட்சுமி அவர்களை சௌந்திரம் தனது குவாக ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு வளர்ந்தது.

சௌந்திரம் தனது ஓராண்டு காலப் படிப்பை முடித்தவுடன் ராயப்பேட்டையில் ஒரு நர்சிங்ஹோம் ஆரம்பித்து பணியாற்றி வந்தார். அப்போது, கிராமங்களிலுள்ள ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் சௌந்திரத்திற்கு ஏற்பட்டது. பிரபல சமூக சேவகியான முத்துலட்சுமி ரெட்டியவர்களிடம் தனது ஆவலைத் தெரிவித்தார். அதன் பயனாக இருவரும் இணைந்து ஒளவை கிராம மருத்துவ சேவை என்ற ஸ்தாபனத்தை 1943 ல் ஏற்படுத்தினார்கள். சமூக சேவையில் நாட்டமுள்ள பல மருத்துவர்களும் இதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தலைவராகவும் சௌந்திரம் செயலாளராகவும் விளங்கிய ஒளவை ரூரல் மெடிக்கல் சர்வீஸில், அப்போது புகழ்பெற்று விளங்கிய மருத்துவர்களான டாக்டர் காமத், டாக்டர் லட்சுமணராவ், டாக்டர் கோவிந்தராஜு நாயுடு, டாக்டர் ஸ்ரீனிவாசமூர்த்தி போன்றவர்களும் தங்களை இணைத்துக் கொண்டு கிராமங்களில் மருத்துவ சேவை செய்ய ஆரம்பித்தார்கள். அடையாறைத் தலைமையகமாகக் கொண்டு செயல்பட்ட இவர்கள், அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று இலவச மருத்துவ சேவை செய்து



வந்தார்கள். அப்போது அடையாறில் காங்கிரஸ் தொண்டர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து "நேதாஜி தொண்டர்கள்" என்ற ஒரு சமூகப் பணி அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு சில பொதுப்பணிகளைச் செய்து வந்தனர். இத்தொண்டர்களும் சௌந்திரத்தின் கிராமப் பணிக்கு உதவியாகச் செயல்பட்டு வந்தார்கள். அடையாறில் சௌந்திரம் ஆற்றிவரும் மருத்துவப் பணிக்கு பொது மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. இப்பகுதி குடிசைவாழ் மக்கள் அனைவரும் சௌந்திரத்தின் மீது அளவற்ற அன்பும், மதிப்பும் கொண்டிருந்தார்கள். நேதாஜி தொண்டர்களைத் தனக்கு உதவியாக வைத்துக்கொண்டு போக்குவரத்து இல்லாத கிராமங்களுக்கு கால்நடையாகவே சென்று மருத்துவ சேவை செய்து வந்தார்கள். அத்தோடு கிராம மக்களுக்கு இராட்டை, தக்ளி போன்றவற்றை அறிமுகப்படுத்தி நூல் நூற்கவும் கற்றுக் கொடுத்தார்கள். வேலையின்றி வீட்டில் அடங்கிக் கிடக்கும் பெண்களுக்கு நூல் நூற்பது எளிதாகவும், வருமானம் கிடைக்கக் கூடியதாகவும் காணப்பட்டது. இப்பகுதியிலுள்ள முதியோர்களுக்கு எழுத்தறிவு கற்றுக் கொடுக்கும்முகமாக இரவுப் பள்ளிகளை ஆரம்பித்தார்கள். இரவுப் பள்ளிகள் இரவு பத்து மணி வரையில்கூட நடக்கும். அதற்குப் பின்பும் சிலர் சௌந்திரத்தை மருத்துவம் பார்க்க அழைப்பார்கள். இரவில் அரிக்கன் விளக்கைக் கையில் பிடித்த வண்ணம் நடந்தே சென்று வைத்தியம் பார்த்துவிட்டு நள்ளிரவில் வெகுநேரம் கழித்து அடையாறில் தான் தங்கியிருந்த இடத்திற்கு வருவார். இவ்வாறாக சௌந்திரம் தன்னை முழுவதுமாக கிராமப் பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டார்.

இச்சமயம் காந்தியடிகளும், அன்னை கஸ்தூரிபாவும் பூனாவில் ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். அச்சிறை வாசத்தின்போது அன்னையின் உடல்நிலை மோசமாகியது. மருத்துவ வசதிகள் செய்துதரப்பட்ட போதிலும் அவைகள் பயனற்றுப் போயின. 1944 பிப்ரவரி 22ம் தேதி அன்னை கஸ்தூரிபா இவ்வுலக வாழ்வை நீத்தார். அன்னையின் மறைவு காந்தியடிகளுக்கு மட்டுமல்ல; இந்திய நாட்டிற்கே பேரிழப்பாக அமைந்தது. அன்னையின் மறைவிற்கு முன்பே காந்தியடிகளின் 75 வது பிறந்த நாளன்று 75 லட்ச ரூபாய் பொது மக்களிடமிருந்து வசூல் செய்து தேசிய நிதியாக காந்தியடிகளிடம் கொடுப்பதென தேசத் தலைவர்கள் முடிவு செய்து நிதியும் வசூலித்து வந்தனர். ஆனால், காந்தியடிகளுக்கு இத்தேசிய நிதி பற்றித் தெரியாது. காரணம், காந்தியடிகளைச் சந்திக்க எவரும் ஆகாகான் மாளிகைக்குள் அனுமதிக்கப் படவில்லை. இவ்வாறு நிதி வசூல் செய்து கொண்டிருந்த சமயத்தில்தான் அன்னை கஸ்தூரிபா இயற்கை எய்தினார். அதனை முன்னிட்டு தேசத் தலைவர்கள் காந்தியடிகளைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டனர். அப்போதுதான் தேசிய நிதி வசூலிக்கப்பட்டு வருவது பற்றி காந்தியடிகளிடம் தெரிவிக்கப்பட்டது. அப்போது

காந்தியடிகள் ஒரு ஆலோசனை கூறினார். வசூல் செய்யப்படுகின்ற பணத்தைக் கொண்டு அன்னையின் ஞாபகார்த்தமாக ஒரு டிரஸ்ட் ஆரம்பிக்கலாம் என்றும் அதன் மூலம் கிராமப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் கல்வி, மருத்துவம், தொழில் போன்ற துறைகளில் சேவைசெய்யலாம் என்றும் கூறினார். அண்ணலின் கருத்துப்படி செயல்பட தேசத் தலைவர்கள் சம்மதம் தெரிவித்தனர். இச் சூழ்நிலையில் மே மாதம் 6ம் நாள் காந்தியடிகள் விடுதலை செய்யப்பட்டார். முதலில் 75 லட்சம் ரூபாய் வசூலிப்பதென திட்டமிடப்பட்டிருந்தது. இறுதியில் இந்தியா முழுவதும் வசூலிக்கப்பட்ட பணத்தைக் கணக்கெடுத்தபோது 125 லட்ச ரூபாய் வசூலிக்கப்பட்டிருந்தது. வசூலிக்கப்பட்ட பணத்தை நிதி வசூல் குழுவின் சார்பாக கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு காந்தியடிகளிடம் 1944 அக்டோபர் 2ம் நாள் கொடுத்தார்.

காந்தியடிகள் உடனடியாக அன்னையின் பெயரில் 'கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதி' என்ற பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினார். அந்நிதியின் தலைவர் காந்தியடிகளே. காந்தியடிகளின் தலைமையில் நிதியின் பணிகள் வரையறுக்கப்பட்டது. அதன்படி நாடு முழுவதும் இளம் வயது விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மற்றும் கிராமசேவையில் விருப்பமுடைய பெண்களைத் தேர்ந்தெடுத்தார். அவர்களுக்கு கிராம சேவை, மருத்துவ சேவை, குழந்தைகள் பராமரிப்பு, ஆதாரக் கல்வி, கைத்தொழில் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது. இந்தியா முழுவதும் கஸ்தூரிபா நிதியின் வேலைகளைச் செய்ய சேவை மனப்பான்மையுடைய மிகச் சிறந்த சமூக சேவகிகளை காந்தியடிகளே தேர்ந்தெடுத்தார். பெண்கள் சம்பந்தப்பட்ட வேலைகளைப் பெண்களே செய்ய வேண்டும் என்பது காந்தியடிகளின் விருப்பம். சென்னை மாநிலத்தில் நிதி வேலைகளைக் கவனிக்க யாரைப் பிரதிநிதியாக நியமிக்கலாம் என்ற கேள்வி எழுந்தது. அப்போது பலர் டாக்டர் முத்துலட்சுமிரெட்டியை நியமிக்குமாறு கருத்து தெரிவித்தனர். சென்னை மாநிலத்திலுள்ள பல காங்கிரஸ் தலைவர்களிடம் இதுபற்றி காந்தியடிகள் கருத்துக்களைக் கேட்டறிந்தார். அப்போது இராஜாஜி சௌந்திரத்தைப் பிரதிநிதியாக நியமிக்கலாம் என காந்தியடிகளிடம் தெரிவித்தார். சௌந்திரம் இளம்வயதினர். சமூக சேவையைத் திறம்படச் செய்து வருபவர். மேலும், காந்தியடிகளிடம் சிறிதுகாலம் நேரடியாகப் பயிற்சி பெற்றவர் என்ற காரணங்களினால் இராஜாஜி சௌந்திரத்தின் பெயரை முன்மொழிந்தார். காந்தியடிகளும் அதனை ஏற்றுக் கொண்டார். காந்தியடிகள் நேரடியாக சௌந்திரத்திடம் இப்பொறுப்பை ஏற்றுச் செய்ய முடியுமா? என வினவினார். சௌந்திரம் தனது சம்மதத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்தார். அதன் காரணமாக சென்னை மாநில கஸ்தூரிபா காந்தி நினைவு நிதியின் பிரதிநிதியாக



சௌந்திரம் நியமிக்கப்பட்டார். அதே போன்று இந்தியாவின் மற்ற மாநிலங்களிலும் திருமதி சுசேதா கிருப்ளானி, திருமதி யசோதரம்மா தாசப்பா, திருமதி துர்க்காபாய், குமாரி சுசிலாபாய், திருமதி அமல் பிரபதாஸ், திருமதி ராமதேவி சௌத்ரி போன்ற திறமை மிக்க சேவகிகள் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டனர். மேலும், கஸ்தூரிபா காந்தி நினைவு நிதியின் மருத்துவ ஆலோசனைக்குழு ஒன்று டாக்டர் ஜீவராஜ் மேத்தாவைத் தலைவராகவும் டாக்டர் சுசிலா நய்யாரைக் காரியதரிசியாகவும் கொண்டு அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினராகவும் சௌந்திரம் நியமிக்கப்பட்டார்.

காந்தியடிகளின் ஆசியுடன் சென்னை மாகாணத்தின் பிரதிநிதியாகப் பொறுப்பேற்றவுடன் சௌந்திரம் தனது பணியை துரிதமாகத் தொடங்கினார். உடனடியாக ஒவ்வொரு மாவட்டத்தின் காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு நிதிப் பயிற்சிக்கான பெண்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டார். மாகாணம் எங்கும் பயணம் மேற்கொண்டு பல்வேறு பகுதிகளிலிருந்து இளம் விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், திக்கற்ற பெண்கள் பலரைத் தேர்ந்தெடுத்தார். சுமார் 30 பேர்களைத் தேர்ந்தெடுத்தார். உடனடியாகப் பயிற்சியைத் தொடங்க விரும்பினார். ஆனால், பயிற்சியை ஆரம்பிக்க கட்டிட வசதி தேவைப்பட்டது. அப்போது திருவான்மியூரைச் சேர்ந்த ஒரு கிராம முன்சீப் தானாகவே முன் வந்து தனது வீடு ஒன்றை பயிற்சிப் பள்ளிக்குத் தருவதாகக் கூறினார். சௌந்திரம் அதைக்கேட்டு மிக்க சந்தோஷமடைந்தார்.

கஸ்தூரிபா காந்தி நினைவு நிதியின் கீழ் பயிற்சிபெற தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பெண்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்வது அவசியம். நாட்டின் விடுதலைக்காகத் தங்கள் உடல்,பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்த தியாகிகளின் குடும்பத்தைச் சார்ந்த பெண்கள், இளம் வயது விதவைகள், உற்றார் உறவினர் எவருமில்லாத பெண்கள், ஏழை ஹரிஜனப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்கள்தான் இந்த முப்பது பேரும். காந்தியடிகளும் இதைத்தான் விரும்பினார். இவர்கள் அனைவருமே மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இப்பெண்களைத் தேர்ந்தெடுக்க சௌந்திரம் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. அக் காலகட்டத்தில் ஜாதி இந்துக்களில் பெரும்பாலான குடும்பங்களில் பாலிய விவாக முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. உலக ஞானம் பெறுவதற்கு முன்னமே திருமணம் செய்து வைக்கப்படுவதால், பருவம் எய்திய காலகட்டத்தில் சிலசமயம் இளம் கணவன் தவறி விடுகிறான். சில சமயங்களில் இளம் மனைவியை விரட்டியடித்து விடுகிறான். இறுதியில் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான். இப்படிப்பட்ட பெண்கள் தங்கள்

எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் பல இன்னல்களுக்கு மத்தியில் கழித்து வருவார்கள். இப்படிப்பட்ட காலகட்டத்தில்தான் சௌந்திரம் இளம் விதவைகளைத் தேர்ந்தெடுத்தார். இப்படிப்பட்ட பெண்கள் இருக்கின்ற வீடுகளுக்கு நேரடியாகச் சென்று அவர்களது தாய் தந்தையர்களைச் சந்தித்து பெண்களாலும் இச் சமுதாயத்திற்கு பல நன்மைகள் செய்யமுடியும் என்பதை பல மணிநேரம் எடுத்தச் சொல்லி, கெஞ்சிக் கூத்தாடி விதவைப் பெண்களை அழைத்து வருவார். பல குடும்பங்களில் சௌந்திரம் கூப்பிடுவதாலேயே அனுப்பி வைத்தனர்.

ஒரு சமயம் ஒரு சகோதரி சமூக சேவையில் ஆர்வம் கொண்டு சௌந்திரத்தைச் சந்திக்க அடையாறு சென்றார். அவர் சென்ற சமயம் சௌந்திரம் ஆஸ்பத்திரியில் நோயாளியைக் கவனித்துக் கொண்டிருந்தார். கனிவான மொழி, பணிவான ஆறுதல் வார்த்தைகள், நல்ல சுறுசுறுப்பு, அனுதாபத்துடன் நோயாளிகளை விசாரித்து சிகிச்சை அளித்தல் போன்றவைகள்தான் அந்தச் சகோதரி சௌந்திரத்திடம் முதலில் கண்டுகொண்டது. எளிமையான உடையில் சிரித்த முகத்துடன் பணியாற்றிவரும் சௌந்திரத்தைக் கண்ட அச் சகோதரி தனது உடை அலங்காரத்தைக் கண்டு அவரே வெட்கித் தலைகுனிந்தார். ஒரு தரம் சௌந்திரத்தை நேரில் பார்த்தவர்கள் அதன் பின் அவரின் பாசவலையில் விழுந்துவிடுவது இயற்கை. சௌந்திரமும், யாரையாவது ஒருமுறை நேரில் பார்த்துவிட்டால் அவருடைய நோக்கம், தேவை போன்றவற்றை உடனே அறிந்து கொண்டு விடுவார். எவ்வளவு நாட்களானாலும் மறக்கவும் மாட்டார். வந்திருந்த சகோதரியின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு சந்தோஷமடைந்து தன்னோடு சேர்த்துக் கொண்டார். இவ்வாறு சௌந்திரத்தின் சேவையைக் கேள்வியுற்று நேரில் வந்து சேர்ந்தவர்களும் உண்டு.

ஒரு சமயம் சௌந்திரம் உடல்நலக் குறைவால் அடையாறிலுள்ள வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு நோய்வாய்ப்பட்ட தகப்பனார் வாலிப வயதை எட்டிய தனது மகளுடன் சௌந்திரத்தைப் பார்க்க வந்திருந்தார். மாடிக்கு வருமாறு சொல்லி அனுப்பினார்கள். வந்தவர் தன் மகளுடன் மாடிப் படிகளில் ஏறிச் சென்றார். படிகளில் ஏறுவதற்குக்கூட மிகவும் கஷ்டபடப்பட்டார். மூச்சுத்திணற ஒருவாறாக மாடிக்குச்சென்று சௌந்திரத்தைச் சந்தித்தார். சௌந்திரமும் தான் நோய்வாய்ப்பட்டிருப்பது பிறருக்குத் தெரியக் கூடாது என்பதை மனதில் கொண்டு முகம்மலர்ந்து வந்தவரை வரவேற்றார். வந்திருந்த முதியவர் தனது குடும்பக் கதைகளையெல்லாம் கூறி ஆதரவற்ற தனது மகளின் வாழ்வுக்கு நீங்கள் தான் வழி காட்ட வேண்டுமென முறையிட்டார். "நீங்கள் கவலைப்பட வேண்டாம், உங்கள் மகளுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக்கொடுப்பது எனது பொறுப்பு. உங்கள் மகள் என்னிடமே



இருக்கட்டும். நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று சௌந்திரம் கூறியதைக் கேட்ட முதியவர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். சௌந்திரம் உடனடியாக கீழே இருந்த நர்ஸை அழைத்து "இவர் நெஞ்சு வலியால் கஷ்டப்படுகிறார். உடனே ஊசி போட தயார்செய்" என்றார். சற்று நேரத்திற்குள் நர்ஸ் ஊசி மருந்துடன் வந்தார். சௌந்திரம் தானே அம்முதியவருக்கு ஊசி போட்டு, மருந்து மாத்திரைகளையும் கொடுத்து, "உடம்பை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்," என ஆறுதல் மொழிகளையும் வழங்கி வழியனுப்பி வைத்தார். இவ்வாறு சௌந்திரத்தின் சேவைகளை கேள்விப்பட்ட திக்கற்ற குடும்பத்தினர் சிலர் தங்கள் பெண்களை அவரிடம் விட்டுச்சென்றார்கள். இப்படிப்பட்ட பெண்களிலும் சிலர் சௌந்திரத்தால் பயிற்சி முகாமில் சேர்க்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டனர்.

திருவான்மியூர் பயிற்சி நிலையம் செயல்படத் துவங்கியது. பயிற்சி வகுப்புகளை திருமதி சுசேதா கிருப்ளானி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இரண்டு வகையான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒன்று, கிராம சேவிகா பயிற்சி மற்றொன்று ஆரோக்கிய சேவிகா பயிற்சி. காந்தியடிகளிடம் நெருங்கிப் பழகியவர்களும், நேரடியாகப் பயிற்சி பெற்றவர்களும், சேவா கிராமத்தில் தங்கியிருந்து பல்வேறு நிர்மாணப் பணிகளில் பயிற்சி பெற்றவர்களும் வகுப்புகளை நடத்திவந்தார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஜே.ஸி. குமரப்பா, ஜெயப்பிரகாஷ் நாராயணன், டாக்டர் சுசிலா நய்யார், திரு. அரியநாயகம், திருமதி ஆஷாதேவி அரியநாயகம், ஜி.ராமச்சந்திரன், மு. அருணாசலம், கோ.வெங்கடாசலபதி போன்றவர்கள் ஆவர்.

முகாம் காலையில் 5 மணிக்கு பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். காலையில் துவங்கி மதியம் வரை வகுப்புகள் நடைபெறும். மாலையில் கிராமங்களுக்குச் சென்று பயிற்சி. காலையில் நடைபெறும் வகுப்புகளில் கிராம முன்னேற்றம், கிராமியக் கல்வி, தொழிற் கல்வி, மருத்துவம், வரலாறு, சமூகவியல், பொருளாதாரம், கலாச்சாரம், பண்பாடு போன்ற பாடங்கள் நடத்தப்பட்டு வந்தன. அப்பயிற்சி முகாமில் விரிவான வகுப்புகளும் பயிற்சிகளும் கிடைக்க சௌந்திரம் மிக ஆர்வமுடன் ஏற்பாடுகளைச் செய்து வந்தார். அதோடு மட்டுமல்லாது தானே எல்லா சேவைகளிலும், பயிற்சிகளிலும் தவறாமல் கலந்துகொண்டதோடு, சத்துணவு பற்றி மாணவிகளுக்கு விரிவான வகுப்புகளையும் நடத்தி வந்தார். பாரதியாரின் பாடல்களையும் சொல்லிக் கொடுப்பார். அப்பாடல்களை மாணவிகளைப் பாடச் செய்து கேட்டு மகிழ்வார். வாரம் ஒரு முறை பயிற்சியாளர்களைக் கிராமப்புறங்களுக்கு அழைத்துச் சென்று கிராமப் பணியில் ஈடுபடச் செய்தார். கிராமங்களிலுள்ள தெருக்களை கூட்டி சுத்தம் செய்வது, கழிவுகளை அப்புறப்படுத்துவது, வீடு வீடாகச் சென்று குழந்தைகளை

குளிக்க வைத்து, புண்களுக்கும் காயங்களுக்கும் மருந்து போடுவது போன்ற கிராமப் பணிகளில் பயிற்சியாளர்களை ஈடுபடுத்தினார். பயிற்சியாளர்களுடன் இணைந்து சௌந்திரமும் தெருக்களைப் பெருக்கி சுத்தம் செய்வார். முன் பின் பழக்கமில்லாத வேலைகளையெல்லாம் பயிற்சியாளர்களால் செய்யமுடிவதற்கு காரணம் சௌந்திரம்தான். தெருக்களிலுள்ள சாக்கடைகளை அகற்றி சுத்தம் செய்யவேண்டுமென்றால் முதலில் வாளியும், மாறுமாகச் செல்பவர் சௌந்திரம்தான். அவரே எல்லா வேலைகளையும் தயங்காது செய்வார். சௌந்திரம் எப்போதும் அதைச்செய் இதைச் செய் என்று யாரையும் பணிக்கமாட்டார். தான் முதலில் களத்தில் நின்று வேலை செய்வார். சௌந்திரமே இப்படி வேலை செய்கிறார் என்பதை நேரடியாகவே அறிந்துகொள்ளும் பயிற்சியாளர்கள் தாங்களாகவே முன்வந்து கிராமப் பணிகளைச் செய்யத் தொடங்கினர். ஒருவர் தானே விரும்பிச் செய்தால் தான் எந்த வேலையும் தெளிவாகவும் சுத்தமாகவும் செய்ய முடியும் என்பது சௌந்திரத்தின் கருத்து.

இரவில் முகாமிற்கு திரும்பியபின் அன்று நடைபெற்ற வேலைகளை பயிற்சியாளர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டு அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். மறுநாள் எந்தக் கிராமம் செல்லவேண்டும்? என்ன வேலைகள் செய்யவேண்டும்? என்பதைப் பற்றி வரையறை செய்வார்கள். பயிற்சி முகாமிலுள்ள 30 பெண்களும் ஒருதாய் பெற்ற பிள்ளைகளைப் போல் வாழ்ந்து வந்தார்கள். சௌந்திரம் ஒவ்வொரு பெண்ணின் விருப்பு, வெறுப்புகளையும் கேட்டறிவார். மாணவிகளின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக்கொள்வார். எல்லாப் பெண்களுமே சௌந்திரத்திடம் மிகவும் பிரியமாக இருப்பார்கள். அவரும் பயிற்சியாளர்களுக்கு எவ்விதக் குறையும் இல்லாதவாறு பார்த்து வந்தார். மாணவிகளின் ஒவ்வொரு தேவையையும் மிக உன்னிப்பாக கவனித்து அவர்கள் கேட்பதற்கு முன்னமே அவர்களது தேவையைப் பூர்த்தி செய்து அவர்களை ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திவிடுவார். இந்தப் பெண்ணுக்கு இரண்டு புடவைகள்தான் உள்ளது... இன்னும் இரண்டாவது தேவை... அந்தப் பெண்ணுக்கு போதிய ரவிக்கைகள் இல்லை... அந்தப் பெண்ணுக்கு செருப்பு பழுதாகிவிட்டதால் புதிதாக வாங்கவேண்டும். எல்லோருக்கும் தலையில் தேய்க்க எண்ணெய் வேண்டும் மற்றும் சோப்பு, சிகைக்காய் வாங்க வேண்டும்... இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் சௌந்திரம் மிகக் கவனமாக இருப்பார். அவருக்கு மிகக் கூர்மையான கண்கள். எதுவும் அவர் கண்களுக்கு புலப்படாமல் நடவாது. பயிற்சி பெறும் பெண்கள் எந்த விதத்திலும் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாகவோ, பயந்த சுபாவம் உடையவர்களாகவோ இருக்கக்கூடாது என்பதற்காக, எப்பொழுதும் தான் சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருப்பதாக நடந்துகொள்வார்.



ஒரு பெண் எவ்வளவு கோழையாகவும், பயந்த சுபாவம் உடையவராக இருந்தாலும், ஒரு வாரம் சௌந்திரத்தோடு இருப்பாரேயானால் வாழ்க்கையில் எப்படியும், எத்தகைய சூழ்நிலையிலும் பிறர் பாராட்டும்படியான சேவை செய்து பிறருக்கு பயன்படத்தக்க உயரிய வாழ்க்கை வாழலாம் என்ற தன்னம்பிக்கை மனதில் பிறந்துவிடும். தன்னம்பிக்கை, அச்சமின்மை, சுறுசுறுப்பு, எக்காரியத்தையும் உடனே செய்து முடிக்கும் ஆர்வம், விடா முயற்சி, சவால்களை மனமுவந்து ஏற்று அதனைச் சமாளித்து வெற்றி காணும் தன்மை போன்றவை சௌந்திரத்திடம் இயற்கையாகவே பொதிந்து கிடந்தன. அவற்றையெல்லாம் தன் சொல்லாலும், செயலாலும் பயிற்சியாளர்களுக்குப் போதித்து வந்தார். இதனால்தான், பல சமூக சேவகிகளை அவரால் உருவாக்க முடிந்தது. பயிற்சி முகாமில் சமையல் வேலைகளையெல்லாம் தானே கவனிப்பார். சௌந்திரம் சமைத்தார் என்றால் அன்று மாணவிகளுக்கு ஒரே குஷிதான். எல்லோரும் வயிறுபுடைக்க உண்பார்கள். அவ்வளவு அருமையாக சமையல் செய்வார். வேலை செய்தால் ஆடைகளில் கரிப்பிடிக்குமே. அழுக்காகுமே, அடுப்பு வெட்கை தாங்கமுடியாதே என்று சிறிதும் கவலை கொள்ளமாட்டார். அண்டா, சட்டி, பானை எல்லாவற்றையும் அவரே தேய்துக் கழுவி எடுப்பார். எவ்வளவு பாத்திரங்கள் கிடைத்தாலும் சிறிது நேரத்திற்குள் கழுவி எடுத்துவிடுவார். அவ்வளவு சுறுசுறுப்பாக பம்பரம் போல் சுழன்று கொண்டிருப்பார். விருந்தினர்களை உபசரிக்கும் நயம், பார்வையாளர்களிடம் பேசும் திறன், உதவி நாடி வருபவர்களை கனிவுடன் கவனிக்கும் முறை, எல்லாவற்றிற்கும் மேலாக பயிற்சியாளர்கள் அனைவரையும் அரவணைத்து செயல்படும் பண்பு போன்றவை பயிற்சியாளர்களுக்கு சிறந்த பாடத்தைக் கற்றுக் கொடுத்ததென்றால் அதில் வியப்பேதுமில்லை. ஒரு தாய் தன் மகளுக்கு எப்படியெல்லாம் குடும்பப் பயிற்சி தருவாரோ அதைவிடப் பல மடங்கு பயனுள்ள பயிற்சிகளை சௌந்திரம் அளித்து வந்தார்.

பயிற்சி முகாமில் காலையில் செய்யப்படும் சுகாதார வேலைகளில் தானும் கலந்து கொண்டு வேலை செய்வார். முகாமைச் சுற்றி காலியிடம் கொஞ்சம் இருந்தது. அதில் காய்கறிச் செடிகளைப் பயிர் செய்து வந்தார்கள். கொஞ்ச இடத்தில் பருத்தி பயிர் செய்யப்பட்டிருந்தது. அதில் பெண்களுடன் இணைந்து களையெடுத்தல், தண்ணீர் பாய்ச்சுதல் போன்ற சகல வேலைகளையும் சௌந்திரம் செய்வார். தோட்டத்தில் பருத்தி எடுக்கும் சமயம் தன் சேலை முகப்பால் மடிகூட்டி பருத்தி எடுப்பது பயிற்சியாளர்கள் அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திவிடும். காண்போர்க்கு ஆச்சர்யத்தைக் கொடுக்கும். ஒருபுறம் வசதிமிக்க தன் பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் அரண்மனை போன்ற பங்களாவில் வசித்து வருகின்றபோது, அதே குடும்பத்தில் பிறந்த

சௌந்திரமோ கொளுத்தும் வெய்யிலில் தலையில் முக்காடு போட்டுக் கொண்டு ஆனந்தமாகப் பருத்தி எடுப்பது காண்போரை வியப்படையச் செய்யும்.

பயிற்சிக் காலத்தில் சௌந்திரமும் பயிற்சியாளர்களும் அனுபவித்த இடையூறுகளையும், இன்னல்களையும் அளவிட்டுக் கூற இயலாது. அதனைக் கண்டு சௌந்திரம் சலிக்கவோ, பின்வாங்கவோ மாட்டார். அப்போது திருவான்மியூர் சென்னையிலிருந்து தொலைவில் ஒதுங்கியிருந்தது. ஜனங்கள் நாகரீகமில்லாதவர்களாகக் காணப்பட்டார்கள். பயிற்சி முகாமில் எல்லோரும் பெண்கள்; அதுவும் குறைந்த வயதுப் பெண்களாக இருந்ததால், பல இடையூறுகளைச் சந்தித்து வந்தார்கள். ஒரு நாள் காலையில் கண் விழித்துப் பார்த்தால் வெளியில் இறந்த மீன்கள், தவளைகள் போன்றவற்றை தோரணமாகக் கட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. இவைகளை, பயிற்சியாளர்களிடையே நியமிக்கப்பட்டிருந்த சுகாதாரப் பணியாளர்கள் உடனடியாக அப்புறப்படுத்தினார்கள். இரவு நேரங்களில் சில குறும்புத்தனமான வாலிபர்கள் நரிபோல் ஊளையிட்டு பயமுறுத்துவார்கள். சில சமயங்களில் திடீரென தங்கியிருந்த வீட்டுக் கூரைகளில் சரமாரியாக கல்மழை பொழியும். பயிற்சியாளர்களோ அஞ்சி நடுங்குவர். எந்த நேரத்தில் என்ன செய்வார்களோ! என்ற பயம். திருவான்மியூரிலிருந்து வேறு இடத்திற்கு முகாமை மாற்றியமைத்தால் என்ன? என்ற கேள்வி கூட சில பயிற்சியாளர்கள் மனதில் உதிக்கத்தான் செய்தது. ஒரு நாள் ஒரு பயிற்சியாளர் சௌந்திரத்திடம் வந்து, "கிராமத்திலுள்ள சிலர் நமக்கு இவ்வளவு துன்பங்களைச் செய்கிறார்களே, நாம் போலீஸில் புகார் செய்தால் என்ன?" என்று கூறினார். "இன்று போலீஸ் சரி; நாளை நீ பயிற்சி முடித்து கிராமங்களுக்குச் சென்று பணியாற்றும்போது உனக்கு அங்கு எந்தப் போலீஸ் வரும்? எல்லாம் நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும்," என்று பதில் கூறி, பயிற்சியாளர்களுக்கு மன தைரியத்தை சௌந்திரம் ஊக்குவித்தார். இத்னைத் தொடர்ந்து பயிற்சியாளர்களிடையே ஒரு பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவினர் இனிமேல் பயிற்சி முகாமின் பாதுகாப்பு விஷயங்களைக் கவனிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அன்று முதல் பாதுகாப்புக் குழுவிலுள்ள ஒருவர் தலையில் தலைப்பாகை கட்டிக்கொண்டு ஒரு கையில் அரிக்கன் விளக்கும் மறுகையில் ஒரு தடியுடனும் இரவு முழுவதும் காவல் காத்து வந்தார். இரவுக் காவலருக்கு உடல் நலமில்லாமல் போனால் சௌந்திரமே விடிய விடிய காவல் காப்பார்.

பயிற்சி முகாமிலுள்ள பெண்கள் பலர் ஹரிஜன் வகுப்பைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று காரணம் காட்டி அருகிலுள்ள கோவில் கிணற்றில் தண்ணீர் எடுக்க உயர் வகுப்பினர் தடுத்தனர்.



ஆனால், பயிற்சியாளர்கள் ஏழை ஹரிஜனங்கள் வாழும் பகுதியிலுள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தனர். இது போன்ற பல சோதனைகள் சௌந்திரத்திற்கு ஏற்பட்டது. அச்சோதனைகளை எல்லாம் திறமையோடு சமாளித்து வந்தார். தண்ணீர் கூட எடுக்க விடாத அதே கிராமத்தில்தான் சுகாதார, மருத்துவப் பணிகளையும், இரவுப் பள்ளிக் கூடங்களையும் முனைப்புடன் செய்து வந்தார். அவரது சேவைகளையும் நோக்கங்களையும் புரிந்து கொண்ட உள்ளூர்வாசிகள் அவர்மீது அன்புகாட்டத் தொடங்கினார்கள். சில சமயங்களில், கிராமப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவர்கள் தானாகவே முன்வந்து உதவிகள் பல செய்யலாயினர். ஆரம்பத்தில் எவ்வளவோ இடைஞ்சல்கள் செய்தாலும், கிராம மக்கள் மீது சௌந்திரத்தின் அன்பு அதிகரித்ததேயொழிய சிறிதும் குறையவில்லை. அக்கிராம மக்கள் சௌந்திரத்தின் ஆலோசனையின் பேரில் "கிராம நலச் சங்கம்" ஒன்றை அமைத்துக் கொண்டார்கள். அச்சங்கத்தின் மூலம் கிராமத்தில் தோன்றும் பிரச்சனைகளை அவர்களே பேசித் தீர்த்துக்கொணடனர். சில சமயங்களில் தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க சௌந்திரத்தையும் பயன்படுத்திக் கொண்டார்கள். எந்தக் கோவில் கிணற்றில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடை விதித்தார்களோ, அதே கிணறுதான் அனைவரது புழக்கத்திற்கும் விடப்பட்டது. அது மட்டுமல்லாது, அப்போதைய சென்னை மாநிலச் சட்ட மன்ற சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளை என்பவரின் தலைமையில் அருகிலுள்ள கிராமங்களில் வசிக்கும் ஹரிஜனங்களை அழைத்து வந்து கோவிலுக்குள் சென்று பூஜைகளும் பஜனைகளும் நடத்திவைக்கப்பட்டன. இதன் மூலம் ஹரிஜனங்கள் கோவிலுக்குள் சென்று வழிபட அனுமதிக்கப்பட்டனர். இதன்பின் சௌந்திரத்தை பயிற்சியாளர்கள் மட்டும் 'அம்மா' என்று அழைக்கவில்லை. அப்பகுதியிலுள்ள குப்பத்து மக்கள், கிராம மக்கள் அனைவருமே அம்மா என்று ஆசையுடன் அழைக்கத் தொடங்கினர்.

ஒருபுறம் கிராம சேவைப் பயிற்சியும் சமூக சேவையும் செய்து வந்த சௌந்திரம் மறுபுறம் கிராமங்கள்தோறும் மருத்துவ சேவையையும் செய்து வந்தார். பாலவாக்கம், கோவளம், தாம்பரம், ஆலந்தூர், விளாச்சேரி, மவுண்டு, ஆதம்பாக்கம், அரும்பாக்கம் போன்ற கிராமங்களில் மருத்துவ மையங்களை ஏற்படுத்தி சேவை செய்து வந்தார். இம்மருத்துவ மையங்களில் பயிற்சியாளர்களுக்கு மருத்துவ சேவிகா பயிற்சியும் அளிக்கப்பட்டது. எந்தெந்த ஊர்களுக்கெல்லாம் அரசு மருத்துவர்களும், அதிகாரிகளும் செல்ல இயலாது என்று கூறினார்களோ, அங்கெல்லாம் சௌந்திரம் சென்று சேவை செய்து வந்தார். சில சமயங்களில் மைல் கணக்கில் நடப்பார். படகுகளில் ஏறிச் சென்று கிராமத்தை அடைவார். இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என கிராமத்தில் தங்கியிருந்து சேவை செய்து வருவார். ஒருநாள்

கோவளம் பகுதியிலுள்ள மருத்துவ மையத்திற்குச் சென்றார். கோவளம் செல்ல வேண்டுமென்றால் கேளம்பாக்கம் வரையில்தான் காரில் செல்ல முடியும். செளந்திரமே கார் ஓட்டுவார். பின் அங்கிருந்து படகில் தான் கோவளம் செல்லமுடியும். படகிற்காக மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியதிருக்கும். கோவளம் கரையில் இறங்கினால் கிராமத்திற்குச் செல்ல வெகுதூரம் மணலில் நடக்க வேண்டும் அல்லது மாட்டு வண்டியில்தான் செல்ல முடியும். இவ்வளவு இடர்ப்பாடுகளையும் சமாளித்துக் கொண்டு மருத்துவ மையத்திற்கு செளந்திரம் சென்று வந்தார். 'டாக்டர் அம்மா வருவார்களா!' என எண்ணிக் காத்திருக்கும் நோயாளிகளுக்கு செளந்திரம் தூரத்தில் வருவதைக் காணும்போது அவர்கள் பெறும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. செளந்திரமும் தனது பயணக் களைப்பையும் பொருட்படுத்தாது உடனடியாகப் பணியைத் தொடங்கிவிடுவார். புன்முறுவலுடனும், மிகுந்த பொறுமையுடனும் ஒவ்வொரு நோயாளியின் நோய் விவரம் விசாரித்து அன்போடு வைத்தியம் செய்வார்.

ஒரு நாள் இவ்வாறு நோயாளிகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, ஒரு ஹரிஜன்ச் சகோதரர் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார். "டாக்டர் அம்மா, எனது மனைவி பிரசவ வேதனையால் துடிதுடித்து, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறாள். அவள் உயிரைக் காப்பாற்றுங்கள்," என பதற்றத்துடன் கூறினார். செளந்திரம் உடனடியாகத் தன் கைப்பெட்டியை எடுத்துக் கொண்டு, நடந்தே குடிசையை நோக்கி விரைந்தார். உடனடியாக மருத்துவத்தை செளந்திரம் செய்தார். சரியான நேரத்தில் வந்து சிகிச்சையளித்ததால் தாய்க்கு சுகப்பிரசவம் ஆனது. தாயும் சேயும் காப்பாற்றப்பட்டார்கள். தனது மனைவி, குழந்தையின் உயிரைக் காப்பாற்றிய டாக்டர் அம்மாவிற்கு எப்படி நன்றி கூறுவது என்று அவருக்கே தெரியவில்லை. ஆனந்தக் கண்ணீர் மல்க செளந்திரத்தின் கால்களில் விழுந்து விட்டார். பின்பு தன் கையில் வைத்திருந்த சிறிது பணத்தை நீட்டினார். புன்சிரிப்போடு அந்தச் சகோதரரை செளந்திரம் பார்த்தார். தனது பெட்டியைத் திறந்து தனது செலவிற்கு வைத்திருந்த பணத்தை எடுத்து, "உனது பணத்தை நீயே வைத்துக்கொள். இப்போது நீ வைத்திருக்கும் பணம் உனது மனைவிக்கு மருந்து வாங்கவே போதாது. இப்பணத்தையும் சேர்த்து செலவிற்கு வைத்துக் கொள்," என்று கூறி பணத்தை பெற்றுக் கொள்ளாதோடு தனது பணத்தையும் கொடுத்து உவினார். இது போன்ற எத்தனையோ சம்பவங்கள் நடந்தன. சில சமயங்களில் ஆபத்தான கேஸ்களைக் கவனிக்க இரவு நேரங்களில் கூட சென்று வருவார். கஷ்டமான சிகிச்சையென்றால் இரவோடு இரவாக சென்னைக்கு கொண்டு வந்து மருத்துவமனைகளில் சேர்த்து விட்டு வருவார். தன்னை அழைக்க வருபவர்களின் துணையை மட்டுமே நம்பி இருட்டில் சவுக்குத் தோப்புகளின் ஊடே இரண்டு மூன்று மைல்கள்



நடந்து சென்று சேவை செய்து வருவார். இத்தகைய நிகழ்ச்சிகளெல்லாம் பயிற்சியாளர்களுக்குச் சிறந்த பாடங்களாக அமைந்தன. சமுதாயத்தில் சேவை செய்ய விரும்பும் ஒரு பெண், அதிகபட்சச் சேவையாக எவ்வளவு செய்யமுடியும் என்பதற்கு செளந்திரம் ஒரு சிறந்த உதாரணமாக விளங்கிவந்தார். அதன் பயனாகத்தான் இவரிடம் பயிற்சி பெற்ற 30 பெண்களும் சிறந்த சமூக சேவகிகளாக மாறினர். அவர்களில் பெரும்பாலோர் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் சேவா நிலையம் ஏற்படுத்தி சமூகசேவை செய்து வருவதை இன்றும் காணலாம்.

பயிற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் தேனாம்பேட்டை மைதானத்தில் அகில இந்திய கிராமக் கைத்தொழில் கண்காட்சி ஒன்று நடைபெற்றது. இக்கண்காட்சியில் பயிற்சி முகாம் பெண்களையும் செளந்திரம் ஈடுபடுத்தினார். பயிற்சியாளர்கள் தக்களி, சர்க்கா இவற்றினால் நூல் நூற்பதை நடத்திக் காட்டினார்கள். அத்துடன் நிர்மாணத் திட்டங்களை விளக்கும் பல போர்டுகள், அட்டவணைகள் போன்றவற்றைத் தயாரித்து பார்வைக்கு வைத்து, பார்வையாளர்களுக்கு விளக்கியும் கூறினார்கள். காந்தியடிகளின் கிராமப் பொருளாதாரம், சுயதேவைப் பூர்த்தி, ஆதாரக் கல்வியின் பயன்கள் போன்றவற்றை விளக்கக்கூடிய விளக்கப்படங்களை வரைந்து காட்சிக்கு வைத்தார்கள். கண்காட்சிக்கு வந்த பொதுமக்கள் அனைவருமே பயிற்சியாளர்களின் கலைத் திறனைப் பாராட்டினார்கள். ஓராண்டு காலத்தில் இத்தகைய பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

நாட்கள் உருண்டோடின. பயிற்சியாளர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி முடியும் தருவாயில் காந்தியடிகள் ஹிந்தி பிரச்சார சபா பட்டமளிப்பு விழாவிற்காக 1946 ஜனவரியில் சென்னை வந்தார். அப்போது தன்னிடம் பயிற்சி பெற்ற பெண்களை செளந்திரம் காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அனைவரும் காந்தியடிகளைத் தரிசித்து வணங்கினர். காந்தியடிகள் அனைவரையும் ஆசீர்வதித்துப் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களையும் வழங்கினார். கஸ்தூரிபா காந்தி நினைவு நிதியின் தலைவரான காந்தியடிகளே அந்தச் சான்றிதழில் தனது கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தார். முதல் பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற 30 பெண்களுக்கு மட்டுமே இந்தப் பாக்கியம் கிடைத்தது. காந்தியடிகள் செளந்திரத்திடம் கிராமசேவைகள் பற்றியும் கஸ்தூரிபா நிதி வேலைகள் பற்றியும் கேட்டறிந்து மகிழ்ச்சியுற்றார். ஏனெனில், கஸ்தூரிபா நிதியின் கீழ் முதன் முதலாக பயிற்சியாளர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியையும் வெற்றிகரமாக முடித்தவர் செளந்திரம் ஒருவர்தான். அப்போது செளந்திரத்திடம் அன்னை கஸ்தூரிபா திருவுருவப்படம் ஒன்றை காந்தியடிகள் கொடுத்து, "செளந்திரம் இதைப்பார். சில ஆண்டுகள் சென்றால் நீயும் பார்வைக்கு கஸ்தூரிபா

போலவே காணப்படுவாய். இதை வாங்கிக்கொள். தமிழ்நாட்டில் கஸ்தூரிபா நிதிப் பணிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறாய். உனக்கு என் ஆசிகள்" என்றார். மேலும் காந்தியடிகள் ஒரு ஆலோசனையையும் கூறினார். அதாவது அடையாறு, திருவான்மியூர் போன்ற இடங்கள் சென்னைக்கு அருகில் இருப்பதால் நிதி வேலைகளுக்குப் பொறுத்தமானதாகக் காணப்படவில்லை. ஆகவே, தமிழ்நாட்டின் கிராமப் புறங்களுக்குச் சென்று நிதிப் பணிகளைச் செய்யுமாறு சௌந்திரத்திற்கு ஆலோசனை வழங்கினார். காந்தியடிகளின் வேண்டுகோளின்படி கஸ்தூரிபா நிதியின் இதே சேவைத் திட்டங்களை கிராமப் புறங்களில் செய்வற்குத் தகுதியான இடம் தேடும் பணியை சௌந்திரம் ஆரம்பித்தார்.



அப்போதைய பாரத குடியரசுத் தலைவர்
மேதகு நீலம் சஞ்சீவரெட்டி மற்றும் தமிழக ஆளுநர்
மேதகு பிரபுதாஸ் பட்வாரி
ஆகியோருடன் அம்மா



# 4. காந்திகிராமமும், கல்விப்பணியும்

சென்னை திருவான்மியூரில் கஸ்தூரிபா காந்தி நினைவு நிதியின் கீழ் பெண்களுக்கான பயிற்சி முகாமை சௌந்திரம் நடத்தி வந்தார். 1946 ஜனவரியில் காந்தியடிகள் சென்னை வந்தபோது அவரது பணிகளைப் பாராட்டி ஆசீர்வதித்தார். அப்போது சில ஆலோசனைகளையும் வழங்கினார். அதன்படி கஸ்தூரிபா காந்தி நிதியின் வேலைகள் கிராமப்புறங்களில் நடைபெற வேண்டுமென காந்தியடிகள் விரும்பினார். அக்கிராமம் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் சில கருத்துக்களைக் கூறினார். அதாவது அக்கிராமம் நகரங்களிலிருந்து குறைந்தது ஆறு மைல்கள் தொலைவில் அமைந்திருக்க வேண்டும்; அந்த ஊரின் மக்கள் தொகை இரண்டாயிரத்திற்கு மேல் இருத்தல் கூடாது; கிராம மக்களில் சிலரைக் கொண்ட கமிட்டிகளை அமைத்து பணியாற்றவேண்டும் என்ற பல கட்டுப்பாடுகளையும் காந்தியடிகள் விதித்திருந்தார். காந்தியடிகளின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் மனமுவந்து ஏற்றுக்கொண்ட சௌந்திரம், கஸ்தூரிபா நிதி வேலைகளை கிராமப்புறத்தில் மேற்கொள்ளத் தகுந்த இடம் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபடலானார். சென்னை மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள மூத்த காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு கஸ்தூரிபா நிதி வேலைகளுக்குத் தகுந்த இடம் பார்த்துத் தரும்படி வேண்டினார்.

சௌந்திரத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பல மாவட்டங்களிலிருந்தும் பல பெரியவர்கள் வந்து அவரைச் சந்தித்து இடம் விவரம் பற்றி விளக்கமாகக் கூறிச் சென்றார்கள். சௌந்திரம் பொறுமையுடன் அனைவரது கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டு, அவர்கள் குறிப்பிடுகின்ற இடங்களுக்கெல்லாம் நேரில் சென்று பார்வையிட்டு வந்தார். ஒரு நாள் செங்கல்பட்டு ஆதம்பாக்கம் திரு. ராமகிருஷ்ண அய்யர், மணலி திரு. ராமகிருஷ்ண முதலியார் போன்றவர்கள் அவரிடம் வந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் கஸ்தூரிபா காந்தி நிதி வேலையை ஆரம்பிக்கும்படியும் அதற்கான இட வசதிகளைத் தாங்கள் செய்து தருவதாகவும் கூறினர். இடத்தைப் பார்ப்பதற்காக அவர்களுடன் சௌந்திரமும் சென்றார். அவர்கள் சௌந்திரத்தை அழைத்து சென்ற ஊர் மதுராந்தகம் அருகிலுள்ள செய்யூர் என்ற கிராமமாகும். இது ஒரு அழகான கிராமம். நான்கு

பக்கமும் மலைகளால் சூழப்பட்ட இயற்கை எழில்மிக்க நல்ல இடம். ஆனால் கஸ்தூரிபா நிதியின் தலைமையிடமாக அவ்விடத்தைக் கொண்டு வர சௌந்திரத்திற்குப் பிரியமில்லை. ஏனெனில் தென் மாவட்டங்களிலிருந்து அப்போது பல வேண்டுகோள்கள் வந்து கொண்டிருந்தன. இருப்பினும் செய்யூர் கிராமத்தில் ஏதாவது ஒரு பணியை ஆரம்பிக்க வேண்டுமென முடிவு செய்தார். அதனைத் தொடர்ந்து அவ்வூரில் தொழுநோயாளிகளுக்கு ஒரு மருத்துவமனை அமைக்க ஏற்பாடுகளைச் செய்தார். உடனடியாக மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு மருத்துவரின் பொறுப்பில் அதனை இயங்க வைத்தார். வாரம் ஒருமுறை சௌந்திரம் அங்கு சென்று நோயாளிகளுக்கு சிகிச்சையும் அளித்து வந்தார். தொழுநோய் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். குணமடைந்த தொழுநோயாளிகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க முயன்றார். அப்போது, முன்னாள் முதலமைச்சர் திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தனது ஊரில் ஒரு ஆசிரமம் ஒன்றை அமைத்துக் கொண்டிருந்தார். திரு. ராமசாமி ரெட்டியாரைச் சந்தித்து அவரது ஆசிரமத்தில் தொழிற்கூடம் ஒன்றைக் கட்டும்படிச் செய்தார். குணமடைந்த நோயாளிகளுக்கு இத்தொழில்கூடத்தில் வேலை வழங்கப்பட்டது. இதன் மூலம் ஏராளமான நோயாளிகள் கௌரவமாகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றனர். இது சௌந்திரம் செய்த ஒரு தியாகச் செயலாகுமென்று கூறப்படுகிறது.

ஒரு நாள் கோயம்புத்தூரிலிருந்து டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் சௌந்திரத்தைச் சந்தித்தார். இவர் ஒரு காங்கிரஸ் தலைவர். பொதுச் சேவைகளில் ஆர்வம் உடையவர். கோயம்புத்தூரில் சில இடங்களை வந்து பார்க்கும்படி சௌந்திரத்தை அழைத்தார். சௌந்திரமும் அவருடன் புறப்பட்டுச் சென்று சில இடங்களைப் பார்த்து வந்தார். இப்படி முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள், கல்லுப்பட்டியிலிருந்து கோ. வெங்கடாசலபதியும் அவரது துணைவியார் மீனாட்சி அம்மாளும் சௌந்திரத்தைக் காண வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் தங்கள் பகுதியில் கஸ்தூரிபா நிதிப் பணிகளை ஆரம்பிப்பதற்கு வேண்டுகோள் விடுத்தனர். இடத்தைப் பார்க்க ஒரு நாள் வருகிறேன் என பதில் கூறினார். இவ்வாறாக பல இடங்களுக்கும் சென்று தகுந்த இடத்தைத் தேடிக் கொண்டிருந்தார். மதுரை மாவட்டத்தில் ஒரு இடத்தைப் பார்க்கலாம் என்ற எண்ணம் அவரது அடிமனதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அதற்கு சில காரணங்களுமுண்டு. கஸ்தூரிபா நிதி வசூல் நடைபெற்றபோது மதுரை மாவட்டம்தான் அதிகமான நிதியை வசூலித்துக் கொடுத்தது. மேலும், தமிழ்நாட்டிலேயே பல பெரிய தேசத் தலைவர்களையும், தியாகிகளையும் உருவாக்கிக் கொடுத்தது மதுரை மாவட்டம்தான். இப்படியாகப் பல



கருத்துகளும் சிந்தனைகளும் சௌந்திரத்தின் மனதில் வந்து போய்க் கொண்டிருந்தன. இருப்பினும் பிறரையும் தகுந்த இடம் பார்க்க வேண்டிவந்தார். பூமிதான இயக்கத் தலைவர் திரு. ஜெகநாதன் அவர்களுடனும் தொடர்பு கொண்டு கஸ்தூரிபா நிதி வேலைகளுக்குத் தகுந்த இடம் பார்க்கும்படி வேண்டிக்கொண்டார்.

சௌந்திரம் சரியான, பொறுத்தமான நிலம் கிடைக்க முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்ட சின்னாளபட்டியைச் சேர்ந்த செல்வந்தர் திரு.லகுமையா அவர்கள் ஒரு நாள் அடையாறில் சௌந்திரத்தைச் சந்தித்தார். அவர் ஒரு காங்கிரஸ்காரர். பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் பங்கேற்ற தியாகியுமாவார் அவர் போதிய நிலமும் தேவையான வசதிகளையும் தானே செய்து கொடுப்பதாகவும் கூறினார். சின்னாளபட்டியை நேரில் வந்து பார்க்க சௌந்திரம் ஒப்புக்கொண்டார் இதனைத் தொடர்ந்து சௌந்திரத்தின் சகோதரர் டி.எஸ். கிருஷ்ணா அவர்களை லகுமையா சந்தித்து கஸ்தூரிபா நிதி நிறுவன வேலைகளைச் செய்ய மதுரை–திண்டுக்கல் சாலையிலுள்ள சின்னாளபட்டி சிறந்த இடம் எனக் கூறினார். தனது சகோதரியிடம் எடுத்துக்கூறி ஆவன செய்வதாக திரு. கிருஷ்ணாவும் கூறினார். இதற்கிடையில் கோ. வெங்கடாசலபதி கல்லுப்பட்டிக்கு வந்து இடத்தைப் பார்க்கும்படி அம்மாவை அழைத்தார். ஒரு நாள் சௌந்திரம் மதுரை வந்தார். திரு. வெங்கடாசலபதி திரு.ஜெகநாதன் போன்றவர்களுடன் முதலில் கல்லுப்பட்டி கோபால்சாமி மலைக்கு அருகிலுள்ள நிலம் ஒன்றைப் பார்வையிட்டார். அதன்பின் வாடிப்பட்டி மற்றும் நிலக்கோட்டை பகுதியில் மூன்று இடங்களைப் பார்த்தார்கள். சௌந்திரத்திற்கு அவ்விடங்கள் அவ்வளவு திருப்தியாக இல்லை. அவ்விடங்களையெல்லாம் பார்த்து விட்டு லகுமையா அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பிற்பகல் மூன்று மணியளவில் சின்னாளபட்டி வந்தார்கள். சின்னாளபட்டிக்கும் சிறுமலைக்கும் இடைப்பட்ட பரந்த நிலப்பரப்பை திரு. லகுமையா காண்பித்தார். ரோட்டை விட்டு இறங்கி நடந்து சென்று நிலத்தைப் பார்வையிட்டார். "இந்த இடம் போக்குவரத்திற்கு வசதியான இடம். இங்கு வீசுகின்ற காற்று மிகுந்த சுகாதாரமுடையதாகும்," என்று அப்பூமியின் சிறப்புகளை லகுமையா சௌந்திரத்திடம் எடுத்துக் கூறினார். லகுமையா அவர்களுக்கு எப்படியாவது சின்னாளபட்டியில் ஒரு காந்திய நிறுவனம் அமைக்க வேண்டுமென்ற விருப்பம் வெகு நாட்களாக இருந்து வந்தது. அதற்கு ஒரு காரணமும் உண்டு. அதாவது 1946ம் ஆண்டு ஜனவரியில் காந்தியடிகள் இரயில் மூலம் மதுரைக்குப் பயணமானார். சின்னாளபட்டிக்கு அருகாமையில் உள்ள அம்பாத்துரை இரயில் நிலையத்தில் காந்தியடிகள் பயணம்செய்யும் இரயிலை நிறுத்தி அவரைத் தரிசிக்க வேண்டுமென லகுமையாவும் காங்கிரஸ் தொண்டர்களும் விரும்பினார்கள். ஆனால், காந்தியடிகளின் பயணத்

திட்டத்தை தயாரித்துக் கொடுத்தவர்கள் அம்பாத்துரையில் இரயிலை நிறுத்த முடியாது எனக் கூறிவிட்டனர். இரயில் திண்டுக்கல் ஸ்டேஷனைக் கடந்து மதுரை நோக்கி வந்து கொண்டிருந்தது. அம்பாத்துரையில் இரயிலை நிறுத்துவதற்காக ஏற்கனவே லகுமையா ஒரு திட்டத்தைத் தயாரித்து அற்கான ஏற்பாடுகளையும் செய்திருந்தார். அவரது திட்டப்படி இரயில் அம்பாத்துரையை நெருங்கும் போது திடீரென கைகாட்டி மரத்தின் கை கீழே இறக்கிவிடப்பட்டது. இரயில் நின்று விட்டது. காந்தியடிகளைக் காண்பதற்காக கூடியிருந்த மக்கள் அனைவரும் காந்தியடிகளைக் கண்குளிரப் பார்த்து தரிசித்தனர். இவ்வாறு லகுமையா தனது விருப்பத்தை எவரும் அறியா வண்ணம் நிறைவேற்றி கிராம மக்கள் அனைவரது பாராட்டையும் பெற்றார். எனவே, காந்தியடிகளின் பெட்டி நின்ற அதே இடத்தில் ஒரு காந்திய ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென விரும்பினார். சௌந்திரத்திற்கு அவ்விடம் மிகவும் பிடித்திருந்தது. இருப்பினும் பிற முக்கியஸ்தர்களின் கருத்துக்களை அறியும் வண்ணம் திரு.நா.ம.ரா.சுப்பராமன், மட்டப்பாறை வெங்கட்டராம அய்யர், சோழவந்தான் முன்கால பட்டாபிராமஅய்யர் போன்றவர்களை இந் நிலத்தைப் பார்க்கும்படி சௌந்திரம் கேட்டுக் கொண்டார். அவர்களும் நேரடியாக வந்து இடத்தைப் பார்த்து இந்த இடம் திருப்தியளிப்பதாகக் கூறினார்கள்.

சௌந்திரம் தனது சகோதரர் கிருஷ்ணாவிடம் அந்த இடத்தைப் பார்த்து வரும்படி கூறினார். கிருஷ்ணா வந்து நிலத்தைப் பார்த்து விட்டு சிறிது தயங்கினார். குறிப்பிடுகின்ற நிலம் ரயில்வே தண்டவாளத்திற்கு கிழக்கே அமைந்துள்ளதால் அடிக்கடி நாம் அதனைக் கடந்து செல்ல நேரிடும். அது அவ்வளவு பாதுகாப்பாக இருக்காதே என்று யோசித்தார். "அப்படியானால் ரயில்வே தண்டவாளத்திற்கு மேற்கேயுள்ள இடத்தைப் பாருங்கள்," என்றார் லகுமையா. "நீங்கள் குறிப்பிடும் நிலம் பொருத்தமானதாக இருக்கிறது. அதை நமக்கு கொடுப்பார்களா?" என கிருஷ்ணா லகுமையாவிடம் கேட்டார். "இந்த நிலம் வேறு யாருடையதுமல்ல, என்னுடைய நிலம்தான்," என்று அவர் பதில் கூறவே, கிருஷ்ணா திகைத்துவிட்டார். "இங்கு எனக்கு சொந்தமான இருபத்தைந்து ஏக்கர் நிலமுள்ளது. அது அத்தனையும் கொடுக்கிறேன்" என்று லகுமையா கூறினார். இருபத்தைந்து ஏக்கர் நிலத்தையும் அன்பளிப்பாக கொடுத்தருளினார். சௌந்திரத்திற்கு மிக்க மகிழ்ச்சி. தனக்குப் பிடித்தமான நிலம் எவ்விதச் செலவின்றி சிக்கலுமின்றி இவ்வளவு எளிதாக தானமாகக் கிடைத்துவிட்டதே என்ற ஒரே ஆனந்தம். அது மட்டுமல்லாது செட்டியபட்டி, அம்பாத்துரை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிராம மக்கள் தங்களுக்குச் சொந்தமான சுமார் நூறு ஏக்கர் நிலத்தையும் நன்கொடையாக வழங்கினார்கள். இப்படியாக தேவையான நிலம் கிடைத்தது. உடனடியாக கஸ்தூரிபா நிதி வேலைகள் ஆரம்பமாயின.



98619
RURAL UNIVERSITY
Dr. G.R. LIBRARY
GANDHIGRAM

லகுமையா சின்னாளபட்டியில் தனக்குச் சொந்தமான ஒரு வீட்டை நிதி வேலைகளுக்காக கொடுத்தார். அதாவது புதிய கட்டிடங்கள் கட்டி எழுப்பும் வரை இவ்வீட்டில் தங்கியிருப்பதென முடிவு செய்யப்பட்டது. தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இந்த ஸ்தாபனத்திற்கு காந்திகிராமம் எனப் பெயரிட சௌந்திரம் விரும்பினார். அதற்குச் சில காரணங்களும் உண்டு. இந்த ஸ்தாபனம் கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு நிதி வேலைகளைப் பெண்கள்தான் செய்யவேண்டுமென்பது காந்தியடிகளின் விருப்பம். ஆனால், ஒரு ஸ்தாபனம் ஆண் ஊழியர்களின் உதவி இல்லாமல் ஒரு பெரிய அளவில் வளர்ச்சியடைவது சிரமம். ஆகவே, எந்த ஒரு பொது வேலைக்கும் ஆண்களின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை என்பதையும் உணர்ந்திருந்தார். எனவே, கஸ்தூரிபா நிதியின் வேலைகளைச் செய்யப் போகும் இந்த ஸ்தாபனத்திற்கு கஸ்தூரிபா கிராமம் என்பதற்குப் பதிலாக காந்திகிராமம் என்று பெயர் சூட்டலாம் என விரும்பினார். இதே கருத்தைத்தான் கோவை இராமலிங்க செட்டியாரும் கூறினார். அதற்குக்கூட இறுதி வரை தயக்கம்தான். காரணம், காந்தியடிகளின் பெயரை இந்த ஸ்தாபனத்திற்குச் சூட்டுவதற்கு நாம் தகுதியுடையவர்கள்தானா? என்ற கேள்வி மனதில் உதித்தது. இருப்பினும் காந்தியடிகளின் இலட்சியமும் அவர் கட்டிய பாதையும் தங்கள்முன் எப்போதும் இருக்க வேண்டும் என்பதற்காக இப்பெயரை வைக்கவேண்டும் என்பதற்காக இப்பெயரை வைக்க சௌந்திரம் முன் வந்தார். அது மட்டுமல்லாது காந்தியடிகள் காட்டிய வழியில் நம் நாட்டில் புதிய சமூக அமைப்பை உருவாக்க ஆக்க வேலைகளில் பாடுபடுவோம். அதாவது ஜாதி, சமய, வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கவும், சாதாரண மனிதனுக்கும் சம நீதி கிடைக்கவும், இவைகளைச் சாதிக்க அகிம்சை, உடல் உழைப்பு, சமூக மற்றும் ஆன்மீகத் தன்மைகளை ஏற்பது போன்றவை இந்த ஸ்தாபனத்தின் நோக்கமாக இருப்பதால் காந்தியடிகளின் பெயரைச் சூட்டுவதே பொருத்தமுடையது என சௌந்திரமும் ஏனைய ஊழியர்களும் விரும்பினார்கள்.

காந்திகிராமத்திற்கான கட்டிட வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. சில நாட்களுக்குள் மூன்று சாதாரண கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 1947 அக்டோபர் 7-ம் நாள் அப்போதைய பம்பாய் மாநில முதல்வர் திரு.பி.ஜி.கெர், காந்திகிராமத்தைத் துவக்கிவைத்தார். காந்திகிராமத்தின் துவக்க நாளன்று காந்தியடிகள் ஒரு ஆசிச் செய்தியை சௌந்திரத்திற்கு அனுப்பினார் "எங்கு சத்தியம் ஆட்சி புரிகிறதோ அங்கு வெற்றி இருக்கும்" என்ற அந்த ஆசிச் செய்தியுடன் காந்திகிராம வேலைகள் ஆரம்பமாயின. காந்திகிராமம் அமைந்திருக்கும் இடத்தை மட்டும் சௌந்திரம் தேர்ந்தெடுக்கவில்லை. கிராம சேவையில் ஆர்வமுடைய திறமையான ஊழியர்களையும் பொறுக்கியெடுத்தார். எல்லோருடனும் ஒன்று சேர்ந்து ஊழியத்திலும்,

பணிகளிலும் தோளோடு தோள் நின்று உழைக்க ஆரம்பித்தார். அவரது அஞ்சாத தலைமையின்கீழ் ஒரு பெரிய பணி தொடங்கப்பட்டு நடந்து வந்தது. ஆரம்ப காலத்தில் பல பிரச்சனைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்தே இன்றைய காந்திகிராமம் கட்டியெழுப்பப்பட்டது.

காந்திகிராமம் ஆரம்பிக்கும்போது அதன் வேலைகள் சின்னாளபட்டியில் லகுமையா வீட்டில் நடைபெற்று வந்தது என்பதைப் பார்த்தோம். காந்திகிராமத்தின் வேலைகள் அனைத்தும் ஆதாரக் கல்வியை மையமாகக்கொண்டிருந்தன. 1947ல் ஒரு ஆதாரப் பள்ளியும், ஒரு கிராமசேவிகா பயிற்சிப் பள்ளியும், ஒரு கிராம மருத்துவ விடுதியும் அரம்பிக்கப்பட்டன. இது தவிர சுற்றுப்புறக் கிராம நிலைமை பற்றி ஆராயும் வேலையில் ஒரு குழுவும் ஈடுபட்டது.

அந்த வீட்டில் ஒரு அறைதான் இருந்தது. அந்த ஒரே அறைதான் காந்திகிராமத்தின் கைத்தொழில் மற்றும் ஆரோக்கியக் கல்வி வகுப்பறை; உணவுச்சாலை; பிரார்த்தனைக் கூடம்; பெண்களும் சிறுமியர்களும் உறங்குமிடம்; எல்லாம் அதுதான். ஆண்களும் சிறுவர்களும் தாழ்வாரத்தில் தங்கிக்கொள்வார்கள். சௌந்திரமும் அந்த வீட்டில்தான் தங்கினார். களப் பணிகளில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வந்தனர். காந்திகிராம நிலங்கள் பக்குவப்படுத்தப்பட்டு பயிர் செய்யப்பட்டது. தங்ளுக்குத் தேவையான உணவு தானியங்களை ஊழியர்களே விளைவித்துக் கொண்டனர். சௌந்திரம் விவசாய வேலைகளை ஆர்வத்தோடு செய்வார். சோளம், கேழ்வரகு ஆகாரங்கள்தான் பிரதான உணவாக இருந்தது. சௌந்திரத்திற்கு இவ்வகை உணவு என்றால் கொள்ளைப்பிரியம். களையெடுத்தல், நீர்ப்பாய்ச்சுதல் போன்ற வேலைகளை ஏனைய ஊழியர்களுடன் இணைந்து செய்வார். அதுமட்டுமல்லாது சௌந்திரம் கதிர் அறுப்பார்; கட்டு சுமப்பார். அவரது கட்டு பெரிதாக இருக்கும். அதாவது மற்றவர்கள் சுமக்கக் கூடிய அளவை விட இரண்டுமடங்கு பெரிதாக இருக்கும். அவ்வளவு பெரிய கட்டை தலையில் சுமந்து கொண்டு எவ்வித களைப்பும் சலிப்பும் இல்லாமல் நடந்து வருவதைக்கண்டு ஏனைய ஊழியர்கள் வெட்கித் தலைகுனிவார்கள். இப்படி விவசாய வேலைகளின்போது வேலைப்பழு தெரியாமலிருக்க எல்லோரும் கேட்கும்படியாக பாரதியார் பாடல்களை இனியைாகப் பாடுவார். அவருடன் சேர்ந்து மற்றவர்களும் பாடுவார்கள். இவ்வாறு உல்லாசமாகவும், உற்சாகமாகவும் காந்திகிராம வேலைகள் நடைபெற்று வந்தன.

காந்திகிராமம் துவங்கப்பட்ட சில மாதங்களுக்குள் சில கட்டிடங்கள் கட்டப்பட்டன. கட்டிடம் கட்டுகின்றபொது சௌந்திரம் வந்துதான் அஸ்திவாரமிட வேண்டுமென ஊழியர்கள் காத்திருப்பார்கள். ஆனால் சௌந்திரமோ "வேலை செய்யப்



போகிறவர்கள் நீங்கள்; இக்கட்டிடத்தில் பணியாற்றப் போகிறவர்கள் நீங்கள். ஆகவே, நீங்களே எல்லா முக்கிய வேலைகளையும் செய்ய வேண்டும்" எனக் கூறி ஊழியர்களைக் கொண்டே அஸ்திவாரமிடச் செய்வார். அப்படிச் சொல்லிவிட்டு பேசாமலிருக்கமாட்டார். கட்டிடத்திற்குக் கல் எடுத்துக் கொடுப்பார். சாந்து குழைப்பார். சாந்துச் சட்டியை தலையில் சுமந்து வருவார். எல்லா வேலைகளையும் தயக்கமின்றிச் செய்வார். சௌந்திரமே வேலை செய்வதால் உடன் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் உற்சாகம்தான். வேலை துரிதமாக நடக்கும். வேலை செய்யும் நாட்களில் உணவிற்கு முக்கியத்துவம் கொடுக்கமாட்டார். "கஞ்சியை டம்ளரில் கொண்டு வா" என்று கூறுவார். உடனே ஊழியர்களும் கொண்டு வந்து கொடுப்பார்கள். நின்றுகொண்டே குடித்து விட்டு பாரதியின் பாடல் ஒன்றையும் பாடிக்கொண்டே, சாந்தைச் சுமக்க ஆரம்பித்துவிடுவார். இப்படியாக பலத்த கஷ்டங்களுக்கு மத்தியில் கட்டப்பட்டதுதான் இன்று தலைசிறந்து விளங்கும் காந்திகிராமம். காந்திகிராமத்திலுள்ள ஒவ்வொரு கல்லும், மண்ணும், மரமும் உள்ளவரை சௌந்திரத்தின் பெயரைச் சொல்லிக்கொண்டேயிருக்கும். சௌந்திரம் தனது உடம்பை ஓடாக்கி, குருதியை வேர்வையாக்கி, இரவென்றும் பகலென்றும் பாராது உழைத்ததின் பயனே இன்றைய காந்திகிராமமாகும்.

காந்திகிராமத்திற்கான கட்டிடங்களைக் கட்டவும், அதன் வளர்ச்சிப் பணிகளுக்கும் பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது. கஸ்தூரிபா நினைவு நிதியிலிருந்து மிகக் குறைந்த உதவியே கிடைத்தது. காரணம், கஸ்தூரிபா நிதியைக் கையாளுவதில் காந்தியடிகள் ஒரு கட்டுப்பாடு விதித்திருந்தார். அதாவது, முதலாமாண்டு கொடுக்கப்படுகின்ற பணத்தின் முக்கால் பாகம்தான் இரண்டாமாண்டு நிதி உதவியாகக் கிடைக்கும். மூன்றாவது ஆண்டில் முதலாமாண்டு வழங்கப்பட்ட பணத்தில் பாதிதான் கிடைக்கும். நான்காமாண்டு முதலாமாண்டு கொடுக்கப்பட்ட தொகையில் கால் பங்குதான் கிடைக்கும். ஐந்தாமாண்டு அந்தந்த ஸ்தாபனங்களே தங்களின் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொண்டு தங்கள் காலில் நிற்க கற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் காந்தியடிகள் வகுத்துக் கொடுத்த விதி. இதனால், வெளி உதவி குறைந்து கொண்டே சென்றது. பற்றாக்குறையை ஈடுகட்ட பொதுமக்களிடமிருந்து நிதி வசூலிக்க சௌந்திரம் முற்பட்டார். தன்னுடன் சில ஊழியர்களை அழைத்துக்கொண்டு ஒரு பகுதிக்கும், ஏனைய ஊழியர்களை மற்றொரு பகுதிக்குமாக அனுப்பி, ஒவ்வொரு ஊரிலும் வீடு வீடாகச்சென்று நிதி வசூல் செய்து வந்தார். நிதி வசூலிப்பதில் சௌந்திரம் மிகவும் திறமைசாலி. ஒருவரைச் சந்தித்துவிட்டால் அவரிடம் நயமாகவும், பணிவாகவும் பேசி எப்படியாவது தான் எதிர்பார்த்த பணத்தை வசூலித்துவிடுவார். அவர் மிகவும் முகராசிக்காரர். அவரைக்

கண்டதுமே உதவிகள் ஏராளமாகக் கிடைக்கும். இரவு, பகல், வெயில், மழை எதுவும் பாராமல் கிராமம் கிராமமாக நடந்து சென்று வசூல் செய்தார். ஒரு காரியமென்றால் துணிச்சலாகச் செயல்படுவார். இந்தத் துணிச்சல் அவரோடு உடன் பிறந்தது என்றே கூறலாம். வெகுதூரம் நடக்க வேண்டுமே! சென்றால் கொடுப்பார்களா? மாட்டார்களா? என்ற தயக்கமே அவரிடம் கிடையாது. வசூலுக்குச் செல்கின்ற சமயம் எத்தனையோ நாட்கள் உணவின்றி அலைந்திருக்கிறார். சில சமயங்களில் ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட தொகையை எதிர்பார்த்துச் செல்வார். ஆனால், கொடுப்பவரோ பல சாக்குப் போக்குகளைச் சொல்லி மிகக் குறைந்த தொகையைக் கொடுப்பார். அதையும் முகமலர்ந்து சந்தோஷமாகப் பெற்று நன்றியைத் தெரிவிப்பார்." அவரிடம் தற்போது பணமில்லை. இருந்தால் நாம் கேட்பதை விட பல மடங்கு அதிகம் கொடுத்திருப்பார்," என அந்த வள்ளலின் கொடைத்தன்மையை வழிநெடுக தனது சக ஊழியர்களிடம் சொல்லிக் கொண்டே வருவார்.

சௌந்திரம் இல்லாமல் பணம் வசூலிக்க சென்ற குழுவினர் மிகக் குறைந்த தொகையை வசூலித்து வருவார்கள். சில சமயங்களில் அலைந்ததுதான் மிச்சம் எனக் கூறிக்கொண்டு வெறும் கையோடு வருவார்கள். "நாங்கள் சென்றால் எவரும் நிதி தரமாட்டேன் என்கிறார்கள். நீங்கள் வந்தால்தான் நிதி வசூலாகும்," என்று சௌந்திரத்திடம் முறையிடுவார்கள். அதற்கு அவர் "பிச்சையெடுக்கக் கூட இந்த டி.வி.எஸ். மகள்தான் போக வேண்டியிருக்கு. அப்போது தான் ஏதாவது கொடுக்கிறார்கள். மற்றவர்கள் கேட்டால் தரமாட்டேன் என்கிறார்கள்," என்று வேடிக்கையாகக் கூறுவார். நிதி வசூல் செய்கின்றபோது பணத்தைக் கையால் வாங்க மாட்டார். சௌந்திரம் தனது சேலை முந்தானையைக் கையில் ஏந்திக்கொள்ள, கொடுப்பவர் முந்தானையில் போட, உண்மையிலேயே பிச்சை எடுப்பதைப் போன்றுதான் இருக்கும். அக்காட்சியை நேரில் காண்போரின் கண்கள் குளமாகிவிடும். ஆனால், சௌந்திரத்திற்கோ மனதில் பால் வார்த்தது போலிருக்கும். தனது குழந்தைகளைச் சிறிது நேரம்கூடப் பிரியாத ஒரு தாய், சற்று நேரம் பிரிந்திருக்கவேண்டிய அவசியம் ஏற்படும்போது திரும்பிச் சென்று தன் குழந்தைகளைக் காண எவ்வளவு ஆவலோடு வருவாளோ, அதுபோன்று சௌந்திரம் காந்திகிராமம் நோக்கி ஓடி வருவார். எங்கு சென்றாலும், எந்தச் சூழ்நிலையிலிருந்தாலும் அவரது கவனம், சிந்தனை எல்லாமே காந்திகிராமம்தான்.

காந்திகிராமத்தில் 1947 லேயே ஆதாரப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்தது. ஆதாரக் கல்வி காந்தியடிகளால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை வார்தா கல்வித்திட்டம் என்று கூறுவார்கள். வாழ்க்கைக்காக வாழ்க்கையின் மூலம் கற்றுக்கொள்ளும் வாழ்க்கைக் கல்வி இது. கற்கின்ற கல்வி வாழ்க்கைக்குப் பயன்பட



வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுத்தப்பட்டு வரும் கல்வி, இந்த ஆதாரக் கல்வி. முதலாமாண்டு சுமார் நாற்பது மாணவ மாணவியர் பள்ளியில் சேர்க்கப்பட்டனர். இப்பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்க சௌந்திரம் பட்டபாடுகள் கொஞ்சநஞ்சமல்ல.அதிகாலையிலேயே வீடு வீடாகச் சென்று, பெரியவர்களைச் சந்தித்து விவரம் கூறி, அடம்பிடிக்கும் அந்தக் குழந்தைகளை அழைத்து வரவேண்டும். சில குழந்தைகள் கூப்பிட்டால் வரமாட்டார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளை இடுப்பில் தூக்கிக் கொண்டு பள்ளிக்கு வரவேண்டும். ஏனென்றால், கிராம மக்களுக்கு படிப்பின் முக்கியத்துவம் சரியாகத் தெரியாது. விவசாய வேலைதான் செய்வார்கள். அதேபோன்று தங்கள் குழந்தைகளையும் விவசாய வேலைகளிலேயே ஈடுபடச் செய்வார்கள். அப்படிப்பட்ட காலகட்டத்தில் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க சௌந்திரம் இப்படியெல்லாம் கஷ்டப்பட்டார்.

பள்ளியில் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள், கதர் சீருடைகள், மதிய உணவு போன்றவை வழங்கப்பட்டன. நன்கு பயிற்சி பெற்ற திறமையான ஆசிரியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இப்பள்ளியானது 1949 வரை சுமார் இரண்டாண்டு காலம் கஸ்தூரிபா நினைவு நிதியின் கீழ் செயல்பட்டு வந்தது. அதன் பின் காந்திகிராமமே அதன் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டது. அரம்பத்தில் குறைந்த அளவே மாணவர்களின் எண்ணிக்கை இருந்தது. நாளடைவில் மாணவர்களின் வருகை அதிகரித்தது. 1951 ல் ஐந்தாம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது, முதல் ஐந்து வகுப்புகள் நன்றாக இயங்கி வந்தன. அதனைத் தொடர்ந்து ஐந்தாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு உயர் ஆதாரப்பள்ளி ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது. ஆனால், அதற்குப் போதிய நிலமும் நிதிவசதிகளும் இல்லை. சௌந்திரம் தனது தந்தையை அணுகி விவரத்தை எடுத்துரைத்தார். மகளின் ஆர்வத்தைக் கண்ட தகப்பனார் காந்திகிராமத்திற்கு எதிரே சுமார் 17 ஏக்கர் தோட்டமொன்றை தனது பேரன், தம்பி என்பவரின் நினைவாக காந்திகிராமத்திற்கு வாங்கிக் கொடுத்தார். மேலும் கட்டிடம் கட்டுவதற்கான நிதி வசதியையும் செய்து கொடுத்தார். இந்நிலம் தம்பித்தோட்டம் என்ற பெயரில் அழைக்கப்படலாயிற்று. இங்கு உயர் ஆதாரப்பள்ளிக்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு, வகுப்புகள் நடத்தப்படலாயின. இப்பள்ளியானது தம்பித்தோட்டம் உயர் ஆதாரப்பள்ளி என்று அழைக்கப்படலாயிற்று. அங்கேயே மாணவ மாணவியர் விடுதிகள் தனித்தனியாகக் கட்டப்பட்டன. விவசாயம் மாணவர்களின் முக்கியப் பாடமாக விளங்கியது. இது தவிர பருத்தி சாகுபடி செய்வதிலிருந்து துணி நெசவு வரை அனைத்துத் தொழில்களும் பாடமாக இருந்து வந்தன. கல்வித் திட்டம் இத்தொழில்களின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டு

நிறைவேற்றப்பட்டது. மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உணவுகளைத் தாங்களே தயாரித்துக்கொண்டனர். சுகாதாரம் மற்றும் கட்டிடவேலைகளையும் அவர்களே மேற்கொண்டனர். பள்ளியில் வகுப்பறைக் கல்வியும், வெளியில் பயிற்சியும் வழங்கப்பட்டதினால் மாணவர்களுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் விதத்தில் அக்கல்வி முறை அமைந்திருந்தது. மாணவர்கள் தங்களுக்குள்ளேயே பல குழுவினராகப் பிரிந்து ஜனநாயக முறைப்படி ஒவ்வொரு குழுவும் தனது வேலைகளைச் செவ்வனே செய்துவந்தது. அடிக்கடி மாணவர்களை அவர்களின் ஆசிரியர்கள் கிராமங்களுக்கு அழைத்துச்சென்று முகாமிட்டு, கிராம சேவையில் பயிற்சி கொடுத்தனர். இதனால், மாணவர்கள் கிராமச் சூழ்நிலையை நன்கு புரிந்துகொள்வதுடன் கிராம மக்களோடு நன்கு பழகும் வாய்ப்பையும் பெற்றனர். இத்தகைய முகாம்கள் கிராமங்களுக்கும் காந்திகிராமத்திற்கும் இடையே நட்புறவு ஏற்பட வழிவகை செய்தது.

1954ல் குழந்தைகள் எட்டாம் வகுப்பு உயர் ஆதாரக் கல்வியை முடித்தனர். அதன் பின் மாணவர்களை சாதாரண உயர்நிலைப்பள்ளிகளில் சேர்ப்பதை சௌந்திரம் விரும்பவில்லை. மேலும், எட்டாவது வகுப்பு தேறிய மாணவர்கள் ஆதாரக் கல்வியிலேயே ஆர்வம் உடையவர்களாக விளங்கினர். எனவே, அதே ஆண்டு உத்தர (உயர் தர) ஆதாரப்பள்ளி தம்பித்தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்களின் உயர் கல்வியும் ஆதாரக் கல்வி முறையின் அடிப்படையிலேயே இருக்க வேண்டுமென சௌந்திரம் விரும்பினார். இந்த உத்தர ஆதாரப் பள்ளியை பீஹார் மாநிலத்தின் சிறந்த ஆதாரக் கல்வி நிபுணர் திரு.ஆர்.எஸ். உபாத்யாயா அவர்கள் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து கட்டிட வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. இப்பள்ளியில் ஒன்பது, பத்து, பதினொன்று ஆகிய வகுப்பிற்கு இணையான ஆதாரக்கல்வி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. உத்தர ஆதாரப்பள்ளியிலும் விவசாயம் முக்கியப் பாடமாக இருந்தது. விவசாயக் கருவிகள், நீரிறைக்கும் கருவிகள், புத்தகங்கள், விஞ்ஞான உபகரணங்கள் சென்னை மாநில அரசால் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. துணி உற்பத்தி ஒரு பாடமாக விளங்கியது. மாணவர்கள் நூற்பைக் காட்டிலும் நெசவிலேயே அதிகக் கவனம் செலுத்தினர். நெசவுடன் துணிக்குச் சாயம் போடுதல், அச்சுப்பதித்தல், தையல் போன்ற வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆகவே காந்திகிராமத்தில் கல்வியும் வாழ்க்கையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து காணப்பட்டது. அன்றாடத் திட்டத்தின் அடிப்படையில் உற்பத்தித் தொழிலில் மாணவர்களும் மாணவிகளும் ஈடுபட்டு வந்தனர். இதன் மூலம் தங்களுடைய உணவு, உடை போன்ற வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் பல்வேறு பாடங்களில் கல்வியும் பெற்றனர். பள்ளியில் கல்வித்திட்டம் ஏழு அம்சங்களைச்



சார்ந்திருந்தது. ஆரோக்கிய வாழ்க்கை, சமையல் மற்றும் விடுதி நிர்வாகம், சமுதாய சுய ஆட்சிமுறை, வழிபாடும் தியானமும், உற்பத்தித் தொழில், கிராமசேவை, கலாச்சாரம் மற்றும் பொழுதுபோக்கு போன்றவை முக்கிய செயல்களாகக் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்பள்ளியில் மூன்று பாடத்திட்டத்தின் கீழ் மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தனர். முதலாவதாக மொழிப் பயிற்சி. இதில் தமிழ், இந்தி,ஆங்கிலம் போன்ற மொழிகள் கற்றுத் தரப்பட்டன. இரண்டாவது திட்டத்தில் பூகோளம், வரலாறு, பொருளாதாரம், கலாச்சாரம், ஓவியம், இசை, நாடகம், போன்ற பாடங்களும் கற்றுத்தரப்பட்டன. உத்தர ஆதாரப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் கல்வியுடன் சிறுதொழில்களில் நேரடியாக ஈடுபடுவதினால் தங்களுடைய தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்கிறார்கள். தங்களுக்குத் தேவையான உணவு, உடைக்குத் தானிங்களையும், துணிகளையும் தாங்களே உற்பத்தி செய்துகொண்டார்கள். இதனால் இம்மாணவ மாணவியர் தங்களது தேவைகளுக்குப் பெற்றோர்களைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற நிலை முற்றிலும் மாற்றம் செய்யப்பட்டது.

ஆதாரக் கல்விப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது வருடா வருடம் தகுதியான திறமையான ஆசிரியர்கள் தேவைப்பட்டார்கள். இதன் காரணமாக திறமையான ஆதாரக் கல்வி ஆசிரியர்களை உருவாக்கவும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஆதாரக்கல்வியில் பயிற்சியளிக்கவும் ஒரு பயிற்சிப் பள்ளியை அமைக்க சௌந்திரம் விரும்பினார். அதன் காரணமாக 1949லேயே ஆதார ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆரம்பிக்கப்பட்து. இதற்கென தனிக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. இப்பயிற்சிக்காலம் இரண்டுஆண்டுகள். ஆண்,பெண் இருபாலரும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தினமும் மூன்று மணிநேரம் பாடபோதனைக்கும், மூன்று மணிநேரம் விவசாயம், இதரத் தொழில்களுக்கும் ஒதுக்கப்பட்டது. சமூக சேவை, கலாச்சாரம், பொழுதுபோக்கு போன்ற நிகழ்ச்சிகளுக்காக இரண்டுமணிநேரம் ஒதுக்கப்பட்டது, இரண்டாமாண்டில் நூற்பு, நெசவு போன்றவை பிரதானத் தொழிலாகவும், விவசாயம் துணைத் தொழிலாகவும் வலியுறுத்தப்பட்டன. மேலும், உபதொழில்களில் பயிற்சியாளர்கள் பங்கு கொண்டதால் கணிசமான வருமானமும் கிடைத்தது. பயிற்சியாளர்கள் இதன் மூலம் தங்கள் தேவைகளையும் பூர்த்தி செய்து கொண்டனர்.

ஆண், பெண் இருபாலரும் இணைந்து பயிற்சிபெறும் முதல் பயிற்சிப் பள்ளி இதுதான். ஆண், பெண் இருபாலரும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு செயல்பட்டு வந்தனர். இருப்பினும் இருபாலரும் இணைந்த கல்வி முறையின் காரணமாக ஒருவருடன் ஒருவர் அச்சமின்றி பழகிவந்தனர். இதனால் தடையின்றி நல்ல முறையில் இணைந்து வாழ்கின்ற ஒரு சமுதாய அமைப்புக்கு இது வழிகோலியது. மேலும், கிராமசேவையின் போது இருபாலரும்

இணைந்து செயல்படுவதால் கிராம மக்களும் எவ்விதத் தயக்கமுமின்றி தங்களது தேவைகளையும், பிரச்சனைகளையும் கூறுவதால் இப்பயிற்சி நிலையம் தனது சேவைகளைத் தேவைக்கேற்ப திருத்திக்கொண்டு திறமையாகச் செயலபட முடிந்தது. குறிப்பாக 1956 ல் இராமேஸ்வரம் புயல் நிவாரண வேலைகளிலும் 1957 முதுகுளத்தூர் இனக்கலவரத்தின்போதும் இப்பயிற்சியாளர்கள் சௌந்திரத்துடன் இணைந்து சிறப்பாகச் சேவையாற்றி அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றனர். மேலும் இப்பயிற்சிப் பள்ளியானது இத்ர 38 ஆதாரப் பள்ளிகளின் மையமாக அமைந்திருந்தபடியால் அந்த ஆதாரப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் இங்கு அடிக்கடி கூடி ஆதாரக் கல்வியைப் பற்றி ஆராய்ந்தனர். பல கருத்தரங்குகளும், விவாதங்களும் நடத்தி ஆதாரக்கல்வியின் பாடத்திட்டங்களை வரையறை செய்தனர். பல கூட்டங்களுக்கு மாநில உயர்கல்வி அதிகாரிகளும், ஆதாரக்கல்வி நிபுணர்களும் கலந்துகொண்டு பல சிறந்த கருத்துக்களை வழங்கினார்கள். இது தவிர கேரளா போன்ற வெளி மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து இப்பயிறிசியில் சேர்ந்தனர். 1955 ல் திருவிதாங்கூர் அரசு சுமார் 50 பட்டதாரிகளை பயிற்சிக்காக அனுப்பியது. இதன் மூலம் இப்பயிற்சி நிலையம் தென் மாநிலங்கள் அனைத்திற்கும் சிறந்த சேவை செய்வதாக அமைந்திருந்தது.

1954ல் சௌந்திரமும் திரு. G. இராமச்சந்திரன் அவர்களும் கிராமியக் கல்லூரி அமைப்பதற்கு திட்டமொன்றைத் தயாரிக்கலாயினர். ஏனெனில், உயர்நிலை ஆதாரக்கல்வியில் பதினோறாம் வகுப்பு முடித்தவர்களின் மேற்படிப்பிற்காகவும் கிராமிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், இளைஞர்களின் தகுதியையும் திறமையையும் கிராமச் சூழ்நிலையில் வளர்க்கவும் கிராமியக் கல்லூரி ஒன்றை அமைக்க வேண்டியதன் அவசியத்தை இருவரும் உணர்ந்தனர். எனவே, கிராமியக் கல்லூரி அமைப்பதற்கான திட்டத்தைத் தயாரிக்க இராமச்சந்திரன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு நாட்டிலுள்ள சிறந்த கல்வி நிபுணர்களையெல்லாம் சென்று சந்தித்து ஒரு திட்டத்தையும் தயாரித்தது. அதிர்ஷ்டவசமாக அதே ஆண்டு கிராமிய உயர்கல்விபற்றி ஆராய்வதற்கு டாக்டர் ஸ்ரீமாலி என்பவர் தலைமையில் ஒரு கமிட்டியை மத்திய அரசு நியமித்தது. இக்கமிட்டி 1955ல் காந்திகிராமத்திற்கு விஜயம் மேற்கொண்டது. Dr. இராமச்சந்திரன் தாங்கள் ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள திட்டத்தை Dr.ஸ்ரீமாலிஅவர்களிடம் சமர்ப்பித்தார். ஸ்ரீமாலி கமிட்டி ஆராய்ந்தறிந்து அத்திட்டத்தை கிராமியக் கல்லூரி ஆரம்பிக்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. அதன் விளைவாக காந்திகிராமத்தில் கிராமியக் கல்லூரி அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. 1956 ஆகஸ்ட் 17 ம் தேதி ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரபிரசாத் காந்திகிராம கிராமியக் கல்லூரியைத் திறந்து வைத்தார்.



அதே ஆண்டு கீழ்காணும் பட்டப்படிப்பு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1. விவசாய விஞ்ஞானம்–இரண்டாண்டுகள்; 2. சுகாதார ஆய்வாளர் பயிற்சி – ஓராண்டு; 3. கூட்டுறவு – மூன்றாண்டுகள் ; 4. கிராமத் தொழில் மற்றும் நிர்வாகம் – மூன்றாண்டுகள்; 5. மனையியல்– மூன்றாண்டுகள் ; 6. உடற்பயிற்சி அறிவியல் – மூன்றாண்டுகள்; 7. கிராம விஞ்ஞானம் – மூன்றாண்டுகள் கல்லூரி மட்டத்திலும் கூட விவசாயத்திற்கு சௌந்திரம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார் என்பது இதிலிருந்து நன்கு தெரிகிறது. இது ஒரு கிராமியக் கல்லூரியாகையால், மாணவர்களுக்கு கிராமியச் சூழலிலேயே வகுப்புகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்காக பலமாடிக் கட்டிடங்கள் கட்டுவதை சௌந்திரம் விரும்பவில்லை.

காந்திகிராமக் கிராமிய கல்லூரியில் வழங்கப்படும் பட்டங்களும், பட்டயங்களும் இந்தியாவிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களாலும் அங்கீகரிக்கப்பட்டன. இந்தியாவிலுள்ள பதினான்கு கிராமியக் கல்லூரிகளில் முதன்மையானதாகவும் முன்னோடியாகவும் காந்திகிராமக் கிராமியக்கல்லூரி விளங்கத் தொடங்கியது. இந்திய அரசு, இங்கு நடத்தப்படும் பட்ட வகுப்புகளையும், பயிற்சி நிலையங்களையும், கிராம சேவைகளையும் கண்டு மகிழ்ச்சியுற்றது. கிராமியப் பொருளாதாரம் பற்றி சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்யக் கூடிய ஆராய்ச்சி மையமாகவும் இக்கல்லூரி திகழ்ந்தது. காந்திகிராமக் கிராமியக் கல்லூரியின் செயல்பாடுகளையும், ஆராய்ச்சிகளையும் கண்ட இந்திய அரசு 1976 ஆகஸ்ட் மாதம் இதனை கிராமியப் பல்கலைக்கழகமாக அங்கீகரித்து. அப்போதைய பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் காந்திகிராமம் வந்திருந்து பல்கலைக்கழகத்தைத் துவக்கி வைத்தார். காந்திகிராமப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராக டாக்டர் ஜி. இராமச்சந்திரன் பொறுப்பேற்றார். 1980 முதல் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் செந்திரம் இப்பல்கலைக்கழகத்தின் வேந்தராகப் பணியாற்றினார். இதன் மூலம் காந்திகிராமத்தை நிறுவியபோது சௌந்திரம் என்ன விரும்பினாரோ அது நிறைவேறியது. பல்கலைக்கழகம் துவங்கப்பட்டபின் அதன் வளர்ச்சிக்காக அவர் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். இக்கால கட்டத்தில் அவர் நோய்வாய்ப்பட்டிருந்தாலும்கூட அன்றாட அலுவல்களைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார்.

காந்திகிராமம் ஏற்கெனவே ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியொன்றை ஆரம்பகாலம் முதலே நடத்திவந்தது. அரசினுடைய மாறுபட்ட கொள்கைகளின் காரணமாகவும் பொதுமக்களின் ஆதரவின்மையாலும் ஆதாரக்கல்வித் திட்டம் படிப்படியாக மறையத் தொடங்கியது. இத்தருணத்தில் தமிழ்நாடு அரசும் ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மூடிவிட்டு புதுக்கல்வி முறையைப்

பின்பற்றி உயர்நிலைப் பள்ளியை ஆரம்பிக்கும்படி பரிந்துரை செய்து கொண்டிருந்தது. அதன் காரணமாக 1967 ம் ஆண்டு ஆதாரக்கல்வி ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மூடப்பட்டது. இருப்பினும் செளந்திரம் அதோடு நின்றுவிடவில்லை. புதிய கல்வித் திட்டப்படி கிராமங்களில் பணியாற்ற, அதுவும் அறிவியல் பாடங்களை கற்றுத்தர தேவையான ஆசிரியர்கள் கிடைக்கவில்லை. இவ்வாறு கிராமங்களில் பணியாற்றத் தேவையான ஆசிரியர்களை உருவாக்கும் நோக்கத்தோடு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவ வேண்டுமென செளந்திரம் விரும்பினார். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரது குடும்பத்தினர் இரண்டு லட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கினர். நிதியைப் பற்றிய கவலை செளந்திரத்திற்கு நீங்கியது. அந்நன்கொடையைக் கொண்டு தனது தாயாரின் நினைவாக இலட்சுமி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை 1967 ஜூலையில் ஆரம்பித்தார். இக்கல்லூரி பின்பு மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. அப்போதைய அதன் துணைவேந்தர் திரு. தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் இலட்சமி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பெண்களுக்கு மட்டுமே பயிற்சியளிக்க ஏற்பாடு செய்யலாமென ஆலோசனை கூறினார். அதற்கு செளந்திரம், "காந்திகிராமத்தில் எந்தப் பணியிலும் ஆண், பெண் என்ற வேற்றுமையே கிடையாது. இது எங்கள் பொதுவான விதி. ஆகவே பிற நிலையங்களைப் போன்று இப்பயிற்சிக் கல்லூரியிலும் இருபாலரும் அனுமதிக்கப்படவேண்டும்," என்று கூறினார். துணைவேந்தரும் அவரது கருத்துகளை ஏற்றுக் கொண்டு அதற்கு சம்மதித்தார். செளந்திரத்தின் விருப்பத்தைப் போன்றே இருபாலரும் பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்டனர். வருடா வருடம் சுமார் 80 மாணவ மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இங்கு பயிற்சிபெறும் பயிற்சியாளர்களுக்கு வழக்கமான பாடத்திட்டத்துடன் ஆதாரக் கல்வி, மனையியல், கிராம அறிவியல் போன்ற பாடங்களும் கற்றுத்தரப்படுகின்றன. பொதுவாக ஒரு பயிற்சியாளர் பயிற்சியை முடித்த பின் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றக் கூடிய மனப்பக்குவத்தை இப்பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்துகிறது. கிராமியக் கல்வியில் பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கல்வித்துறையைப் பொறுத்தமட்டில் செளந்திரத்தின் தலைமையில் காந்திகிராமம் ஒரு பெரிய சாதனையை ஏற்படுத்தியது என்று கூறலாம். இங்கு ஆதாரக்கல்வியை அடிப்படையாகக் கொண்டு துவக்கக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அதேபோன்று காந்திகிராமத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பால்வாடிகள் என்று அழைக்கப்படும் குழந்தைகளுக்கான கண்காணிப்பு இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் நல்ல பழக்க வழக்கங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக அமைந்த இளநிலை ஆதாரப்பள்ளியில் நூற்பு,



தோட்டவேலை, சுகாதாரம் போன்றவைகளும் கற்றுத்தரப்பட்டன. மாணவர்கள் பள்ளி துவங்குவதற்குமுன் வகுப்பறைகளைப் பெருக்குவது, சுத்தம் செய்வது போன்ற சகல வேலைகளையும் செய்து வந்தனர். இதனால், இளம்வயதிலேயே மாணவர்களுக்கு உழைப்பின் மேன்மை கற்றுத்தரப்பட்டது. குறிப்பாக, காந்திகிராமத்திலுள்ள பள்ளிகள் "ஏழைகளின் பொதுக் பள்ளியாக" விளங்க வேண்டுமென செளந்திரம் அடிக்கடி கூறுவார். உண்மையிலேயே காந்திகிராமத்திலுள்ள எல்லாப் பள்ளிகளும் குழந்தைகளின் பூங்காவாகவே விளங்கின.

பள்ளிக்கூடங்களில் முறையான கல்வி அளிக்கப்படுவதைப் போலவே கிராமங்களில் வயதானவர்களுக்கும் எழுத்தறிவைக் கற்றுக் கொடுக்க செளந்திரம் அரும்பணியாற்றினார். அரசிடமிருந்து எவ்வித உதவியும் இல்லாத காலத்திலேயே இப்பணியை அவர் சிறப்பாகச் செய்து வந்தார். 1947ல் காந்திகிராமம் ஆரம்பிக்கப்பட்டபோதே முதியோர் கல்விப்பணியும் தொடங்கியது. அருகிலுள்ள கிராமங்களுக்கு மாலை நேரங்களில் சென்று, அங்குள்ள வயது வந்தோருக்கு எழுதப்படிக்க கற்றுத்தரப்பட்டது. அத்தோடு, சமுதாய நீதி நெறிகள் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மூலம் கற்பிக்கப்பட்டன. எழுதப்படிக்கத் தெரியாதவர்களைக்கூட இப்பணியின் மூலம் கிராம முன்னேற்றப்பணிகளில் பங்கு பெறச் செய்தது செளந்திரத்தின் சாதனை என்றே கூறலாம். அதுபோன்று காந்திகிராமத்திலும் வேறு பல தொழில் மையங்களிலும் பணியாற்றும் பணியாளர்களுக்கென முறைசாராக் கல்வியையும் அளித்து வந்தார். அத்தொழிலாளர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுத் தரப்பட்டது. சுகாதாரம், வீட்டு நிர்வாகம், குழந்தை வளர்ப்பு, குடும்பநலம், மனித உரிமைகள் போன்ற பொது அறிவுக் கல்வியும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. இதன் மூலம் நல்ல பலன் கிடைத்தது. அதேபோன்று அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றறொன்று சமூகக் கல்வியாகும். இத்தகைய கல்வி முறையை இன்று நாம் வேறு எங்கும் காண முடியாது. ஆனால், அன்று செளந்திரம் இதற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். சமூகக் கல்வியைப் பொது மக்களிடம் பரப்புவதற்காக கிராம சேவிகாக்களையும். ஆரோக்கிய சேவிகாக்களையும் கிராமங்களுக்கு அனுப்பிவைத்தார். இவர்கள் குடும்பநலம், சிறுகுடும்பத் தத்துவம், குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் போன்ற கல்வியைப் பெண்களுக்கு கற்றுக்கொடுத்து வந்தார்கள். இவர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து எவ்வித ஊதியமோ உதவியோ கூட கிடையாது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் இந்த சேவகிகள் செளந்திரத்தின் தலைமையில் சிறப்பாக பணியாற்றி வந்தனர். இதேபோன்று கல்விப் பணியில் பல பரிசோதனைகளை நடத்தி அதில் மகத்தான வெற்றியும் பெற்றார்.

காந்திகிராமத்தில் இயங்கிவரும் மற்றொரு அமைப்பு சாந்தி சேனையாகும். 1953ம் ஆண்டு சாந்தி சேனை உருவாக்கப்பட்டது. பொதுக்கட்டுப்பாடுகள், கிராமங்களில் அனைவரும் இணைந்து பணியாற்றுதல், பிரச்சனைக் காலங்களில் அமைதிப்பணியாற்றுவது போன்றவை சாந்தி சேனையின் முக்கிய நோக்கங்களாகும். காந்திகிராமத்தில் சாந்திசேனையை உருவாக்கியவர் ஜி. இராமச்சந்திரன். இந்த அமைதிவீரர்கள் வெண்மையான கதர் ஆடை உடுத்தி, காந்தி குல்லா அணிந்திருப்பார்கள். இதில் ஆண்களும், பெண்களும் சமமாகக் கருதப்பட்டார்கள். சாந்தி சேனையின் ஆணையாளராக எப்பொழுதும் ஒரு பெண்தான் நியமிக்கப்படுவார். ஆரம்பகாலங்களில் காந்திகிராமம் பாதுகாப்பின்றி இருந்தது. வெளியாட்கள் எவ்வித தயக்கமுமின்றி அங்குமிங்கும் வந்து போய்க் கொண்டிருந்தனர். எனவே, பாதுகாப்பு அவசியமெனக் கருதப்பட்டது. அதன் காரணமாக காந்திகிராமத்தைக் காவல் புரிவது சாந்தி சேனையின் கடமையாகும். பகலில் பெண் தொண்டர்களும், இரவில் ஆண் தொண்டர்களும் காவல் பணியை மேற்கொண்டுவந்தனர்.

சாந்திசேனை பெரும்பாலும் நிர்மாண வேலைகளையே செய்துவந்தது. வெள்ளம், புயல், பஞ்சம் போன்ற இயற்கை இடையூறுகளின்போது, பாதிக்கப்படும் பகுதிகளுக்குச் சாந்தி சேனையினர் அனுப்பப்பட்டு நிர்மாண வேலைகளைச் செய்து வந்தார்கள். காந்திகிராமத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்கு சாலை வசதியை உருவாக்கிக் கொடுத்தவர்கள் இவர்களே. அதேபோன்று குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், கிராமங்களை சுத்தம் செய்தல், மரம் நடுதல் போன்ற பணிகளையும் இவர்கள் செய்து வந்தார்கள். 1956ல் இராமேஸ்வரம் புயலால் தாக்கப்பட்டு பாதிக்கப்பட்டபோது சௌந்திரம் தலைமையில் பல புனரமைப்புப் பணிகளை அங்கு செய்தனர். வெள்ளத்திலிருந்து மனிதர்களை மட்டுமல்லாது ஆடுமாடு போன்ற கால் நடைகளையும் மீட்டு, உயிர்ச் சேதத்தைத் தவிர்த்தனர். மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு, உடை வழங்குவதில் சிறந்த சேவையாற்றினர். 1957 ல் முதுகுளத்தூர் இனக்கலவரத்தின்போது சௌந்திரத்தின் தலைமையில் சாந்தி சேனை அங்கு ஆற்றிய தொண்டை யாரும் எளிதில் மறக்க முடியாது. ஏராளமான ஹரிஜனங்களின் ஊரைக் காப்பாற்றினர். கைகளில் வெண்கொடிகளைத் ஏந்திக் கொண்டு இருவகுப்பினரையும் சமாதானம் செய்து வைக்க அரும்பாடுபட்டனர். தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் கிராமங்கள் தோறும் நடந்தே சென்று குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்தனர். உணவு, உடை வழங்கி ஆறுதல் அளித்தனர். பல உயிர்களைக் காப்பாற்றினர். சௌந்திரத்தின் தலைமையில் சுமார் மூன்று மாத காலம் சாந்தி சேனையினர் அப்பகுதியில் பணியாற்றினர். அமைதி திரும்பிய



பின்னரே இவர்கள் காந்திகிராமம் திரும்பினர். இதுபோன்று பல்வேறு நெருக்கடியான காலங்களில் இந்த சாந்தி சேனையினர் சிறப்பாக அமைதிப்பணி செய்து வந்தனர்.

1956ல் வினோபா பாவே அவர்கள் பூமிதான இயக்கத்திற்காக மதுரை மாவட்டம் வந்தார். அப்போது சாந்தி சேனையினர் அவருடனே கிராமங்களுக்குச் சென்று பணியாற்றினர். திண்டுக்கல், பழனி, நிலக்கோட்டை போன்ற தாலுகாக்களில் பூமிதானப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இதன் மூலம் கிராமக்கொடையாக 12 கிராமங்களும், நிலக்கொடையாக 335 ஏக்கரும் கிடைத்து. இப்பணியில் சுமார் 200 சாந்தி சேனை வீரர்கள் பங்கெடுத்துக் கொண்டு பணியாற்றினர். இது தவிர அவ்வப்போது காந்திகிராமத்திற்கு வருகை மேற்கொள்ளும் ஜனாதிபதி, பிரதம மந்திரி, முதல் மந்திரி, அமைச்சர்கள், சமூகத் தொண்டர்கள், தலைவர்கள் போன்ற முக்கிய நபர்களுக்கு சாந்தி சேனை அணிவகுப்பு நடத்தி செய்து வந்தது. சாந்தி சேவையின் அணிவகுப்பையும் மரியாதையையும் பல தேசியத் தலைவர்கள் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் முதன் முதலாக தலையில் கதர் குல்லா அணிந்தது காந்திகிராமத்தில்தான். அவர் வருகைதந்தபோது சாநதி சேனையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொள்ளும் சமயம் கதர் குல்லாவுடன் காட்சியளித்தது அனைவரையும் வியக்கச்செய்தார்.



பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களுடன் அம்மா அவர்கள்

இப்போது இந்த சாந்தி சேனையினர் உலகில் பெருகிவரும் அணு ஆயுதம், போர் ஒழிப்பிற்காக பல கண்காட்சிகளையும் கருத்தரங்குகளையும் முக்கிய நகரங்களில் அமைதி அணிவகுப்புகளையும் நடத்தி வருகிறார்கள். அமைதிப் பிரச்சார பாதயாத்திரைகளையும் நடத்துகிறார்கள். சில சமயங்களில் சாந்திசேனையினர் வெளிமாநிலங்களுக்கும் சென்று சேவை புரிந்து வருகிறார்கள்.

இதுபோன்று வேறு பல அமைப்புகளும் காந்திகிராமத்தில் செயல்பட்டு வந்தன. 1954 ல் காந்திகிராம ஊழியர்களுக்குப் பயன்படும் வகையில் காந்திகிராமக் கூட்டுறவுப் பண்டகசாலை ஒன்றை சௌந்திரம் அமைத்தார். அதன் தலைவரும் அவர்தான். காந்திகிராம ஊழியர்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருட்களைத் தாராளமாகக் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கம். ஆரம்பத்தில் சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இந்த கூட்டுறவுப் பண்டகசாலை நாளடைவில் ஒரு தனி ஸ்தாபனமாகவே வளரத் தொடங்கியது. காந்திகிராம ஊழியர்களுக்கு மட்டுமின்றி காந்திகிராமக் கிராமியக் கல்லூரியில் கூட்டுறவுப் பாடம் பயிலும் மாணவர்களுக்கு இப்பண்டகசாலை ஒரு சோதனைச் சாலையாகவும் பயன்பட்டு வருகிறது. விற்பனை, நிர்வாகம் போன்றவற்றில் மாணவர்கள் இங்கு பயிற்சி பெறுகிறார்கள்.

சௌந்திரத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மற்றுமொறு ஸ்தாபனம் சர்வோதயக் கூட்டுறவு விவசாய வங்கி ஆகும். இது1949ல் துவக்கப்பட்டது. இதிலும் சௌந்திரம்தான் இதன் தலைவராகப் பணியாற்றினார். இவ்வங்கியின் மூலம் அம்பாத்துரை, கீழக்கோட்டை, தொப்பம்பட்டி, கலிக்கம்பட்டி, முன்னிலைக்கோட்டை போன்ற கிராம மக்களுக்கு விவசாயத்திற்கான கடன்களை இவ்வங்கி வழங்கி வருகிறது. ஓராண்டு குறுகிய காலக் கடன், மூன்றாண்டு மத்திய காலக் கடன் தொகைகளை வழங்கி வருகிறது. பயிர்க் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அதேபோன்று குடியானவர்களின் உற்பத்திப் பொருளைப் பெற்று எவ்வித பிடித்தமுமின்றி நியாயமான விலை கிடைக்கவும் செய்கிறது. சேமிப்பு மனப்பான்மையைக் குடியானவர்களிடம் ஊக்குவிக்கிறது. இதுபோன்று பல பணிகளை இவ்வங்கி செய்து வருகிறது.

காந்திகிராமத்தின் மற்றொரு அங்கம் கலாச்சாரக்குழு ஆகும். இது 1953ல் சௌந்திரத்தால் ஏற்படுத்தப்பட்டது. காந்திகிராம சமூகத்தில் உள்ளவர்களிடையே கலைத்திறமைகளை வளர்ப்பதும், அத்தகைய ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் இக்குழுவில் சேர்ந்து தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டார்கள்.



காந்திகிராமத்திற்கு வருகைதரும் முக்கியஸ்தர்களுக்கு கலைத்திறனைக் காட்டி மகிழ்விப்பது, காந்திகிராமத்திற்கு உள்ளேயும், வெளியேயும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துவது போன்ற பணிகளையும் இக்குழுவினர் செய்தனர். காந்திகிராமத்தின் துவக்க காலத்தில் நிதிப் பற்றாக்குறையால் கஷ்டப்பட்டபோது இக்கலாச்சாரக் குழுவினர் பல நகரங்களில் கலைநிகழ்ச்சிகளை நடத்தி நிதி வசூல் செய்தனர்.

அதேபோன்று, ஹிந்தி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 'ஹிந்திக் கழகம்' ஒன்று 1953ல் ஏற்படுத்தப்பட்டது. ஹிந்தி நூல்களைக் கொண்ட ஒரு புத்தக நிலையம் ஏற்படுத்தப்பட்டது. ஹிந்தியை விருப்பப்பாடமாகக் கொண்டு வந்ததால் மாணவர்கள் அதைக் கற்றுப் பயன் பெற்றனர்.

அதேபோன்று, உலகிலுள்ள வெவ்வேறு நாடுகளில் வசிக்கும் சர்வ சமய கொள்கையை விரும்புபவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அகிம்சை முறையில் உலகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண 'உண்மையின் அன்பர்கள் சங்கம்' காந்திகிராமத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கம் நடைமுறையிலுள்ள மதம் மற்றும் சமூகப் பிரச்சனைகளை ஆராய்ந்து வந்தது. இதனால், பல உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பையும் காந்திகிராமம் பெற்றது.

அதேபோன்று 'கல்விக் கழகம்' என்ற அமைப்பும் காந்திக்கிராமத்தில் செயல்பட்டு வந்தது. 1952 ல் திருமதி ஆஷாதேவி அரியநாயகம் அவர்களால் இது துவக்கி வைக்கப்பட்டது. இதில் ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் பங்கு கொண்டு பல கருத்தரங்குகளை நடத்தினர். வெளியிலிருந்து பல முக்கிய கல்வியாளர்களை அழைத்து கருத்துரை வழங்கச் செய்தனர். பல பொது விஷயங்களையும் தெரிந்து கொள்ள இக்கழகம் மிகுந்த உதவியாக இருந்து வந்தது.



*ஆரம்பகால கலைநிகழ்ச்சிகளில் ஒன்று*

# 5. சௌந்திரமும் சௌபாக்கியமும்

சௌந்திரத்தின் தியாக வாழ்க்கைக்கும் சேவைக்கும் சான்று பகர்பவை காந்திகிராமத்திலுள்ள "சௌபாக்ய இல்லமும்", "சேவிகாசிரமும்" ஆகும். இவை இரண்டும் சௌந்திரத்திற்கு இரண்டு கண்கள் போன்றவை. கண்களை இமைகள் காப்பது போன்று, தன் அன்புச் சிறகுகளால் இதனைத் தனது வாழ்நாள் முழுவதும் காத்து வந்தார். இவ்விரண்டு அமைப்பிற்கும் இவ்வளவு முக்கியத்துவம் தரக் காரணமென்ன? ஆம். அதற்கு அழுத்தமான காரணங்கள் உண்டு. சௌபாக்ய இல்லம் என்பது தாய் தந்தையர் யார் என்றே தெரியாத குழந்தைகள் வாழும் விடுதியாகும். இது "குழந்தைகள் இல்லம்" என்றும் "சௌபாக்ய இல்லம்" என்றும் அழைக்கப்படுகிறது. சேவிகாசிரமம் என்பது, கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்கள், திக்கற்ற பெண்கள், விதவைகள் போன்றவர்களுக்கான அடைக்கல இல்லமாகும். சௌந்திரம் காலையில் எழுந்தவுடன் முதலில் சௌபாக்ய இல்லத்திற்குத்தான் செல்வார். அவ்வளவு முக்கியத்துவம் அதற்குக் கொடுத்து வந்தார். அவருக்கு மிகவும் இளகிய மனது. அது அன்பு மயமானது; கள்ளம் கபடமற்றது; அன்பு செரியும் கற்பகத்தரு; கருணை மழைபொழியும் கார்மேகம்; துன்பப்படுவர்களைக் கண்டால் துவண்டுவிடுவார். கண்ணில் தென்பட்ட அனைவரையும் தனது உறவினராகக் கருதியவர். இத்தகைய சிறப்புகளெல்லாம் சௌந்திரத்திடம் இயற்கையாகவே காணப்பட்டன. அதன் பிரதிபலிப்புத்தான் குழந்தைகள் இல்லமும், சேவிகாசிரமமும்.

சௌந்திரம் இந்த இரண்டு ஸ்தாபனங்களையும் உருவாக்குவதற்குச் சில சம்பவங்கள் காரணமாயிருந்தன. 1944 ல் சௌந்திரம் அடையாறில் மருத்துவ சேவை செய்து வந்தார் என்பது நாம் அறிந்ததே. அவ்வேளையில் சந்தர்ப்ப சூழ்நிலையால் வாழ்க்கையில் தவறிய ஒரு திக்கற்ற பெண் கர்ப்பத்துடன் சௌந்திரத்திடம் வந்தாள். "நீங்கள் தான் என் வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டுமென," அப்பெண் மன்றாடினாள். சௌந்திரம் அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் கூறி, அடைக்கலம் கொடுத்தார். சுமார் ஒரு வருட காலம் அவரது பாதுகாப்பிலேயே தங்கியிருந்தாள். அழகான குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்தாள். அக்குழந்தையும், தாயும் மேலும் பல மாதங்கள் அங்கேயே தங்கியிருந்தனர். அதன் பின் சென்னையிலேயே தாயும்



சேயும் கௌரவமாக வாழ்வதற்கு சௌந்திரம் ஏற்பாடு செய்து கொடுத்தார். இன்றும் அவர்களிருவரும் நல்ல பணியில், நல்ல வருமானத்தில் சந்தோஷமாக வாழ்ந்துவருகிறார்கள். இது போன்று சந்தர்ப்ப சூழ்நிலையால் வாழ்விழந்த பெண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் அடைக்கலம் கொடுத்து வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென அப்போதே சௌந்திரம் எண்ணினார்.

மற்றொரு சம்பவம் 1950ல் நடந்தது. சுமார் இருபது வயது மதிக்கத்தக்க ஒரு பெண் தனது கர்ப்பத்தைக் கலைக்கவேண்டுமென சின்னாளபட்டியிலுள்ள காந்திகிராம மருத்துவமனைக்கு வந்தார். சௌந்திரம் அப்பெண்ணுக்கு பல அறிவுரைகளையும் புத்திமதிகளையும் கூறினார் "கர்ப்பத்தைக் கலைக்கக் கூடிய நிலையைத் தாண்டி, குழந்தை வளர்ந்து விட்டது. எனவே, இந்த மருத்துவமனையிலேயே குழந்தை பிறக்கும் வரை தங்கியிரு. உனக்குத் தேவையான வசதிகளையும் பாதுகாப்பையும் செய்து தருகிறேன்," எனக் கூறினார். மருத்துவமனையில் அப்பெண் தங்குவதற்கு எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டன. ஆனால், மறுநாள் காலை அப்பெண்ணைக் காணவில்லை. சில தினங்கள் கழித்து பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்தது. ஒரு கர்ப்பிணிப்பெண் அருப்புக்கோட்டைக்கு அருகில் ஒரு மரத்தில் தற்கொலை செய்துகொண்டாள். அவளிடம் அம்பாத்துரையில் வாங்கிய ரயில் டிக்கட் இருந்தது என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. இச்செய்தி சௌந்திரத்தின் உள்ளத்தை மிகவும் பாதித்தது. பெண்களைக் கெடுக்கின்ற சமுதாயம் அந்தப் பெண்களை வாழவிடுவதில்லை. இப்படிப்பட்ட சமுதாயத்தில், வாழ்க்கையில் தவறிழைத்த பெண்களும் தலை நிமிர்ந்து வாழவேண்டும். அவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். அப்பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் கௌரவமாக வாழவேண்டும் என்ற நோக்குடன் குழந்தைகள் இல்லத்தையும், சேவிகாசிரமத்தையும் காந்திகிராமத்தில் ஏற்படுத்தினார். 1947 ல் காந்திகிராமம் ஸ்தாபிக்கப்பட்டபோதே மூன்று குழந்தைகளுடன் குழந்தைகள் இல்லமும் ஆரம்பிக்கப்பட்டது.

குழந்தைகள் இல்லத்தில் வளர்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு வரலாறு உண்டு. இங்கு வாழ்கின்ற குழந்தைகளுக்கு தான் யார்? தாய் தந்தை யார்? உறவினர்கள் யார்? எப்படி இங்கு வந்தோம்? என்பது எதுவுமே தெரியாது. இங்கு வளரும் பல குழந்தைகள் பிறந்த சில மணிநேரத்திலேயே இவ்வில்லத்தில் சேர்க்கப்பட்டவைகளாகும். அதற்கு பல எடுத்துக் காட்டுகளைக் கூறலாம். அன்று தீபாவளி. குழந்தைகள் இல்லத்திலுள்ள குழந்தைகள் அனைவரும் இனிப்புகள் உண்டு, ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது குழந்தைகள் இல்லத்திற்கு ஒரு விருந்தாளி வந்தார். அந்த விருந்தாளி யார்?

கொல்லம் விரைவு ரயில் சென்னையை நோக்கி சென்று கொண்டிருந்தது. ரயில் திண்டுக்கல் நிலையத்தில் சிறிது நேரம் நின்றது. அப்போது ஒருவர் ரயில் பெட்டியிலுள்ள கழிப்பிடத்திற்குச் செல்கிறார். அங்கு அவர் கண்ட காட்சி அவரை அதிர்ச்சியடையச் செய்தது. ஒரு அழகான பெண்குழந்தை இரத்தக் கறைகளுடன் முனகிக்கொண்டு கிடந்தது. சிறிது நேரத்திற்கு முன்னர்தான் அக்குழந்தை பிறந்திருக்கிறது. அக்குழந்தையைப் பார்த்த அவர் சக பயணிகளை அழைத்தார். ஒரு பெரிய கூட்டமே கூடிவிட்டது. இக்குழந்தையைப் பெற்றவர் யார்? என்று கேட்ட வண்ணம் அவர்கள் தாயைத் தேட ஆரம்பித்தார்கள். தாய் அதற்குள் எங்கோ சென்றுவிட்டாள். ரயில் புறப்படுவது தாமதமானது. ஸ்டேஷன் மாஸ்டர் குழந்தையிருந்த பெட்டிக்கு விரைந்தனர். காட்சியைக் கண்டு மனம் உருகுகிறார். உடனடியாக ஒரு துப்புரவுத் தொழிலாளியை அழைத்து அக்குழந்தையைப் பத்திரமாக வெளியில் எடுத்து வரச் செய்கிறார். அதன்பின் ரயில் தனது பயணத்தைத் தொடர்ந்தது. காவல் துறைக்கு செய்தி அனுப்பப்பட்டது. ஆனால், தாயைக் கண்டுபிடிக்க முடியவில்லை. குழந்தை பசியால் துடிக்கத் தொடங்கியது. ரயில்வே மற்றும் காவல்துறை அதிகாரிகளும் அடுத்து என்ன செய்வதென அறியாமல் திகைத்தனர். இன்னும் சற்று நேரத்திற்குள் அக்குழந்தைக்கு சிகிச்சையளிக்கப்படவில்லையென்றால் குழந்தை பிழைப்பது கடினம். அருகிலிருந்த ஒரு பெரியவர் காந்திகிராமத்திற்கு இக்குழந்தையைக் கொண்டு சென்றால் பிழைக்கவைத்து விடுவார்கள் என்றார். உடனே அக்குழந்தை காவல்துறையின் பாதுகாப்போடு காந்திகிராமத்திற்குப் பயணம் செய்தது. அக்குழந்தைதான் அந்த விருந்தாளி. இச்செய்தி சௌந்திரத்திற்கு தெரிவிக்கப்பட்டது. அவர் விரைந்து வந்தார். அக்குழந்தையை குளிப்பாட்டி, சுத்தம் செய்து, தேவையான மருத்துவ சிகிச்சை செய்தார். குழந்தைக்கு உயிர் வந்தது. உயிர்கொடுத்த சௌந்திரம், அக்குழந்தைக்கு நல்ல வாழ்க்கையையும் கொடுத்தார். உடனடியாக குழந்தைகள் இல்லத்தில் அக்குழந்தை சேர்க்கப்பட்டது. தீபாவளியன்று அக்குழந்தை பிறந்ததால் அக்குழந்தைக்கு 'தீபா' என்று அவர் பெயரிட்டார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அக்குழந்தை வளர்ந்துவந்தது. நன்கு படித்து அரசு வேலையும் கிடைத்தது. சௌந்திரம் அப்பெண்ணுக்கு நல்ல மாப்பிள்ளையையும் தேர்ந்தெடுத்து திருமணம் செய்து வைத்தார். இன்று அப்பெண் தனது கணவருடனும் குழந்தைகளுடனும் மகிழ்ச்சியாக இல்லறம் நடத்தி வருகிறாள்.

பெரியார் மாவட்டத்தில் காசிபாளையம் என்ற ஒரு கிராமம். ஒரு நாள் அவ்வூரில் ஒரு பெரியவர் இயற்கை எய்திவிட்டார். ஊர் மக்கள் அப்பெரியவரின் உடலை இடுகாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இறுதிக் காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சமயம், திடீரென ஒரு



குழந்தை அழுகின்ற சப்தம் கேட்டது. பயம் கலந்த துணிச்சலுடன் சிலர் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றனர். ஒரு கல்லறையின் ஓரத்தில் சற்று நேரத்திற்கு முன்னர்தான் பிறந்த ஒரு குழந்தை சுடுமண்ணில் புரண்டு கொண்டு அழுவதைக் கண்டனர். இக்குழந்தையின் தாய் யார்? என்பது தெரியவில்லை. உயிர்நீத்த உடலை நெருப்புக்கு ஒப்படைத்துவிட்டு புதிய உயிரின் வாழ்வில் ஒளியேற்ற அவர்கள் அக்குழந்தையை ஊருக்குள் எடுத்து வந்தனர். குழந்தை உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தது. சுடுமண்ணில் அக்குழந்தை கிடந்ததால் உடலெங்கும் கொப்புளங்கள். காந்திகிராமத்திற்கு கொண்டு சென்றால்தான் இக்குழந்தை பிழைக்குமென சிலர் கூறினார்கள். உடனடியாக அக்குழந்தையை, எண்ணெய் தடவிய வாழை இலையில் சுருட்டி காந்திகிராமத்திற்கு சில மணிநேரத்திற்குள் கொண்டுவந்தனர். வழக்கம்போல் உடனடியாக மருத்துவச் சிகிச்சை செய்யப்பட்டது. மற்ற எல்லா வசதிகளும் செய்யப்பட்டது. இடுகாட்டில் கொளுத்தும் வெயிலில், சாம்பலில் புரண்டு கொண்டிருந்த அக்குழந்தையின் வாழ்வில் சாந்தமும் சமாதானமும் கிடைக்க "சாந்தி" என்று சௌந்திரம் பெயரிட்டார். சாந்தி நன்கு வளர்ந்து, படித்து இன்று நல்ல சம்பளத்தில் பணியாற்றி வருகிறாள்.

1954ல் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தபோது, திண்டுக்கல்லுக்கு விஜயம் மேற்கொண்டார். சௌந்திரம், இராஜாஜிக்கு வரவேற்பு கொடுப்பதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. காலை ஆறு மணிக்கெல்லாம் சௌந்திரம் திண்டுக்கல்லில் இருக்க வேண்டும். அதற்காக அதிகாலையிலேயே எழுந்து வரவேற்பிற்கான ஏற்பாடுகளுடன் புறப்படத் தயாராக இருந்தார். கார் டிரைவர் காரைச் சுத்தம் செய்து தயாராக வைப்பதற்கு காரை நோக்கிச் சென்றார். அப்போது, ஒரு குழந்தையின் அழுகைச் சத்தம் கேட்டது. அப்போது விடிந்தும் விடியாததுமான மங்கலான இருட்டு. குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்ட டிரைவர் சௌந்திரத்திடம் வந்து விஷயத்தைக் கூறினார். "நமது குழந்தைகளெல்லாம் சரியாக இருக்கிறார்களா என்று பாருங்கள்?" எனக் கூறினார். குழந்தைகள் இல்லத்திலுள்ள குழந்தைகள் சரியாக இருந்தனர். அனைவரும் சரியாக உள்ளனர் என்று கூறவே, சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றார்கள். குழந்தையின் அழுகைச் சத்தம், திண்டுக்கல்லுக்குப் புறப்படத் தயாராக இருந்த காருக்கு அனைவரையும் அழைத்துச் சென்றது. காருக்கு அடியில் சற்று நேரத்திற்கு முன்னர் பிறந்த ஒரு குழந்தை, மண்ணில் புரண்டு அழுது கொண்டிருந்தது. உடம்பெல்லாம் எறும்புகள் மொய்த்துக் கடித்துக் கொண்டிருந்ததால் வலியினால் குழந்தை அலறித் துடித்துக் கொண்டிருந்தது. குழந்தை பத்திரமாக காருக்கடியிலிருந்து எடுக்கப்பட்டது. சௌந்திரம் அக்குழந்தையைத் தன் கையில் வாங்கிக்

கொள்கிறார். எறும்புகள் கடித்ததினால் உடலெங்கும் சிறு சிறு புண்கள். உடனடியாக முதலுதவி செய்யப்பட்டது. குழந்தையை பஞ்சில் சுற்றி வைத்தியம் செய்து கொண்டிருந்தபோது, போலீஸ் அதிகாரி ஒருவர் "அம்மா, நேரமாகிவிட்டது; நாம் உடனே செல்ல வேண்டும். இரயில் வரும் நேரம் ஆகி விட்டது" என்று கூறினார். "இராஜாஜியை வரவேற்க நான் இல்லையென்றால் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், இப்போது இக்குழந்தையைக் கவனிக்க என்னைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்?" என சௌந்திரம் அந்தப் போலீஸ் அதிகாரியிடம் வினவினார். போலீஸ் அதிகாரி அப்படியே சிலையாகிவிட்டார். யார் பெற்ற குழந்தையோ தெரியவில்லை. அக்குழந்தைமீது இவர் இவ்வளவு அன்பு செலுத்துகிறாரே! என்று எண்ணி அப்போலீஸ் அதிகாரி மனம் வெதும்பினார். குழந்தைக்கு உடனடியாக திரவ உணவு கொடுக்கப்பட்டது. அழுது கொண்டிருந்த குழந்தை இப்போது சௌந்திரத்தின் கரங்களில் அமைதியாக உலகைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஆண் குழந்தையான அப்பாலகனுக்கு 'பாலமுருகன்' எனப் பெயரிடப்பட்டது. பாலமுருகன் நன்கு படித்து, ஒரு நல்ல வேலையில் சேர்ந்தபிறகு திருமணமும் செய்துகொண்டு இப்போது குடும்பம் குழந்தையுடன் நலமாக உள்ளார்.

உலகில் பெண்ணாகப் பிறந்தால் எவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. மதுரை மாவட்டத்தைச் சார்ந்த ஒரு பெண் தனது சிறு குழந்தையுடன் மதுரை அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டாள். திருமணமாகி ஒரு வருடம்தான் ஆகியிருந்தது. முதல் குழந்தை பெண் குழந்தையாகப் பிறந்துவிட்டதால் அவளது கணவனும் குடும்பத்தாரும் அப்பெண்ணை எப்போதும் திட்டிக்கொண்டு, சரியான உணவு கொடுக்காமல் பட்டினியாய்ப் போட்டு கொடுமைப்படுத்தினார்கள். இதனால் நோய்வாய்ப்பட்டு அவதிப்பட்டார். கிராமத்தில் சரியான கவனிப்பில்லாமையால், மதுரை வந்து அரசு மருத்துவமனையில் சேர்ந்தாள். அங்கு பல தீவிர சிகிச்சைகள் செய்யப்பட்டபோதிலும் அவளது உயிரைக் காப்பாற்ற இயலவில்லை. உடனிருந்த சிறுகுழந்தை அனாதையாகிவிட்டது. மருத்துவ அதிகாரிகள் அக்குழந்தையைக் காந்திகிராமம் கொண்டு வந்தார்கள். குழந்தைக்கு வழக்கம்போல் உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது. அக்குழந்தையின் வருங்காலத்தில் வசந்தம் மலர வேண்டும் என்ற எண்ணத்தில் 'வசந்தா' என சௌந்திரம் பெயரிட்டார். குழந்தை நன்கு படித்து புத்திக்கூர்மையுடன் வளர்ந்தது. அவள் பள்ளிப் படிப்பிலும் உயர் கல்வியிலும் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்றாள். சௌந்திரம் எண்ணியது போன்று ஒருநாள் வசந்தாவின் வாழ்வில் வசந்தம் உதித்தது. ஒரு வசதிமிக்க அமெரிக்கர் தனது இளம் மனைவி திடீரென இறந்து விடவே, மறுமணம் செய்து கொள்ள விரும்பினார்.



அவள் ஒரு இந்தியப் பெண்ணாக இருக்க வேண்டும். அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்ணாக இருக்கவேண்டும். தமிழ்ப் பெண்கள் தான் தாய்மைக்குணம் நிரம்பியவர்களாக இருப்பார்கள் என அவர் நம்பினார். கருப்பு நிறம் சிறப்பென கருதினார். ஒருநாள் காந்திகிராமம் வந்து பல பெண்களைப் பார்த்தார். கடைசியில் அவரது விருப்பம் வசந்தாவின் மீது பதிந்தது. இருவருக்கும் சட்டப்பூர்வமாகத் திருமணம் நடைபெற்றது. இன்று அமெரிக்காவில் தனது கணவருடனும் குழந்தைகளுடனும் நலமுடன் இல்லறம் நடத்தி வருகிறாள். ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகிறாள், எழுதுகிறாள். அவ்வப்போது தனது தாய்வீடான காந்திகிராமத்தை மனதில் நினைத்துக்கொண்டு சௌந்திரத்தைத் தெய்வமாக வழிபட்டு வருகிறாள். இதுபோன்று எத்தனையோ வசந்தாக்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் நலமுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

ஒருநாள் அதிகாலை நேரம். காந்திகிராமம் முன்புற ரோட்டின் ஓரத்தில் இரண்டு மூன்று நாய்கள் ஒன்றோடு ஒன்று குரைத்துக் கொண்டும் சண்டையிட்டுக் கொண்டுமிருக்கின்றன. சண்டைக்கான காரணம் ஒரு சிறு துணிப் பொட்டலம்தான். பொட்டலத்தை ஒரு நாய் தன் பக்கம் இழுக்க மறுநாய் மற்றொரு பக்கம் இழுக்க இப்படியாக இழுபறிச் சண்டை. வெகுநேரமாக இந்த நாய்கள் குரைத்துக் கொண்டு சண்டையிடுவதைக் கண்ட காவலர் ஒருவர், அந்தப் பொட்டலத்தில் என்ன இருக்கிறது என்று பார்க்க அருகில் சென்றார். அவர் கண்ட காட்சி அவரையே அதிரவைத்தது. காரணம் பொட்டலத்தினுள் சற்று நேரத்திற்குமுன் பிறந்த அழகான குழந்தை இருந்தது. அக்குழந்தையைப் பெற்ற தாய் அதனைப் பழைய துணியில் சுற்றி காந்திகிராமத்தின் வாயிலில், இரவோடு இரவாக வைத்துவிட்டு சென்றுவிட்டதை யாரும் கவனிக்கவில்லை. ஆனால், நாய்கள் கவனித்துவிட்டன. அதனால்தான் இந்தச் சண்டை. காவலாளி உடனடியாக நாய்களை விரட்டிவிட்டு பொட்டலத்திலிருந்த குழந்தையை வெளியே எடுத்தார். அது ஒரு அழகான ஆண் குழந்தை. அக்குழந்தையின் உடம்பில் நாய்கள் பிராண்டிய காயங்கள் ஆங்காங்கே தென்பட்டன. அந்தஇடங்களிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவர் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு குழந்தைகள் இல்லத்திற்கு விரைந்தார். சமுதாயத்தின் பழிச்சொல்லுக்கு அஞ்சி ஒரு தாய், இப்படி நாய்களிடம் போட்டுவிட்டுப் போய்விட்டாள். இன்னும் சற்றுநேரம் கவனியாமலிருந்தால் நாய்களின் வயிற்றில்தான் இக்குழந்தை போயிருக்கும். இவ்வளவு பத்திரமாகவாவது இக்குழந்தையைக் காப்பாற்றியமைக்காக இறைவனுக்கு சௌந்திரம் நன்றி கூறினார். புதிய வரவுக்கு சிகிச்சைகள் ஆரம்பமாயின. ஊசி போடப்பட்டது. நாய்கடித்த இடங்களிலெல்லாம் மருந்து கட்டப்பட்டது. சௌந்திரம் கைராசிக்காரர். அவர் வைத்தியம் செய்ய ஆரம்பித்தால் நோய்கள்

பறந்தோடிவிடும். ஒரு சில நாட்கள் அக்குழந்தை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன்பின், சௌந்திரத்தைக் கண்டதுமே தனது பொக்கை வாயால் ஒரு புன்னகையை உதிர்க்கும். குழந்தையின் சிரிப்பைப் பார்க்கையில் சௌந்திரத்தின் கண்கள் ஆனந்தக் குளங்களாகிவிடும்.

ஒரு அனாதைப் பெண். அதுவும் தொழுநோய் கண்ட பெண். அந்த நிலையிலும்கூட தன்னைக் காத்துக்கொள்ள முடியவில்லை. யாரோ ஒரு கயவனால் அவள் கர்ப்பமாகிறாள். ஏற்கெனவே தொழுநோய். இப்போது கர்ப்பம் வேறு. இந்த சமுதாயம் அவளை விரட்டி விரட்டித் துரத்தியது. எங்கும் வாழ முடியவில்லை. ஆனால், குழந்தை வயிற்றில் வளர்ந்து கொண்டே வந்தது. ஒருநாள் குழந்தையும் பிறந்தது. தன்னையே வாழவிடாத சமுதாயம், இக்குழந்தையை வாழவிடுமா? என்று நினைத்துப் பார்க்கிறாள். காந்திகிராமம் நினைவிற்கு வந்தது. தனது வாழ்க்கையைப்போல் தனது குழந்தையின் வாழ்க்கையும் ஆகிவிடக்கூடாது என்பதற்காக அக்குழந்தையைக் காந்திகிராமத்தில் ஒப்படைத்துவிட்டுச் சென்றாள். இப்போது அந்தத் தாய் எங்கு இருக்கிறாள்? என்ன செய்கிறாள்? என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், அவளது குழந்தையோ காந்திகிராமத்தில் வளர்ந்து கொண்டு வகுப்பில் முதலாவதாகப் படித்துக் கொண்டு வருகிறது.

இதேபோன்று, குழந்தைகள் இல்லத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு சரித்திரம் உண்டு. அக்குழந்தைகளின் உற்றார் உறவினர் எல்லாமே இந்த காந்திகிராமம்தான். அனைவருக்கும் உற்ற தாய் சௌந்திரம்தான். குழந்தைகள் இல்லத்திலுள்ள ஒவ்வொரு குழந்தையையும், தனது வயிற்றில் பிறந்த குழந்தையாகவே கருதி அன்போடு வளர்த்துவந்தார். குழந்தைகள் இல்லத்தில் வளர்கின்ற குழந்தைகள் சந்தோஷமாக இருக்கவேண்டும். மற்ற குழந்தைகளைப் போன்று நன்கு படித்து பெரியவர்களாக வளர்ந்து சமுதாயம் மெச்சும்படியாக வாழவேண்டும். இக்குழந்தைகள் எவ்விதக் குறையுமின்றி சகல சௌபாக்கியங்களுடன் வாழவேண்டும் என்பதற்காக குழந்தைகள் இல்லத்திற்கு "சௌபாக்ய இல்லம்" எனப் பெயரிட்டார். வெளியூர் செல்ல வேண்டியிருந்தால் இங்கு வந்து குழந்தைகளைப் பார்த்துவிட்டுத்தான் செல்வார். அதேபோன்று திரும்பிவந்ததும் நேராக இங்கு வந்துவிட்டுத்தான் வேறெங்கும் செல்வார். தனது ஜீவன் உள்ளவரை சௌந்திரம், சௌபாக்ய இல்லத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்தார். காரிலிருந்து இறங்க முடியாத நிலையிலும்கூட காரில் இருந்த வண்ணமே குழந்தைகளை அழைத்து அன்போடு பேசி மகிழ்வார். சௌந்திரத்திற்கு குழந்தைகள் என்றால் அவ்வளவு பிரியம். தன்னையே மறந்து அக்குழந்தைகளோடு ஆனந்தமாக இருப்பார். சில சமயங்களில் குழந்தைகளுக்கு ஏதாவது உடல் நலக்குறைவு ஏற்படும்.



அச்சமயங்களில் உடனடியாக மருந்து மாத்திரைகளைக் கொடுத்து குணமாகும்வரை ஓயமாட்டார். குழந்தைகளைச் சிறு எறும்பு கடித்தால் கூட அவர் துடித்துவிடுவார்.

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்பது பழமொழி. ஆனால், சௌந்திரத்திற்கோ இருநூறுக்கும் மேற்பட்ட குழந்தைகள். அக்குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது கஷ்டமாக இருந்தது. குழந்தைகள் வளரவளர அவற்றின் தேவைகளும் அதிகரித்துக்கொண்டே வந்தன. சௌபாக்ய இல்லத்தில் வளரக்கூடிய குழந்தைகள் அனைவருக்கும் சௌந்திரம்தான் எல்லாம். அவர்தான் அவர்களுக்கு எல்லாம் செய்தாக வேண்டும். ஆதரவற்ற அக்குழந்தைகள் யாரிடம் போய்க் கேட்பர்? யாரைத் தெரியும்? அவர்களுக்கு உலகமே இந்த காந்திகிராமம்தான். அதே சமயம் யாராவது இக்குழந்தைகளை அனாதைகள் என்று கூறிவிட்டால் பொறுத்துக் கொள்ளவே மாட்டார்.

ஒரு சமயம் ஒரு பெண், மற்றொரு வெளிநபரிடம் இங்கு இருக்கும் குழந்தைகள் அனைவரும் அனாதைகள் என்று, சௌந்திரம் அருகில் இருப்பதைக் கூட கவனிக்காமல் கூறிவிட்டாள். அப்பெண்ணின் சொற்கள் அவரது காதில் காய்ச்சிய ஈயமாகப் பாய்ந்தன. "யாரைப் பார்த்து அனாதைகள் என்று கூறுகிறாய்? இக்குழந்தைகளை இவ்வாறு கூற உனக்கு யார் கற்றுக் கொடுத்தது?" என சௌந்திரம் எரிமலையாய் சீறினார். அவ்வளவு கோபம். கண்களை இமைகள் காப்பதுபோல், அவர் இக்குழந்தைகளை வளர்த்து வந்தார். தனது குழந்தைகள் அனைவரும் சாப்பிட்டால்தான் சாப்பிடுவார். அவ்வளவு தூரம் உயிருக்கு உயிராக வளர்க்கும் குழந்தைகளை, அனாதைகள் என்றால் யார்தான் சகித்துக் கொள்வார்? சௌந்திரம் இப்படிக் கோபப்பட்டதைக் காந்திகிராம ஊழியர்கள் இதற்கு முன் பார்த்ததே கிடையாது. ஆனால், அக்கோபமெல்லாம் வந்த வேகத்திலேயே பறந்து போய்விடும்.

ஒரு நாள் மதிய உணவு நேரம். சௌந்திரம் தன் குழந்தைகள் சாப்பிடுவதைப் பார்க்கச் சென்றார். வழக்கம்போல் சாம்பார், பொரியல், அப்பளம் எல்லாம் பரிமாறப்பட்டு இருந்தன. ஒவ்வொரு குழந்தையின் சாப்பாட்டுத் தட்டையும் பார்த்துக்கொண்டே வந்தார். ஒரு குழந்தையின் சாப்பாட்டுத் தட்டைப் பார்த்தவுடன் அவரது கவனம் முழுவதும் அத்தட்டில் பதிந்தது. அக்குழந்தையின் அருகில் சென்று தட்டிலிருந்த அப்பளத்தைக் கையில் எடுத்தார். அந்த அப்பளம் கருகிப்போய் இருந்தது. அதைக் கையில் வைத்துக்கொண்டு மளமளவென்று சமையலறைக்குச் சென்றார். சௌந்திரம் நிமிர்ந்து வேகமாக நடக்க ஆரம்பித்தால், ராணுவ வீரர்கள்கூட வெட்கப்பட வேண்டும். அவ்வளவு கம்பீரமாக நடப்பார். சமையலறைக்குள் அவர்

நுழையும் வேகத்தைக் கண்டதும், சமையல் வேலைகளைக் கவனிக்கும் சகோதரி பயந்தேபோய் விட்டாள். "உனது குழந்தைகளுக்கு என்றால் இப்படியெல்லாம் செய்வாயா? இந்தக் கருகிப்போன அப்பளத்தை நீ எப்படி என் குழந்தைகளுக்குக் கொடுக்கலாம்? புதிதாக ஒன்றைப் பொரித்துக் கொடு. இப்படியெல்லாம் இனிமேல் கவனக்குறைவாக இருக்கக் கூடாது," என்று சமையல் செய்யும் சகோதரியைக் கண்டித்தார். இவ்வாறு சிறு விஷயங்களைக்கூட சௌந்திரம் மிகவும் கூர்மையாகக் கவனிப்பார்.

தனது குழந்தைகளை வளர்ப்பதற்கு ஏற்படும் செலவுகளுக்கு சௌந்திரம் நன்கொடை வசூலிப்பது வழக்கம். எவ்வளவு நன்கொடை வசூலித்தாலும் பற்றாக் குறைதான். குழந்தைகளுக்கு நல்ல துணிகளுக்குக்கூட கஷ்டமாக இருந்தது. அதற்கு அவர் ஒரு வழியைக் கண்டுபிடித்தார். தீபாவளி மற்றும் திருவிழாக் காலங்களில் தன்னுடைய தாய் வீட்டிற்குச் செல்வார். அச்சமயங்களில் விதவிதமான புதுத்துணிகள் வீட்டில் வந்த குவியும். புதிய துணிமணிகள் வந்தவுடன் வீட்டிலுள்ள பழைய துணிகளையெல்லாம் ஒரு பெரிய பொட்டலமாகக் கட்டி காந்திகிராமத்திற்கு கொண்டு வந்துவிடுவார். சௌந்திரத்தின் தகப்பனார், "எதற்கு இப்படி எல்லாத் துணிகளையும், அதுவும் கிழியாத நல்ல துணிகளையெல்லாம் பொட்டலம் போடுகிறாய்," என்று கேட்பார். ஒவ்வொரு பண்டிகைக்கும் நீங்கள் புதியபுதிய துணிகளை வாங்கிக் கொள்கிறீர்கள். அங்கு என் குழந்தைகளுக்கு விரித்துப் படுக்கக்கூட விரிப்புகள் இல்லை. அதனால்தான் இந்தப் பழைய துணிகளையெல்லாம் நான் கொண்டு போகிறேன்," எனக்கூறி எடுத்து வந்துவிடுவார். பழைய துணியென்றால் எல்லாமும் பழையதுவாகவா இருக்கும்? இருக்காது! ஒருமுறை சலவைக்குச் சென்று வந்ததைக்கூட எடுத்து வந்துவிடுவார். வீட்டைவிட்டுப் புறப்படும்போதுகூட தனது தந்தையின் அறைக்குச் சென்று, "சில குழந்தைகள் சரியாக சோறு சாப்பிட மாட்டேன் என்கின்றன. அக்குழந்தைகளுக்கு கடையில் பால் பவுடர் வாங்கவேண்டும். எனக்குப்பணம் தேவைப்படுகிறது," என்று கூறிக்கொண்டே தந்தையின் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு அறையிலிருந்து வெளியேறிவிடுவார். மகள், சௌந்திரம் எது கேட்டாலும் தந்தை மறுப்புக்கூறுவதே கிடையாது. தாய் தந்தை இருக்கும்வரையிலும் சௌந்திரம் அவர்களுக்கு செல்லப் பிள்ளையாகவே இருந்துவந்தார்.

சௌந்திரம் தனது தாய்வீட்டிலிருந்து மட்டும் இப்படி பழைய துணிகளைப் பொறுக்கிக்கொண்டு வரவில்லை. தனது சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள் வீடுகளுக்கும் சென்று துணிகளைச் சேகரித்து வந்தார். ஒரு நாள் அவர் தனது சகோதரர் டி.எஸ். சந்தானம் வீட்டிற்குச் சென்றார். தன் சகோதரி வீட்டிற்குள் நுழைந்ததும் வீட்டிலுள்ளவர்களிடம், "சௌந்திரம் வந்து விட்டாள். வீட்டிலுள்ள



பொருட்களைப் பத்திரமாக வையுங்கள். அவள் இஷ்டத்திற்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொள்ளாமல் அள்ளிக் கொண்டு போய்விடுவாள்," என்று சிரித்துக்கொண்டே வேடிக்கையாக சொல்வார். தன் சகோதரர் கூறுவதைக் கேட்டு சௌந்திரத்திற்கும் சிரிப்பு தாங்கமுடியாது. இருவரும் சேர்ந்து சிரித்து மகிழ்வர். சகோதரர் கூறியதைப்போலவே, திரும்பும்போது பல பொருட்களுடன்தான் திரும்புவார். சில சமயங்களில் வாசல், ஜன்னல்களில் தொங்கிகொண்டிருக்கும் அழகான திரைச்சீலைகளைக்கூட எடுத்துவந்துவிடுவார். தனது குழந்தைகளை வளர்க்க அவர் கையாண்ட உத்திகள் பலப்பல. இவ்வாறாக குழந்தைகளுக்காக மிகவும் சௌந்திரம் மிகவும் கஷ்டப்பட்டார். ஆனால் யாருக்கும் அவைகள் தெரியாது.

குழந்தைகள் இல்லத்திற்கு வெளிநாட்டிலுள்ள ஒரு சமூக சேவை நிறுவனம் பால்பவுடர் அனுப்பிக் கொண்டிருந்தது. ஒருசமயம் பால்பவுடர் வருவது சில காரணங்களால் தடைபட்டுவிட்டது. விடுதி ஊழியர்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒரு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் பலர் இருக்கிறார்கள். பால் இல்லாததால் அடுத்த வேளைக்கு அக்குழந்தைகளுக்கு ஆகாரம் கிடையாது. இது சௌந்திரத்திற்கு தெரிவிக்கப்பட்டது. உடனே அருகிலுள்ள கிராமங்களுக்கு ஆட்களை அனுப்பி, பால் வாங்கிவரச் செய்தார். இப்போது உள்ளதைப்போன்று அப்போது பால் பண்ணைகள் கிடையாது. ஒவ்வொரு கிராமத்திற்கும் தினந்தோறும் ஆட்கள் அனுப்பப்பட்டு பால் வாங்கிவரப்பட்டது. எத்தனை நாட்களுக்கு இப்படி பால் வாங்கிவர முடியும்? அதனால் சில பால்மாடுகள் வாங்கப்பட்டன. அதன்பிறகே சௌந்திரத்திற்கு நிம்மதி. இந்த இடைப்பட்ட ஒருவார காலமும் பால், காப்பி, தயிர், மோர் போன்ற எதையுமே அவர் தனது உணவில் சேர்த்துக் கொள்ளவில்லை. "என் குழந்தைகளுக்கே பால் கிடைக்காதபோது, நான்மட்டும் எவ்வாறு அதனைச் சேர்த்துக் கொள்வேன்," என மறுத்துவிட்டார். இவ்வாறு தனது குழந்தைகளின் நலனுக்காக அவர் தன்னையே வருத்திக் கொண்டார்.

குழந்தைகள் நலனே தன் நலன் எனக் கருதி பாடுபட்டு வந்ததால், இன்று அவரின் குழந்தைகள் பலர் நன்கு படித்து நல்ல நிலையில் உள்ளனர். இந்தியா முழுவதிலும், ஏன்? உலகின் பல பகுதிகளிலும் அவரது குழந்தைகள் வாழ்ந்து வருகிறார்கள். அவ்வாறு உயர்ந்த வாழ்க்கை வாழ்வதற்கு காரணம் சௌந்திரத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த அன்பே ஆகும். அவர் ஒவ்வொரு குழந்தையின் மீதும் அளவற்ற அன்பு வைத்திருந்தார். ஒரு சமயம் சௌபாக்கிய இல்லக் குழந்தை ஒன்று மேல்நிலைப் பள்ளியில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைந்தது. டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்பது அக்குழந்தையின் விருப்பம். எனவே, மருத்துவக் கல்லூரியில் சேர்வதற்கான விண்ணப்பம் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டது. நேர்முகத்

தேர்வுக்கு வரும்படி தபால் வந்தது. சௌந்திரம் தனது குழந்தையைக் காரில் அழைத்துக் கொண்டு மதுரை மருத்துவக் கல்லூரிக்குச் சென்றார். அவரது திட்டம் எப்படியென்றால், குழந்தையை அழைத்துக் கொண்டு கல்லூரியில் விட்டுவிட்டு, மதுரையில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு, திரும்பவந்து குழந்தையை காந்திகிராமத்திற்கு அழைத்துவருவதாக இருந்தது. இந்த இடைப்பட்ட நேரத்தில் நேர்முகத் தேர்வும் முடிந்துவிடும் என்பது அவரது கணிப்பு. தன் எண்ணப்படியே தனது குழந்தையை மதுரை மருத்துவக் கல்லூரிக்கு குறிப்பிட்ட நேரத்தில் காரில் அழைத்துச் சென்றார். அன்று நேர்முகத்தேர்விற்காக நூற்றுக் கணக்கான மாணவ மாணவியர் வெளியில் காத்துக்கொண்டிருந்தனர். நேர்முகத்தேர்வுக்கு வந்துள்ள மாணவிகளுடன் அவர்களது பெற்றோர்களும் துணைக்கு வந்திருந்தனர். குறிப்பாகப் பெண்கள் அனைவருமே தங்கள் பெற்றோருடன் வந்திருந்தார்கள். இதைச் சௌந்திரம் கவனித்துவிட்டார். நாம் குழந்தையைத் தனியே இறக்கிவிட்டு செல்லக்கூடாது. அப்படிச் சென்றால், தனக்கும் மற்றவர்களைப் போல தாய் தந்தையிருந்தால் என்னுடன் இருப்பார்களே என அக்குழந்தை எண்ணி வருந்தக்கூடாதே என நினைத்தார். உடனடியாக டி.வி.எஸ். மருத்துவமனைக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, ஒரு பெண் ஊழியரை உடனே அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். சற்று நேரத்திற்குள் ஒரு பெண் அங்குவந்து சேர்ந்தார். "இவள் என்குழந்தை; நேர்முகத் தேர்விற்காக வந்துள்ளாள். நேர்முகத்தேர்வு முடியும்வரை இவளுடனேயே இருந்து அதன்பின் காந்திகிராமம் சென்று இவளை அங்கு விட்டு விட்டுத்தான் நீ வேறெங்கும் செல்ல வேண்டும்," என வந்த பெண்ணிடம் கூறிச் சென்றார். அவ்வாறே அப்பெண்ணும் அக்குழந்தையோடு கூடவே இருந்தாள். இந்நிகழ்ச்சி மூலம் சௌந்திரத்தின் தாயுள்ளத்தை நன்கு புரிந்துகொள்ளமுடிகிறது. மேலும், இதில் குறிப்பிடத்தக்க மற்றுமொரு அம்சம் என்னவென்றால், சௌந்திரத்தின் உறவினர் ஒருவரும், தன் குழந்தையை அதே நேர்முகத் தேர்வுக்கு அழைத்து வந்திருந்தார். அவரும் தன் குழந்தையோடு அருகில் நின்று கொண்டிருந்தார். சௌந்திரத்திற்கு இது நன்கு தெரியும். மற்றவர்களைப் போல் அவர் நினைத்திருந்தால் தனது குழந்தையை அந்த உறவினரிடம் "இவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்," என்று எளிதாகக் கூறிவிட்டுச் சென்றிருக்க முடியும். ஆனால், அவரோ அப்படிச் செய்யவில்லை. தனது குழந்தைக்கு மற்றவர்களைப் போன்று ஒரு துணை தேவை என்பதை ஒரு தாயின் ஸ்தானத்திலிருந்து எண்ணிப் பார்த்ததாலேதான் அவர் அவ்வாறு ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார். குழந்தைகள், தாங்கள் ஆதரவற்ற அனாதைகள் என்பதைக் கனவில்கூட நினைத்துவிடக் கூடாது என்பதே சௌந்திரத்தின் பிரார்த்தனை. அதற்காக ஒரு சிறு குறை கூட அக்குழந்தைகளுக்கு ஏற்படாமலிருக்க கவனமாக இருப்பார்.



சில நாட்களுக்குப் பின் மதுரை மருத்துவக் கல்லூரியிலிருந்து தபால் வந்தது. மருத்துவக் கல்லூரியில் உடனே வந்து சேருமாறு அதில் குறிப்பிட்டப்பட்டிருந்தது. தன் மகளுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது பற்றி சௌந்திரத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. தனது மகளை கல்லூரிக்கு அனுப்பும் நாள் வந்தது. தன் மகளுக்குத் தேவையான துணிமணிகள், பொருட்கள் எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தார். புறப்படுவதற்கு சற்றுமுன் சௌந்திரம் தனது மகளை அழைத்து "துணிமணிகள் எந்தமாதிரி அணியவேண்டும்; காலையில் சீக்கிரமே எழ வேண்டும்; வாராவாரம் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்; மற்றவர்களோடு எப்படிப் பழகவேண்டும்; நன்கு ஓய்வெடுக்க வேண்டும்,"என அறிவுரை வழங்கினார் குழந்தையைப் பெற்ற தாய்கூட இப்படி புத்திமதிகள் கூறமாட்டார். தாய் தந்தை யாரென்று தெரியாத தனது குழந்தை எம்.பி.பி.எஸ். படிக்கப் போகிறாள் என்பதை நினைத்தபோது சௌந்திரத்திற்கு மகிழ்ச்சியைத் தாங்கமுடியவில்லை. ஆனந்தத்தால் கண்கள் குளமாயின. தனது சகோதரர்கள் நடத்திவரும் டி.வி.எஸ். டிரஸ்ட் மூலம் தன் குழந்தையின் படிப்பிற்கு பண உதவியைப் பெற்றுக்கொடுத்தார். அவரது ஆசியோடு அக்குழந்தை தனது ஐந்தாண்டுக் கல்வியை முடித்து இன்று சிறந்த டாக்டராகப் பணியாற்றி வருகிறாள்.

சௌந்திரத்தை ஒரு ஆலமரத்தோடு ஒப்பிடலாம். அந்த பரந்த மரத்தில் வசித்து, புசித்த கிளிகள் ஆயிரமாயிரம். அந்த மரத்தின் நிழலில் வாழ்ந்தவர், வாழ்பவர் ஏராளம். வெய்யில், காற்று, மழை, இடி, மின்னல் எல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு, தன்னை நம்பியிருக்கின்ற நூற்றுக்கணக்கான ஜீவன்களை வாழ்வித்தவர் சௌந்திரம். சௌபாக்ய இல்லத்தில் இதுவரை 60 திருமணங்கள் நடைபெற்றுள்ளன. தகுதியான மாப்பிள்ளையைத் தேர்ந்தெடுத்து அவரது குணநலன்களை நன்கு ஆராய்ந்து தனக்கு மனதுக்கு திருப்தி ஏற்பட்டால்தான் தன் மகளை அவருக்கு திருமணம் செய்து வைப்பார். அதே போன்றுதான் சௌபாக்ய இல்லத்திலுள்ள பையன்களுக்குப் பெண்பார்க்கும் விஷயத்திலும் இருப்பார். திருமணங்கள் காந்திகிராமத்திலேயே மிக எளிய முறையில் நடக்கும். சர்வ சமயப் பிராத்தனைகளும் நடைபெறும். முகூர்த்த வேளையில் மாப்பிள்ளையும் பெண்ணும் மாலை மாற்றிக் கொள்வார்கள். எவ்விதமான ஆடம்பரமும் இருக்காது. சௌந்திரத்திற்கு ஆடம்பரம், வீண்செலவு பிடிக்காது. மணமகள் சௌபாக்ய இல்லத்தைச் சேர்ந்தவளாக இருந்தால், காந்திகிராமத்தில் பணியாற்றும் எல்லா ஊழியர்களும் மணப்பெண்ணுக்கு வெவ்வேறு பொருள்களை அன்பளிப்பாகக் கொடுப்பார்கள். திருமணம் முடிந்தபின் அப்பொருள்களை ஒரு வண்டி நிறைய ஏற்றலாம்.அவ்வளவு திருமணப் பரிசுகள். மணமகளுக்கு சௌந்திரம் ஒரு தாய் என்ற முறையில் தன் குழந்தைகளுக்கு என்னென்ன செய்துதரவேண்டுமோ, அத்தனையும்

செய்து கொடுத்தார். மணமக்களின் வாழ்விற்கு பல உதவிகளைச் செய்து தருவார். திருமணம் செய்து கொள்ளும் மாப்பிள்ளை தனது மனைவி எதுவும் இல்லாதவள் என நினைக்கக்கூடாது என்பதற்காக தனது மகள் பெயரில் வங்கியில் குறிப்பிட்ட தொகையை நிலையான வைப்பு நிதியாக போட்டுவிடுவார். அப்பணம் தன் மகளுக்கு வாழ்க்கையில் உறுதுணையாக இருப்பதோடு தன் பேரக் குழந்தைகளின் வாழ்க்கைக்கும் பயன் தரும்படி செய்வார்.

பொதுவாக காந்திகிராமத்திலுள்ள பெண்களுக்கு நகைகள் மீது மோகமிராது. இங்கு எவரும் ஆடம்பரமான, பகட்டான வாழ்க்கையை விரும்பமாட்டார்கள். உதாரணமாக சௌந்திரத்தையே எடுத்துக்கொள்ளலாம். அவர் தனது வாழ்நாள் முழுவதும் எந்த ஆபரணங்களையும் அணிந்து கொண்டதே கிடையாது. செல்வக் குடும்பத்தில் பிறந்த அவரைப் புதிதாக ஒருவர் பார்த்தால் நம்பமாட்டார்கள். அவ்வளவு எளிமை. கதர்ப் புடவை, கதர்ச் சட்டை, காலில் ஒரு பழைய செருப்பு. இவைதான் சௌந்திரத்தின் உடமை. பிறருக்குக் கொடுத்துக் கொடுத்து அதில் இன்பம் கண்டதால் தன்னைப்பற்றி அவர் நினைக்கவே நேரமில்லை. சௌபாக்ய இல்லத்தில் தன் குழந்தைகள் எவ்வளவு சந்தோஷமாக இருந்தார்களோ, அதேபோன்று புகுந்த வீடுகளிலும் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா? என்பதை சௌந்திரம் கவனித்து வருவார். திருமணமான தனது குழந்தைகளின் குடும்பங்களின் இன்ப துன்பங்களில் கலந்து கொள்வார். அக்குடும்பத்தினருக்கும் ஒரு தாயாகத் திகழ்ந்தார். அவரது தாயுள்ளத்தை அறிந்துகொள்ள ஒரு நிகழ்ச்சி. தனது கணவரோடும் குழந்தைகளோடும் சௌந்திரத்தின் மகள் ஒருத்தி சந்தோஷமாக இல்லற வாழ்க்கை நடத்திவந்தார். ஒரு நாள் அந்தக் குடும்பத் தலைவிக்கு, அதாவது அவரது மகளுக்கு உடல்நலமில்லை. படுத்தபடுக்கையாகச் சில நாட்கள் கஷ்டப்பட்டார். இச்செய்தி எப்படியோ சௌந்திரத்திற்கு தெரிந்துவிட்டது. உடனே தனது அலுவல்களையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு ஏராளமான பழங்கள், டானிக்குகள், மருந்துகள் போன்றவற்றை வாங்கிக்கொண்டு தன் மகளைப் பார்க்க வீட்டிற்கே போய்விட்டார். நோயாளியோ தனது அம்மாவை சற்றும் எதிர்பார்க்கவில்லை. தான் எழக்கூட இயலாமல் இருக்கிறோம் என்பதை மறந்த நிலையில் தாய்ப் பசுவைக் கண்டதும் கன்று ஒரே பாய்ச்சலாக தாயிடம் போவது போன்ற காட்சி. "அம்மா எனக்கு ஒன்றுமில்லை. சாதாரண சுகவீனம்தான்; இதற்காக நீங்கள் வேலைகளைப் போட்டுவிட்டு..." என்று மகளின் வார்த்தைகள் முடியும் முன்பே, "அப்படியில்லை, நீ சுகமில்லாமல் கஷ்டப்படும் சமயம் அம்மா... அம்மா என்று அழைப்பாயல்லவா? அதனால் தான் அம்மா வந்திருக்கேன். இந்தப் பழங்களை எடுத்துக்கொள். இந்த மருந்தைச் சாப்பிடு. சீக்கிரம் குணமாகிவிடும்..." இப்படியாக இருந்தது அம்மாவின்



ஆறுதல் மொழிகள். இவ்வாறு, சௌந்திரத்தின் தாயுள்ளம், தன் மகள் கஷ்டப்படுவதைக் கண்டு தாங்கிக் கொள்ளமுடியவில்லை. இதுமட்டுமல்ல. தனது குழந்தைகள் எங்கு கஷ்டப்பட்டாலும் அவர் ஓடோடிப் போவார். அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமையும்வரை ஓய மாட்டார். தன் வாழ்நாள் முழுவதும் ஒரு உண்மையான தாயாக சௌந்திரம் விளங்கி வந்தார் என்றால் அது மிகையாகாது. தற்சமயம் சௌபாக்கிய இல்லத்தில் வாழும் குழந்தைகளுக்கு மத்திய மாநில அரசுகளின் உதவிகள் கிடைத்தாலும்கூட அது போதுமானதாக இல்லை. குழந்தைகளின் உணவிற்கு அரசு உதவுகிறது. அந்த உணவைச் சாப்பிட தட்டு யார் கொடுப்பது? ஒரு வயதிலிருந்து திருமண வயதுடைய பெண்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான துணிமணிகளை யார் கொடுப்பது? பல கஷ்டங்களுக்கு மத்தியில் இக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு வருகிறார்கள்.

சௌந்திரத்தின் மற்றொரு கண் சேவிகாசிரமம் ஆகும். சென்னையில் அவர் ஔவை கிராம மருத்துவ சேவை செய்து வந்தபோது கிராமப் பெண்களிடையே பணிபுரிந்ததினால் உண்டான அனுபவத்தின் அடிப்படையில் இது நிறுவப்பட்டதாகும். விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், கைம்பெண்கள், திக்கற்றவர்கள் போன்றவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த சேவிகாசிரமம். மற்ற ஸ்தாபனங்களைப்போலவே காந்திகிராமத்தின் ஆரம்ப காலத்திலேயே இது ஏற்படுத்தப்பட்டது. இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு பெரிய சரித்திரம் உண்டு. ஒரு சமயம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த ஆதிரத்தினம் என்ற ஒரு பெண் சேவிகாசிரமம் வந்து சேர்ந்தாள். இவள் சின்னக் குழந்தையாக இருந்தபோதே தாய் இறந்துவிட்டாள். இவளது தந்தை வேறொரு பெண்ணைத் இரண்டாம் திருமணம் செய்து கொண்டார். இளைய தாயார் இப்பெண்ணை மிகவும் கொடுமைப்படுத்திவந்தாள். ஆதிரத்தினம் பல சோதனைகளுக்கு மத்தியில் எட்டாம் வகுப்புவரை படித்தாள். சிறிது காலத்திற்குள் அவளுக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. இப்பெண்ணின் கணவன் பல உள்ளூர் பிரச்சினைகளினால் தற்கொலை செய்து கொண்டான். அப்பெண் தனது ஒருவயதுக் கைக்குழந்தையுடன் எவ்வித ஆதரவுமின்றி காந்திகிராமம் வந்து சேர்ந்தாள். இப்பெண்ணின் பரிதாபநிலையைக் கண்ட சௌந்திரம் அவளைச் சேவிகாசிரமத்தில் சேர்த்தார். தனது சிறுகுழந்தையையும் வைத்துக் கொண்டு ஆதிரத்தினம் படிப்பைத் தொடர்ந்தாள். இவளது படிப்பிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அவர் செய்து கொடுத்தார். காந்திகிராமத்திலேயே எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதி நல்ல மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றாள். டாக்டராக வேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்தாள். விதவைகளுக்கான இட ஒதுக்கீட்டின்படி ஆதிரத்தினத்திற்கு

மருத்துவக் கல்லூரியில் படிப்பதற்கு இடம் கிடைத்தது. ஆதிரத்தினம் படிப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் சௌந்திரம் செய்துகொடுத்தார். தனது படிப்பை முடித்த பிறகு ஆதிரத்தினம் காந்திகிராமம் கஸ்தூரிபா மருத்துவமனையில் ஒரு சிறந்த மருத்துவராகப் பணியாற்றி வந்தாள்.

இதேபோன்று, தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து ஒரு பெண். பெயர் பொன்னரும்பாள். அவளுக்கு ஒரு வயது ஆனபோது அவளது தந்தை தனது மனைவி மக்களை அனாதைகளாக்கிவிட்டு எங்கோ சென்று விட்டார். தாய் தனது மகள் பொன்னரும்பாளை மிகுந்த சிரமத்தோடு வளர்த்து ஆளாக்கினாள். உரிய பருவத்தில் பொன்னரும்பாளுக்குத் திருமணம் செய்துவைக்கப்பட்டது. ஒரு குழந்தையும் பிறந்தது. இவளது தாய்க்கு ஏற்பட்ட கதிதான் இவளது வாழ்விலும் ஏற்படலாயிற்று. இவளது கணவன் இவளையும் குழந்தையையும் கைவிட்டுவிட்டு எங்கோ சென்றுவிட்டான். ஆதரவற்ற நிலையில், அனாதையாக பொன்னரும்மாள் வாழ்க்கை நடத்தினார். இறுதியில் கடலூரில் உள்ள அரசினர் 'திக்கற்ற பெண்கள் மறு வாழ்வு இல்லத்தில்' போய்ச் சேர்ந்தாள். அங்கு எட்டாம் வகுப்புவரை படித்தாள். அதன்பின் காந்திகிராமம் வந்து சௌந்திரத்திடம் தான் மேற்கொண்டு படிக்க விரும்புவதாகக் கூறினாள். கருணையுள்ளம் மறுக்குமா? உடனடியாக சேவிகாசிரமத்தில் சேர்க்கப்பட்டாள். தனது கல்வியைத் தொடர்ந்தாள். எஸ்.எஸ்.எல்.சி. யில் நல்ல மார்க்குகளுடன் தேர்ச்சி பெற்றாள். அதன்பின் மருத்துவப் பெண் பயிற்சி வகுப்பில் கஸ்தூரிபா மருத்துவமனையில் சேர்ந்தாள். கஷ்டப்பட்டு படித்து அதிலும் தேர்ச்சி பெற்றாள். பொன்னரும்பாளும் அவரது குழந்தையும் இப்போது நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது போன்று எத்தனையோ பெண்கள், மறுவாழ்வு பெற்று சம்பூரணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சேவிகாசிரமத்தைச் சௌந்திரம் ஒரு மாபெரும் சாதனை நிலையமாகக் கருதி வந்தார். இங்குள்ள பெண்கள் இன்றைய சமுதாயத்தின் கலாச்சாரம், பண்பாடு,மனிதாபிமானம்,போன்றவற்றை பிரதிபலிக்கும் பிம்பங்களாக விளங்குகிறார்கள். இப்பெண்கள் சமுதாயத்தின் கொடுமைகளைச் சித்தரிக்கும் சித்திரங்களாக விளங்குகிறார்கள். இந்தப் பெண்களை நன்கு பயிற்றுவிப்பதன் மூலம் சமுதாயத்தில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவர முடியுமென அவர் கருதினார். இப்பெண்கள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்தே வருகின்றார்கள். இவர்களுக்கு சேவிகாசிரமத்தில் நல்ல கல்வி, தொழிற்பயிற்சி போன்றவை வழங்கப்படுவதால் அவர்களது இருண்ட வாழ்க்கையில் ஒளியேற்றப்பட்டு அதே சமுதாயத்திற்கு திருப்பி அனுப்பப்படுகிறார்கள். தான் பெற்ற தொழிற்கல்வி மூலம் தன் காலாலே நின்று சுயமாக சம்பாதித்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகிறார்கள்.



எந்தச் சமுதாயம் இப்பெண்களை ஏளனமாகப் பேசித் தூற்றியதோ, அதே சமுதாயம் இன்று மூக்கில் விரலை வைத்து வியக்கின்றது. அத்தகைய சிறந்த பயிற்சி சேவிகாசிரமத்தில் கொடுக்கப்படுகிறது.

இந்த சேவிகாசிரமத்தை நடத்துவதற்கு சௌந்திரம் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார். இங்கு வருகின்ற பெண்கள் பல்வேறு இனத்தவர்களாக, பல மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், இங்கு வந்துவிட்டால் எல்லோருமே ஒன்றுதான். எந்த வேற்றுமையும் எந்த நேரத்திலும் யாரிடமும் காணமுடியாது. புதிதாக ஒரு பெண் சேவிகாசிரமத்தில் சேர்க்கப்பட்டால் அவளிடம் அவள் மனம் புண்படும்வகையில் எவரும் பேசக்கூடாது என்பது சௌந்திரத்தின் கொள்கை. இவர்கூட அப்பெண்ணிடம் உடனடியாக எந்தக் கேள்விகளையும் கேட்கமாட்டார். அவர்களுக்கு உடனடித் தேவை மன அமைதிதான் என்பதைப் புரிந்துகொள்வார். ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் சென்றபின்னர்தான், அன்போடு அப்பெண்ணை அழைத்து விவரம் கேட்பார். ஏராளமான விதவைப் பெண்களும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இங்கு தங்கிப்படித்து வருவதால் விவரமறியாத சிலர் சௌந்திரத்தை பல விதமாக ஏசியும் பேசியும் வந்தார்கள். அவரது காதில் விழும்படியாகவே ஏளனமாகப் பேசுவார்கள். இந்த ஏளன வார்த்தைகளை அவர் எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்றால்: "தோள்மேல் தொண்ணூறு அடி. துடைத்துவிட்டால் ஒன்றுமில்லை. நாம் நமது பணியைச் செய்து கொண்டிருப்போம்," என்பார். சௌந்திரத்தின் மனம் எவ்வளவு விசாலமான யார் போற்றினாலும் தூற்றினாலும் பெரிதுபடுத்தமாட்டார். எத்தனை சோதனைகள் வந்தாலும் அதனை எதிர்நோக்கி வெல்வார். மிகுந்த மன உறுதிபடைத்தவர். அதன் காரணமாகத்தான் சுமார் ஆயிரத்து எழுநூறுக்கும் மேற்பட்ட வாழ்விழந்த மங்கைகளுக்கு மங்களமான வாழ்க்கையை உருவாக்கிக் கொடுக்க அவரால் முடிந்தது.

தற்போது சேவிகாசிரமத்தில் நூற்றி இருபது பெண்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஐந்தாம் வகுப்பு வரைப் படித்திருந்தாலோ அல்லது எஸ்.எஸ்.எல்.சி. முடிக்காமலிருந்தாலோ அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. வரை படிப்பதற்கு சேவிகாசிரமம் சிறப்பு உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர். அதன்பின் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிகளும், தையல் பயிற்சி, மருத்துவ தாதியர் பயிற்சி, வீட்டு நிர்வாகம் போன்ற பயிற்சிகளும் அளிக்கப்பட்டுவருகின்றன. இப்பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்தபின் வெளியே சென்று தங்களது வாழ்க்கையை தாங்களே சீரமைத்துக் கொள்ளுகிறார்கள். பயிற்சிக் காலத்தின்போது இப்பெண்கள் அனைவரும் இணைந்து அவ்வப்போது அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று கிராம சேவையும் செய்து வருகிறார்கள். கிராமத்தைச் சுத்தம் செய்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்திக்

கொடுத்தல், மருத்துவ சேவை செய்தல், குடும்பப்பெண்களுக்கு வீட்டு நிர்வாகம் பற்றிக்கூறுதல் போன்றவை இப்பெண்கள் செய்துவரும் கிராம சேவைகளாகும். இதனால், கிராமங்களிலுள்ள பெண்கள் சேவிகாசிரமப் பெண்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று சேவையில் உற்சாகமளிக்கின்றனர். சிறுவயதிலேயே பல கஷ்டங்களை அனுபவித்த இப்பெண்களும் இதன்மூலம் நல்ல மன அமைதியையும் மனமாற்றமும் பெற்று புதிய வாழ்க்கை தொடங்க ஆர்வம் கொள்கிறார்கள்.

குழந்தைகள் இல்லத்தையும் சேவிகாசிரமத்தையும் சௌந்திரம் ஒரு பயிற்சி மையமாகவே கருதிவந்தார். தனது குழந்தைகளுக்கும் விதவைகளுக்கும் வாழ்க்கைப் பயிற்சியைக் கற்றுக்கொடுத்து வெளியுலகத்தினருக்குச் சமமாக மிளிரச்செய்தார். சமுதாயச் சீர்கேடுகளையும், மூடப் பழக்கவழக்கங்களையும் முறியடிக்க அனாதைகளையும், விதவைகளையும் வல்லமைமிக்க சக்திகளாக உருவாக்கினார். உலகில் பிறந்தவர்கள் எவரும் அனாதைகளில்லை. வாய்ப்புகள் கொடுக்கப்பட்டால் அவர்களும் பிறருக்கு வாழ்வளிக்கும் வண்ணம் செயல்படமுடியும் என்பதை சௌந்திரம் நிரூபித்தார். அதற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். அதன் பயனாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஒரு அன்புத் தாயாக அவர் விளங்கினார். குழந்தைகள் மற்றும் பெண்கள் முன்னேற்றத்திற்காக சௌந்திரம் செய்த தியாகத்தைப் பாரட்டிய இந்திய அரசு 1962ஆம் ஆண்டு அவருக்கு "பத்மபூஷண்" என்ற உயரிய விருதை வழங்கிக் கௌரவித்தது. ராஷ்ட்ரபதி பவனில் நடைபெற்ற விழாவின் போது அப்போதைய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திரபிரசாத் அவர்களிடமிருந்து அவ்விருதை சௌந்திரம் பெற்றுக்கொண்டார்.



முதலாவது இந்திய குடியரசுத் தலைவர் இராஜன்பாபு அவர்கள் அம்மா அவர்களுக்கு "பத்மபூஷண்" விருதினை வழங்குகிறார்.



உலகியலைப் படம்பிடித்துக் காட்டும் பழம் பாடல் ஒன்று

*"தாயோடு அறுசுவைபோம்;*
*தந்தையோடு கல்விபோம்;*
*சேயோடு தான் பெற்ற செல்வம்போம்..."*

என்று தொடங்கும் அப்பாடல்

*"பொற்றாலி யோடு எவையும்போம்."*

என்று முடிகிறது. சௌந்திரம் இந்த உலகில் அவலநிலையை அடியோடு மாற்றும் சாதனையைச் செய்து உயர்ந்தார்.

தாய் இல்லையா? உணவுக்கு வழியில்லையா? கவலை வேண்டாம். சௌபாக்ய இல்லத்தின் அன்பு வாயில் உங்களுக்காகத் திறந்திருக்கிறது. வாருங்கள் ! சேருங்கள் !! வாழுங்கள் !!! தந்தை இல்லையா? கல்விபெற வாய்ப்பில்லையா? சஞ்சலம் வேண்டாம். சிறந்த கல்வி கொடுக்க காந்திகிராமம் உங்களுக்காக காத்திருக்கிறது.

இதுதான் எங்கள் இல்லம்; இதுதான் எங்கள் செல்வம்
பெருமை தரும் இவ்வுடமை– இதன் அருமை காப்பது எம்கடமை
என்ற உள்ளுணர்வு உரிமையுடன் நீங்கள் வாழலாம் ! வளரலாம் !! வெல்லலாம் !!! என்பார் சௌந்திரம்.

பொற்றாலியோடு எவையும்போம். இல்லை... இல்லை... அதன் பின்னரும் வாழ உரிமையுண்டு. தன்னம்பிக்கையுண்டு, வகையுண்டு, தன்னம்பிக்கையுடன் கூடிய சுய முயற்சியால் தானும் வாழ்ந்து, சமுதாயத்திற்கு சுமையாக இல்லாமல், சுவையாக வாழ சேவிகாசிரமம் சேவை செய்யக்காத்திருக்கிறது.

துணிவே துணை, நம்பினார் கெடுவதில்லை என்று சௌந்திரம் பெண்களுக்கு ஊக்கம் கொடுப்பார். உறுதியும் அளிப்பார். உயர்த்துவார். இந்த உயர்பெரும் நோக்கத்தைச் செயல்படுத்தும் கோவில்களாக சௌபாக்ய இல்லமும் சேவிகாசிரமும் விளங்குகின்றன.

# அம்மாவின் ஆக்கப்பணிகள்

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

என்ற குறளுக்கு ஏற்ப காந்திகிராமத்தில் முன்மாதிரியாகச் செயல்படுத்தப்பட்டு வந்த ஆக்கப்பணிகளைக் கிராம மக்களின் சமூக, பொருளாதார மற்றும் சுகாதார முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்த சௌந்திரம் பெரிதும் முயன்றுவந்தார். காந்திகிராமம் ஸ்தாபிக்கப்பட்ட போதே கிராம அபிவிருத்தி வேலைகளும் ஆம்பிக்கப்பட்டன. கிராமங்களில் சாதி, மத பேதங்களை அகற்றி, பொருளாதாரத்தில் தன்னிறைவு பெறச்செய்து, அதன் சுகாதாரத்தையும் பேணிக்காப்பது சௌந்திரத்தின் முக்கிய நோக்கமாக இருந்து வந்தது. அதன் காரணமாகத்தான் கிராமங்களுக்கு மத்தியில் இருந்துகொண்டு, கிராமச் சூழ்நிலையில் வாழ்ந்து, கிராம முன்னேற்றப் பணிகளைச் செய்யவேண்டும் என்பதற்காகவே காந்திகிராமம் பெரிய நகரங்களிலிருந்து வெகுதொலைவில், கிராமப் பகுதியில் அமைக்கப்பட்டது.

சௌந்திரத்தின் ஆக்கப்பணிகளில் முதலாவதாக கிராம விஸ்தரிப்புப் பணிகளை எடுத்துக் கொள்ளலாம். காந்திகிராமத்தின் ஆரம்பகாலம் முதலே செட்டியபட்டி, தொப்பம்பட்டி, முருகன்பட்டி, கூலம்பட்டி, வண்ணம்பட்டி, பஞ்சம்பட்டி போன்ற அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் விஸ்தரிப்பு வேலைகள் செய்யப்பட்டுவந்தன. இக்கிராமங்கள் அனைத்திலும் குடிநீர் வசதி, பள்ளிக்கூட வசதி, சுகாதார வசதி, விவசாய அபிவிருத்தி போன்றவைகளின் நிலைமைகள் ஆய்வு செய்யப்பட்டன. அந்த ஆய்வின் அடிப்படையில் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளைச் செய்துகொடுப்பதற்காக சௌந்திரம் சில திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தத் தொடங்கினார். இக்காலகட்டத்தில் மாநில அரசும், பல கிராம அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்த முனைந்து கொண்டிருந்தது. அதற்காக சௌந்திரத்தையும் காந்திகிராம ஊழியர்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அரசு நாடியது. கிராமங்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பதே சௌந்திரத்தின் விருப்பம். எனவே, அரசினுடைய கிராம அபிவிருத்திப் பணிகளில் காந்திகிராம ஊழியர்களையும் தன்னையும் ஈடுபடுத்திக்கொள்ள அவர் தயங்கவில்லை. கிராம அபிவிருத்தி வேலைகளில் காந்திகிராம



ஊழியர்கள் தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டனர். தங்களது அயராத உழைப்பால் கிராம மக்களின் நன்மதிப்பையும் பெற்றனர். இதனால், காந்திகிராமத்திற்கும் சுற்றுப்புறக் கிராமங்களுக்குமிடையே நல்ல தொடர்புகள் ஏற்பட்டது. இதன் பயனாக காந்திகிராமம் செய்துவரும் கிராம அபிவிருத்திப் பணிகளைத் தமிழ்நாடு அரசு பாராட்டியதோடு மட்டுமல்லாது, ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வை செய்யும் பொறுப்பைக் காந்திகிராமத்திடம் அரசு ஒப்படைத்தது. இத்திட்டத்தை சௌந்திரம் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். தனது பணிகளை மேலும் முனைப்புடன் செய்வதற்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு வாய்ப்பாக இதனைக் கருதி செயல்படலானார். ஆத்தூர் ஒன்றிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் அப்பகுதியில் குடிநீர் வசதியை மேம்படுத்தவும் விவசாயம் வளர்ச்சியடையவும் சுமார் நூறு கிணறுகள் தோண்டப்பட்டன. இதனால், குடிதண்ணீர்ப் பிரச்சனை தீர்ந்ததுடன் விவசாயத் துறையில் வளர்ச்சியும் ஏற்பட்டது. அப்பகுதியிலுள்ள மூன்று கிராமங்களில் வசதியான பெரிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்பப்பட்டன. அதுதவிர, சுமார் இருபது மைல் நீளத்திற்கு கிராமங்களை இணைக்கும் சாலைகள் புதிதாகப் போடப்பட்டன. மேலும், இரண்டு சுகாதார நிலையங்களும் ஆத்தூரில் ஒரு கதர் உற்பத்தி மையமும் ஆரம்பிக்கப்பட்டன. இதுபோன்ற கிராம விஸ்தரிப்புப் பணிகளை சௌந்திரமே தனது ஊழியர்களுடன் செய்து வந்தமையால் காந்திகிராமத்திற்கு கிராம மக்களிடம் நன்மதிப்பு ஏற்பட்டது. கிராம மக்களும்கூட காந்திகிராமத்தின் வேலைகளில் உற்சாகத்துடன் பங்கேற்கத் தொடங்கினர்.

1955ல் இராஜாஜி அவர்கள் கிராமங்களின் முன்னேற்றத்திற்காக சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை வரைந்து செயல்படுத்தத் தொடங்கினார் தமிழ்நாடு முழுவதும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்போது, பெரியாறு சமுதாய அபிவிருத்தித் திட்டத்தை இராஜாஜி அவர்கள் சௌந்திரத்தின் பொறுப்பில் ஒப்படைத்தார். இதனால் மதுரை, மேலூர், நிலக்கோட்டை, ஆத்தூர் போன்ற வட்டாரங்களில் சமுதாய அபிவிருத்தி வேலைகள் துவங்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் எல்லாக் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள், குடிநீர், சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டன. சௌந்திரத்தின் முயற்சியால்தான் ஏராளமான கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டு மின்விளக்குகள் எரியத் தொடங்கின. இதுபோன்ற அவரது சேவையால் கிராம மக்கள் அனைவரும் கவரப்பட்டனர். சௌந்திரமும், கிராம மக்களின் குறைகளை நேரடியாகத் தெரிந்து கொண்டு அபிவிருத்திப் பணிகளை ஊக்கமுடன் செய்யது வந்தார்.

1957 ல் கிராம விஸ்தரிப்பு வேலைகள் வேடசந்தூர், எரியோடு, பாளையம் ஆகிய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது. வேடசந்தூர் பகுதியில் ஒரு புதிய உயர்நிலைப்பள்ளியும், ஒரு மாணவர் விடுதியும், இரண்டு மருத்துவ நிலையங்களும் கட்டப்பட்டன குடிநீர் வசதிக்காக ஐம்பது ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. வேடசந்தூர் பகுதியில் தோல் பதனிடுதல் ஒரு முக்கிய தொழிலாக இருந்துவந்தது. மேலும், இத்தொழில் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் கமிஷனிடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுத்தந்தார். அதேபோன்று பாய் நெய்தல் மற்றொரு முக்கியத் தொழிலாக இருந்தது. இத்தொழிலாளர்களின் நலனுக்கென பாய் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கம் ஒன்றையும் சௌந்திரம் ஏற்படுத்தி அத்தொழிலாளர்களின் நலனைப் பேணிக்காத்தார். மேலும் ஆத்தூர், வேடசந்தூர் பகுதிகளில் இருபத்திரெண்டு பால்வாடிகள் அமைக்கப்பட்டு தாய் சேய் நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குழந்தைகளுக்காக மட்டும் எட்டு குழந்தைகள் பாதுகாப்பு இல்லங்கள் ஏற்படுத்தப்பட்டன. இவ் இல்லங்களில் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர, சத்தான ஆகாரங்களும் வழங்கப்பட்டன. கஸ்தூரிபா மருத்துவமனை தனது பொறுப்பின் கீழ் ஆறு ஆரோக்கிய மையங்களை இப்பகுதியில் ஏற்படுத்தியது. இதற்கென நியமிக்கப்பட்ட மருத்துவர்கள் இம்மையங்களுக்குச் சென்று மருத்துவசேவை செய்யத் தொடங்கினர். சாதாரண நோய்களுக்கு இம்மையங்களிலேயே சிகிச்சையளிக்கப்பட்டது. நோய் முற்றிய நோயாளிகள் காந்திகிராம கஸ்தூரிபா மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு வகுத்துக் கொடுத்த கிராம முன்னேற்றத் திட்டங்களைச் செயல்படுத்தியதோடு மட்டுமல்லாது, காந்திகிராமத்தின் சார்பாகவும் பல கிராம முன்னேற்றப் பணிகள் செய்யப்பட்டு வந்தன. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு எவ்வித ஜாமீனும் இல்லாமல் கறவைமாடுகள் வாங்குவதற்கு அரசுடைமை வங்கிகள் மூலம் கடன் வசதி பெற சௌந்திரம் ஏற்பாடு செய்து கொடுத்தார். இதனால், ஆத்தூர் பகுகுதியில் பால் உற்பத்தி அதிகரித்தது. அதேபோன்று கிராமக் கைவினைஞர்களுக்கு புதிய கருவிகளை வாங்கி தொழிலில் முன்னேற்றமடைய சுமார் நூற்றிஐம்பது கொல்லர்கள், தச்சர்கள் போன்றவர்களுக்கு கடன் உதவி செய்து கொடுத்தார். இவ்வாறாக கிராமங்களில் வாழும் சகல தரப்பினரும் பொருளாதாரத்தில் முன்னேற்றம்பெற வேண்டுமென்பதற்காக அயராது பணியாற்றிவந்தார். கிராமப்புற பணிகளைச் செவ்வனே கவனிப்பதற்காக ஆத்தூர், வேடசந்தூர், நிலக்கோட்டை, ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் பல விரிவாக்கப் பணியளார்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் ஒவ்வொரு கிராமமாகச் சென்று மக்களைச் சந்தித்து, அவர்களது பிரச்சனைகளையும், குறைகளையும் கேட்டறிந்தனர். கேட்டறிந்த



பிரச்சனைகளைப் பஞ்சாயத்துத் தலைவர்கள், உறுப்பினர்கள் போன்றவர்களுடன் கலந்து ஆலோசித்து தீர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்த விரிவாக்கப் பணியாளர்கள் அனைவரும், மாதம் ஒருமுறை காந்திகிராமத்தில் கூடி அம்மாதத்தில் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகள், அதன் பிரச்சனைகள், பலன்கள், வருங்காலத் திட்டங்கள் போன்றவற்றை விவாதித்து வந்தனர். இதனால், செய்கின்ற பணிகளில் எவ்விதக் குறையும் ஏற்படாமல் சிறந்த பலன் கொடுப்பதாக விளங்கியது.

இதேபோன்று ஒவ்வொரு கிராமத்திலும் மகளிரின் தேவைகளையும் பிச்சனைகளையும் நிவர்த்தி செய்வதற்காக "மகளிர் மன்றங்கள்" தோற்றுவிக்கப்பட்டன. கிராமங்களிலுள்ள பெண்கள் அனைவருமே இதன் உறுப்பினர்கள் ஆவர். இவ்வுறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலைவியைத் தேர்ந்தெடுத்துக்கொண்டனர். இத்தலைவிகள் அனைவரும் மாதம் ஒருமுறை காந்திகிராமத்தில் கூடி தங்களது செயல்திட்டங்களைக் கலந்தாலோசித்தனர். பெண்களிடையே தன்னம்பிக்கையும், பிரச்சனைகளைச் சமாளிக்கும் மனப்பக்குவமும் வளர இம்மளிர் மன்றங்கள் உதவின. பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலன்கள், கிராமசுகாதாரம், முதியோர்கல்வி போன்றவை இம்மன்றங்களின் முக்கியப் பணிகளாகும். வீட்டையும், சுற்றுப்புறங்களையும் எவ்வாறு சுத்தமாக வைத்துக்கொள்வது போன்ற வழிகாட்டு நெறிமுறைகளையும், வீட்டுத்தோட்டம் அமைத்தல், கால்நடைப் பராமரிப்பு போன்றவைகள் பற்றியும் இம்மன்றங்கள் மூலம் பெண்கள் அறிந்து கொண்டனர். இம்மன்றங்கள் கிராமங்களில், குறிப்பாக ஹரிஜன் கிராமங்களில் நன்கு செயல்பட்டுவருகிறது. பெரும்பாலான மன்றங்களில் ஹரிஜன வகுப்பைச் சார்ந்த பெண்களே அதன் தலைவிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். இதன் மூலம் ஒரு கிராமத்தை வழிநடத்திச் செல்லும் தலைமைத்துவ ஆளுமைப் பண்புகளை ஹரிஜனப் பெண்களுக்கு ஊட்டியது, சௌந்திரம்தான். இவ்வாறு அவர் தனது வாழ்க்கையின் லட்சியங்களைப் படிப்படியாக சகல துறைகளின் மூலம் முழுமையாக நிறைவேற்றினார். சௌந்திரத்தின் கிராமப்பணிகள் மக்கள் மனதைத் தொட்டன. மழை, வெள்ளம், புயல் போன்ற காலங்களில் எவரும் அழைக்காமல் ஓடோடிவந்து உதவிசெய்யும் சௌந்திரத்தின்மீது மக்கள் அளவற்ற பாசம் காட்டினர். அவரும் கிராமங்களுக்குச் சென்றால் அக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று நலன் விசாரிப்பார். மதுரை, வாடிப்பட்டி, வேடசந்தூர், நிலக்கோட்டை, ஆத்தூர், திண்டுக்கல் ஆகிய பகுதிகளிலுள்ள பட்டி தொட்டிகளும் அங்குள்ள ஒவ்வொரு வீடும் சௌந்திரத்திற்கு மனப்பாடம். சௌந்திரம் என்றால் அன்பு என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். மேற்கூறிய பகுதிகளுக்குச் சென்றால் அங்குள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில்

சௌந்திரத்தின் படங்கள் சுவரில் பளிச்சென்று தெரியும்படி மாட்டிவைக்கப்பட்டிருக்கும். அவர் மீது இப்பகுதி மக்கள் எவ்வளவு அன்பு செலுத்துகிறார்கள் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். மேலும் கிராம சேவையின் மூலம் பல வெற்றிகளை அடைந்தவர் சௌந்திரம் என்பது புலனாகிறது.



*கிராம நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செல்லும் அம்மா அவர்கள்*

சௌந்திரத்தின் ஆக்கப்பணிகளில் இரண்டாவதாக கிராமப் பொருளாதார முன்னேற்றத்தைக் குறிப்பிடலாம். கிராமங்களில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டே, அதற்கேற்ற தொழில்களை ஆரம்பித்து, அக்கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து கிராமப் பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் முன்னேற்ற வேண்டும் என்பதே காந்தியடிகள் வகுத்துக் கொடுத்த பொருளாதாரக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின் அடிப்படையிலேயே சௌந்திரத்தினுடைய பொருளாதாரப் பணிகளும் அமைந்திருந்தன. அவற்றைப் போன்றே காந்திகிராம ஊழியர்கள் அனைவருமே காந்தியடிகளின் நிர்மாணப் பணிகளில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டமையால் தங்களுடைய இலட்சியங்களை



எளிதில் நிறைவேற்ற முடிந்தது. ஆகவே, ஆரம்ப காலம் முதலே கதர் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுவந்தது. காந்திகிராம ஊழியர்கள் நூற்ற நூலினைப் பெற்று, அவர்களுக்குத் தேவையான கதர் துணிகளை வழங்குவதற்கு 1948 ம் ஆண்டு ஒரு சிறிய கதர்க் கடையை சௌந்திரம் ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து ஏற்கனவே கிராமங்களில் கதர் நூல்நூற்கும் குடும்பங்களுக்கும் காந்திகிராமத்திற்கும் தொடர்பு ஏற்பட்டது. காந்திகிராம ஊழியர்களும் கிராமங்களுக்குச் சென்று கதர் உற்பத்தியை ஊக்குவித்தனர். 1955ல் பெரியாறு சமுதாய நலத் திட்டத்தின் பொறுப்பை சௌந்திரம் ஏற்றுக்கொண்டபோது கிராமங்களில் கதர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பல கிராமங்களிலிருந்து ஏராளமான பெண்களை அழைத்துவந்து அவர்களுக்கு கதர் நூற்பு, நெசவு போன்றவற்றில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்தார். இதனால், சிறிது காலத்திற்குள் கிராமப் பகுதிகளில் இராட்டை அறிமுகப்படுத்தப்பட்டு நூல் உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. ஓராண்டு காலத்திற்குள் காந்திகிராம ஊழியர்களுக்குத் தேவையான கதர்த் துணிகள் கிடைத்தன. ஆரம்பத்தில் கதர் உற்பத்தியை வியாபாரமாகக் கருதவில்லை. காந்திகிராம ஊழியர்களின் அயராத உழைப்பின் காரணமாக கதர் உற்பத்தி பெருகியது. காந்திகிராமக் கதர் நூல் மற்றும் துணியின் தரம் அதிகரித்தது. இதனால் வெளி ஊர்களிலிருந்து கதருக்கு தேவை அதிகரிக்கத் தொடங்கியது. காந்திகிராமப் புடவை, வேஷ்டிகளுக்கு நல்ல பெயரும் கிடைத்தது.

1956ஆம் ஆண்டு காந்திகிராமத்தில் அம்பர் ராட்டை அறிமுகப்படுத்தப்பட்டது. காந்திகிராமத்தைச் சுற்றியுள்ள பத்து கிராமங்களிலிருந்து சுமார் இருநூறுபேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அம்பர் ராட்டையில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முடித்தவர்களுக்கு சலுகை விலையில் அம்பர் ராட்டை வழங்கப்பட்டது. இதனால் உற்பத்தி அதிகரித்தது. ஒரு சில ஆண்டுகளுக்குள் சுமார் முப்பது கிராமங்கள் துணித் தேவையில் தன்னிறைவு பெற்றன. சௌந்திரத்தின் கிராமப் பொருளாதார முன்னேற்றப் பணிக்கு இது ஒரு பெரிய வெற்றியாக அமைந்தது. மிகக் குறுகிய காலத்தில் எவ்வித வசதியுமற்ற கிராமங்களில் இத்தகைய சாதனையைப் படைக்க வேண்டுமென்றால், அவரது திறமையையும் உழைப்பையும் எங்ஙனம் கூறுவது? தமிழ்நாட்டில் காந்திகிராமம் ஒரு பெரிய கதர் உற்பத்தி நிலையமாக வளர்ச்சி பெற்றது. உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிக்க கதர்த் தொழிலின் எல்லாப் பிரிவுகளும் காந்திகிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு அம்பர் ராட்டை தயாரிப்பு நிலையம் ஒன்று துவக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அம்பர் வித்யாலயம் என்ற பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. நெய்யப்பட்ட துணிகளுக்கு சாயமிடுதல், அச்சுப் பதித்தல் போன்றவற்றிற்காக

சாயப்பட்டறை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், மதுரை மாவட்டத்திலுள்ள காசிபாளையம், திருச்சி மாவட்டத்திலுள்ள வெங்கடாபுரம், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள விக்ரமசிங்கபுரம் போன்ற இடங்களில் கதர் உற்பத்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் தென்மாவட்டங்களில் காந்திகிராமத்தின் கதர்ப் பணி விரிவடைந்து கொண்டே சென்றது. பின் சிறிது காலத்திற்குள் இந்த உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் விற்பனை மையங்களாகவும் செயல்படத் தொடங்கின. மதுரையில்தான் முதன்முதலாக காதிபவன் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இப்படியாகக் கதர் உற்பத்தி அதிகரிக்கப்பட்டது. பரம்பரை பரம்பரையாக மழையையே நம்பி பிழைத்து கொண்டிருந்த ஆயிரக்கணக்கான கிராம மக்களுக்கு கதர்த் தொழில் நல்ல மாற்று வேலையாக அமைந்தது. சௌந்திரமும் கதர் உற்பத்தியைப் பெருக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். நேபாளத் தறி அறிமுகப்படுத்தப்பட்டது. கதர் உற்பத்தியில் நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்தைக் கையாள்வதற்கு சௌந்திரம் தயங்கவில்லை. பல்வேறு விஞ்ஞான தொழில் நுட்பங்களும் பின்பற்றப்பட்டன. இதனால் காந்திகிராமத்தின் கதர், தரத்திலும் தன்மையிலும் உயரிய நிலையை இன்றளவும் தக்கவைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கதரைப் போலவே கிராமக் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் ஆரம்பகாலம் முதலே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. 1947 ல் கைத்தொழில் கூடமொன்று காந்திகிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. காந்திகிராமத்தின் கட்டிடங்களுக்குத் தேவையான பொருட்களைச் செய்வதற்காக தச்சு மற்றும் கொல்லுப் பட்டறைகள் ஆரம்பிக்கப்பட்டன. கட்டிடங்களுக்குத் தேவையான பொருட்களைத் தவிர வீடுகட்டப் பயன்படும் சாமான்களைச் செய்வதிலும் கவனம் செலுத்தப்பட்டது. ஆரம்பத்தில் சாதாரணக் கூரைக் கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பட்டறைகள் நாளடைவில் ஒரு தொழில் கூடமாக உருவெடுத்தது. 1949 ல் கையினால் காகிதம் செய்யும் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. 1950 ல் எண்ணெய் ஆட்டும் செக்கு ஒன்று அமைக்கப்பட்டது. அதே ஆண்டு தேனி வளர்ப்புத் தொழிலும் ஆரம்பமாயிற்று. தேவையான தேன் பெட்டிகள் தொழில் கூடத்திலேயே செய்யப்பட்டன. 1955ல் பொம்மை செய்தல், மண்பாண்டங்கள் செய்தல், வர்ணம் பூசுதல் போன்ற தொழிற்பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1954ல் காந்திகிராம ஊழியர்களுக்குத் தேவையான சலவை சோப்பு தயாரிக்கும் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் உற்பத்தி அதிகரிக்கவே வெளியிடங்களிலும் விற்பனை செய்யப்பட்டது. இவ்வாறாக ஒன்றன் பின் ஒன்றாக பல சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தொழில்கள் அனைத்தும்



சாதாரண குடிசைகளில் நடைபெற்று வந்ததால் 1956 ல் ஒரு பெரிய தொழில் கூடம் ஒன்று கட்டப்பட்டது. கிராமத்தொழில் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்ட டாக்டர் ஜே.ஸி. குமரப்பா அவர்களின் நினைவாக இத்தொழில் கூடத்திற்கு **"குமரப்பா கிராமத் தொழிற் கூடம்"** என சௌந்திரம் பெயரிட்டார். கதர் தறிகள், ஒரு அச்சகம், கையால் காகிதம் செய்யும் சாலை, சோப்பு செய்தல், தச்சுப்பட்டறை, எண்ணெய் ஆட்டுமிடம், இரும்புப்பட்டறை ஆகியவை இத்தொழில் கூடத்தில் அமைந்திருந்தன. சாதாரணமாகத் துவங்கப்பட்ட இத்தொழில்கள் பத்து ஆண்டு காலத்திற்குள் துரித வளர்ச்சி பெற்று ஒவ்வொரு தொழிலும் தனித்தனியாகச் செயல்படும் அளவிற்கு விரிவாக்கம் அடைந்தது. சுருங்கக்கூறின் இன்றுள்ள காந்திகிராமம் கதர் மற்றும் கிராமத்தொழில்களின் கூட்டமைப்பே எனக் கூறலாம்.

கதர் மற்றும் கிராமக் கைத்தொழில்கள் காந்திகிராமத்தின் பணிகளில் ஒருமுக்கிய இடத்தைப் பிடித்தது. ஊழியர்களின் எண்ணிக்கையும், பொருட்களின் உற்பத்தியும் பலமடங்கு அதிகரித்தது. 1975 ல் சுமார் இரண்டாயிரம் தொழிலாளர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெற்றிருந்தனர். இதன் காரணமாக தொழிலாளர்களிடையே ஒற்றுமையை மேம்படுத்தவும், அவர்களின் நலனை மேன்மையுறச் செய்யவும், தொழிலாளர்களையும் நிர்வாகத்தோடு தொடர்பு ஏற்படுத்தி உற்பத்தித்திறனையும், தரத்தையும் அதிகரிக்கும் வகையில் 1976ம் ஆண்டு காந்திகிராமக் கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் அறக்கட்டளையை சௌந்திரம் ஏற்படுத்தினார். இந்த அறக்கட்டளை அனைத்துக் கதர், கிராமக் கைத்தொழில் பிரிவுகளையும் உற்பத்தி மையங்களையும் மேற்பார்வை செய்யும் அமைப்பாக செயல்படத் தொடங்கியது. தவிர, இந்த அறக்கட்டளை. சலவைசோப் மற்றும் குளியல் சோப் உற்பத்தி மையம். காலணிகள் மையம், பருப்பு மற்றும் அரிசி பக்குவப்படுத்தும் மையம், மரம் மற்றும் இரும்பு வேலைகளுக்கான தொழிற்பட்டறை, தீப்பெட்டி தொழிற்சாலை, எண்ணெய் ஆட்டும் நிலையம், ஊதுபத்தி செய்யும் மையம், புளி தயாரிப்பு மையம், செங்கல் உற்பத்தி மையம் போன்றவற்றை நடத்தி வந்தது. இத்தொழில் மையங்கள் காந்திகிராமத்தில் மட்டுமல்லாது தென் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட்டு ஆங்காங்கே நூற்றுக்கணக்கான ஏழை எளியோருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்தது.

கதர் மற்றும் கைத்தொழில்களில் ஈடுபடும் கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பை மட்டும் ஏற்படுத்தித் தருவதோடு சௌந்திரம் நின்றுவிடவில்லை. அவர்களது வாழ்க்கை வசதிகளை மேம்படுத்துவதிலும் தனிக்கவனம் செலுத்தி வந்தார். நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் ஒன்றை வரைந்து சுமார் நூற்றி ஐம்பது வீடுகளைக் கட்டி கொடுத்தார். காந்திகிராம

அறக்கட்டளையின் மூலமாகவும் வீடுகள் கட்டுவதற்கு கடன் கொடுத்தார். அது தவிர தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதிகளையும், அவர்களின் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ மற்றும் சுகாதார வசதியையும் சௌந்திரம் செய்து கொடுத்தார். இன்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பல்வேறு உற்பத்திப் பிரிவுகளில் பணியாற்றி வருகிறார்கள். சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. காந்திகிராம கதர் மற்றும் கைத்தொழில் அறக்கட்டளை இங்கு பணிபுரியும் தொழிலாளர்களாலேயே நிர்வகிக்கப்பட்டுவருகிறது. ஒவ்வொரு பொருளின் உற்பத்தியிலும் எல்லாத் தொழிலாளர்களின் உழைப்பும் அடங்கியிருக்கிறது. உற்பத்தி மட்டுமே அறக்கட்டளையின் நோக்கமல்ல. பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளியின் நலனையும் இது பேணிக்காத்து வருகிறது.

ஒரு சமயம் சில தொழிலாளர்கள் அதிகமான கூலி வேண்டி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சௌந்திரம் தொழிலாளர்களிடம் பேசினார். "நாம் தொழில் செய்வதன் மூலம் எண்ணற்ற கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்து வருகிறோம். நாம் வேலை செய்யவில்லையென்றால் நம்மை நம்பியிருக்கும் ஏராளமான ஏழைகள் ஒருவேளை உணவுகூட இல்லாமல் பாதிக்கப்படுவார்கள்," என்று கூறினார். அதற்கு அத்தொழிலாளிகள் இசையவில்லை சௌந்திரமும் அதற்கு சிறிதும் வருந்தவுமில்லை. மாறாக, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களை அன்போடு அழைத்து தனது சொந்தப் பணத்தை அந்தத் தொழிலாளிகளிடம் கொடுத்து மதுரை மாவட்டத்திலுள்ள சில கிராமங்களுக்குச் சென்று வரும்படி அனுப்பிவைத்தார். அத்தொழிலாளர்களும் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு அவர் கூறியபடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கிராமத்திற்குச் சென்றனர். ஒரு தொழிலாளி ஒரு கிராமத்திற்குச் செல்வதற்குத் தயாரானார். ஆனால், அந்த குறிப்பிட்ட கிராமத்திற்கு நேரடி பஸ் வசதி கிடையாது. எனவே, குறிப்பிட்டதூரம் பஸ்ஸில் சென்று பின் இரண்டு மணி நேரம் வெயிலில் நடந்து அந்தக் கிராமத்தை அடைந்தார். நடந்து வந்த களைப்பில் தண்ணீர்த் தாகம். கிராமத்தில் கிணறு ஒன்றும் தட்டுப்படவில்லை. வீடுகளெல்லாம் மண் சுவர்களினாலான குடிசைகள். எல்லாம் பூட்டிக்கிடந்தன. பார்ப்பதற்கு ஆடுமாடுகள் கட்டிப்போடும் கொட்டம் போன்று அவ்வீடுகள் காட்சியளித்தன. அந்த ஊழியர் மிகுந்த தண்ணீர் தாகத்தோடு தெருவழியாகச் சென்றார். அது தெரு என்று சொல்லமுடியாது. மழைத் தண்ணீர் தெரு வழியாக வருடக்கணக்கில் சென்றதால் மண் அரிப்பு ஏற்பட்டு ஓடைபோலக் காட்சியளித்தது. அப்போது அங்கு ஒரு குடிசை



திறந்திருப்பது கண்ணில்பட்டது. ஒரு முதியவர் தனது தள்ளாதவயதிலும் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தார். காட்டிலிருந்து கொண்டு வந்த பருத்தியில் கிடந்த தூசிகளைப் பொறுக்கிக் கொண்டிருப்பது அருகில் சென்ற பின்னர் தான் தெரிந்தது. அவரது இடுப்பில் ஒரு பழைய துணி. அதிலும் நிறைய ஓட்டைகள். உடம்பிலுள்ள எல்லா எலும்புகளுமே தெரியும் வகையில் மெலிந்த உடம்பு. காந்திகிராமத் தொழிலாளி குடிசையின் வெளியே நின்று கொண்டு குடிசையின் கூரையைப் பார்த்தார். கூரையில் ஆங்காங்கே ஓட்டைகள். அதன் வழியாக சூரியன் குடிசைக்குள்ளிருந்த மண்பானையின் மீது பிரகாசித்துக் கொண்டிருந்தான். நாம் வந்திருக்கும் கிராமம் இந்தியாவில்தான் உள்ளதா? அல்லது ஆப்பிரிக்காவில் உள்ளதா? என்ற சந்தேகம் தொழிலாளி மனதில் தோன்ற ஆரம்பித்தது. ஒரு வழியாக மனதைத் தேற்றிக் கொண்டு, "ஐயா தாகமாக இருக்கிறது. வெளியூரிலிருந்து வருகிறேன். குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்," என்று கேட்டார். அதனைக் கேட்ட அப்பெரியவர் கஷ்டப்பட்டு எழுந்திருந்து ஒரு மண்பானையிலிருந்த தண்ணீரை மற்றொரு மண்சட்டியில் ஊற்றி அவரிடம் கொடுத்தார். ஏதாவது பித்தளை அல்லது எவர்சில்வர் டம்ளரில் தண்ணீர் கிடைக்கும் என எதிர்பார்த்தவருக்கு மண் சட்டியைக் கண்டதும் வாழ்க்கையே வெறுத்துவிட்டது. இருப்பினும் வேறு வழியில்லை. தாகம் வாட்டியதால் மனதைத் தேற்றிக் கொண்டு மண்சட்டியில் கொடுத்த நீரைக் குடித்தார். "நன்றி! போய் வருகிறேன்" என்று கூறி வந்த பாதையை நோக்கித் திரும்பினார், அந்தத் தொழிலாளி. பெரியவருக்கு வந்தவர் என்ன சொன்னார் என்றே புரியவில்லை.

வெற்றிகரமாக கிராமம் சென்றடைந்த தொழிலாளி தான் புறப்பட்ட இடத்திற்கே நடந்தார். நடந்துவரும்பொழுது மனதில் பல சிந்தனைகள். கிராம மக்கள் அன்றாடத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய இயலாமல் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். குடிக்கத் தண்ணீருக்கு ஒரு கிணறு கூட கிடையாது. வெகுதூரம் சென்று எடுத்து வருகிறார்கள். சரியான பாதை கிடையாது. மின்சார வசதி சுத்தமாகக் கிடையாது. இந்தக் கிராமங்களைவிட நாம் எவ்வளவோ உயரிய வாழ்க்கை நடத்துகிறோம் என்ற எண்ணம் மனதில் உதித்தது. இதுபோன்ற எண்ணமே கிராமங்களுக்குச் சென்றுவந்த ஒவ்வொரு தொழிலாளியின் மனதிலும் உதித்து. மறுநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் அனைவரும் வழக்கத்திற்கு மாறாக சீக்கிரமே வந்து சௌந்திரத்தைச் சந்தித்தனர். "நேற்று கிராமங்களுக்குச் சென்று பார்த்தீர்களா?" எனக் கூறிக்கொண்டே சௌந்திரம் வந்தார். "அம்மா. இப்போது தருகின்ற ஊதியமே எங்களுக்கு அதிகம் என்பது, கிராமத்திற்குச் சென்றபின் தான் அறிந்தோம். எங்களை மன்னியுங்கள். நாங்கள் தொடர்ந்து திறமையாக வேலையில் ஈடுபடுவோம்,"

அனைவரும் ஒருமித்த குரலில் கூறினர். மனந்திருந்திய மைந்தர்களை வரவேற்கக் காத்திருக்கும் தாயைப் போன்று செளந்திரம் அத்தொழிலாளர்களை மன்னித்து பணிக்குச் செல்ல அனுமதித்தார். பணியில் திரும்பச் சேர்ந்துவிட்டோம் என்று தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சி. தன் தொழிலாளர்கள் கிராம மக்களைக் கண்டு மனம்திருந்திவிட்டனர் என்பதில் செளந்திரத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சி. இவ்வாறு தொழிலாளர்களையும் தனது உறவினராகக் கருதி அவர்களது முன்னேற்றத்திற்காக பாடுபட்டவர் செளந்திரம்.

செளந்திரத்திற்குப் பெண்கள் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கரை இருந்தது என்பதை அனைவரும் அறிவர். குறிப்பாக விதவைகள், திக்கற்ற பெண்களுக்காக உழைப்பதற்கு ஒருபோதும் சலிக்கமாட்டார். அத்தகைய ஆதரவற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக, 1950 களில் ஆரம்பிக்கப்பட்ட காந்திகிராம அச்சகத்துடன், 1977 ஆம் ஆண்டு தனது தாயாரின் நினைவாக **லட்சுமி சேவா சங்கம்** என்ற ஒரு சங்கத்தை அவர் ஏற்படுத்தினார். இந்த லட்சுமி சேவா சங்கம் பல சிறு தொழில்களைப் பெண்களைக் கொண்டே நடத்திவருகிறது. குறிப்பாக, குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான ஊட்டச்சத்து மிக்க "சக்தி மால்ட்" என்ற சத்தான பானம் தயாரிக்கிறது. கேழ்வரகு, கோதுமை, பாசிப் பயறு, காணப்பயறு போன்ற மூலப் பொருட்களுடன் தயாரிக்கப்படும் இந்த சக்திமால்ட் ஒரு சிறந்த சத்தாகாரமாகும். பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பல கருவிகளைக் கொண்ட இம்மையத்தில் ஐந்து பேர் பணியாற்றி வருகிறார்கள். இது தவிர பகுதிநேர ஊழியர்கள் பலருக்கும் இதில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதேபோன்று சாம்பார்பொடி தயாரிக்கும் பிரிவு ஒன்றையும் இச்சங்கம் நடத்திவருகிறது. இங்கு காய்கறி மற்றும் குழம்புகளுக்குப் பயன்படுத்தப்படும் சமையல் பொடி வகைகள் அனைத்தும், காந்திகிராம தொழிற் பட்டரையில் தயாரிக்கப்பட்ட ஒரு இயந்திரத்தின் மூலம் இடிக்கப்பட்டு பக்குவப்படுத்தப்பட்டு வெவ்வேறு அளவுகளில் பாலிதீன் பைகளில் அடைக்கப்பட்டுகின்றன. இதிலும் நான்கு பெண்கள் நிரந்தரமாகப் பணியாற்றி வருகிறார்கள். இதேபோன்று பால்கோவா செய்யும் பிரிவு ஒன்றும் இயங்கிவருகிறது. கிராமமக்கள் பலர் காந்திகிராமம் மூலம் பால்மாடுகள் வளர்த்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் வீட்டிற்குத் தேவையான பாலை எடுத்துக்கொண்டு மீதிப்பாலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். இந்த கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வேடசந்தூரிலிருக்கும் பால்கோவா தயாரிப்பு நிலையத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. இங்கு அந்தப் பால் பக்குவப்படுத்தப் பட்டு பால்கோவா தாயரிக்கப்படுகிறது.



லட்சுமி சேவா சங்கத்தின் மற்றொரு முக்கியமான கிளை சித்த, ஆயுர்வேத மருந்து தயாரிப்பு மையமாகும். காந்திகிராமத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சிறுமலையில் ஏராளமான மூலிகைகள் கிடைக்கின்றன. இம்மலையிலிருந்து வீசுகின்ற காற்று நோய்களைக் குணப்படுத்தக்கூடிய தன்மை கொண்டதாகும். அத்தகைய சிறந்த மூலிகைகள் இம்மலையில் உள்ளன. மேலும், இம்மலையில் ஒரளவு மலைவாசிகள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு நிரந்தரமான வேலைகள் எதுவும் கிடையாது. எனவே, மலைவாசி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி, மலையில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் திட்டம் ஒன்றை செளந்திரம் வகுத்தார். அதன் விளைவாகத்தான் சித்த, ஆயுர்வேத மருந்து தயாரிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. சித்த மருத்துவ நிபுணராக விளங்கிய டாக்டர் கொண்டல்ராவ் என்பவரின் முயற்சியால் இம்மையம் நிறுவப்பட்டது. இந்த மையம் நிறுவுவதற்கான நிலத்தை, நன்கொடையாகப் பணம் வசூலித்து செளந்திரம் வாங்கிக் கொடுத்தார். மருந்து தயாரிப்பு மையமும் அதனுடன் இணைந்துள்ள மூலிகைப் பண்ணையும் செளந்திரத்தின் கணவர் திரு. செளந்திரராஜன் பெயிரில் "செளந்திரராஜன் பண்ணை" என்று அழைக்கப்பட்டு வருகிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களும் உபகரணங்களும் நிறுவப்பட்டுள்ள இம்மையத்தில், சுமார் நாற்பத்திஐந்து பெண்கள் பணியாற்றி வருகிறார்கள்.

இருநூற்றைம்பது வகையான மருந்துகள் இம்மையத்தில் தயாரிக்கப்படுகின்றன. இங்கு தயாரிக்கப்படும் மருந்துகள் இந்தியாவில் மட்டுமின்றி வெளி நாடுகளிலும் பிரபலமாகியுள்ளன. இம்மையம் ஏராளமான மலைவாசி மக்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பைப் ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது.

"நீம்" என்று அழைக்கப்படும் குளியல் சோப்பு தயாரிக்கும் பிரிவும், லட்சுமி தீப்பெட்டித் தொழிலும் லட்சுமி சேவா சங்கத்தின் வேறுசில பிரிவுகளாகும். குளியல் சோப்பு பல மூலிகைகளுடனும் வாசனைத் திரவியங்களுடனும் தயாரிக்கப்படுகிறது. இங்கு ஆறு பெண்கள் நிரந்தரமாகப் பணியாற்றிவருகிறார்கள். இதுபோன்று லட்சுமி தீப்பெட்டி உற்பத்தியில் இரண்டு ஆண்களும் இருபத்தி எட்டு பெண்களுமாக முப்பது பேர் பணியாற்றி வருகிறார்கள். இது தவிர பத்திக் குச்சிகள் செய்யும் பிரிவில் பத்து பெண்கள் வேலை செய்து வருகிறார்கள். லட்சுமி சேவா சங்கத்தின் ஆரம்பகால அலகான அச்சகத்தில் ஆண்களும் பெண்களுமாக பதினான்குபேர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவ்வாறு லட்சுமி சேவா சங்கம் மூலம் ஏராளமான பெண்களுக்கு செளந்திரம் வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்திருக்கிறார்.

கதர் மற்றும் கிராமக்கைத்தொழில் மீதும் தொழிலாளர்கள் மீதும் சௌந்திரம் கொண்டிருந்த அக்கரை அவரை தமிழ்நாடு கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் துணைத் தலைவராக ஆக்கியது. சுதந்திரத்திற்கு முன்பு காந்தியடிகளின் தலைமையில் கதர் உற்பத்தி ஒரு இயக்கமாகவே நடைபெற்று வந்தது. இதனால், இந்தியா முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் இராட்டையின் மூலம் கதர் நூல் உற்பத்தி மற்றும் கதர் நெசவு போன்றவற்றைத் தங்களது தொழிலாகக் கொண்டிருந்தனர். சுதந்திரத்திற்குப்பின் ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கென கதர்த் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வந்தது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஊராட்சி ஒன்றிய வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கதர் மற்றும் கிராமத் தொழில் வளர்ச்சிக்கு அரசு அடிகோலியது. இதனால், மேலும் லட்சக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு பெற்றுப் பயனடைந்தனர். இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு அவர்களும் கதர் மற்றும் கிராமத்தொழிலின் வளர்ச்சி நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு இன்றியமையாதது என்பதை உணர்ந்தார். அதன் காரணமாக மேலும் இத்துறைகளை வளர்ச்சியடையச் செய்வதற்காக தேசிய அளவில் ஒரு கமிஷனை அமைக்க முடிவு செய்தார். அவ்வாறே கமிஷன் நிறுவப்பட்டது. இக்கமிஷன் ஒவ்வொரு மாநில அரசுகளுடனும் தொடர்பு கொண்டு கதர், கிராமக் கைத்தொழில் வளர்ச்சியைப் பன்முகப்படுத்த பல திட்டங்களைத் தீட்டித் தந்தது. திரு. காமராஜர் அவர்கள் தமிழ்நாட்டின் முதல்வராக இருந்தபோது கதர் கமிஷனின் பரிந்துரையின்படி தமிழ்நாடு கதர் மற்றும கிராமக் கைத்தொழில் வாரியம் ஒன்றை திரு. பக்தவச்சலத்தின் தலைமையில் 1960 ல் நிறுவினார். சௌந்திரம் அதன் துணை தலைவராக நியமனம் செய்யப்பட்டார். இவ்வாரியம் அமைக்கப்பட்ட பின்பு கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்காக சௌந்திரம் துரிதமாகச் செயலாற்றத் தொடங்கினார். முதலில் வாரியத்திற்கு தனி அலுவலகம் வேண்டும் என்பதை வலியுறுத்தி தற்போது சென்னை பாரிமுனையில் செயல்பட்டுவரும் குறளகம் உருவாகுவதற்கு சௌந்திரம் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டார். கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் துணைத்தலைவர் என்ற முறையில் கதர் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டுவந்தார். தமிழ்நாடு அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் கதர் உற்பத்திக்கு வழிவகை செய்தார். 1961–62–ம் ஆண்டில் மட்டும் சுமார் எட்டாயிரம் நபர்களுக்கு நூற்பு மற்றும் நெசவுப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இப்பயிற்சிகளுக்கென பல பயிற்சி மையங்கள் புதிதாகத் துவங்கப்பட்டன. மேலும், கதர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் சிறைச்சாலை கைதிகளுக்கும் நூற்புப்பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்து மாநில அரசின் உதவியுடன் அத்திட்டத்தையும் செயல்படுத்தினார். இதன் மூலம் சிறைச்சாலைகள்கூட கதர் உற்பத்தி மையங்களாக மாற்றப்பட்டன.



கிஸான் இராட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு மானிய விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்தார். அம்பர் இராட்டைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் காரணமாக வாரியம் அமைக்கப்பட்ட ஓராண்டில் சுமார் ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் மதிப்பிற்கான கதர் உற்பத்தி செய்யப்பட்டது.



*சித்த ஆயுர்வேத மருந்துகள் வெளியீட்டு விழாவில்*
*அம்மா அவர்கள்*

தேனீவளர்ப்பு, வெல்லம் காய்ச்சுதல், கைக்குத்தல் அரிசி உற்பத்தி செய்தல், எண்ணெய் ஆட்டுதல், கைமுறைக் காகிதம் செய்தல், தோல் பொருட்கள் செய்தல், மண்பாண்டங்கள் செய்தல், பனைப் பொருட்கள் செய்தல் போன்ற தொழில்களைத் துவங்குவதற்கு ஏராளமான கடன் வசதிகளும் எளியமுறையில் அனுமதிகளும் வழங்கப்பட்டன. இத்தொழில்கள் மூலம் 1960–61 ல் மட்டும் சுமார் 20 ஆயிரம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றனர். மக்களிடையே கதர் கிராமத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், அப்பொருட்களை வாங்கி நுகரவும் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கண்காட்சிகள் அமைப்பதற்கான திட்டத்தை சௌந்திரம் தீட்டினார். அதன்படி சென்னையில் தேனாம்பேட்டை, மதுரை போன்ற இடங்களில் கதர் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. மேலும், அரசின் ஆதரவோடு ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 2ம் தேதி முதல் 8ம் தேதி வரை தமிழ்நாடெங்கும் கதர் வாரமாகக் கொண்டாடும்படி செய்ததும் சௌந்திரம்தான். கதர், கிராமத்தொழில் சம்பந்தமான திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு கிராமங்கள் தோறும் மக்களுக்குத் திரையிடப்பட ஆவனசெய்தார். மேலும் கதர், கிராமத்தொழில், கிராமப் பொருளாதாரம், சம்பந்தமான ஏராளமான புத்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் அச்சிட்டு வெளியிடப்பட்டன. கிராமப் பொருளாதாரம் தொடர்பாக பல

கருத்தரங்குகளையும் சௌந்திரம் ஏற்பாடு செய்தார். கதர் மற்றும் கிராமத்தொழில் சம்பந்தமான கருத்தரங்கு 1961 செப்டம்பர் 24ம் நாள் மாவட்ட ஆட்சித்தலைவர்களின் கூட்டமொன்றை மதுரையில் கூட்டி கதர், கிராமத்தொழில் வளர்ச்சிக்கான நடைமுறை சாத்தியக் கூறுகளை ஆராயச்செய்து ஆட்சியாளர்களை ஊக்குவித்தார். 1961 டிசம்பர் 4 ம் தேதி மாவட்ட அளவில் கதர் அலுவலர்கள் கூட்டம் ஒன்றை சென்னையில் கூட்டி மாவட்ட அளவில் கதர், கைத்தொழில் உற்பத்திக்கும் விற்பனைக்கும் வழிவகைகளை ஆராய்ந்தார். இவ்வாறு தன்னுடைய பதவிக் காலத்தின்போது கதர் உற்பத்திக்கும் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கும் அயராது பணியாற்றிவந்தார். 1962 ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் தனது துணைத் தலைவர் பதவியை ராஜினாமா செய்தார். தனது பதவிக்காலம் குறுகியதாக இருந்தாலும் ஏராளமான பணிகளைச் செய்து முடித்தார்.

சௌந்திரம் தன் வாழ்நாள் முழுவதும் காந்திகிராமத்தில் தயாரிக்கப்படும் பொருட்களையே பயன்படுத்தி வந்தார். அதனை பயன்படுத்துவது மட்டுமல்லாது அதன் தரத்தை உயர்த்துவதற்கும் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பல ஆலோசனைகளையும் நல்கிவந்தார். குறிப்பாக கதர்ப் புடவைகளுக்கு டிசைன் தருவது சௌந்திரமே ஆகும். எந்தக் கலரில் எப்படி டிசைன் போடவேண்டும்.

முகப்பு பட்டைகள் எப்படியிருக்கவேண்டும் என்பதை அவரே கூறுவார். கூறியதோடு மட்டுமல்லாது அந்தப் புடவைகளைத் தானே அணிந்து கொள்வார். அதனை அவர் அணிந்து கொள்வதன் நோக்கம், அவரது சொந்தத் தேவைக்காக அல்ல. தன்னைப்பார்த்து மற்றவர்களும் இதுபோன்ற புடவைகளை வாங்கி அணியவேண்டும் என்பதேயாகும். கதர்ப் புடவைகளை விற்பனை செய்வதற்குக்கூட தன்னையே சௌந்திரம் பயன்படுத்திக் கொண்டார் என்பது இதன்மூலம் தெளிவாகிறது. மத்திய மந்திரியாக இருந்தபோது டில்லிக்குச் செல்லும் போதெல்லாம் ஏராளமான புது டிசைன் புடவைகளைக் கொண்டு சென்று பாராளுமன்ற பெண் உறுப்பினர்களுக்குக் கொடுப்பார். அதேபோன்ற தனக்குத் தெரிந்த மற்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்குத் தேவையான புடவைகளுக்கு ஆர்டர்களை வாங்கிவருவார். காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சௌந்திரத்தின் நெருங்கிய நண்பர் என்பதை அனைவரும் அறிவர். அவர் சௌந்திரத்திடம் அவ்வப்போது ஏராளமான கதர்ப் புடவைகளைப் பெற்று அணிந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். சௌந்திரம் தான் எங்கு சென்றாலும், யாரைச் சந்தித்தாலும் காந்திகிராமத்தில்தயாரிக்கப்பட்ட பொருளுடன் சென்று அதனை வாங்கிப் பயனடையும்படி வேண்டுவார். இதனால் ஏராளமான





*ஒப்பற்ற தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்களுடனும் திருமதி இந்திரா காந்தி அவர்களுடனும் அம்மா அவர்கள்*

ஆர்டர்களும் கிடைத்தன. இரண்டு புடவைகளை விற்றால் கூட அது காந்திகிராமத்திற்கு உதவியாக இருக்கும் என்ற எண்ணம் அவர் மனதில் நிரம்பியிருந்தது.

சௌந்திரத்தின் ஆக்கப்பணிகளில் தலையாய இடத்தைப் பெறுவது அவருடைய கிராம மருத்துவச் சேவையாகும். அவர் ஒரு மருத்துவப் பட்டதாரியாவார். 1943 ல் அடையாறில் ஔவை கிராம வைத்திய சங்கம் ஒன்றை நிறுவி கிராமங்களில் மருத்துவப்பணி செய்துவந்தார். அதே பணியைக் காந்திகிராமத்திலும் தொடர்ந்தார். காந்திகிராமம் உருவாக்கப்பட்டுவந்த சமயம் போதுமான இடவசதியின்மையால் சின்னாளபட்டியில் திரு. லகுமையா அவர்களின் வீட்டில் கஸ்தூரிபா தாய் சேய் நல விடுதி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. சின்னாளபட்டியிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் மருத்துவ சேவையை ஆரம்பித்தார். தாய்மார்களின் நலன், கர்ப்பிணிப் பெண்களின் நலன், குழந்தைகள் நலன், பொது சுகாதாரம், குடும்ப நலத்திட்டங்கள் போன்றவை சௌந்திரத்தின் மருத்துவப் பணிகளில் முக்கியமானவைகளாகும். கிராமங்கள் தோறும் சென்று பெண்களைச் சந்தித்து அவர்களது ஆரோக்கியம் சம்பந்தமான ஆலோசனைகளை வழங்குவது, குழந்தைகளுக்கு அவர்களுடைய எடை, உடல் நல முன்னேற்றம் போன்றவற்றிற்காக ஆலோசனைகள், பொது சுகாதாராத்தின் முக்கியத்துவம், பொதுசுகாதாரத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகள் போன்றவற்றை கிராமப்

பெண்களுக்கு கற்றுக் கொடுத்தார். இதனால் கிராமத்திலுள்ள பெண்கள் அனைவருமே சௌந்திரத்தின் மீது அன்பு செலுத்தத் தொடங்கினார்கள். நோயாளிகளின் வருகையும் நாளுக்கு நாள் அதிகரித்தது. சாதாரண முறையில் ஆரம்பிக்கப்பட்ட தாய் சேய் நல விடுதி 1950ல் இருபத்திரெண்டு படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையாகக் காட்சியளித்தது.

1952 ல் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது, கிராம மருத்துவ சேவையும் துரிதப்படுத்தப்பட்டது. டாக்டர் ஒடிலியா கோனிக் என்பவர் கிராம மருத்துவ சேவையில் சௌந்திரத்திற்கு மிகுந்த உதவியாக இருந்து வந்தார். 1948 ம் ஆண்டில் சுமார் இருபதினாயிரம் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்யப்பட்டது. 1955ல் இந்த எண்ணிக்கை அறுபதினாயிரமாக உயர்ந்தது சௌந்திரத்தின் தலைமையில் செயல்பட்ட மருத்துவர்களும் ஆரோக்கிய சேவிகாக்களும் ஆற்றிய நண்பணியின் காரணமாகவே அத்தகைய வளர்ச்சி ஏற்படலாயிற்று. இதுவரையில் பெண்களுக்கு மட்டுமே வைத்தியம் செய்துவந்த நிலை மாறி 1956 ம் ஆண்டு முதல் ஆண்களுக்கும் வைத்தியம் செய்ய ஆரம்பிக்கப்பட்டது. நோயாளிகளின் வருகையும் அதிகரித்தது. அதே சமயம் மருத்துவப் பணிகளும் முனைப்புடன் செய்யப்பட்டுவந்தன. இதனால், மருத்துவமனைக்கு சின்னாளபட்டியிலிருந்த வீடு போதுமானதாக இல்லை. எனவே புதிதாக ஒரு மருத்துவமனைக்கான கட்டிடம் கட்ட தீர்மானிக்கப்பட்டது. இதற்குப் பெருந்தொகை தேவைப்பட்டது. இந்நேரத்தில் ஜி. ராமச்சந்திரன் அமெரிக்கா விஜயம் மேற்கொண்டிருந்தார். அங்கு செயல்பட்டுவரும் சில பொது நிறுவனங்களுடன் தொடர்புகொண்டார்.



Dr. ஒடிலியா கோனிக்கடன் அம்மா அவர்கள்



அவரது முயற்சியின் பயனாக ஒரு கணிசமான நிதி உதவி மருத்துவமனை கட்டிடத்திற்காகக் கிடைத்தது. இருப்பினும் அத்தொகையும் போதுமானதாக இல்லை. எனவே, பொது மக்களிடமிருந்து உதவியாகவும், கடனாகவும் நிதி திரட்டப்பட்டது. அது மட்டுமல்லாது நாடகம், கலை நிகழ்ச்சிகள் நடத்தியும் கட்டிட நிதி வசூல் செய்யப்பட்டது. இவ்வாறாக மிகுந்த சிரமத்தின் மத்தியில் புதிய மருத்துவமனைக் கட்டிடம் சின்னாளபட்டியில் 1957ல் கட்டி முடிக்கப்பட்டது. அதற்கு கஸ்தூரிபா மருத்துவமனை என்று சௌந்திரம் பெயரிட்டார்.

புதிய கஸ்தூரிபா மருத்துவமனை நூறு படுக்கைகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. சாதரணச் சிகிச்சை முதல் பெரிய அறுவைச் சிகிச்சை வரை இங்கு செய்யப்பட்டு வந்தது. பெண்கள், குழந்தைகள் போன்றவர்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டது. பல், கண் நோய்களுக்கு அத்துறையில் சிறப்பு மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டு சிகிச்சை செய்யப்பட்டது. எவ்வளவோ பணக் கஷ்டத்தோடு மருத்துவமனை நடத்தப்பட்டு வந்தாலும் சௌந்திரத்தின் சேவை மனப்பான்மையில் சிறிதும் மாற்றமில்லை. ஏனெனில் இம்மருத்துவமனை ஒரு கிராமத்தில் அமைக்கப்பட்டு கிராம மக்களுக்குச் சேவை செய்து வருவதால் கிகிச்சைகள் இலவசமாகவே வழங்கப்பட்டன. பெரும்பாலான கிராம மக்கள் ஏழைகள். அன்றாட உணவிற்கே கஷ்டப்படுகிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு அவர் செயல்பட்டு வந்தார். இது சம்பந்தமாக ஒரு கட்டுப்பாட்டையும் விதித்திருந்தார். அதாவது ஏழை எளியவர்களிடமிருந்து எத்தகைய சிகிச்சையானாலும் பணம் வசூலிக்கக் கூடாது. அதேசமயம் வசதியானவர்களிடம் குறிப்பிட்ட தொகையைத் தவிர அதிகமாக வசூலிக்கக்கூடாது என்பதாகும். தன்னுடன் பணியாற்றும் மருத்துவர்களுக்கு சௌந்திரம் அடிக்கடி ஒன்று கூறுவார். அதாவது, "நோயாளிகள் கூறுவதைப் பொறுமையோடு கேட்கவேண்டும். அப்படி செய்வதால் நோயாளியின் பாதி நோய் போய்விடும். பொறுமையோடு கேட்டறிந்த பின் நோயாளிகளுக்கு கனிவான பதிலும் ஆறுதலும் கூறவேண்டும். அப்படிச் செய்தால் கால் பங்கு நோய் குணமாகிவிடும். மீதமுள்ள கால் பங்கு நோய்க்குத்தான் நீங்கள் மருத்துவம் செய்கிறீர்கள்" என்பதே ஆகும். அதேபோன்று "மருத்துவர்களாகிய நாம், கல்லூரிகளில் கற்றதைக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அதேபோன்று, மக்களிடமிருந்தும் பல பாடங்களைக் கற்றுக்கொண்டு சேவையைப் பலப்படுத்த வேண்டும்," என்பார். இது போன்று அவ்வப்போது மருத்துவர்களுக்கும், ஊழியர்களுக்கும் பல ஆலோசனைகளை வழங்கி ஊக்குவிப்பார்.

மருத்துவமனைப் பணிகள் அதிகரித்துக் கொண்டே செல்லும் போது அதற்கேற்ற ஊழியர்களும் தேவைப்படலாயினர்.

அத்தேவையைப் பூர்த்தி செய்ய பலநோக்கு ஆரோக்கிய ஊழியைப் பயிற்சி இம்மருத்துவமனையிலேயே 1954ல் ஆரம்பிக்கப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. வரைப் படித்த பெண்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டனர். 1954ல் ஆறு பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. 1955ல் இந்த எண்ணிக்கை பதினைந்தாகவும் 1976ல் ஐம்பதாகவும் அதன் பிறகு அறுபதாகவும் உயர்ந்து கொண்டே வந்தது. இப்பயிற்சி பெற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு எளிதில் கிடைத்தது. காந்திகிராமம் கஸ்தூரிபா மருத்துவமனையிலும் அதன் கிளை நிலையங்களிலும் இவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இவை தவிர அரசினர் மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் இவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிறது.

1962 ல் மத்திய கல்வித் துணை அமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மத்திய சமூகநல போர்டிலும் சேர்மேனாக நியமிக்கப்பட்டார். அப்போது, மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பல தீவிர முயற்சிகளை அவர் மேற்கொண்டார். பெண்களுக்கான கர்ப்பத்தடை சிகிச்சையான ட்யூபெக்டமி என்ற முறையையும், ஆண்களுக்கான வாஸக்டமி என்ற முறையையும் 1970ல் கஸ்தூரிபா மருத்துவமனையில் சௌந்திரம் அறிமுகப்படுத்தினார். 1970ல் 1884 ட்யூபெக்டமி அறுவை சிகிச்சையும், 33 வாஸக்டமி அறுவைச் சிகிச்சையும் செய்யப்பட்டன. 1976 ல் ட்யூபெக்டமி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 8473 ஆகவும் வாஸக்டமி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 335 ஆகவும் அதிகரித்தது. இதன் மூலம் குடும்பக்கட்டுப்பாட்டு சிகிச்சைமுறையில் காந்திகிராமம் கஸ்தூரிபா மருத்துவமனை இந்தியாவிலேயே முதலிடத்தைப் பெற்றது இதன் காரணமாக 1970-71, 1971-72, 1975-76 ஆகிய ஆண்டுகளில் குடும்ப நலப்பணிக்கான தேசிய விருதை, கஸ்தூரிபா மருத்துவமனை தொடர்ந்து பெற்று பெரிய சாதனையை நிகழ்த்தியது. இம்மருத்துவ மனையின் பணிகளைப் பாராட்டி மத்திய மாநில அரசுகள் இதன் வளர்ச்சிக்காக தாராளமாக நிதி உதவிகளைச் செய்து கொடுத்தன. மருத்துவமனைக்குத் தேவையான நவீனக் கருவிகள் மற்றும் வாகனங்கள் போன்றவற்றிற்காக மத்திய மாநில அரசுகளின் நிதிஉதவியும் கிடைத்தது. இருப்பினும் அதிகமான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் அதன் விரிவாக்கப் பணிகளுக்கும் அதிகளவு பணம் தேவைப்பட்டது. இப்பணம் பொது மக்களிடமிருந்து நன்கொடையாக வசூலிக்கப்பட்டது. 1983ல் புகழ் பெற்ற பாடகியான எம்.எஸ்.சுப்புலெட்சுமி அவர்கள் பெங்களூரில் ஒரு கச்சேரி நடத்தி அதன் மூலம் கிடைத்த பத்தாயிரம் ரூபாயை கஸ்தூரிபா மருத்துவமனையிலுள்ள ஆபரேஷன் தியேட்டருக்குத் தேவையான கருவிகள் வாங்குவதற்காக வழங்கினார்.





கஸ்தூரிபா மருத்துவமனையின் மற்றொரு சிறப்பு அம்சம் யாதெனில் ட்யூபெக்டமி, வாஸக்டமி அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்களும் ஆண்களும், தங்கள் குழந்தைகள் இறந்துவிட்டாலோ அல்லது வேறு குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பினாலோ மீண்டும் ஒரு அறுவைச் சிகிச்சை செய்து குழந்தைப் பாக்கியத்தைப் பெறலாம். இம்முறை இங்குதான் முதன் முதலில் வெற்றிகரமாக செய்யப்பட்டது. இவ்வாறு கஸ்தூரிபா மருத்துவமனை பல சாதனைகளை நிகழ்த்திவருகிறது. இந்தியாவிலேயே அரசு சார்பற்ற பொது மருத்துவமனைகளில் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகளை அதிகமாக செய்து முதலிடத்தைப் பெற்றமையால் 1979-80 ம் ஆண்டுக்கான தேசிய விருதையும் இம்மருத்துவமனை பெற்றது. இப்படியாக கஸ்தூரிபா மருத்துவமனை தனது அன்றாடப் பணிகளையும் கவனித்துக் கொண்டு கிராமங்களில் மருத்துவ முகாம்களையும், கண்சிகிச்சை முகாம்களையும் நடத்திவருகிறது. அது தவிர பஞ்சம்பட்டி, காசிபாளையம், குரும்பபட்டி ஆகிய மூன்று கிராமங்களிலும் மூன்று கிளை மருத்துவமனைகளையும் நடத்தி வருகிறது. மேலும், பன்னிரெண்டு கிராமங்களில் சுகாதார மையங்களை ஏற்படுத்தி மருத்துவர்களை அனுப்பி சேவை செய்து வருகிறது. இம்மருத்துவமனை கிராமங்களில் ஐந்து பால்வாடிகளையும் ஐந்து குழந்தைகள் காப்பகத்தையும் நடத்தி வருகிறது. தற்போது கஸ்தூரிபா மருத்துவமனையில் இருநூறு படுக்கைகளும், பதினாறு உயர் பட்டப்படிப்பு பெற்ற மருத்துவர்களும், இருபத்தேழு நர்ஸ்களும் எட்டு துணை மருத்துவப் பணியாளர்களும் பணியாற்றி வருகிறார்கள்.

சௌந்திரத்தின் மருத்துவப் பணிகளில் மற்றொன்று கிராம ஆரோக்கியம் மற்றும் குடும்பநலத்திட்டமாகும். இது 1959ல் துவக்கப்பட்டது. எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தக்கூடிய ஆரோக்கியத் திட்டங்களை உருவாக்கும் இலட்சியத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது கிராம ஆரோக்கியம் சம்பந்தமாக பல முன்னோடித் திட்டங்களை உருவாக்க வேண்டும். அது நடைமுறைக்கு பொருத்தமுடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பது இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இத்திட்டம் இந்திய அரசு, தமிழ்நாடு அரசு, ஃபோர்டு நிறுவனம், இந்திய மருத்துவ ஆரய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கையாகும். பல முன்னோடித் திட்டங்களை வகுத்து அதனைச் செயல்படுத்த ஆத்தூர் பகுதியைப் பயன்படுத்திக்கொண்டது. இப்பகுதியின் சுகாதார நிலை, சுகாதாரத்தை முன்னேற்றக் கையாளப்படும் முறைகள், சுகாதார நிறுவனங்கள் ஆற்றும் பணிகள் போன்ற பல்வேறு புள்ளிவிவரங்களைத் தயாரித்து அதற்கேற்ப பல மாதிரித் திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இங்கு வகுக்கப்படும் முன் மாதிரித் திட்டங்களை கிராமத் தலைவர்கள் மூலம் செயல்படுத்துவதினால் நல்ல பயனுள்ளதாக

இருக்கும் என்பது இந்த கிராம ஆரோக்கிய மற்றும் குடும்பநல நிலையத்தின் கருத்தாகும். இம்முறை "தலைவர்கள் மூலம் அணுகுமுறை" அல்லது "காந்திகிராமமுறை" என்று அழைக்கப்பட்டது. ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலத் துறைகளில் முன்னோடித் திட்டங்களை அமைத்தல் நடைமுறைப்பணிகளை விளக்குதல், குடும்பநலப் பயிற்சி அளித்தல் போன்றவை இந்நிலையத்தின் முக்கிய நோக்கங்களாகும். சௌந்திரம்தான் இந்நிலையத்தின் தலைவராகவும் பணியாற்றி வந்தார். மத்திய அரசு இத்திட்டத்தை ஏற்று நடத்த விரும்பியது. எனவே, 1964ம் ஆண்டு முதல் இந்நிலையம் காந்திகிராம கிராம ஆரோக்கிய மற்றும் குடும்பநலப் பயிற்சி நிலையமாக செயல்படத் தொடங்கியது. இந்நிலையம் இந்தியாவிலுள்ள ஏழு பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இதுபோன்று மாநிலத்தில் அமைந்துள்ள மூன்று குடும்பநலத்திட்ட மையங்களுள் இதுவும் ஒன்றாகும். அத்தகைய சிறப்பு இந்த பயிற்சி நிலையத்திற்கு உண்டு.

இங்கு பல்வேறு, நீண்டகால மற்றும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. குறிப்பாக குடும்பநலம், குடும்பக்கட்டுப்பாடு, சுகாதாரக் கல்வி போன்றவைகளில் டிப்ளமோ மற்றும் சான்றிதழ் வகுப்புகள் நடத்தப்பட்டுவருகின்றன. இவை தவிர அடிப்படை சுகாதார ஆய்வாளர்கள், ஆரோக்கிய வழிகாட்டிகள், உயர்நிலை சுகாதார ஆய்வாளர்கள், குடும்பநல அதிகாரிகள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், கிராமத் தலைவர்கள் போன்றவர்களுக்கு குறுகிய காலப் பயிற்சிகளும் நடத்தப்படுகின்றன. மேலும், மத்திய மாநில அரசுகள் இயற்றும் புதிய குடும்பநலத் திட்டங்களை இப்பகுதியில் பரிசோதிப்பது,






கஸ்தூர்பா மருத்துவமனை பெற்ற விருதுகள்



அதன் பயன்களையும் விளைவுகளையும் ஆராய்ந்து அறிவது போன்ற பணிகளையும் இப்பயிற்சி நிலையம் செய்து வருகிறது. அதேபோன்று தாய்சேய் நலத்திட்டங்கள், குழந்தைகள் நோய்த் தடுப்பு, இயற்கையாக நோய் பரவுதலைத் தடுத்தல் போன்ற சேவைகளையும் இந்நிலையம் செய்துவருகிறது. குடும்பநலத்திட்டத்தில் இந்நிலையம் முழுமூச்சாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. விளக்கத் திரைப் படங்கள், சிலைடுகள் போன்றவைகளைத் தயாரித்து கிராம மக்களுக்குத் திரையிட்டுக் காண்பித்து, குடும்பநலத் திட்டங்களைக் கிராமங்களுக்குக் கற்றுக் கொடுக்கும் பணியையும் செய்கிறது. இதன் காரணமாக ஆத்தூர் பகுதியில் பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், உலகின் பல நாடுகளிலிருந்தும் பயிற்சியாளர்கள் வருகிறார்கள். இந்நிலையம் குடும்பநலம் சம்பந்தமான ஒரு ஆராய்ச்சிக் கூடமாகவும் செயல்பட்டு வருகிறது. இங்கு நடைபெறும் பயிற்சிகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் மத்திய, மாநில மற்றும் உலக சுகாதார நிறுவனம் போன்றவை மானியங்களை வழங்குகின்றன. இந்நிலையத்தின் வளர்ச்சி ஒவ்வொன்றிற்கும் சௌந்திரத்தின் அயராத பணியே காரணமாகும். இதன் காரணமாக இந்திய அளவில் பல சாதனைகளை நிகழ்த்தி ஏராளமான தேசிய விருதுகளைப் பெற்று வருகிறது.



கஸ்தூர்பா மருத்துவமனையின் தற்போதைய தோற்றம்

# அம்மாவும் ஔவை ஆசிரமமும்

சௌந்திரத்தின் ஒவ்வொரு பணிக்கும் அவரது தாயார் திருமதி லட்சுமி அம்மையார் ஊக்கமளித்து வந்தார் என்பதைக் கண்டோம். 1947ல் ஆரம்பிக்கப்பட்ட காந்திகிராமம் ஆலமரம் போல் தழைத்தோங்கி வளர்ந்து வந்தது. சௌந்திரத்தின் திருமணம் குறித்து அவரது குடும்பத்தில் வேறுபட்ட கருத்துகள் நிலவிவந்தாலும் கூட தனது அயராத உழைப்பால் பெற்றோர்களின் மனதிற்கு ஆறுதல் அளித்து ஊக்கமடையச் செய்தார். சௌந்திரம், திரு. இராமச்சந்திரனைத் திருமணம் செய்து கொண்டு சென்னையில் வாழ்ந்து வந்த சமயம் லட்சுமி அம்மையார்தான் முதன்முதலாக சென்னைக்கு வந்து சௌந்திரத்தின் வீட்டிற்குச் சென்று தன் ஆசிகளை வழங்கினார். சென்னை சென்று தன்மகளைச் சந்திக்கும் முன் கூட தன் கணவருக்கும், குழந்தைகளுக்கும் சௌந்திரத்தின் திருமணம் நியாயமானதே என்பதை எடுத்துக் கூறிவந்தார். சில நாட்களில் லட்சுமி அம்மையார் தனது குடும்பத்தினரின் மனநிலையை மாற்றியமைத்து வழக்கம்போல் சௌந்திரத்தின் மீது அன்பு செலுத்தச் செய்தார். இவ்வாறெல்லாம் சௌந்திரத்தின் புரட்சிகரமான செயல்களுக்கெல்லாம் பின்னணியாக அவரது தாயார் விளங்கிவந்தார்.



Dr. G. ராமச்சந்திரன் அவர்களுடன் அம்மா அவர்கள்



சௌந்திரத்தின் தாயார் மட்டுமல்லாது, அவரது தகப்பனார் சுந்தரம் அய்யங்காரும் தனது மகளின் செயல்களையும் சாதனைகளையும் கண்டு பெருமைப்பட்டார். தன் மகள் காந்திகிராமத்தை நிறுவி அதன்மூலம் நூற்றுக்கணக்கான அனாதைகளுக்கும் ஆதரவற்ற பெண்களுக்கும் கல்வியளித்து வாழ்வில் ஒளியேற்றி வைக்கிறார் என்பதை எண்ணிப் பெருமிதம் கொண்டார். தன் மகள் ஏதாவது உதவி கேட்டு, அதற்கு இல்லையென்று மறுப்புக் கூற இயலாத அளவிற்கு தன் மகளின் சேவையில் தன்னையே ஆட்படுத்திக் கொண்டார்.

ஒரு நாள் லட்சுமி அம்மையார் தன் மகள் சௌந்திரத்தை நேரில் அழைத்து காந்திகிராமத்தின் பணிகளைப் பற்றி கேட்டறிந்தார். அப்போது "அதிகம் படிக்க முடியாத விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், பணத்தட்டுப்பாட்டால் விவாகமாகாத பெண்கள் போன்றவர்களுக்கு "நீ என்ன செய்கிறாய்? இவர்கள் எல்லோரும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று கல்லூரிக்குப் போக முடியுமா? வயது வந்த பெண்கள் எட்டாவது வகுப்பிற்கு மேல் படிக்க முடியாதா? பெண்கள் படித்து ஆசிரியைகளாக வளரமுடியுமா? உன்னால் பெண்களுக்கென ஆசிரியர் பயிற்சி துவங்க முடியுமா?" என்று தன் மகளிடம் கேள்விகளைக் கேட்டு திணறடித்தார். இதிலிருந்து பெண்கள் முன்னேற்றத்தில் லட்சுமி அம்மையார் கொண்டிருந்த ஆர்வம் நன்கு புலனாகிறது. தன் தாயாரின் கேள்விகளுக்கு சௌந்திரம் தான் செய்து வரும் பணிகளை விளக்கிக் கூறினார். இருப்பினும் தாயாரின் கேள்விக் கணைகள் சௌந்திரத்தை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டின. அதற்கு ஒரு சில காரணங்களும் இருந்தன. காந்திகிராமத்தின் ஊழியர்களும் மாணவர்களும் ஆண்களாகவும் பெண்களாகவும் இருபாலரும் இருந்து வந்தனர். ஆனால், பெண்கள் மட்டுமே சேவை செய்யும் ஸ்தாபனமாக காந்திகிராமத்தை உருவாக்க இயலவில்லையே என்ற ஒரு ஆதங்கம் சௌந்திரத்தின் மனதில் ஏற்பட்டது.

ஒருநாள் சுந்தரம் அய்யங்கார் தன் மகளிடம் "நீ மதுரை மாவட்டத்தில் காந்திகிராமம் அமைத்தாய். அது நன்கு தழைத்து பயனளித்து வருகிறது. மதுரை மாவட்டத்திலுள்ள பெண்கள் இதனால் நன்கு பயனடைந்து வருகிறார்கள். எனவே, இதுபோன்ற ஸ்தாபனம் ஒன்றை நீ ஏன் நமது ஜில்லாவில் அமைக்கக்கூடாது? தண்ணீர் இல்லாத காட்டில் காந்திகிராமம் அமைத்து சேவை செய்துவரும் நீ, நமது நெல்லை மாவட்டத்தில் செல்வம் கொழிக்கும் பூமியில் ஏன் ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பிக்கக்கூடாது?" எனக் கேட்டார். சௌந்திரத்தின் தாயாரும் நெல்லை மாவட்டத்தில் பெண்கள் முன்னேற்றத்திற்கென ஒரு ஸ்தாபனத்தை உருவாக்க வேண்டுமென சௌந்திரத்திடம் கூறிவந்தார். தனது பெற்றோர்களின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யத் தகுந்த நேரத்தை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார்.

இத்தருணத்தில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சிவசைலம் என்ற கிராமத்திலிருந்த ஒரு பெரியவர் சௌந்திரத்தைக் காணவந்தார். சிவசைலம் ஒரு கிராமமாக இருப்பினும் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய ஊர். இவ்வூரைச் சுற்றிலும் எங்கும் பசுமையாகக் காட்சிதரும் நெல் வயல்கள், தெற்கிலும் மேற்கிலும் மேற்குத் தொடர்ச்சி மலையின் எழில்மிகு தோற்றம் காண்போரைத் தன்வயப்படுத்தும் வண்ணம் நிமிர்ந்து நிற்கின்றன. அத்திரி சுவாமிகள் என்ற முனிவர் இம்மலையில் தவம் செய்ததால் இதற்கு அத்திரிமலையென்றும் பெயர் வழங்கப்பட்டது. கடனா நதி என்ற ஆறு இம்மலையில் உருவாகி இப்பகுதியிலுள்ள நிலங்களை பொன்விளையும் பூமியாக மிளிரச் செய்கிறது. இந்த நதிக்கரையில்தான் சிவபெருமான் சைலப்பர் என்ற திருநாமத்தில் கொலுவீற்றிருக்கும் அழகிய திருக்கோவில் அமைந்து இவ்வூருக்கு அணி சேர்க்கிறது. இத்திருக்கோவில் தென்னகத்தில் சிறப்பு மிக்கதாகும். இத்தகைய எழில்மிகு பூமியில் அமைந்துள்ள கிராமம்தான் சைலப்பரின் நாமத்தைத் தாங்கியிருக்கும் சிவசைலமாகும்.

சௌந்திரத்தைக் காணவந்த பெரியவரின் பெயர் நல்லசிவன்பிள்ளை ஆகும். சிவசைலத்தில் இவர் செல்வத்திலும் குணத்திலும் சிறந்து விளங்கினார். தன்னுடைய நிர்வாகத்தின் கீழ் அவ்வூரில் ஒரு பள்ளி ஒன்றையும் அதனுடன் இணைந்த மாணவர் விடுதி ஒன்றையும் நடத்தி வந்தார். மாணவர்கள் குறைவாக இருந்த ஆரம்ப காலத்தில் இதனை நிர்வகிப்பது எளிதாக இருந்தது. ஆனால், வருடங்கள் செல்லச்செல்ல மாணவர்களின் எண்ணிக்கை பள்ளியிலும் விடுதியிலும் அதிகரித்துக்கொண்டே சென்றது. இப்பள்ளி 1945 ல் தொடங்கப்பட்டதாகும். அக்கால கட்டத்தில் அரசிடமிருந்து எவ்வித உதவியும் கிடையாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் பள்ளியை நடத்துவது கஷ்டமாக இருந்தது. அப்போது சௌந்திரத்தையும் அவர் நடத்திவரும் காந்திகிராமத்தையும் பற்றிக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க வந்தார். சிவசைலத்தில் நடைபெற்றுவரும் பள்ளிக்கு உதவிசெய்யுமாறும், மேலும் பல கல்வி நிலையங்களை ஆரம்பிக்கும்படியும் அதற்கான உதவிகளைத் தான் செய்துதரத் தயாராக இருப்பதாகவும் திரு. நல்லசிவன்பிள்ளை சௌந்திரத்திடம் கூறினார். அவரும் தனது முழு உதவிகளையும் செய்துதருவதாக உறுதியளித்தார்.

திரு. நல்லசிவன்பிள்ளையைச் சந்தித்த சில தினங்களில் அதாவது 1954 ம் அண்டு தொடக்கத்தில் காந்திகிராம வளர்ச்சி நிதிக்காக குமாரி சுதா அவர்களின் நடனக்கச்சேரி திருநெல்வேலியில் நடைபெற்றது. அப்போது திருநெல்வேலியில் ஒரு சேவா நிலையம் அமைக்க வேண்டுமென பல பெரியவர்கள் சௌந்திரத்திடம் கேட்டுக்கொண்டார்கள். நடனக்கச்சேரி முடிந்து வீட்டிற்கு வந்தவுடன் சுந்தரம் அய்யங்கார் நடனக் கச்சேரி பற்றி தன் மகளிடம் கேட்டறிந்தார்.



அப்போது, "திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு சேவா நிலையம் அமைக்க வேண்டுமெனப் பலர் விரும்புகிறார்கள். அதோடுமட்டுமல்லாது சிவசைலம் என்ற கிராமத்திலிருந்து ஒரு பெரியவர், சேவா நிலையம் ஆரம்பிக்கத் தேவைப்படும் உதவிகளைச் செய்து தருவதாகக் கூறினார்" எனத் தன் தந்தையிடம் சௌந்திரம் கூறினார். சௌந்திரத்தின் வார்த்தைகள் சுந்தரம் அய்யங்காருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தன. "சிவசைலம் மிக அழகிய ஊர். நீர்வளம் நிரம்பிய ஊர். அமைதி தவழும் பசுமையான கிராமம். நான் பேட்டை இந்துக் கல்லூரியில் படிக்கும்போது அக்கிராமத்திற்குச் சென்றிருக்கிறேன். ஒரு சேவா நிலையம் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடம் சிவசைலம்" எனத் தன் மகளிடம் அவ்வூரின் பெருமைகளை எடுத்துக் கூறினார். தாயாரும் அவ்வாறே கூறி சௌந்திரத்தை உற்சாகப்படுத்தினார்.

சௌந்திரமும் அவரது தகப்பனாரும் சிவசைலம் சென்று இடத்தைப் பார்வையிட்டனர். சௌந்திரத்திற்கு இடம் மிகவும் பிடித்திருந்தது. குறிப்பாக பெண்களுக்கான ஸ்தாபனம் நடத்துவதற்கு தகுதியான இடமென அவர் கண்டறிந்தார். உடனடியாகத் தனது சேவையை ஆரம்பிக்க விரும்பினார். திரு.நல்லசிவன்பிள்ளைக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை. சௌந்திரத்திடமிருந்து எப்படிப்பட்ட பதில் வருமோ எனக் காத்திருந்தவருக்கு உடனடியாக சேவாநிலையம் ஆரம்பிக்க வேண்டுமென அவர் கூறியதைக் கேட்டு ஆனந்தமடைந்தார். உடனடியாகத் தனக்குச் சொந்தமான வீடு ஒன்றை சௌந்திரத்தின் பணிகளுக்காக வழங்கினார். 1954 ஆகஸ்ட் 15 ம் தேதி கிராம மருத்துவ சேவா நிலையத்தை சௌந்திரம் அந்த வீட்டில் துவங்கினார். அதன் பொறுப்புகள் அனைத்தும் சென்னை திருவான்மியூரில் தன்னிடம் பயிற்சிபெற்ற இரு சேவகிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பெண்களுக்குக் கல்வியும், தகுந்த பயிற்சியும் அளிக்க பெண்களுக்கான தனி ஸ்தாபனம் நிறுவுவதற்கான வேலைகளையும் சௌந்திரம் கவனிக்க ஆரம்பித்தார். அதற்குத் தேவையான நிலங்களை திரு. நல்லசிவன்பிள்ளை, திரு. அருணாசலம்பிள்ளை மற்றும் சிவசைல ஊர் மக்கள் நன்கொடையாக வழங்கினார்கள். நிலம் கிடைத்தபின் கிராமங்கள் தோறும் நிதிவசூல் செய்யப்பட்டது. சில கட்டிடங்கள் கட்டப்பட்டன. 1954 செப்டம்பர் 13 ம் தேதி ஆவணிப் பௌர்ணமி தினத்தன்று, அப்போது சென்னை மாநில விவசாய மற்றும் சமூகநல அமைச்சரான திரு.பக்தவச்சலம் அவர்கள் ஸ்தாபனத்தைத் திறந்து வைத்தார். இளம் வயது முதலே சங்ககாலப் பெண்புலவராகவும் கல்விமானாகவும் விளங்கிய ஔவை பிராட்டியின் மீது சௌந்திரத்திற்கு அளவற்ற பற்று உண்டு. மேலும் ஆரம்பிக்கவிருக்கும் ஸ்தாபனம் பெண்களுக்காகவே செயல்படவிருப்பதால் இதற்கு "ஔவை ஆசிரமம்" என்று சௌந்திரம் பெயரிட்டார். ஔவை ஆசிரமம் பௌர்ணமி நன்னாளில்

ஆரம்பிக்கப்பட்டது. அந்தப் பௌர்ணமி நாள் தான் லட்சுமி அம்மையாரின் பிறந்த நாள். ஔவை ஆசிரமம் தொடங்கப்பட்டதால் தாயும் மகளும் மிகவும் சந்தோஷமடைந்தனர்.



குத்துவிளக்கேற்றி வைக்கும் குலவிளக்கு அம்மா அவர்கள்

ஔவை ஆசிரமத்தைக் காந்திகிராமத்தின் செல்ல மகள் என்று கூறலாம். இது பெண்களால், பெண்களுக்காக நடத்தப்படும் ஸ்தாபனமாகும். நாட்டிற்கு பல துறைகளிலும் சேவைசெய்ய பயிற்சி பெற்ற பெண்கள் ஏராளம் தேவைப்படுகிறார்கள். ஆகவே கிராமங்களிலிருக்கும் பெண்களுக்கு கல்வியைக் கொடுத்து, பின் அவர்களுக்கு தொழிற் பயிற்சி, ஆசிரியர் பயிற்சி, மருத்துவப் பயிற்சி முதலியவைகள் வழங்குவதே ஔவை ஆசிரமத்தின், அதாவது சௌந்திரத்தின் லட்சியமாகும். இதற்கான சிறப்புத்திட்டம் ஒன்றை தீட்டிச் செயல்படுத்தினார். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பெண்களுக்கு இங்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன. குறிப்பாக விதவைகள், திக்கற்ற பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இத்தகைய பெண்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது கல்வியைத் தொடரச் செய்து எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கச் செய்வது. அதன் பின் அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிப்பது ஔவை ஆசிரமத்தின் முக்கியப் பணியாக மேற்கொள்ளப்பட்டது. மாணவிகள் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற பின் ஆசிரியைப் பயிற்சி, தையல், கிராம சேவை, மருத்துவ சேவைகளுக்கான பயிற்சி பெற காந்திகிராமத்திற்கு அனுப்பப்பட்டார்கள். ஏட்டுப்படிப்பு மட்டுமின்றி நூற்பு, நெசவு, தையல் போன்றவற்றிலும் பயிற்சி கொடுக்கப்பட்டது. மாணவிகளின் திறமைகளை வெளிப்படுத்த கலாச்சார வளர்ச்சி சாந்தி சேனைப் பயிற்சி, தேசிய விழாக்கள் மற்றும் பொது சபைகளில் சொற்பொழிவாற்றும் பயிற்சி ஆகியவைகளும் அளிக்கப்பட்டு வந்தன.



பெண்களும் நன்றாகப் படித்து ஆசிரியைகளாக வரவேண்டும் என்பது லட்சுமி அம்மையாரின் விருப்பமாகும். தனது தாயாரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் 1954 ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஒன்றை சிவசைலத்தில் ஆரம்பிப்பதற்காக தமிழ்நாடு அரசுக்கு சௌந்திரம் விண்ணப்பம் செய்தார். வெகுநாட்கள் காத்திருந்தும் அரசிடமிருந்து எவ்விதப் பதிலும் இல்லை. இதற்கிடையில் லட்சுமி அம்மையார் 1959 ஜூலை மாதம் இயற்கை எய்தினார். தனது தாயார் விருப்பமுடன் எதிர்பார்த்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்க முடியவில்லையே என சௌந்திரத்திற்கு சிறிது வருத்தம். சரியாக ஒரு வருடம் கழித்து ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் வந்தது. இப்பொழுதாவது அனுமதி கிடைத்ததே என மகிழ்ச்சி. தனது தாயாரின் பெயரிலேயே அவரது நினைவாக டி.வி.எஸ். லட்சுமி ஆதார ஆசிரியை பயிற்சிப் பள்ளி 1960 ஜூலையில் தொடங்கப்பட்டது. இது பெண்களுக்கென தனியாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிப் பள்ளியாகும். இங்கு ஔவை ஆசிரமத்தில் படித்த மாணவிகள் மட்டுமின்றி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவிகள் வந்து பயிற்சி பெற்றனர். இங்கு பயிற்சி பெற்ற மாணவிகள் உடனுக்குடன் அரசுப் பள்ளிகளில் பணியில் அமர்த்தப்பட்டனர் இதனால், வேலை வாய்ப்புத் தாராளமாக கிடைத்தது. இப்பயிற்சிப் பள்ளியை நடத்துவதற்குத் தேவையான நிதியின் பெரும் பகுதியைச் சௌந்திரம் தனது தந்தையிடமிருந்தே பெற்றார்.

ஔவை ஆசிரமத்தின் மற்றொரு பகுதி சாந்தி செவிடு–ஊமைப் பள்ளியாகும். இப்பள்ளி 1956ம் ஆண்டு செப்டம்பர் 20 ம் தேதி துவங்கப்பட்டது. 1977 ல் இப்பள்ளிக்கூடம் காந்திகிராமத்துடன் இணைக்கப்பட்டது. சௌந்திரம் இப்பள்ளிக் குழந்தைகள் மீது மிகவும் பிரியமாக இருப்பார். சௌந்திரம் சிவசைலத்திற்கு வரும்போதெல்லாம் முதலில் இப்பள்ளிக்குவந்து குழந்தைகளைப் பார்த்துவிட்டுத் தான் மற்ற வேலைகளைக் கவனிப்பார். இங்கு படிக்கும் மாணவர்களுக்கு காது கேட்காது, வாயும் பேச முடியாது. பெரும்பாலும் எல்லாக் குழந்தைகளுமே ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். இம்மாணவர்களுக்கு உணவு, உடை, கல்வி அனைத்தும் இலவசமாக வழங்க சௌந்திரம் ஏற்பாடு செய்தார். இம்மாணவர்களுக்கு கல்வியுடன் நெசவு, தையல், பனை ஓலைப் பொருட்கள் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மாணவர்களின் கல்விக்குத் தேவையான கருவிகள், உதவிப் பொருட்கள், படம்காட்டும் புரஜெக்டர்கள் போன்றவை வாங்கப்பட்டுள்ளன. இங்கு படித்துப் பயிற்சி பெற்ற மாணவர்கள், அரசு வேலைகளிலும் சுயவேலைகளிலும் ஈடுபட்டு தன்னிறைவோடு வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

இப்பள்ளிக்கு சௌந்திரம் வரும்போது மிகச் சந்தோஷமாக இருப்பார். குழந்தைகளை அழைத்து தன் மடியில் உட்காரவைத்து

விளையாடுவார். இங்கு இருக்கும் நேரம் முழுவதும் மிகுந்த சந்தோஷத்தோடு குழந்தைகள் முன் காட்சி தருவார். இப்பள்ளியை விட்டு வெளியே வந்ததும் ஆழ்ந்த வேதனைப்படுவார். ஆண்டவன் இவ்வளவு அழகான குழந்தைகளை இப்படிப் படைத்து விட்டானே என வருந்துவார். இப்பள்ளி மாணவர்களுக்கு எவ்வித குறையும் வைக்கக்கூடாது என்பதற்காக தாராளமாக நிதியுதவி செய்து வந்தார். வாழ்க்கை முழுவதும் சௌந்திரத்தின் நெஞ்சில் இடம் பெற்று வந்த ஸ்தாபனங்களில் இப்பள்ளியும் ஒன்றாகும்.

காந்திகிராமத்தில் இயங்கிவரும் குழந்தைகள் இல்லம் போன்றே ஔவை ஆசிரமத்திலும் ஒரு குழந்தைகள் இல்லம் செயல்பட்டு வருகிறது. தாய்தந்தையில்லாத அனாதை, ஆதரவற்ற குழந்தைகள் இவ்வில்லத்தில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இங்குள்ள மாணவ மாணவியருக்கு எல்லாமே இலவசம்தான். பத்தாம் வகுப்பு வரை மாணவ மாணவியர்களுக்கு ஔவை ஆசிரமத்துடன் இணைந்துள்ள அத்திரி கலா நிலையத்தில் கல்வி அளிக்கப்படுகிறது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் அருகிலுள்ள ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி மேல்நிலைப் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். சிவசைலத்திலிருந்து ஆழ்வார்குறிச்சி சென்று பயிலும் மாணவர்களுக்கு மிதி வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவிகள் பள்ளிப் பேருந்துகளில் சென்று படித்து வருகின்றார்கள். ஆதரவற்ற மாணவ மாணவிகள் மேல்நிலைப்பள்ளியில் தேர்ச்சி பெற்றதும் கல்லூரிக் கல்விக்காக காந்திகிராமத்தில் சேர்க்கப்படுகின்றனர். காந்திகிராமத்திலுள்ள குழந்தைகள் இல்லத்தின் மீது சௌந்திரம் எவ்வளவு பாசம் வைத்திருந்தாரோ அதே அளவுப் பாசம், சிவசைலக் குழந்தைகள் இல்லத்தின் மீதும் வைத்திருந்தார். இங்குள்ள ஒவ்வொரு குழந்தை மீதும் அவரது கவனம் எப்போதும் இருந்து வந்தது. காந்திகிராமத்தில் இருந்துகொண்டு இங்குள்ள ஒவ்வொரு குழந்தையின் பெயரைக் குறிப்பிட்டு "அந்தப் பெண் இப்போது பெரிய பெண்ணாக இருப்பாளே! அந்தப் பெண் ஒரு தாவணி கேட்டாள். கொடுத்து விட்டீர்களா? அந்தப் பையனுக்குப் போதிய சட்டைகள் இல்லையே என்று கூறினான். வழங்கப்பட்டு விட்டனவா? அந்தப் பையன் சரியாக சாப்பிட மாட்டானே? இப்போது எப்படியுள்ளான்...? என்று வந்தவரிடம் மாறிமாறிக் கேள்விகள் கேட்டு தன் குழந்தைகளின் நலனை விசாரிப்பார். இதிலிருந்து ஒவ்வொரு குழந்தையின் மீதும் சௌந்திரம் எப்படி அன்பு செலுத்தி வந்துள்ளார் என்பது நன்கு புலனாகிறது.

ஔவை ஆசிரமக் குழந்தைகள் இல்லத்திற்குத் தேவையான துணிகளையும் சட்டைகளையும் காந்திகிராமத்திலிருந்து பெரிய பொட்டலமாக சௌந்திரம் அனுப்பிவைப்பார். அந்தப் பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தால் ஏராளமான புத்தாடைகள் இருக்கும். அந்தப் புத்தாடைகளில் ஒவ்வொரு குழந்தையின் பெயரும் எழுதி



ஒட்டப்பட்டிருக்கும். யார் பெயர் எந்த ஆடையில் ஒட்டப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு அது வழங்கப்படும். இவ்வாறு குழந்தைகளின் பெயரை சௌந்திரமே எழுதி ஒட்டியிருப்பார். அதாவது, ஒவ்வொரு குழந்தையின் வயது, உயரம், நிறம், பருமன் போன்ற விவரங்கள் அவரது மனதில் பதிந்திருந்தது. எனவே வயதிற்கேற்ப துணிகளைத் தேர்ந்தெடுப்பார். உயரத்திற்கும் பருமனுக்கும் ஏற்ப தைக்கச் செய்வார். அதன் பின் இந்தப் பெண் இந்த நிறம். எனவே, இத்தகைய ஆடைகளை அணிந்தால் நன்றாக இருப்பாள். இவ்வாறு இருநூறு மைல்களுக்கு அப்பாலிருக்கும் காந்திகிராமத்திலிருந்து கொண்டு ஒவ்வொரு குழந்தையையும் மனதில் நினைத்து அழகு பார்த்து மகிழ்வார். குழந்தைகளின் கல்வியில் மட்டுமின்றி நடை, உடை, சுகாதாரம் போன்றவற்றிலும் சௌந்திரம் எத்தகைய சிரத்தை எடுத்துக் கொண்டிருந்தார் என்பது இதன் மூலம் நன்கு அறிய முடிகிறது. அதனால்தான் சௌந்திரம் வருகிறார் என்றால் அன்று ஔவை ஆசிரமம் விழாக்கோலமாக காட்சியளிக்கும். ஒவ்வொரு குழந்தையின் முகத்திலும் மகிழ்ச்சி பொங்கும். சௌந்திரம் காரை விட்டு இறங்கியவுடன் குழந்தைகள் அனைவரும் ஓடிச்சென்று தங்களின் தாயைக் கட்டி அணைத்துக் கொள்வார்கள். அக் குழந்தைகளை அன்போடு தழுவிக்கொள்ளும் அவ் அன்னையின் ஆனந்தத்தை விவரிக்க இயலுமோ! ஒவ்வொரு குழந்தையையும் தட்டிக் கொடுத்து கொஞ்சி மகிழ்வார். இக்காட்சி காண்போர் மனதை உருக்கிவிடும். சாதி, இன, மத, மொழி, வேற்றுமை என்றால் என்னவென்று இங்கு யாருக்குமே தெரியாது.

காந்திகிராமத்தில் உள்ளது போன்றே இங்கும் ஒரு சேவிகாசிரமும் உள்ளது. விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு வாழ்வளிக்கும் இல்லமாக இது விளங்குகிறது. இவர்கள் தங்களது பள்ளிப் பருவத்தில் தொடர முடியாத கல்வியைத் தொடரவும், ஈ.எஸ்.எல்.சி. தேர்வு எழுதவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் காந்திகிராமத்திலுள்ள சேவிகாசிரமத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு உயர்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரையிலும் ஔவை ஆசிரமத்தின் மூலம் சுமார் ஐநூறு பெண்கள் இங்கு சேர்ந்து பயனடைந்து பலர் ஆசிரியைகளாகவும், மருத்துவத் தாதிகளாகவும், கிராமசேவிகாக்களாகவும், தையல் ஆசிரியைகளாகவும் பல்வேறு பகுதிகளில் பணியாற்றி வருகிறார்கள். சேவிகாசிரமத்திலுள்ள பெண்களுக்கும், அருகிலுள்ள கிராமங்களிலுள்ள பெண்களுக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் 1980 ம் ஆண்டு பாலியஸ்டர் இழை நூற்பு மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தில் சுமார் முப்பது பெண்களுக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர இம்மையம் ஒரு நூற்பு பயிற்சி

நிலையமாகவும் செயல்பட்டு வருவதால் மாணவ மாணவிகளுக்கு நூற்பு பயிற்சியும் வழங்கப்படுகிறது.

சிவசைலத்தில் 1954 ஆகஸ்ட் 15 ம் நாள் கிராம மருத்துவ சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்டது என்று பார்த்தோம். இந்த சேவா நிலையம் சௌந்திரத்திடம் நேரடிப் பயிற்சி பெற்ற சேவகிகள் இருவரின் பொறுப்பில் விடப்பட்டது. இவர்களது வேலை குழந்தைகள் நலன், பால்வாடிகள் அமைத்தல், மாதர் முன்னேற்றம், கிராம வைத்திய சேவை போன்றவைகளாகும். இவர்கள் அருகிலுள்ள கிராமங்களுக்குச் சென்று சேவை செய்து வந்தார்கள். அப்போதெல்லாம் பஸ் வசதிகள் கிடையாது. மேலும், கிராமங்கள் அனைத்தும் இயற்கையிலே உயர்ந்த மலைப்பாங்கான இடங்களிலும், சில கிராமங்கள் தாழ்ந்த வயல்வெளிப் பிரதேசங்களிலும் அமைந்துள்ளமையால், ஏற்றத்திலும் இறக்கத்திலும் பல மைல்கள் நடந்து சென்று சேவை செய்து வந்தார்கள். மழைக் காலங்களில் இப்பகுதியில் உள்ள ஆறுகளிலும், ஓடைகளிலும் திடீரென மலையில் பெய்யும் மழையின் காரணமாக நீர் பெருக்கெடுத்து ஓடிவரும். அச்சமயங்களில் மிகுந்த சிரமத்துடன் ஆறு, ஓடைகளைக் கடந்து சென்று பணியாற்றி வந்தனர். குறிப்பாக சிவசைலத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் சௌந்திரத்தின் ஊழியர்கள்தான் மருத்துவ வசதியைச் செய்துதர வேண்டியதிருந்தது. காரணம் அருகில் மருத்துவமனைகள் எதுவும் கிடையாது. அம்பாசமுத்திரத்திற்கு 10 மைல் தூரம் நடந்து செல்ல வேண்டும். மேலும், முஸ்லீம்கள் அதிகமாக இப்பகுதியில் வாழ்ந்து வந்ததால் அவர்கள் வெளியில் சென்று மருத்துவம் செய்து கொள்ள விரும்பாது பல துன்பங்களுக்கு உள்ளாகி வந்தனர். இப்படிப்பட்ட கிராமங்களுக்குச் சென்று மருத்துவ் சேவை செய்து வந்ததால் அங்குள்ள பெண்கள் மிகவும் மகிழ்ந்து சேவகிகளை வரவேற்றனர்.

ஆரம்பத்தில் சிவசைலத்தில் மட்டுமே சேவா நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. அதன்பின் குறுகிய காலத்திற்குள் கிராம சேவகிகளின் சேவையைக் கண்டு பாராட்டித் தங்கள் கிராமங்களிலும் சேவை செய்யுமாறு அருகிலுள்ள கிராம மக்கள் வேண்டிக் கொண்டனர். அதன் காரணமாக ஆழ்வார்குறிச்சி, பொட்டல் புதூர், இரவணசமுத்திரம், பிரம்மதேசம் ஆகிய கிராமங்களிலும் கிராம சேவா மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கான செலவை பொது மக்களில் சிலர் செய்து கொடுத்தாலும், மேற்கொண்டு தேவைப்படும் பணம் கிராமம் கிராமமாகச் சென்று நன்கொடையாக வசூல் செய்யப்பட்டது. நிதி வசூலிப்பதில் சௌந்திரம் கைதேர்ந்தவர். ஒரு ஊருக்குச் சென்றால் எப்படியும் ஒரு கணிசமான தொகையை வசூல் செய்துதான் திரும்புவார்கள். அதேபோன்று கிராம சேவிகாக்களையும் பல கிராமங்களுக்கு அனுப்பி நிதிவசூலிக்கச் செய்வார். கிராமங்களுக்குச் செல்ல சில சேவகிகள் தயங்குவார்கள். ஆனால், அம்மா ஏதாவது கூறுவார்களோ என எண்ணி மறுப்பும் தெரிவிக்கமாட்டார்கள். "ஏன் தயங்குகிறீர்கள்? கிராமங்களுக்குச் சென்று பல பெரியவர்களைச் சந்தித்து நமது பணிகளைப் பற்றி எடுத்துக் கூறுங்கள். அதன்பின் அவர்களே தாராளமாக நிதி கொடுப்பார்கள். நம்பிக்கையோடு செல்லுங்கள்" என சௌந்திரம் கூறுவார் "அம்மா.... கிராமங்களுக்குச் சென்றால் திரும்புவது இரவு நெடு நேரமாகிவிடும்"...... என்பது ஒரு சேவகியின் பணிவான குரல். "இரவானால் என்ன? கிராமத்திலுள்ள ஒரு வீட்டில் "அண்ணா இன்று நான் இங்குதான் தங்கப்போகிறேன்" என்று வீட்டிலுள்ள பெரியவர்களிடத்தில் கூறிக்கொண்டு தங்க வேண்டியதுதானே? கிராம மக்கள் அனைவரும் நமக்கு வேண்டியவர்கள் தான். நாம்தாம் சகோதர சகோதரி உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று சௌந்தரம் சட்டென்று பதில் கூறுவார். இதற்குப் பிறகும் யாராவது தயங்குவார்களா? உடனே இடத்தைக் காலி செய்துவிட்டு வசூலுக்குச் செல்வார்கள்.

இவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டு நிதிவசூல் செய்து கிராமங்களில் கிராம சேவா மையங்கள் உருவாக்கப்பட்டன. சௌந்தரத்தின் சேவையைக் கண்டு சிலர் ஏளனம் செய்தனர். அதே சமயம் பலர் பாராட்டவும் செய்தனர். ஒரு நாள் ஆழ்வார்குறிச்சியில் நாடோடியாக வந்த ஒரு பெண் பிரசவ வேதனையால் அவதியுற்றாள். அதனையறிந்த சேவிகாக்கள் உடனே சென்று அருகிலிருந்த ஒரு மண்டபத்திற்குள் அப்பெண்ணைத் தூக்கிவந்து பிரசவம் பார்த்து தாயையும் சேயையும் காப்பாற்றினர். இச்சேவையைக் கண்டு மகிழ்ந்த அவ்வூர் பெரியவர் ஒருவர் தானாகவே முன்வந்து ஆழ்வார்க்குறிச்சியிலுள்ள கிராம சேவா மையத்திற்கு மாதம் இருபத்தி ஐந்து ரூபாய் நன்கொடையும் ஔவை ஆசிரமத்திற்கு ஆண்டு தோறும் இரண்டு கோட்டை நெல்லும் தருவதாக உறுதிகூறி, அவ்வாறே உதவி செய்து வந்தார்.

இவ்வாறாக நாளுக்குநாள் கிராம மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் சௌந்தரத்திற்கும் அவரது ஊழியர்களுக்கும் கிடைக்கத் தொடங்கின. இதனால் மேலும் பல புதிய மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. குறிப்பாக திருநெல்வேலியைச் சுற்றியுள்ள கஸ்தூரிரெங்கபுரம், தேவநல்லூர், முன்னீர்ப்பள்ளம், திடியூர், தச்சநல்லூர், கங்கைகொண்டான், பாலாமடை, உக்கிரங்கோட்டை ஆகிய இடங்களிலெல்லாம் கிராம சேவா மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஒவ்வொரு மையத்திலும் ஒரு மருத்துவசேவகியும், ஒரு கிராமசேவகியும் வேலை செய்து வந்தார்கள். இச்சேவகிகள் காலையில் அவ்வூர்க் குழந்தைகளை அழைத்துவந்து, பள்ளிக்கூடம் நடத்துவார்கள். மாலை வேளைகளில் ஒவ்வொரு கிராமமாகச் சென்று காப்பிணிப் பெண்கள், தாய்மார்கள் போன்றவர்களைச் சந்தித்து அவர்களுக்கு வேண்டிய சுகாதாரம், உணவு, மருத்துவம் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளைக்

கூறிவருவார்கள். இரவு நேரங்களில் கிராமங்களிலுள்ள பெரியவர்களுக்கு முதியோர் கல்வி நடத்துவார்கள்.

சம்பன்குளம் என்ற ஒரு கிராமம். இங்கு முஸ்லீம் மக்கள் அதிகம் வாழ்ந்துவந்தார்கள். அவர்களுக்கு விவசாயம், பாய்நெசவு போன்றவைகள்தான் முக்கியத் தொழில். பெண்களை வீடுகளை விட்டு வெளியே அனுப்புவதே கிடையாது. கல்வியில் அவ்வளவு பின்தங்கிய நிலை. இந்த ஊரிலுள்ள ஆண்களில் பெரும்பாலோர் வியாபாரம் நிமித்தமாக வெளியூர்களில் வசித்துவந்தனர். அவர்கள் வீட்டுச் செலவிற்காக மாதந்தோறும் பணம் அனுப்புவார்கள். வீட்டிலுள்ள பெண்கள் கைரேகை (கைநாட்டு) வைத்துத்தான் பணம் பெற்று வந்தனர். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கு கிராமசேவா நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இம்மையத்தில் இரவில் முதியோர் கல்வி வகுப்புகளை சேவகிகள் நடத்தி வந்தார்கள். இப்பள்ளியில் முஸ்லீம் பெண்கள் திரளாக வந்து கல்வி பயின்றனர். உற்சாகத்தோடு பயின்றதன் காரணமாக எழுதவும், வாசிக்கவும் எளிதில் கற்றுக் கொண்டார்கள். தினந்தோரும் தவறாது வருகைதந்து படிக்கலாயினர். இதன் பயனாக ஒரு சில மாதங்களுக்குள் ஊரிலுள்ள பெரும்பாலான பெண்கள் எழுத்தறிவு பெற்றனர். இதற்கு முன் கைரேகைவைத்துப் பணம் பெற்றுவந்த பெண்கள் இப்போது கையெழுத்துப்போட்டு பணம் பெற்றனர். இவ்வாறு சம்பன்குளத்தில் ஒரு எழுத்தறிவுப் புரட்சியே ஏற்பட்டது. ஊர் மக்கள் அனைவரும் சௌந்திரத்தையும் அவரது ஊழியர்களையும் மனமார வாழ்த்திப் பாராட்டினர். கிராம சேவிகாக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தனர். இதனைத் தொடர்ந்து அதே ஊரில் குழந்தைகளுக்கான பால்வாடி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இப்பால்வாடிகள் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு, இலவச மருத்துவ சிகிச்சை போன்றவை வழங்கப்பட்டன. மேலும் இரவணசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களிலும் இதுபோன்ற பால்வாடிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால், நூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் பயன் பெற்று வந்தனர். இந்த மூன்று கிராமங்களிலும் பெண்கள் அனைவரையும் இம்மன்றத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களின் தேவைகளையும் குறைகளையும் ஆராய்ந்தறிந்து அதற்கான நடவடிக்கைகள் பெண்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. இம் மன்றங்கள் மூலம் கிராமப் பெண்களுக்கு தன்னம்பிக்கையும், பிரச்சனைகளைச் சுமுகமாகத் தீர்க்கும் மனப்பக்குவமும், பெண்களிடையே ஒற்றுமையும் ஒருமைப்பாடும் ஏற்பட வழிவகை செய்தன.

ஒரு நாள், ஆழ்வார்குறிச்சியில் குடிசையில் வாழும் ஆதரவற்ற பெண்ணுக்கு பிரசவ வேதனை. மழை பெய்யத் தொடங்கியது. ஒரு குழந்தை மழையில் நனைந்துகொண்டே ஓடிவந்து கிராமசேவகியிடம்



விஷயத்தைக் கூறியது. சேவகியும் உடனே மழையில் புறப்பட்டுச் சென்றார். அது ஒரு சிறிய குடிசை. குடிசை முழுவதும் ஒழுகி, மழை நீர் நிரம்பியிருந்தது. உட்காரக்கூட இடமில்லை. பிரசவப் பெண்ணோ துடித்துக்கொண்டிருந்தாள். உடனே கிராமசேவகி குடிசைக்குள் நுழைந்து அப்பெண்ணை வெளியே அழைத்துவந்தார். மழை இன்னும் பெய்துகொண்டிருந்தது. தெருக்களில் நீர் வெள்ளமாக ஓடியது. குடிசைக்கு அருகில் வீடுகளும் இல்லை. எங்கேயும் அழைத்துச் செல்ல இயலாத நிலை. கிராம சேவகி பிரசவ வலியால் துடிக்கும் அப்பெண்ணைத் தாங்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்க்கிறார். தெருக் கடைசியில் ஒரு பழைய தேர் நின்று கொண்டிருந்தது. மிகுந்த சிரமத்தோடு மழையில் நனைந்து கொண்டு அப்பெண்ணை அங்கு அழைத்துச்சென்றார். அத்தேருக்குக்கீழ் இரண்டு பேர் தங்கும் அளவிற்கு மழைநீர் ஒழுகாத இடமிருந்தது. அத்தேருக்குக் கீழேயே பிரசவம் பார்க்கப்பட்டது. சற்று நேரத்திற்குள் அழகான ஒரு ஆண்குழந்தை பிறந்தது. உடம்பெல்லாம் நனைந்து குளிர் நடுக்கியது ஆனால், தாயின் முகத்தில் ஆனந்தம். தாயையும், சேயையும் காப்பாற்றிவிட்டோம் என்ற மகிழ்ச்சி சேவிகாவிற்கு. வெகுநேரமாக தேருக்கு அடியில் புது ஜீவனுடன் இருவரும் ஒண்டிக்கொண்டிருந்தனர். மழை ஓய்ந்தவுடன் உள்ளூரிலுள்ள மையத்திற்கு தாயும் சேயும் அழைத்துவரப்பட்டு கவனிக்கப்பட்டனர். இச்செய்தி ஊரெங்கும் பரவியது. ஔவை ஆசிரம ஊழியரின் சேவையை ஊர் மக்கள் அனைவரும் போற்றினர்.

சிம்ஸன் கம்பெனியின் முதலாளி அவ்வூரைச் சேர்ந்தவர். சௌந்திரத்தின் தலைமையின்கீழ் சேவை செய்துவரும் கிராம சேவிகாக்களின் சேவையை வெகுவாகப் பாராட்டினார். வருங்காலத்தில் எளிய பெண்களுக்கு இதுபோன்ற கஷ்டங்கள் ஏற்படக்கூடாது என்பதற்காக அந்த முதலாளி உடனடியாக பெரிய மருத்துவமனை ஒன்றை நவீன வசதிகளுடன் கட்டினார். இம்மருத்துவமனை பரமகல்யாணி மருத்துவமனையென்று அழைக்கப்படுகிறது. அது மட்டுமல்லாது சௌந்திரத்தின் கல்விப் பணியைக் கண்டு வியப்புற்று அம்முதலாளி பரமகல்யாணி உயர்நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளி மற்றும் பரமகல்யாணி கல்லூரி போன்றவற்றையும் ஆழ்வார்குறிச்சியில் நிறுவினார். இவ்வாறு பல்வேறு ஸ்தாபனங்கள் சௌந்திரத்தின் சேவையைப் பார்த்து ஆரம்பிக்கப்பட்டன. ஆதரவற்ற ஒரு பெண்ணுக்குச் செய்த பிரசவ உதவி ஆழ்வார்குறிச்சியில் மட்டுமல்லாது திருநெல்வேலி மாவட்டத்தில் பல ஊர்களிலுள்ள வசதிபடைத்தோர்களின் கண்களைத் திறந்தது. அதன் விளைவாக பல்வேறு பொது ஸ்தாபனங்கள் உருப்பெறத் தொடங்கின.


1954ல் சௌந்திரம் வருவதற்கு முன்பு சிவசைலம் கிராமத்தைப் பற்றி அம்மாவட்டத்தில் உள்ளவர்களுக்கே சரியாகத் தெரியாது. ஔவை ஆசிரமம் ஏற்படுத்தப்பட்டபின் இக்கிராமம் பிரபல்யமாகத் தொடங்கியது. பல மந்திரிகளும் வரத்தொடங்கினார்கள். குறிப்பாக ஔவை ஆசிரமத்தைத் துவக்கிவைப்பதற்காக திரு. பக்தவச்சலம் வந்திருந்தார். அப்போது கடனா ஆற்றைக் கடந்து செல்வதற்கான சிரமங்களை நேரில் கண்டறிந்தார். அதன் பின் மந்திரியின் உதவியோடு ஒரு பெரிய பாலம் கடனா நதியில் கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து டி.வி.எஸ். நிறுவனத்திலிருந்து சௌந்திரம் பஸ்விடச் ஏற்பாடு செய்தார். தபால் நிலையம் ஒன்று அவரது முயற்சியால் சிவசைலத்தில் அமைக்கப்பட்டது. வீணாக ஓடிச்செல்லும் கடனா ஆற்று நீரைப் பாசனத்திற்காகப் பயன்படுத்த கடனா அணைத்திட்டத்திற்கு சௌந்திரமே முன்னின்று செயலாற்றி நிறைவேற்றினார். ஆசிரியை பயிற்சிப் பள்ளி, செவிடு ஊமையர்பள்ளி, குழந்தைகள் இல்லத்துடன் இணைந்த அத்திரி கலாசாலை போன்றவை சிறப்பாக நடத்தப்பட்டுவந்ததால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவ மாணவியர் இங்கு வந்து கல்விகற்கத் தொடங்கினர். ஆள் நடமாட்டமே இல்லாதிருந்த இந்தக் குக்கிராமத்தில் இப்போது கூட்டம் கூட்டமாக மாணவ மாணவிகள் கல்வி பயின்றனர். சிவசைலத்தை "சரஸ்வதி கடாக்ஷமாக மாற்றியது சௌந்திரம்தான்" எனக் கூறும் அவ்வூர் பெரியவரின் வாக்கு மறுக்க முடியாத உண்மையாகும்.



ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி மற்றும் தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி ஆகியோருடன் அம்மா அவர்கள்



1979ம் ஆண்டு ஔவை ஆசிரமத்தின் ஆண்டுவிழா, சௌந்திரத்தின் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. விழாவிற்கு வந்திருந்த ஊர்ப் பொதுமக்களில் பலர் ஔவை ஆசிரமத்தின் பணிகளையும் அதனால் இப்பகுதியில் ஏற்பட்ட பலன்களையும் பற்றிப் பேசினர். ஒரு பெரியவர் பேசும்போது சௌந்திரத்தின் தன்னலமற்ற சேவையை வெகுவாகப் புகழ்ந்து பேசினார். அவர் செய்து வரும் பணிகளையெல்லாம் கூறிவிட்டு இறுதியில் இத்தகைய சேவைகளைச் செய்து வரும் அம்மாவிற்கு சிவசைலத்தில் ஒரு சிலையமைக்க வேண்டுமெனக் கூறினார். இதனைக் கேட்டவுடன் மேடையிலிருந்த சௌந்திரம் சட்டென எழுந்துநின்று, "எனக்கு சிலை எழுப்புவதற்காகவா நான் சேவை செய்து வருகிறேன். எனக்கு எவ்விடத்திலும் சிலை வைக்க முயற்சி செய்யக்கூடாது. அவ்வாறு சிலை வைத்தால் அச்சிலை முன் உண்ணாவிரதமிருந்து உயிர்விடுவேன்," என ஆவேசத்துடன் கூறினார். சௌந்திரத்தின் பதில் அனைவருக்கும் வியப்பாக இருந்தாலும், சுயவிளம்பரத்தை சற்றும் விரும்பாத அவரது தூய உள்ளத்தைக்கண்டு அனைவரும் பெருமிதம் கொண்டனர். இவ்வாறு சேவையையே உயிர்மூச்சாகக் கொண்டிருந்த சௌந்திரத்திற்கு ஔவை ஆசிரமம் ஒரு சிறந்த சான்றாக விளங்கிவருகிறது.



முன்னாள் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுடன் அம்மா அவர்கள்

# ஹரிஜன நலப்பணியில் அம்மா

காந்தியடிகளின் நிர்மாணப் பணிகள் பலவற்றுள் தீண்டாமை ஒழிப்பு முக்கிய ஒன்றாகும். தமிழ் நாட்டிலேயே மதுரை மாவட்டம் தான் ஹரிஜனப் பணியில் முன்னணியில் நின்றது. காந்தியடிகள் ஹரிஜனப் பணியை ஆரம்பிப்பதற்கு முன்னரே மதுரையில் தீண்டாமை ஒழிப்பு வேலைகள் நடைபெற்று வந்தன. இங்கு இயங்கி வந்த இந்து மாதர் சங்கம் தீண்டாமை ஒழிப்பு, ஹரிஜனங்களின் முன்னேற்றம் போன்ற பணிகளைச் செய்து வந்தது. சௌந்திரத்தின் தாயார் லட்சுமி அம்மாள் இச்சங்கத்தின் தலைவியாகப் பணியாற்றியபோது இப்பணிகள் மேலும் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வந்தன. சௌந்திரமும் இளம் வயது முதலே ஹரிஜனப் பணிகளில் ஆர்வமுடன் செயல்பட்டு வந்தார். பிறருக்குத் தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணமானது சௌந்திரத்தின் பிறப்போடு வளர்ந்து வந்த குணமாகும். கிராம மக்களைப் பொருளாதாரத்திலும், சமூக நிலையிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்பதற்காகவே காந்திகிராமத்தை அவர் நிறுவினார். சாதி, மத, இன பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே காந்திகிராமத்தின் இலட்சியமாகும். தன் வாழ்நாள் முழுவதும் இந்த லட்சியங்களுக்காகவே தன் வாழ்வை அவர் அர்ப்பணித்துக் கொண்டார்.

1932ம் ஆண்டு பூனா உடன்படிக்கை கையெழுத்தான பின் காந்தியடிகள் ஹரிஜன நலப்பணியில் ஆர்வம் காட்டத் தொடங்கினார். நாடெங்கும் சுற்றுப் பயணம் செய்து ஹரிஜனங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றமென அவர் செயல்பட்டு வந்தார். காந்தியடிகளின் ஒப்புதலின் பேரில் திரு. தக்கர் பாபாவின் தலைமையில் அகில இந்திய ஹரிஜன சேவா சங்கம் ஏற்படுத்தப்பட்டது. இதன் கிளைகள் ஒவ்வொரு மாநிலத்திலும் அமைக்கப்பட்டன. தமிழ் நாட்டில் டி.எஸ்.எஸ்.ராஜன் என்பவரைத் தலைவராகக் கொண்டு மாநில ஹரிஜன சேவா சங்கம் செயல்படத் தொடங்கியது. இவ்வேளையில் மதுரையில் திரு. வைத்தியநாத அய்யர், திரு.நா.ம.ரா. சுப்பராமன், டி.கே. ராமாச்சாரி போன்றவர்கள் ஹரிஜனப் பணியையே தங்களது தொழிலாக ஏற்றுச் செயல்பட்டு வந்தனர். ஹரிஜன சேவா சங்கம் ஏற்படுத்திய போது ஹரிஜனங்களை இந்து ஆலயங்களுக்குள் அனுமதிக்க வேண்டும் என்பதே முக்கியப் பிரச்சாரமாக இருந்து வந்தது. மதுரையில் ஏற்கெனவே இந்து மாதர் சங்கம் பல்வேறு சமூக நலப்பணிகளையும் ஹரிஜன முன்னேற்ற வேலைகளையும் செய்து வந்தது. இச்சங்கத்தின்



பணிகளில் சௌந்திரம் தன்னையும் இணைத்துக் கொண்டார். தாயார், லட்சுமி அம்மையாரும் சௌந்திரத்தை ஊக்குவித்து வந்ததால், மிகத் தீவிரமாகப் பணியாற்றினார். தீண்டாமை ஒழிப்பு வேலைகளில் ஆண்களை விடப் பெண்கள் சிறப்பாகச் செயல்பட முடியுமென சௌந்திரம் கருதினார். எனவே, தனது தலைமையில் மாதர் சங்க உறுப்பினர்களைத் திரட்டி வீடுவீடாகச் சென்று தீண்டாமையின் தீய விளைவுகளை ஆடவருக்கும் பெண்டிருக்கும் எடுத்துக் கூறினார். தீண்டாமை ஒழிப்பின் அவசியம் பற்றி காந்தியடிகள் மற்றும் தேசத் தலைவர்களின் கருத்துக்களைத் தொகுத்து அவைகளை பிரசுரங்களாக அச்சடித்து அதனைத் தெருத் தெருவாக கொடுத்து வந்தார். அத்தோடு "பிறப்பால் வேற்றுமை இல்லை. எல்லாரும் ஆண்டவனின் பிள்ளைகள் தான். அனைவருக்கும் தெய்வம் ஒன்று தான். சாதியின் பெயரால் குறிப்பிட்ட ஒரு சாராரைப் பிரிப்பது நியாயமில்லை. தெய்வம் குடியிருக்கும் கோவில் அனைவரும் வழிபடுமிடம். எல்லோரும் சென்று வழிபட அனுமதிக்க வேண்டும்," எனப் பெண்கள் கூட்டங்களில் சௌந்திரம் பேசினார். மீனாட்சியம்மன் கோவிலை ஹரிஜனங்களுக்குத் திறந்துவிடுவதற்கு பொதுமக்களின் சம்மதத்தைப் பெறத் தீவிரமாக முயற்சித்தார். தினந்தோறும் மதுரைத் தெருக்களில் கூட்டம் போட்டு ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவு வேண்டி சௌந்திரம் பேசினார். பிராமண வைதீகக் குடும்பத்தில் பிறந்த சௌந்திரமே, ஹரிஜனங்கள் இந்து ஆலயங்களுக்குள் செல்ல வேண்டுமெனப் பிரச்சாரம் செய்வது சாதி இந்துக்களின் மனதை நெகிழவைத்தது.

டில்லி மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் போது விடுமுறையில் மதுரைக்கு வருவார். விடுமுறையென்றால் சோம்பேறியாக உட்கார்ந்து நாட்களைச் செலவிடுவதில்லை. அச்சமயங்களில் நண்பர்களையும், பழக்கமான பெண்களையும் அழைத்துக்கொண்டு சேரிகளுக்குச் செல்வார். அங்கு அவர்கள் சுகாதாரமற்ற சூழ்நிலையில், அழுக்கேறிய ஆடைகளுடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கும் ஹரிஜனக் குழந்தைகளைப் பிடித்து வைகையாற்றில் நன்கு குளிக்கச் செய்வார்கள். சேரிகள் பெரும்பாலும் வைகையாற்றின் இரு கரைகளிலும் அமைந்திருந்தன. அக்குழந்தைகளைக் குளிக்கச் செய்தபின் தாங்கள் கைவசம் கொண்டுவந்திருக்கும் கதர்த் துணிகளை அக்குழந்தைகளுக்கு இடுப்பில் கட்டிவிடுவார்கள். அதன் பின் அக்குழந்தைகளுக்கு கை, கால்களிலுள்ள புண்களுக்கு மருந்து போடுவார்கள். மேலும், அச்சேரிகளில் ஓடிக்கொண்டிருக்கும் சாக்கடைகளை சுத்தம் செய்வார்கள். பெருக்குமாற்றை கையில் பிடித்து அப்பகுதி முழுவதும் சுத்தம் செய்வார்கள். குடிசைகளிலிருக்கும் பெண்களை அழைத்து சுகாதார முறைகளைப் பற்றி விளக்கிச் சொல்வார்கள். அங்குள்ள நோயாளிகளை மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சை

அளிப்பார்கள். மேலும், அங்குள்ள துப்புரவுத் தொழிலாளர்களின் பிச்சனைகளையும் தீர்த்து வைப்பார்கள் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நவீனக் கருவிகளை வழங்கி அத்தொழிலாளர்களின் சுகாதாரத்தைக் காக்கவேண்டுமென நகராட்சித் தலைவரிடம் அவ்வப்போது சௌந்திரம் முறையிட்டு வந்தார். அதன் பலனாகக் கழிவுப் பொருட்களைக் கொண்டுசெல்ல வண்டிகள், வேலையின்போது கைகளில் அணிந்து கொள்ள கையுறைகள், புதிய கருவிகள் போன்றவை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. இந்தியாவிலேயே முதல் முறையாக புதிய நவீனக் கருவிகளைத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது மதுரை நகராட்சிதான். இவ்வாறு தனது விடுமுறை நாட்களைக்கூட பயனுள்ள வகையில் ஹரிஜன முன்னேற்றத்திற்காக செலவழித்து வந்தார்.

ஹரிஜன மக்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்றால் அதற்குத் துணை செய்யக்கூடியது கல்வி ஒன்றுதான் என்பதை உணர்ந்த ஹரிஜன சேவா சங்கத் தலைவர்கள், மதுரையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஹரிஜனக் குழந்தைகளை அழைத்து வந்து பள்ளிக்கூடம் நடத்தி வந்தார்கள். இந்தப் பள்ளிக்கூடம் வைகையாற்றின் கரையில் ஒரு மண்டபத்தில் நடைபெற்று வந்தது. ஹரிஜனக் குழந்தைகள் அச்சமயம் பொதுப் பள்ளிக்கூடங்களில்கூட படிக்க முடியாத நிலை. நாட்கள் செல்லச் செல்ல மண்டபத்தில் ஹரிஜனக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வந்தது. மண்டபம் போதவில்லை. எனவே, மதுரையில் ஒரு ஹரிஜன மாணவர் விடுதி கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அச்சமயத்தில் மதுரை நகராட்சியின் தலைவராக சுப்பராமன் இருந்தார். மதிச்சியத்தில் விடுதி கட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மதிச்சியத்தில் விடுதி கட்டுவதற்கான நிலத்தை இலவசமாக அவர் வழங்கினார். நிலம் கிடைத்துவிட்டது. கட்டிடம் கட்டவேண்டும் அதற்கான நிதி வசூலிப்பதென முடிவு செய்யப்பட்டது. ஹரிஜனப் பணிகளில் ஆர்வமுள்ள தலைவர்களும், தொண்டர்களும் பண வசூலில் ஈடுபட்டனர். சௌந்திரம் ஏனைய பெண்களுடன் வீடு வீடாகச் சென்று நிதி வசூல் செய்தார். மேலும், தன் சொந்தக்கார்ரர்கள், உறவினர்கள், நண்பர்கள் வீடுகளுக்கும் சென்று அவர்களிடமும் நிதி வசூல் செய்தார். ஒரு நாள் தன் தந்தையிடம், "மதுரையில் ஹரிஜன மாணவர்கள் தங்கிப் படிக்க ஒரு மாணவர் விடுதி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதென்றும்; அதற்கு நீங்கள் நிதி உதவி செய்ய வேண்டுமெனவும்," கூறினார். அதன்பிறகு ஒருநாள் ஹரிஜன சேவா சங்கத் தலைவர்களைத் தன் வீட்டிற்கு அழைத்துவந்து தந்தையிடம் அறிமுகப்படுத்தி மாணவர் விடுதிக்கு உதவுமாறு வேண்டினார். ஹரிஜன மாணவர்கள் மீது தனது மகள் கொண்டுள்ள ஆர்வத்தைப் பாராட்டிய சுந்தரம் அய்யங்கார்



உடனடியாக ஆறாயிரம் ரூபாயை நன்கொடையாக வழங்கினார். சௌந்திரத்தின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தனது தகப்பனார் கேட்டவுடனேயே கொடுத்து விட்டாரே என்ற ஆனந்தம். 1937ல் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அதற்கு சேவாலயம் என்று பெயரிடப்பட்டது. இந்த சேவாலயம் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தங்கிப் படிக்கும் வசதியுடையதாய் இருந்ததால் ஏராளமான மாணவர்கள் சேர்ந்து கல்வி பயின்று வந்தனர். இன்றும் இது நன்றாகப் பயன்பட்டு வருவதைக் காணலாம்.

1936ல் சௌந்திரம் தனது மருத்துவப் படிப்பை முடித்துக்கொண்டு சிறிது காலம் சென்னையில் தங்கியிருந்தார். அதன் பின் மதுரை திரும்பினார். மதுரை அரசினர் மருத்துவமனையில் கௌரவ மருத்துவராகப் பணியில் சேர்ந்தார். அதே சமயம் தெற்கு மாசி வீதியில் தனியாக ஒரு மருத்துவமனையையும் நடத்தி வந்தார். இம்மருத்துவமனையின் மூலம் ஏழை எளிய மக்களுக்கு இலவச சிகிச்சை அளித்து வந்தார். தனது முதல் கணவர் சௌந்திரராஜன் கூறியது போன்றே, ஏழை எளிய மக்களுக்குச் சேவை செய்து வந்தார். மருத்துவ சேவை செய்தது மட்டுமல்லாது அம்மருத்துவமனையில் பல ஹரிஜனப் பெண்களைத் தங்கச் செய்து படிக்க வைத்து வந்தார். சௌந்திரத்தின் மருத்துவமனை ஹரிஜன மாணவிகள் இல்லமாக விளங்கி வந்தது என்றும் கூறலாம். அதாவது, ஹரிஜன மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு சேவாலயம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதே போன்று ஹரிஜனப் பெண்களுக்கும் ஒரு இடம் வேண்டாமா? இவ்வாறு சௌந்திரம் சிந்திக்கலானார். அதன் காரணமாக மதுரையைச் சுற்றியுள்ள பல கிராமங்களுக்குச் சென்று பல ஹரிஜன மாணவிகளை அவர்களது பெற்றோர்களின் சம்மதத்துடன் அழைத்துவந்து தனது மருத்துவமனையின் ஒரு பகுதியில் தங்கச் செய்து, மதுரையிலுள்ள பள்ளிகளில் படிக்க ஏற்பாடு செய்தார். இங்கு தங்கிப் படிக்கும் மாணவிகளுக்கு உணவு, உடை, நோட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் தனது வருமானத்திலேயே சமாளித்து வந்தார். தனது தொழிலின் மூலம் கிடைத்த வருமானம் முழுவதையுமே ஹரிஜன மாணவிகளுக்காக செலவழித்து வந்தார் என்றே கூறலாம். இப்படி அவரது மருத்துவமனையில் தங்கிப் படித்தவர்களில் தற்போது பூதான இயக்கத்தின் தலைவியாக இருந்துவரும் திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஹரிஜன மாணவிகள் மீது சௌந்திரம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாதவாறு கவனித்து வந்தார். மாணவிகளும் அவர் மீது உயிரையே வைத்திருந்தனர். திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், அம்மாவைப் பற்றி கீழ்வருமாறு கூறுகிறார். "பட்டிக்காட்டிலிருந்து சென்ற என்னை

ஆவலோடு அணைத்துக் கொண்டார். கன்று தாயுடன் இணைவது போல நானும் அம்மாவிடம் இணைந்துவிட்டேன். காலையும் மாலையும் என்னுடைய படிப்பை அக்கறையுடன் கவனித்துக் கொண்டார்கள். பள்ளிக்குச் செல்வதற்கென பஸ்வசதி செய்து கொடுத்தார்கள், நான் உடை உடுத்துவதில் கூட அம்மா என்மீது கொண்ட அக்கறை இன்னும் பசுமையாக என் உள்ளத்தில் இருக்கின்றது. மாலை வேளைகளில் என்னை தனது உறவினர்கள் வீடுகளுக்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துவதில் அம்மாவுக்கு அலாதி பிரியம்." இதிலிருந்து ஒரு மாணவியைச் சௌந்திரம் எப்படியெல்லாம் கவனித்து வளர்த்து வந்தார் என்பது தெளிவாகிறது.

நிலக்கோட்டைக்கு அருகில் ஒரு கிராமம். அங்கு ஒரு பெண் குழந்தை. படிப்பில் ஆர்வம் கொண்டு அருகிலிருந்த பள்ளிக்குச் சென்று வந்துகொண்டிருந்தது. இது சௌந்திரத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. உடனே அக்கிராமத்திற்கு விரைந்து சென்றார். அக்குழந்தையின் பெற்றோர்களைச் சந்தித்து, "உங்கள் மகளை நான் படிக்க வைக்கிறேன். அவளுக்குத் தேவையானவற்றை நான் செய்து தருகிறேன். என்னுடன் அனுப்புங்கள்," என வேண்டினார். பெற்றோர்களுக்குச் சற்று தயக்கம். இருப்பினும் வசதிபடைத்த குடும்பத்தைச் சார்ந்த பெண். அதுவும் டாக்டராகப் பணிபுரிபவர். அவரிடம் மறுப்பு தெரிவிப்பது நன்றாக இராது. நமது குழந்தையைப் படிக்கவைத்தால் நமக்கு நல்லதுதானே என்று எண்ணி, சௌந்திரத்துடன் மதுரை சென்று படிக்கச் சம்மதித்தனர். சௌந்திரம் அக்குழந்தையைத் தனது இல்லத்திற்கு அழைத்து வந்தார். அக்கால வழக்கப்படி கிராமங்களிலுள்ள பெண்கள் தங்கள் காதுகள் நீளமாக வளர்த்துக்கொள்வது பழக்கம். ஒரு விதமான நகைகளை அணிவதற்கே அவ்வாறு வளர்த்து வந்தனர். கிராம மக்களுக்கு அது நன்றாக இருந்தாலும், நகரத்திலுள்ள மக்கள் காது வளர்த்துக் கொள்வோரை வேடிக்கையாகப் பார்த்து வந்தனர். சௌந்திரம் அழைத்து வந்த குழந்தையும் நீளமாக காது வளர்த்திருந்தது. அக்குழந்தையின் காதுகளை வைத்திய முறைப்படி அளவாக வெட்டியெடுத்துவிட அவர் தீர்மானித்தார். அக்குழந்தைக்கு புதுப்பாவாடை சட்டைகள் மற்றும் பிடித்தமான பல பொருட்களை வாங்கிக்கொடுத்து உற்சாகப்படுத்தினார். பின் ஒரு நாள் அக்குழந்தையின் காதுகளைப் பழைய நிலைக்கேற்ப நறுக்கி எடுத்தார். இப்போது குழந்தை முன்பைவிட அழகாக இருந்தது. குழந்தையைக் காட்டிலும் சௌந்திரத்திற்கு ஒரே ஆனந்தம். தான் அழைத்துவந்த குழந்தை இப்போது பார்ப்பதற்கு மிகவும், அழகாக இருக்கிறது என்று எல்லோரிடமும் சொல்லி மகிழ்ந்தார். அக்குழந்தையும் அவரது வீட்டிலேயே தங்கிப்படித்து வளர்ந்தது. அக்குழந்தை வேறுயாருமல்ல முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். திருமதி.ஏ.எஸ்.பொன்னம்மாள்தான்



அவர். இவர்போன்ற எத்தனையோ பெண்களை அன்று சௌந்திரம் வளர்த்து வந்தார்.

மதுரை நகரிலேயே கைராசியான டாக்டரென சௌந்திரம் சிறிது காலத்திற்குள் பெயர் வாங்கினார். நோயாளிகளும் ஏராளமாக வரத்தொடங்கினர். அது போன்று குணமடைந்த நோயாளிகளும் பிரியமுடன் ஏராளமான பொருட்கள், பழங்கள் போன்றவற்றுடன் அவரைச் சந்தித்துச் சென்றனர். அப்பொருட்கள் அனைத்தும் மருத்துவமனையில் தங்கிப் படிக்கும் குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்டன. நாட்கள் ஆகஆக ஏராளமான பொருட்கள் வந்து குவியத் தொடங்கின. அப்பொருட்களைப் பயன்படுத்த மேலும் சில குழந்தைகளையும் சேர்த்துக்கொண்டு தனியாக ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து மற்றொரு மாணவிகள் விடுதி நடத்தலாமென விரும்பினார். சில நாட்களுக்குள் சேவாலயம் போலவே ஒரு மாணவிகள் இல்லமும் மதுரையில் சௌந்திரத்தால் ஆரம்பிக்கப்பட்டது. ஏற்கெனவே இருந்த மாணவிகளுடன் மேலும் பல ஹரிஜன மாணவிகள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவ் இல்லத்திற்கு அன்னை மீனாட்சியின் பெயரில் "மீனாட்சி ஹாஸ்டல்" என்று பெயரிடப்பட்டது. இப்பணிகள் பற்றிய செய்தி கிராமமெங்கும் பரவியது. இதனால் வருடாவருடம் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கும் மாணவிகளின் மொத்த எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே சென்றது. உணவு, உடைகள், புத்தகம் நோட்டு மற்றும் தேவையான அனைத்துப் பொருட்களும் இலவசமாகவே வழங்கப்பட்டன. தற்போது உள்ளது போன்று அக்காலத்தில் அரசின் உதவியோ, மானியமோ எதுவும் கிடையாது. எல்லாச் செலவுகளையும் மருத்துவமனையின் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டே சரி செய்து கொண்டு வந்தார். தன்னுடைய சொந்தத் தேவைகளையெல்லாம் குறைத்துக்கொண்டார். மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் இந்த மாணவிகளைச் சௌந்திரம் வளர்த்து வந்தார். இருப்பினும் கருத்தாகப் படித்துவரும் ஹரிஜனக் குழந்தைகளைக் காணும்போது அவரது கஷ்டங்களெல்லாம் பறந்துவிடும். தான் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை, குழந்தைகள் படித்து பெரியவர்களாக வரவேண்டும் என்பதே அவரது விருப்பம். அதே போன்று சௌந்திரத்தால் வளர்க்கப்பட்ட பல பெண்கள் நன்றாகப்படித்து இன்று பல உயரிய பதவிகளை வகித்து வருகிறார்கள். இன்று தமிழ்நாட்டில் உயர் நிலையில் இருக்கும் பெண்கள் அனைவருமே சௌந்திரத்தால் வளர்க்கப்பட்டவர்களாகவோ அல்லது அவரது உதவிகளைப் பெற்றவர்களாகவோ தான் இருப்பர்.

மதுரையில் மருத்துவ சேவையும் கல்விப்பணியும் செய்து கொண்டிருந்த சமயம் 1940ல் இராமச்சந்திரனுக்கும் சௌந்திரத்திற்கும் திருமணம் ஆகியது. இதனைத் தொடர்ந்து சென்னையில் தங்கி வாழ்க்கை நடத்தலாயினர். அப்போது சிறிது காலம் அடையாறைத்

தலைமையிடமாகக் கொண்டு சௌந்திரம் கிராம மருத்துவ சேவைகளைச் செய்துவந்தார். அதனைத் தொடர்ந்து கஸ்தூரிபாகாந்தி தேசிய நிதியின் தமிழ்நாடு கிளையின் பிரதிநிதியாக காந்தியடிகளால் நியமிக்கப்பட்டார். தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும். பெண்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவம் மற்றும் கிராம சேவையில் பயிற்சி அளித்துவந்தார். இப்பயிற்சி பெற்றவர்களில் பலர் ஹரிஜனப் பெண்களாவர். பயிற்சி பெற்ற பெண்கள் கிராமங்களில் சேவை செய்ய வேண்டுமென்பதால் தமிழகம் முழுவதும் அறுபது கிராமங்களில் சேவா நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்நிலையங்கள் சம்பூரண சேவா நிலையங்கள் என்று அழைக்கப்பட்டன. ஒவ்வொரு சேவா நிலையத்திலும் ஒரு கிராமசேவகி, ஒரு மருத்துவ சேவகி ஆகிய இருவர் நியமிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் ஆங்காங்குள்ள கிராமங்களுக்கு, குறிப்பாக ஹரிஜனங்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று மருத்துவம், குழந்தைகள் நலன், சுகாதாரம், கல்வி போன்ற பல்வேறு பணிகளைச் செய்து வந்தனர். நடந்துகூடச் செல்ல முடியாத பல குக்கிராமங்களுக்கு கஷ்டப்பட்டு கால் நடையாகவே சென்று இச்சேவகிகள் மருத்துவ சேவை செய்து வந்தனர். ஒட்டைக் குடிசையில் உயிருக்காகப் போராடிய எத்தனையோ தாய்மார்களையும், குழந்தைகளையும் காப்பாற்றி உயிர் காத்தவர்கள் இந்த சேவகிகள். இப்படிப்பட்ட தியாகப் பணிகளில் சௌந்திரத்தின் பயிற்சியாளர்கள் அனுபவித்த துன்பங்களை எளிதில் கூற இயலாது. அத்தனை கஷ்டங்களையும் முழுமனதோடு தாங்கிக் கொண்டு சேவையாற்றினர்.

சௌந்திரம் அவ்வப்போது இந்த அறுபது மையங்களுக்கும் சென்று சேவகிகளின் பணிகளைக் கண்டறிந்து வருவார். ஒரு சமயம் அறந்தாங்கி என்ற ஊருக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்கு அவர் செல்ல வேண்டியிருந்தது. சில பெண்களுடன் நடந்தே சென்றார். கொளுத்தும் வெயிலில் கால்நடையாகவே வந்ததால் அவருக்கு தண்ணீர் குடிப்பதற்காக தற்செயலாக ஒரு வீட்டிற்குச் சென்றார். அது ஒரு துப்புரவுத் தொழிலாளியின் வீடு. இது அவருக்குத் தெரியாது. அந்தத் தொழிலாளி சௌந்திரத்தைப் பற்றி இதற்கு முன் கேள்விப்பட்டிருக்கிறார். எனவே, அவர் தனது வீட்டிற்கே வந்திருப்பதைக்கண்ட அத்தொழிலாளிக்கு ஒரே மகிழ்ச்சி. சௌந்திரம் மிகவும் பசியுடன் இருக்கிறார் என்பதையறிந்த அத்தொழிலாளி உடனடியாக மண்பானையிலிருந்த கேழ்வரகுக் கூழை தண்ணீரில் கரைத்து முதலில் அவருக்கு ஒரு டம்ளர் ஊற்றிக்கொடுத்தார். அதேபோன்று அவருடன் சென்ற பெண்களுக்கும் கொடுத்தார். அந்தப்பெண்கள் அந்த டம்ளரைத் தொட்டு வாங்குவதற்கே தயங்கி முகம் சுழித்தார்கள். சாப்பிடுவதற்குச் சிறிதும் மனமில்லை, கீழே கொட்டவும் முடியாத இக்கட்டான நிலை. ஆனால், சௌந்திரம் கூழ் நிரம்பிய டம்ளரை வாங்கியவுடன் கடகட வென்று ஒரு நிமிடத்திற்குள்



குடித்து முடித்துவிட்டார். அவருக்குத் அது அமிழ்தமாக இருந்தது. "இந்தக் கொளுத்தும் வெயிலுக்கு இதுபோன்ற ஆகாரம்தான் சிறந்தது," எனக்கூறி அத்தொழிலாளிக்கு நன்றி தெரிவித்தார். இதைக் கண்ட பெண்களுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மறுகணம் கண்களை மூடிக்கொண்டு மளமளவென்று குடித்து முடித்தார்கள். சௌந்திரத்துடன் பணிபுரிகின்ற பெண்களுக்கு இந்நிகழ்ச்சி ஒரு பாடமாகவே அமைந்தது.

இவ்வாறு கிராம மக்களோடு ஒன்றாகக் கலந்து சேவை செய்து வந்து கொண்டிருந்த சமயத்தில் ஒரு நாள் தஞ்சை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் நிழக்கிழார்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் கலவரம் ஏற்பட்டது. சாதாரணக் கூலித் தகராறு நாளடைவில் ஒரு பெரிய கலவரமாக உருவெடுத்தது. நிலக்கிழார்கள் ஹரிஜனங்களைத் தாக்கி கொடுமைப்படுத்தினர். வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. நாளுக்கு நாள் கலவரம் அதிகரித்துக்கொண்டே சென்றது. பல ஹரிஜனங்கள் உயிரிழந்தனர். பெண்களும் குழந்தைகளும் அப்பகுதிகளைவிட்டே வெறியேறினர். மக்களைக் காக்க வேண்டிய போலீஸார் செயலிழந்து நின்றனர். இதையறிந்த சௌந்திரம் உடனே தன்னுடன் ஏராளமான கிராமப் பெண்களை அழைத்துக்கெண்டு அப்பகுதிக்கு விரைந்தார். பாதிக்கப்பட்ட குடும்பங்களிலுள்ள பெரியவர்களையும் அக்குழந்தைகளையும் பத்திரமான இடங்களுக்கு அழைத்து வந்து உணவு, உடைகளை வழங்கினார். கலவரங்களில் காயமடைந்தவர்களை அருகிலுள்ள மருத்துவமனைகளில் சேர்த்தார். இரவென்றும் பகலென்றும் பாராது சேவிகாக்களுடன் கிராமம் கிராமமாகச் சென்று, அச்சத்தால் ஒளிந்துகொண்டிருந்த பெண்களுக்கு ஆறுதல் அளித்தார். பெண்கள், குழந்தைகள் அனைவரையும் பத்திரமான இடங்களுக்குக் கூட்டிவந்து பாதுகாப்பு அளித்தார். அதுமட்டுமல்லாது எல்லாக் கிராமங்களில் ஆங்காங்கேயுள்ள ஊர் பெரியவர்களைச் சந்தித்து சமாதான முயற்சிகளை மேற்கொண்டார். இதன் காரணமாக சௌந்திரத்தின் தலைமையில் பல பெரியவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சமாதான யாத்திரை சென்றனர். இதனால் மக்களின் மத்தியில் நிலவிய பீதி அகற்றப்பட்டு சமாதானம் திரும்பத் தொடங்கியது. ஹரிஜனத் தொழிலாளர்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு சௌந்திரம் ஏற்பாடு செய்தார். அதில் வெற்றியும் பெற்றார். எல்லாக் கிராமங்களிலும் அமைதி திரும்பியது. அவரது அயராத பணியின் காரணமாக ஹரிஜனங்களும் நிலக்கிழார்களும் அமைதியாக வாழத்தொடங்கினர். இதன் மூலம் தஞ்சை மக்கள் அனைவரது அன்புக்கும் சௌந்திரம் பாத்திரமானார். கம்யூனிஸ்ட் தலைவர்களான பாலசுப்பிமணியம், பாலதண்டாயுதம், ராமமூர்த்தி, நெடும்பலம் போன்றவர்கள் அவரது பணியைக் கண்டு மிகவும் பாராட்டினார்கள்.

அதே தஞ்சை மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் சருக்கை என்ற ஒரு கிராமம். அங்கு வீர வைஷ்ணவர்களும் ஹரிஜனங்களும் வாழ்ந்து வந்தனர். அக்கிராமத்தில் ஹரிஜனங்களுக்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அதாவது, ஹரிஜனங்கள் அக்ரஹாரத்திற்குப் பக்கத்தில் கூட செல்லக்கூடாது. ஊருக்குள் செருப்பு அணியக் கூடாது. பொதுக் குளம், பொதுக் கிணறு போன்றவற்றிலிருந்து நீர் எடுக்கக்கூடாது போன்ற பல அடக்குமுறைக் கட்டுப்பாடுகள். இதனால், கோடைக் காலங்களில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் ஹரிஜனங்கள் கஷ்டப்பட்டனர். நாளடைவில் இருவகுப்பினருக்கும் கருத்துவேறுபாடுகள் அதிகமாகிக் கடைசியில் ஒரு புரட்சியாக வெடித்தது. இதனால், ஹரிஜனங்கள் மேலும் துன்பத்திற்கு உள்ளாயினர். சௌந்திரம் இந்த விஷயத்தை அறிந்தவுடன் தனது குழுவினரோடு அக்கிராமத்திற்குச் சென்றார். வீர வைஷ்ணவர்களோடு பேச்சு நடத்தினார். பலன் ஏற்படவில்லை. ஆனால், அவர் திரும்பிவிடவில்லை. வேதாரண்யம் சர்தார் வேதரத்தினம் பிள்ளையை அழைத்து வந்து பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். அச்சமயம், தமிழகம் வந்திருந்த தக்கர் பாபாவையும் அக்கிராமத்திற்கு அழைத்துச்சென்று சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தனர். இறுதியில் சமாதானத்திற்குப் பிராமணர்கள் ஒப்புக்கொண்டனர். இதற்கு முன் விதிக்கப்பட்டிருந்த அத்தனை கட்டுப்பாடுகளும் விலக்கப்பட்டன. வைஷ்ணவர்களும் ஹரிஜனங்களும் இனிமேல் சகோதரர்களாக வாழ ஒப்புக்கொண்டனர். இச்சமாதான நடவடிக்கையின் மூலம் சௌந்திரம் ஒரு பெரும் புரட்சியையே செய்து ஹரிஜனங்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்தார்.

1948-49 ல் அதே தஞ்சை மாவட்டத்தில் மற்றொரு பகுதியில் நிலச்சுவான்தார்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் போராட்டம் ஏற்பட்டது. வழக்கம்போல் ஹரிஜனங்கள் தாக்கப்பட்டு பெரும் பாதிப்பிற்கு உள்ளாயினர். சௌந்திரம் அப்பகுதிக்கு சக ஊழியர்களுடன் விரைந்து சென்று சமாதான யாத்திரை நடத்தினார். வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார், குன்னியூர் சாம்பசிவ அய்யர், புலிவலம் தேசிகர், செம்போடை நாராயண அய்யங்கார் போன்ற பெரும் நிலச்சுவான்தார்களுடன் சௌந்திரம் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்த நிலக்கிழார்களை அழைத்துக்கொண்டு, ஒவ்வொரு கிராமமாக அமைதி யாத்திரையை நடத்தினார். இறுதியில் ஹரிஜனத் தொழிலாளர்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் சமாதானம் ஏற்பட்டு, அமைதியும் திரும்பியது. பெண்களாலும் அமைதிப்பணிகளைச் செய்து காட்ட முடியும் என்பதை சௌந்திரம் நிரூபித்துக்காட்டினார்.

1950 ல் வாடிப்பட்டிக்கு அருகாமையில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்பட்டது. அலங்காநல்லூர், நிலக்கோட்டை, சோழவந்தான் போன்ற கிராமங்களில் கரும்பு ஏராளமாகச் சாகுபடி செய்யப்பட்டு



வந்தது. புதிதாக நிறுவப்பட்ட சக்கரை ஆலைக்குத் தேவையான கரும்புகளைப் பெறுவதற்காக, பரம்பரை பரம்பரையாக வெல்லம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டு வந்த குடியானவர்கள் இனிமேல் கரும்பு காய்ச்ச வேண்டுமென்றால் லைசென்ஸ் பெறவேண்டுமென தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. இதனால் ஏராளமான ஹரிஜனக் குடியானவர்கள் தங்கள் வேலைவாய்ப்பை இழந்தனர். அனைவரும் காந்திகிராமம் வந்து சௌந்திரத்திடம் முறையிட்டு, உதவி செய்யுமாறு வேண்டினர். அரசின் இந்த திடீர் உத்தரவை அவர் கண்டித்தார். இதற்கிடையில், அரசின் இந்த உத்தரவை மீறி வெல்லம் காய்ச்சியவர்களைப் போலீஸார் கைது செய்து, பொருட்களையும் கைப்பற்றிச் சென்றனர். சர்வோதயத் தலைவர்களான திரு. கெய்த்தான், திரு. ஜெகந்நாதன் போன்றவர்களுடன் இணைந்து சௌந்திரம் செயல்பட ஆரம்பித்தார். உடனடியாக சுற்றியிருந்த கிராமங்களிலிருந்து சுமார் மூவாயிரம் குடியானவர்கள் ஜெகந்நாதன் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்தார்கள். வெல்லம் காய்ச்சப் பயன்படும் பாத்திரங்களை போலீஸார் லாரிகளில் ஏற்றியபோது அமைதியான முறையில் தடுத்தார்கள். இறுதியில் அரசு இறங்கிவந்தது. சென்னை மாநில விவசாய மந்திரியாக அப்போது இருந்த திரு. பக்தவச்சலம் உடனடியாக வாடிப்பட்டிக்கு விரைந்தார். அமைச்சரிடம் குடியானவர்களின் நிலையையும் புதிதாகப் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்பையும் சௌந்திரம் தெளிவாக எடுத்துக் கூறினார். பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர், ஏழைக் குடியானவர்களின் கோரிக்கை நியாயமானதுதான் என்பதை உணர்ந்து சர்க்கரை காய்ச்சுபவர்கள் லைசென்ஸ் பெறவேண்டும் என்ற ஆணையை உடனடியாக ரத்துசெய்தார். மேலும், அமைச்சரும் அதிகாரிகளும் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் மேற்கொண்டு ஏழைக் குடியானவர்களின் உரிமைகளுக்காக போராடிய ஜெகந்நாதனையும், சௌந்திரத்தையும் மிகவும் பாராட்டினார்கள். குடியானவர்களும் மனதார வாழ்த்தினார்கள்.

காந்திகிராமத்தின் அருகாமையில் இருக்கும் ஒரு சிறு கிராமம் சிலுக்குவார்பட்டி. இங்கு இந்துக்களும் ஹரிஜனக் கிறிஸ்தவர்களும் வாழ்கிறார்கள். ஒரு சமயம் இருசாரருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு இறுதியில் கலவரத்தில் போய்முடிந்தது. விவரம் அறிந்த சௌந்திரம் உடனடியாக அந்தக் கிராமத்திற்குச் சென்றார். கணவாய்ப் பட்டியிலிருந்து திரு. கெய்த்தான் அவர்களும் வந்தார். இருவரும் இணைந்து இந்துக்களையும் ஹரிஜனங்களையும் சமாதானப்படுத்த இரவு பகலாகப் பணியாற்றினர். மூன்று நாட்கள் அக்கிராமத்திலேயே தங்கி சரியான உணவு உறக்கமின்றி சமாதான முயற்சியில் ஈடுபட்டு இறுதியில் வெற்றிப் புன்னகையோடு காந்திகிராமம் திரும்பினார்கள்.

மனிதர்களிடையே மலிந்து காணப்படும் வேற்றுமை உணர்வுகளாலும், பொறுமை மற்றும் சகிப்புத் தன்மை இல்லாததாலும்,

எவ்வாறெல்லாம் விபரீதமான விளைவுகள் ஏற்படுகின்றன என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டு. மதுரை மாவட்டம் பெரியகுளத்திலும் அதனையடுத்துள்ள தேவதானப்பட்டியிலும் ஹரிஜனங்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. எங்கு பார்த்தாலும் அடிதடி. ஹரிஜனங்களின் பல வீடுகள் தீ வைக்கப்பட்டு கொளுத்தப்பட்டன. இதனால் மீண்டும் கொந்தளிப்பு ஏற்பட்டது. செய்தியறிந்த போலீஸார் அங்கு விரைந்தனர். மக்கள் ஊரைவிட்டே வெறியேறினர். தகவலறிந்த சௌந்திரம் உடனடியாக காந்திகிராம ஊழியர்களோடு கலவரம் ஏற்பட்ட ஊர்களுக்குச் சென்றார். கிராமங்கள் வெறிச்சோடிக்கிடந்தன. ஆடு மாடுகள்கூடத் தென்படவில்லை. மனித நாகரீகம் நாளுக்குநாள் வளர்ந்துவரும் சமயத்தில் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களில் ஈடுபட்டு மனிதன் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவிக்கிறானே? அமைதியாக வாழவேண்டிய கிராமம் பாழ்பட்டு தீயால் கொழுத்தப்பட்டிருந்த காட்சி அவரை நெகிழவைத்தது. பாதிக்கப்பட்ட ஹரிஜனக் குடும்பங்களுக்கு நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறினார். காந்திகிராமத்திலிருந்து சௌந்திரம் வந்தால் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு கிடைக்குமென்ற நம்பிக்கையோடு மக்கள் கிராமங்களுக்குத் திரும்பினார்கள். இரு சமூகங்களின் முறையீடுகளையும் கேட்டறிந்து சமாதான முயற்சியை மேற்கொண்டார். சௌந்திரம் துய அன்பினால் கவரப்பட்ட கிராம மக்கள் அவரது விருப்பப்படி சமாதானமாக வாழ ஒப்புக்கொண்டார்கள். கலவரத்தினால் பாதிக்கப்பட்ட ஹரிஜனக் குடும்பங்களுக்கு பல நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்கச் செய்தார். அனைவருக்கும் புதிய துணிமணிகள் கொடுக்கப்பட்டன. பலரது வீடுகள் தீயில் எரிக்கப்பட்டதால் புதிய வீடுகள் கட்டுவதற்கு பொருளாதார உதவிகளையும் சௌந்திரம் செய்து கொடுத்தார். இவ்வாறாக பெரியகுளம் பகுதியில் ஏற்பட்ட கலவரம் ஓய்ந்து அமைதி அங்கு ஆட்சி செய்தது. அவர் திறம்பட உழைத்ததை இன்றும் அப்பகுதியிலுள்ள மக்கள் நினைவு கூறுகிறார்கள்.

1977-ம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் பெய்த கனமான மழையின் காரணமாக வேடசந்தூர் பகுதியில் அமைந்திருக்கும் அழகாபுரி அணைக்கட்டு உடைந்துவிட்டது. அணை உடைந்ததினால் அருகிலிருந்த சுமார் ஏழு கிராமங்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு முற்றிலுமாக நீருக்குள் மூழ்கிவிட்டன. இந்த ஏழு கிராமங்களும் ஹரிஜனங்கள் வாழும் கிராமங்களாகும். அச்சமயம் சௌந்திரம் காலில் திடீரென வலி ஏற்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். எங்கும் நடந்து செல்லக்கூடாது. படுக்கையைவிட்டு எழவே கூடாது என்பது மருத்துவர்களின் ஆணை. அணை உடைந்து கிராமங்கள் நீரில் மூழ்கிவிட்டன என்ற செய்தியைக் கேட்டவுடன் பாதிக்கப்பட்ட இடத்திற்குச் செல்ல ஆயத்தமானார். அவருடன் இருந்தவர்கள்



அனைவரும் அவரது கால்வலியைக் காரணம் காட்டி, எங்கும் தற்போது செல்ல வேண்டாம். நாங்கள் சென்று நிவாரணப் பணிகளைச் செய்கிறோம் என்று கூறினார்கள். தன் குழந்தைகள் கஷ்டப்படுவதைப் பார்த்துக் கொண்டு ஒரு தாய் சும்மா இருப்பாளா? காரை எடுத்துக்கொண்டு காந்திகிராம ஊழியர்களை முழு ஆயத்தமாக உடனடியாக வரும்படி கூறிப் புறப்பட்டுச் சென்றார். வெள்ளம் பாதித்த பகுதிகளைக் கண்டதும் சௌந்திரத்தின் கண்கள் கலங்கின. வீடுகள், ஆடுமாடுகள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தன. ஏழை ஹரிஜனங்கள் தங்கள் உடமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் மேடுகளில் தங்கள் குழந்தைகளுடன் பட்டினியோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். குழந்தைகள் குளிரால் நடுங்கிக்கொண்டிருந்தன. போர்த்திக்கொள்ள ஒரு துணி கூட இல்லை. எங்கு பார்த்தாலும் அழுகுரல். பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உணவு வேண்டும். தனது காரை காந்திகிராமத்திற்கு திருப்பி அனுப்பி உணவிற்கு ஏற்பாடு செய்யும்படி கூறினார். சிறிது நேரத்தில் ஆயிரக்கணக்கான உணவுப் பொட்டலங்கள் தயார் செய்யப்பட்டு எடுத்து வரப்பட்டன. காந்திகிராம ஊழியர்கள் ஆங்காங்கே வெள்ளத்திற்குள் நின்று கொண்டிருந்த பெண்கள், குழந்தைகள் அனைவரையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துவந்து உணவுப் பொட்டலங்களை வழங்கிப் பசியைத் தீர்த்தனர். அதன் பின் மக்கள் அனைவரும் அருகிலுள்ள கிராமங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு பள்ளிக்கூடங்களில் தங்கவைக்கப்பட்டனர். அவர்கள் உடுத்துவதற்கான வேஷ்டிகள், புடவைகள், போர்வைகள் போன்றவைகளும் அரிசி, பருப்பு போன்ற உணவுப் பொருள்களும் காந்திகிராமத்திலிருந்து கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டன.

வீடுகளையும் உடமைகளையும் இழந்த ஹரிஜனங்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டப்பட வேண்டும். வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்பதை உணர்ந்த சௌந்திரம், அதற்கான ஒரு திட்டத்தையும் தயாரித்தார். மேற்கு ஜெர்மனியின் தலைநகரான பெர்லினில் உலக சமூக நல ஸ்தாபனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த ஸ்தாபனத்துடன் அவர் தொடர்பு கொண்டார். அதன் மூலம் புதிய வீடுகள் கட்டவும், வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தோனிக்கல்பட்டி, பள்ளபட்டி, கருடக்கவுண்டன்பட்டி ஆகிய கிராமங்களில் உடனடியாக சுமார் நூறு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. மேலும், அக்கிராமங்களில் உள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் பாய் நெய்தலுக்கான பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், சிலருக்கு தோல் பதனிடுதல், தோல் பொருட்கள் செய்தல் போன்ற துறைகளில் பயிற்சி கொடுக்கப்பட்டது. இத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள்

வெளியிலிருந்து வரவழைக்கப்பட்டு பயிற்சி பெற்றவர்களால் விதவிதமான தோல் பொருட்கள் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இது தவிர இந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்த சுமார் அறுபது குடும்பங்களுக்கு பால்மாடுகள் வாங்குவதற்கு சௌந்திரம் கடன் வசதி செய்து கொடுத்தார். இரண்டாவது தவணையாக மேற்கொண்டு நாற்பது குடும்பங்களுக்கு பால்மாடுகள் வாங்குவதற்கு திண்டுக்கல்லில் ஒரு வங்கியின் மூலம் கடன் வசதியைப் பெற்றுத் தந்தார். இப்பகுதியில் பல பால்வாடிகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பால்வாடிகள் மூலம் குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு கொடுக்கப்பட்டது. அவ்வப்போது குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி சோதித்தறியப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் முதியோர் கல்விமையங்கள் திறக்கப்பட்டன. மேலும், இதுபோன்ற வேலை வாய்ப்புத் திட்டங்கள் சுக்காம்பட்டி, கல்லுப்பட்டி, எல்லப்பட்டி, நடுப்பட்டி போன்ற கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. வீடுகட்டும் திட்டங்களும், சுகாதாரத் திட்டங்களும் செயல்பட்டுத்தப்பட்டு வந்தன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் எல்லாக் கிராமங்களிலும் குடிதண்ணீர் வசதிகள் செய்து தரப்பட்டன. காந்திகிராமத்தின் ஆதரவுடன் புதிய நூற்பாலைகளும் ஆரம்பிக்கப்பட்டு வேலை வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டன. அருகிலுள்ள இந்திராபுரம் என்ற கிராமத்திலுள்ள அறுபது ஹரிஜனக் குடும்பங்கள் காந்திகிராமத்தினால் வழிநடத்தப்பட்டு வருகின்றன. கொல்லப்பட்டி, முருகன்பட்டி, புதுக்கோட்டை போன்ற கிராமங்களிலுள்ள ஹரிஜனங்களுக்கும் வீடுகள் புதிதாகக் கட்டித்தரப்பட்டன. வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்துதரப்பட்டன. இவ்வாறு இயற்கையின் சீற்றத்தால் ஹரிஜனங்கள் அவதியுற்ற போதும் சௌந்திரம் தனது அன்புக் கரங்களை நீட்டி அல்லும் பகலும் சேவை செய்து வந்தார்.

சுப்புலாபுரம் என்று ஒரு கிராமம். இங்கு வசிக்கும் சாதி இந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டு வந்தன. இக்கிராமத்திலுள்ள ஹரிஜனங்கள் தங்கள் பிழைப்பிற்காக சாதி இந்துக்களையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. ஆனால், சாதி இந்துக்களோ ஏழை ஹரிஜனங்களின் உழைப்பைச் சுரண்டிவந்தனர். அவர்களை அடிமைகளாகவும் நடத்தினர். இதை விரும்பாத ஹரிஜனங்கள் தாங்கள் விவசாயத் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழில் செய்ய விரும்பினர். சாதி இந்துக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே இனக்கலவரம் ஏற்பட்டது. ஹரிஜனங்களுக்கு சொந்தமான எட்டு வீடுகள் தீயிட்டு கொளுத்தப்பட்டன. ஏராளமான கால்நடைகளும் மடிந்தன. ஹரிஜனங்கள் இழந்த சொத்தின் மதிப்பு சுமார் பதினைந்தாயிரம் ரூபாயாகும். சொல்லொண்ணாக் கொடுமைகளை மனதில் தாங்கிகொண்டு சுமார் முப்பது அரிசனக்



குடும்பங்கள் காந்திகிராமம் வந்து சௌந்திரத்திடம் முறையிட்டு உதவி கோரினர். தங்களுக்குத் தொழில் கற்றுக் கொடுத்தால் அதன் மூலம் தங்கள் வாழ்க்கையைச் செம்மையாக நடத்த முடியுமெனவும் அவரிடம் நம்பிக்கை தெரிவித்தனர். இதன் காரணமாக எல்லோருக்கும் நேபாளத் தறியில் பயிற்சியளிக்க சௌந்திரம் ஏற்பாடு செய்தார். நன்கு பயிற்சி பெற்றபின் தாங்களாகவே நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். மேலும், அந்த முப்பது ஹரிஜனக் குடும்பங்களுக்கும் வீடுகளையும் கட்டிக்கொடுத்தார். இக்குடியிருப்புகள் டாக்டர் சௌந்திரம் காலனி என்றே அழைக்கப்பட்டு வருகிறது. சௌந்திரத்தின் உதவியாலும் தங்களது கடுமையான உழைப்பாலும் இக்கிராமத்திலுள்ள ஹரிஜனங்கள் வறுமையிலிருந்து விடுபட்டு இன்று சுதந்திரமாக வாழ்க்கை நடத்திவருகிறார்கள்.

இதுபோன்றே, காந்திகிராமத்தைச் சுற்றியுள்ள பல குக்கிராமங்களிலுள்ள ஹரிஜனக் குழந்தைகளை காந்திகிராமத்திற்கு அழைத்துவந்து படிக்கச் செய்தது சௌந்திரம்தான். இக்குழந்தைகளுக்கு கல்வி, உடை, உணவு யாவும் இலவசமாகவே வழங்கப்பட்டன. சௌந்திரம் அடிக்கடி இக்குழந்தைகளின் படிப்பைப் பற்றி ஆசிரியர்களிடம் விசாரிப்பார். இக்குழந்தைகளைப் பார்க்கும்பொழுதெல்லாம், நன்கு படித்து பெரியவர்களாக வரவேண்டுமென அறிவுரைகூறித் தேற்றுவார். தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டவுடன் பள்ளியில் எத்தனை குழந்தைகள் தேர்ச்சி பெற்றுள்ளன? எத்தனை குழந்தைகள் தோல்வியடைந்துள்ளன? அதற்கான காரணம் என்ன என்பதை ஆசிரியர்களிடம் தவறாது விசாரிப்பார். ஒரு வருடம் இவ்வாறு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டபோது, அவர் பிரியமாக வளர்த்துவந்த ஒரு ஹரிஜன மாணவி ஆறாவது வகுப்பில் தோல்வியடைந்துவிட்டாள். இதனையறிந்த அவர் மிகவும் வருந்தினார். கல்வியறிவு இல்லாத அவளது குடும்பத்தில் இப்பெண்ணையாவது நன்கு படிக்க வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலால்தான் சௌந்திரம் இக்குழந்தையைக் காந்திகிராமம் அழைத்து வந்து படிக்க வைத்துக் கொண்டிருந்தார். உடனே வகுப்பாசிரியர் அழைக்கப்பட்டார். தேர்வு முடிவுப் பட்டியலை அவ் ஆசிரியரிடம் காண்பித்து," இதோ பாருங்கள். இந்தக் குழந்தை ஹரிஜன வகுப்பைச் சார்ந்தவள். இவளை எப்படியாவது எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்க வைத்து நர்ஸ் கோர்ஸ்க்கு அனுப்பிவிட்டால், இவள் தனது வாழ்க்கையை நன்கு அமைத்துக் கொள்வாள். அதற்காகத்தான் இக்குழந்தையை அவளது பெற்றோர்களிடமிருந்து அழைத்து வந்தேன். எனவே இவளை ஏழாவது வகுப்பில் சேர்ப்பதற்கு நீங்கள் உதவ வேண்டும்," எனக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். ஆறாவது வகுப்பில் தோல்வியடைந்து விட்டால் இக்குழந்தை தனது படிப்பை இடையிலேயே விட்டுவிட்டு

கிராமத்திற்குச் சென்று விடுவாளோ என்ற எண்ணத்தினால்தான் தனது ஸ்தாபனத்திலேயே பணியாற்றும் ஆசிரியையிடம் பணிவுடன் வேண்டினார். ஹரிஜனக் குழந்தைகள் படித்து முன்னேற வேண்டும் என்பதில் சௌந்திரம் எவ்வளவு ஆர்வம் உடையவராக இருந்து வந்திருக்கிறார் என்பது இதிலிருந்து நமக்குத் தெளிவாகப் புலனாகிறது.

இதுபோன்ற மற்றொரு சம்பவம். காந்திகிராமம் சௌபாக்ய இல்ல மாணவர் ஒருவர் மதுரையிலுள்ள ஒரு கல்லூரியில் பி.எட். வகுப்பில் சேர்ந்தார். அவர் அங்கு ஹாஸ்டலில் சேர்ந்து படித்ததால் அதிகமான பணச்செலவு ஏற்பட்டுவந்தது. இதனால் சௌந்திரம் நேரடியாக அக்கல்லூரி முதல்வரைச் சந்தித்து, "இவன் எனது பையன் தங்கள் கல்லூரியில் பி.எட். படித்து வருகிறான். மாணவர் விடுதியில் தங்கிப் படிப்பதால் இவனுக்கு அரசாங்க உதவித்தொகை கிடைக்க முயற்சி செய்தால் நலமாயிருக்கும்," என வேண்டினார். கல்லூரி முதல்வரும் அதற்கு முயற்சி செய்வதாகக் கூறினார். அப்போதெல்லாம் கல்லூரியில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் அரசு உதவித் தொகை கிடையாது. நன்கு படிக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. பையனின் விண்ணப்பம் சென்னை கல்வித் துறைக்கு அனுப்பப்பட்டது. வெகு நாட்கள் ஆகியும் பதில் வரவில்லை. இதற்கிடையில் சௌந்திரம் அடிக்கடி கல்லூரி முதல்வரைச் சந்தித்து இது பற்றி விசாரித்து வந்தார். மேற்கொண்டு எவ்வித தகவலும் கிடைக்காததால் நேரடியாகச் சென்னை சென்று இதுபற்றி விசாரிக்க முடிவு செய்தார். அதுபோன்றே சென்னை சென்று சம்பந்தப்பட்ட அதிகாரியை நேரில் சந்தித்து விவரங்களை எடுத்துக்கூறினார். "உங்கள் பையனின் விண்ணப்பம் வந்தது. ஆனால், மிகவும் காலதாமதமாக வந்தபடியால் அதற்கு முன்னமே நாங்கள் உதவித்தொகைகளைச் சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு அனுப்பி விட்டோம். தற்போது எங்களால் எதுவும் செய்ய இயலாது. இருப்பினும் பல்வேறு அலுவல்களுக்கிடையில் மதுரையிலிருந்து வந்திருப்பதால் நான் ஒரு வழி கூறுகிறேன். அதாவது ஒரே ஒரு ஸ்காலர்ஷிப் மட்டும் ஒரு ஹரிஜன மாணவருக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. நீங்கள் விரும்பினால் அந்த ஹரிஜன மாணவருக்கு கொடுப்பதை நிறுத்திவிட்டு தங்கள் பையனுக்குத் தருகிறேன்," என அவ் அதிகாரி கூறினார். "ஆயிரக்கணக்கான ஹரிஜனங்களில் ஒரு மாணவன் மட்டும் பி.எட். படித்துக் கொண்டிருக்கிறான். அரசின் உதவித்தொகையை நம்பியே அவன் படித்துவருகிறான். அவனது படிப்பு பாதிக்கக் கூடாது. எனது பையனுக்கு உதவிகள் செய்யப் பல வழிகள் இருக்கின்றன. நீங்கள் தீர்மானித்தது போல அந்த ஹரிஜன மாணவனுக்கு அத்தொகையை வழங்குங்கள்," என மகிழ்ச்சியோடு அவ் அதிகாரியிடம் கூறிவிட்டுவந்தார். தனது பையனுக்கு அரசு உதவித்தொகை



கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றம் அவரது முகத்தில் காணப்படுவதற்குப் பதிலாக ஒரு ஹரிஜன மாணவன் பி.எட். வரை படிக்கிறானே என்ற ஒரே ஆனந்தம். மகிழ்ச்சியோடு காந்திகிராமம் வந்து சேர்ந்தார்.

சென்னை மாகாண சட்டசபை அங்கத்தினராக இருந்தபோது ஹரிஜனங்களின் பல முக்கியப் பிரச்சனைகளைச் சட்டமன்றத்தில் வைத்து நிவாரணங்களையும் பெற்றுத்தந்தார். ஹரிஜன மக்களின் வருங்கால வளர்ச்சியானது அவர்களது குழந்தைகளின் கல்வியறிவில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்த சௌந்திரம், ஹரிஜனக் குழந்தைகளின் கல்விக்காக அரசிற்கு பல ஆலோசனைகளையும், திட்டங்களையும் வரைந்து கொடுத்து வந்தார். "ஹரிஜன மாணவர்கள் சென்னை மாகாணத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் எவ்வித மறுப்புமின்றி சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். அவ்வாறு பள்ளியில் படிக்கும் அம்மாணவர்களுக்கு அனைத்து உதவிகளையும் அரசே செய்துதரவேண்டுமென," வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார். ஹரிஜனக் குழந்தைகள் தங்கிப்படிக்கும் பள்ளிகளுக்கும் விடுதிகளுக்கும் "ஹரிஜனப் பள்ளி" "ஹரிஜன விடுதி" என்ற பெயரை உடனடியாக மாற்ற வேண்டும். சமுதாயத்தில் சாதிப் பாகுபாடுகள் அகலவேண்டுமென நாம் போராடிவருகிறோம். அப்படியிருக்க ஹரிஜன மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளுக்கு ஹரிஜன விடுதி என்று பெயர்வைத்தால் நாம் சட்டப்படி சாதிகளை அங்கீகரித்தது போலிருக்கும். அதுமட்டுமல்லாது அங்கிருக்கும் மாணவர்கள் அனைவரும் ஹரிஜன மாணவர்கள் என்பதாக முடிவு செய்யப்படுகிறது. அவ்வாறு இல்லாமல் எல்லா வகுப்பு மாணவர்களையும் அவ்விடுதிகளில் சேர்த்துக் கொள்ளவேண்டும். எனவே, ஹரிஜன விடுதி என்ற பெயரை மாற்றி "அரசு மாணவர் விடுதி"என்று பெயரிடுமாறு அரசைக் கேட்டுக்கொண்டார். இதனால், எல்லா வகுப்பு மாணவர்களும் ஒரே விடுதியில் தங்கிப் படிக்கும்போது அவர்களிடையே வேற்றுமைகள் அகன்று ஒற்றுமை ஏற்பட வழி பிறக்கிறது. வருங்கால சமுதாயத்தை ஜாதிபேதமற்ற முறையில் மாற்றியமைக்க இது பேருதவியாக இருக்குமென சௌந்திரம் அரசிற்கு கருத்து தெரிவித்தார். அவரது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அரசு உடனடியாகப் பெயர் மாற்றம் செய்ததோடு எல்லா வகுப்பைச் சார்ந்த மாணவர்களை விடுதிகளில் அனுமதிக்க உத்தரவு பிறப்பித்தது.

கிராமப் புறங்களில் வீடற்ற ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஒன்றைத் தீட்டி அரசு செயல்படுத்தி வந்தது. இத்திட்டத்தின் கீழ் வீடுகட்டிக் கொடுப்பதற்கு ஹரிஜனங்களிடமிருந்து அரசு ஜாமீன் கேட்டு வந்தது. குடியிருக்க வீடே இல்லாத அவர்களிடமிருந்து அரசு எவ்வாறு ஜாமீன் எதிர்பார்க்க முடியும்? அவர்களும் எப்படிக் கொடுப்பார்கள்?இம்முறையை அரசு உடனே ரத்து செய்ய

வேண்டுமெனச் சௌந்திரம் கேட்டுக்கொண்டார். அரசு அதனை ஏற்றுக் கொண்டு ஹரிஜனங்களிடமிருந்து ஜாமீன் பெறும் முறையை உடனே கைவிட்டது. மேலும், ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டும்போது அவ்வீடுகளை ஊருக்கு வெளியே தூரத்தில் கட்டாமல் பிறஇன மக்களும் வசிக்கும் வீடுகளோடு சேர்ந்திருக்கும் வகையில் கட்டவேண்டும். தனியாக ஒதுக்கிக் கட்டப்படுவதால் அது ஹரிஜனக் காலனியெனப் பிறரால் அழைக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப்படுகிறது. தொடர்ந்து தீண்டாமை நிலவ ஏதுவாகிறது. இதற்குப் பரிகாரம் தேடவேண்டுமென தனது கருத்தைத் தெரிவித்தார். மேலும், ஒவ்வொரு வருடமும் ஹரிஜன வீட்டுத் திட்டத்திற்கு ஏராளமான பணத்தைப் பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும். ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் அவர்களது நலனுக்காகவே செலவழிக்கப்படவேண்டும். வேறு காரியங்களுக்கு அப்பணம் செலவழிக்கப்படக்கூடாது என்று சற்று வன்மையாகவே சௌந்திரம் சட்டசபையில் கூறினார்.

தற்போது, நிலச்சுவான்தார்களின் நிலங்களையும் அரசு நிலங்ககளையும் ஹரிஜனங்கள் குத்தகை உரிமம் பெற்று சாகுபடிசெய்து வருகிறார்கள். ஹரிஜனங்கள் அந்த நிலங்களில் இயற்கை உரமிட்டு பக்குவப்படுத்தி, கடின உழைப்பைச் செலுத்தி விவசாயம் செய்து வருகிறார்கள். சில சமயங்களில் நிலச் சொந்தக்காரர்கள், அந்த ஹரிஜனங்களிடமிருந்து அக்குத்தகை நிலங்களைத் திடீரென திரும்பப்பெற்று விடுகின்றனர். இதனால், அந்த ஹரிஜனக் குடியானவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் போட்ட மூலதனத்தைக்கூட எடுக்க முடியாமல் அவதிப்படுகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் தஞ்சை ஜில்லாவில் ஏராளம் நடைபெற்றுவருகின்றன. இந்நிலையை மாற்றியமைக்க ஒரு குறிப்பிட்ட நிலம் ஹரிஜனங்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டால் குறைந்தது ஐந்து முதல் பத்து வருடங்கள் வரையாவது தொடர்ச்சியாக அந்நிலம் ஹரிஜனக் குடியானவனால் பயிர் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்தும் சட்டத்திருத்தம் ஒன்றை குத்தகை உரிமைச் சட்டத்தில் கொண்டுவரவேண்டுமென சௌந்திரம் அரசிடம் முறையிட்டார். அவரது கருத்தை ஏற்றுக்கொண்ட அரசு அதனை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதாக உறுதியளித்தது.

ஒவ்வொரு சட்டசபை உறுப்பினரும் அந்தந்தத் தொகுதியில் தீண்டாமை ஒழிப்புப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சமூகக் கொடுமைகளை எதிர்த்துப் போராட வேண்டுமென சபை உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டார். ஜாதிக் கொடுமைகள் கிராமங்களில் தலைவிரித்து ஆடுவதையும் ஹரிஜனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டு வருவதையும் பல சம்பவங்களைக் குறிப்பிட்டு சபையில் விளக்கினார். ஹரிஜனங்களின் உயிருக்கும் உடமைக்கும் கிராமங்களில் பாதுகாப்பில்லை, ஹரிஜனங்களின் உயிருக்கும்,



உடமைகளுக்கும் கிராமங்களில் பாதுகாப்பில்லை. ஹரிஜனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை அரசு தனது தலையாய கடமையாகக் கொண்டிருக்க வேண்டும். ஹரிஜனங்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்க முடியவில்லையென்றால் நாம் இங்கு கூடியிருப்பதிலும் பேசுவதிலும் அர்த்தமில்லாமல் போய்விடும். ஹரிஜனங்களுக்கான தனி குடிதண்ணீர்க் கிணறுகள், தனிப்பாதை, தனி மயானங்கள் போன்றவற்றைச் சட்டப்படி தடுக்க வேண்டுமென அரசிடம் சௌந்திரம் முறையிட்டார். அவரது குரலுக்கு அரசு முக்கியத்துவம் கொடுத்தது. சௌந்திரம் தனக்கு வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் சட்டசபையில் ஹரிஜனங்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறி பல உரிமைகளைப் பெற்றுத்தந்தார்.

1956ல் இராமேஸ்வரத்தில் பயங்கரப் புயல் மழை. இரமேஸ்வரம் நீரில் மூழ்கியது. பலத்த உயிர் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டன. அந்த மாவட்டத்திலுள்ள அருப்புக்கோட்டை, திருப்பாச்சேத்தி, திருப்புவனம் போன்ற பகுதிகளும் புயலால் பாதிக்கப்பட்டன. அமைதியாக வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகள் ஆயினர். பல வாரங்கள் தண்ணீர் வற்றவில்லை. வீடுகளும் குடிசைகளும் நீருக்குள் மூழ்கியிருந்தன. பாதிக்கப்பட்ட மக்கள் எவ்வித உதவியுமின்றித் தவித்தார்கள். சௌந்திரம் உடனடியாக சுமார் முந்நூறு காந்திகிராம ஊழியர்களையும் மாணவர்களையும் அழைத்துக்கொண்டு ஏராளமான நிவாரணப் பொருட்களுடன் அப்பகுதிக்கு விரைந்தார். அரசு நிவாரண நடவடிக்கைகளைத் தொடங்கும் முன்பே, அவர் அங்கு சென்று நிவாரணப் பணிகளைத் தொடங்கினார். மூழ்கிய வீடுகளின் முகடுகளில் தங்கியிருந்த குழந்தைகள், முதியோர்களுடன் ஆண்களையும் பெண்களையும் பத்திரமாக நிவாரண முகாமிற்கு அழைத்து வந்து, அவர்களுக்கு உணவு, உடைகள் கொடுத்துப் பராமரித்தார்கள். புயலால் பலத்த சேதம் ஏற்பட்டுவிட்டது என்பதையறிந்த முதல்வர் காமராஜர் அவர்கள் உடனடியாக இரமேஸ்வரம் விரைந்து சென்றார். சௌந்திரத்துடன் சேர்ந்து இடுப்பளவுத் தண்ணீரில் நடந்து சென்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டார். அரசு செய்ய வேண்டிய வேலைகளைச் செய்கின்ற சௌந்திரத்தைக் காமராஜர் மிகவும் பாராட்டினார். அரசு அலுவலர்களைத் இப்பணிகளுக்குத் தாராளமாக பயன்படுத்திக்கொள்ளுமாறும் சௌந்திரத்திற்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவரது ஆலோசனைப்படி நடந்து கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார். சுமார் ஆறுவார காலம் இராமேஸ்வரத்தில் தங்கிப் பணியாற்றி வந்தார். வெள்ளம் வடிந்து மக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு அமைதி திரும்பும் வரையில் ஓய்வின்றி ஆபத்து காலத்தில் அயராது சேவை செய்த சௌந்திரத்தைத் தமிழக மக்கள் அனைவருமே பாராட்டினார்கள்.

1957 ம் ஆண்டு தமிழ் நாட்டையே பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய ஒரு சம்பவம், முதுகுளத்தூர் சாதிக் கலவரமாகும். ஹரிஜனங்களுக்கும் சாதி இந்துக்களுக்குமிடையே ஏற்பட்ட இக்கலவரத்தால் தமிழகமே தலைகுனிந்தது. எங்கு பார்த்தாலும் அடிதடிகள், படுகொலைகள் நடந்தவண்ணம் இருந்தன. ஹரிஜனங்களின் வீடுகள் தீயிடப்பட்டன. பெண்களும் குழந்தைகளும் தீயில் வீசப்பட்டனர். குடி தண்ணீரில் விஷம் கலக்கப்பட்டது. ஆடுமாடுகள், உடைமைகள் அனைத்தும் சூறையாடப்பட்டன. அப்பகுதியில் வாழ்ந்த ஹரிஜனங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளானார்கள். அச்சமயம் சௌந்திரம் சென்னையிலிருந்தார். செய்தியை அறிந்தவுடன் காந்திகிராமத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு முதுகுளத்தூருக்கு ஊழியர்களை அழைத்துவரும்படி கூறிவிட்டு தான் சென்னையிலிருது நேராக கலவரம் நடந்த பகுதிக்கு விரைந்தார்.

காந்திகிராமத்திலிருந்து நூற்றுக்கணக்கான சாந்திசேனைத் தொண்டர்களும் ஊழியர்களும் விரைந்து சென்றனர். போலீசாரால் கூட கட்டுப்படுத்த முடியாத இக்கலவரத்தை ஒரு பெண் எப்படி கட்டுப்படுத்த முடியுமென அதிகாரிகள் சௌந்திரம் பிரவேசிப்பதை அனுமதிக்கத் தயங்கினர். கிராமங்களுக்குச் செல்ல வேண்டாமெனவும் கூறினர். அவர் அப்போது சட்ட மன்ற உறுப்பினராக இருந்து வந்தார். இருப்பினும் அரசினுடைய உதவிகள் எதுவும் எதிர்பாராமல் சாந்திசேனைத் தொண்டர்களுடன் அமைதி முகாம்களை அமைத்து பணியாற்றத் தொடங்கினார். கிராமம் கிராமமாகச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கினார். சில கிராமங்களில் ஜனநடமாட்டமே இல்லை. ஊரைவிட்டே மக்கள் ஒடிக்கொண்டிருந்தனர். கிராமங்களில் ஹரிஜனங்கள் பயத்துடன் பதுங்கிக்கொண்டு பல நாட்களாக உணவின்றித் தவித்து வந்தனர். அவர்களையெல்லாம் அமைதி முகாம்களுக்கு அழைத்துவந்து உணவளித்து பாதுகாப்பு வழங்கினார். சௌந்திரம் காந்திகிராம ஊழியர்களுடன் ஒவ்வொரு கிராமமாகச் சென்று மக்களின் பீதியைப் போக்கினார். அமைதிப்பணியில் காந்திகிராம சாந்திசேனை அல்லும்பகலும் பணியாற்றி மக்களின் உயிரைக் காப்பாற்றியது. தனது உயிருக்குக் கூட பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையிலும் கூட சௌந்திரம் சுமார் இரண்டுமாத காலம் அப்பகுதியில் தங்கியிருந்து செய்த சேவையைத் தமிழ் நாட்டு மக்களால் என்றும் மறக்கமுடியாது. "மானிடர்கள் மத்தியில் எப்போதெல்லாம் அநியாயம் தலையெடுத்து அக்கிரமங்கள் பெருகுகின்றனவோ அப்போதெல்லாம் நான் தோன்றுவேன்," என பகவத்கீதையில் கிருஷ்ணன் கூறுவது போல எங்கெல்லாம் ஹரிஜனங்கள் அவதியுறுகிறார்களோ அங்கெல்லாம் சௌந்திரம் தோன்றிச் சேவையாற்றி வந்தார்.





*அமெரிக்காவில் கருப்பர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துகாந்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்திய மார்டின்லூத்தர் கிங் அவரது துணைவியார் ஆகியோருடன் அம்மா அவர்கள்*

ஹரிஜனங்கள் முன்னேற வேண்டும்; பிறரைப்போல தலை நிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காக சௌந்திரம் ஆற்றிவந்த சேவைகளை தமிழ்நாட்டிலுள்ள எந்த ஒரு ஹரிஜனும் மறக்க முடியாது. ஹரிஜனங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். நமது நாட்டின் அந்தஸ்தும், மதிப்பும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்தில்தான் அடங்கியிருக்கிறது என்று அடிக்கடி கூறிவருவார். ஹரிஜனங்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைப்பதற்கு எந்தநேரமும் தயாராக இருந்தார். கஷ்டப்படுகின்ற சமயங்களிலெல்லாம் ஓடிச்சென்று உதவி செய்தார். ஹரிஜனப் பணியில் சௌந்திரம் தன்னை மட்டும் அர்ப்பணித்துக் கொள்ளவில்லை. காந்திகிராமத்தையும் அதன் ஊழியர்களையும் தன்னுடன் இணைத்துக்கொண்டு சேவையாற்றினார். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற வாசத்திற்கு இலக்கணமாக விளங்கினார். தனது வாழ்நாள் முழுவதும் உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஹரிஜனங்களுக்காக அர்ப்பணித்தார். சுருங்கக்கூறின் ஹரிஜனங்களின் பாதுகாவலராகச் சௌந்திரம் விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

# சட்ட மன்றத்தில் சௌந்திரம்

காந்தியடிகளின் ஆசியுடன் அஸ்திவாரமிடப்பட்ட காந்திகிராமம் வேகமாக வளர்ந்து கிராம மக்களுக்கு அரும்பெரும் சேவைகளைச் செய்துவந்தது. கிராம மக்கள் சௌந்திரத்தின் மீது அளவற்ற பாசம் காட்டத் தொடங்கினர். தன்னலமற்ற சேவையாலும், கனிவான மொழியாலும் கிராம மக்கள் இதயத்தைச் சௌந்திரம் எளிதில் தொட்டுவிட்டார். மதுரையிலும் பல்வேறு நகரங்களிலும் சுகமான பங்களாக்கள் இருந்தும் அவற்றையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு காந்திகிராமத்தில் ஒரு குடிசையில் தங்கி, கட்டாந்தரையில் படுத்துறங்கி, கிடைத்ததை உண்டு, சாதாரண மக்களுடன் பேசிப்பழகி சேவைசெய்துவந்த சௌந்திரத்தைப் பொதுமக்கள் அனைவரும் மதித்துப் போற்றத் தொடங்கினர். இவ்வேளையில் 1952ம் ஆண்டு சென்னை மாகாண சட்டசபைக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதற்குமுன் பல தேர்தல்கள் நடைபெற்றபோது அதைப்பற்றி சௌந்திரம் சிந்தித்ததே கிடையாது. குறிப்பாக காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தில் செயல்பட்டுவருபவர்கள் அரசியலில் ஈடுபடுவது கிடையாது. அதுபோன்றே சௌந்திரமும் தனது பணிகளான கிராம அபிவிருத்தி, பெண்கள் முன்னேற்றம், குழந்தைகள் நலம் போன்றவற்றில் மூழ்கியிருந்தார். இவரது பணிகளினால் நேரடியாகப் பல பலன்களைப் பெற்ற சுற்றுப்புறக் கிராம மக்கள் ஒருநாள் ஒன்றுசேர்ந்து இவரைச் சந்திக்க வந்தார்கள். அவர்கள், "காந்திகிராமத்தைச் சுற்றியிருக்கும் எங்கள் கிராமங்களுக்கு நீங்கள் வந்து பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறீர்கள். தங்களின் சேவையால் நாங்கள் நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பது எங்கள் அனைவரது . விருப்பம். நீங்கள் சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் அரசின் உதவியோடு இதுபோன்ற பல நலப் பணிகளைச் செய்யமுடியும். ஆகவே, நீங்கள் தேர்தலில் நிற்க வேண்டும்," என சௌந்திரத்திடம் வேண்டுகோள் விடுத்தனர். கிராம மக்கள் கூறுவதைப் புன்னகையோடு கேட்டுக்கொண்டிருந்த சௌந்திரம் "நானும் காந்திகிராம ஊழியர்களும் செய்துவரும் பணிகளுக்கும் அரசியலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அரசியலில் பலர் வருவார்கள், போவார்கள். திடமான செயல்முறைகள் எதுவும் இருக்காது. மேலும், என் போன்றோர்கள் அரசியலில் ஈடுபட்டால்



இந்தக் கிராம மக்களுக்குச் சேவைசெய்யப் போதிய நேரம் கிடைக்காது. கிராமத்திலேயே தங்கிக் கிராம மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதே எனது விருப்பம்" எனக்கூறினார். இருப்பினும் வரும் தேர்தலில் சௌந்திரம் போட்டியிட வேண்டுமென அக்கிராம மக்கள் ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டனர். காந்திகிராம ஊழியர்களும் அவ்வாறே தங்கள் கருத்தைத் தெரிவிக்கலாயினர். அச்சமயம் சென்னை மாநில அரசியல் தலைவர்கள் அனைவரையும் சௌந்திரம் நன்கு அறிவார். ஏற்கெனவே மதுரை மற்றும் திண்டுக்கல் போன்ற பகுதிகளில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. காங்கிரஸ் கட்சியினர் இப்பகுதிகளைத் தங்கள் கைவசம் கொண்டுவர பொருத்தமான வேட்பாளர்களைத் தேடிக் கொண்டிருந்தனர். ஏற்கனவே தன்னலமற்ற சேவையால் மக்கள் மனதில் நீங்காது நிலைபெற்றிருக்கும் சௌந்திரத்தைக் காங்கிரஸ் வேட்பாளராக இப்பகுதியிலுள்ள ஒரு தொகுதியில் போட்டியிடச் செய்வதென காங்கிரஸ் தலைவர்கள் பலர் காந்திகிராமம் வந்து சௌந்திரத்தைக் கேட்டுக் கொண்டனர். ஒருபுறம் பொதுமக்களும் மறுபுறம் காங்கிரஸ் தலைவர்களும் வலியுறுத்தி வேண்டிக்கொண்டதன் காரணமாக திண்டுக்கல்லை அடுத்துள்ள ஆத்தூர் தொகுதியில் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட ஒப்புக் கொண்டார். இவ்வாறாக சௌந்திரத்தின் அரசியல் பிரவேசம் ஆரம்பமாயிற்று.

தேர்தலில் போட்டியிடுவதற்கான மனு தாக்கல் செய்யப்பட்டு தேர்தல் பிரச்சாரம் தொடங்கியது. எதிர்க்கட்சியினர் தடபுடலாக பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். ஆனால், சௌந்திரமோ எவ்வித ஆரவாரமின்றி கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்திக்கலானார். தற்போதுள்ளதைப்போன்று அப்போது கிராமங்களுக்கு சாலை வசதிகள் கிடையாது. கார் எதுவும் செல்ல முடியாத பல கிராமங்களுக்கு ஒத்தையடிப் பாதைகள். அதிலும் சென்றுவரமுடியாது. அப்படிப்பட்ட கிராமங்களுக்கெல்லாம் சௌந்திரம் நடந்தே சென்று மக்களைச் சந்தித்தார். பிரச்சராத்தில் ஈடுபட்டிருந்த சமயம் சரியான உணவும் கிடையாது. ஓய்வும் கிடையாது. போகின்ற கிராமங்களில் எது கிடைக்கிறதோ அதைச் சாப்பிட்டுக் கொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தன் பிரச்சாரத்தின்போது எதிர்க்கட்சியினரை எச்சூழ்நிலையிலும் குறைத்தோ, தாக்கியோ பேசியது கிடையாது. தனது கட்சியைச் சார்ந்தவரையும் அப்படிப்பேச அனுமதிக்க மாட்டார். தனக்கு ஓட்டுப்போட வேண்டுமெனக் கேட்பதும் கிடையாது. காங்கிரசுக்கு ஓட்டளியுங்கள் . காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் கிராம மக்களுக்குச் சேவைகள் செய்து அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர உழைப்பார்கள் என்றுதான் சௌந்திரம் கூறிவந்தார். பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் ஒரு நாள் ஒரு கிராமத்திற்குச் செல்ல

திட்டமிட்டிருந்தார்கள். வெய்யிலில் நடந்து செல்ல வேண்டும். அவ்வாறு செல்லக்கூட சரியான பாதையில்லை. சௌந்திரத்துடன் சென்றவர்களில் ஒருவர், "அம்மா... நாளைக்கு வேறு வழியாகக் காரில் அக்கிராமத்திற்குச் செல்லலாம். இன்று எப்படி நாம் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு செல்ல இயலும்?" என்றார். "நாம் பெறப்போவது வெற்றியோ தோல்வியோ. அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இந்தத் தேர்தலை முன்னிட்டாவது பல இன்னல்களுக்கிடையில் வாழ்கின்ற கிராம மக்களைச் சந்திக்கவும், அவர்களது குறைகளைக் கேட்டறியவும் வாய்ப்பு ஏற்பட்டதே ஒரு மகிழ்ச்சியான காரியம். இவ்வாறு கிராமங்களுக்கெல்லாம் சென்று பார்த்தால்தான் அவர்களின் கஷ்டங்களை நாம் அறியமுடியும். அதற்கேற்றார்போல் நாமும் நமது பணிகளை வரையறை செய்துகொள்ள முடியும்," என்று சௌந்திரம் பதில் கூறினார். இவ்வாறு தேர்தலுக்கு முன்னமே ஆத்தூர் தொகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் விஜயம் மேற்கொண்டு மக்களைச் சந்தித்தார். ஏற்கனவே சௌந்திரத்தின் பணிகளை நேரில் கண்டும், கேள்விப்பட்டும் இருந்த கிராம மக்கள் சௌந்திரம் வெற்றிபெற வேண்டுமென வாழ்த்தினார்கள். தேர்தல் நாள் வந்தது. ஓட்டுகள் பதிவு செய்யப்பட்டு, எண்ணப்பட்டன. ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் சௌந்திரம் வெற்றிபெற்றார். அதே போன்று 1957 ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வேடசந்தூர் தொகுதியில் போட்டியிட்டு அதிலும் அமோக வெற்றிபெற்றார். இவ்வாறு பத்து ஆண்டுகாலம் சென்னை சட்டசபை அங்கத்தினராகச் சௌந்திரம் பணியாற்றினார்.

சௌந்திரம் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம் காங்கிரஸ் கட்சியின் தலைமையிடத்தில் சில பிரச்சினைகள் தலை தூக்கின. தென்னக அரசியலில் முக்கியத் தலைவராக விளங்கியவர் இராஜாஜி ஆவார். நாடு சுதந்திரமடையும் தறுவாயில் காந்தியடிகள் இந்தியதேசம் பாகிஸ்தான் என்றும் இந்தியா என்றும் பிரிவதை வன்மையாகக் கண்டித்துவந்தார். ஆனால், இராஜாஜியோ பாகிஸ்தான் என்ற தனிநாடு உருவானால்தான் இந்து–முஸ்லீம் கலவரம் அடங்கும் என்றார். இராஜாஜியின் கருத்து பல காங்கிரஸ் தலைவர்களுக்கு மனவேதனையை ஏற்படுத்தியது. இராஜாஜிக்கு எதிராகக் கண்டனக் குரல்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து இராஜாஜி காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறினார். இராஜாஜியின் வெளியேற்றம் கட்சியில் ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தியது. திருப்பரங்குன்றம் காங்கிரஸ் மாநாட்டில் இரு சாராரையும் ஒற்றுமைப்படுத்துவதற்காக சௌந்திரம் இரு அணித் தலைவர்களையும் சந்தித்துப் பேசிச் சமாதான முயற்சியில் ஈடுபட்டார். இருப்பினும் இரு அணிகளையும் ஒன்றாக இணைப்பது சாத்யமற்றதாகவே காணப்பட்டது.



1952 ம் ஆண்டு சென்னை மாகாண சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றபின் யார் தலைமையில் மந்திரிசபை அமைப்பதெனக் கேள்வி எழுந்தது. இராஜாஜி தலைமையில் மந்திரிசபை அமைக்கலாம் என்பது சௌந்திரத்தின் விருப்பம். அதற்குக் காரணம் இராஜாஜி ஒரு பழுத்த அரசியல்வாதி. மூதறிஞர் என்று மக்களால் அழைக்கப்பட்டவர். அதுமட்டுமின்றி சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகப் பதவி வகித்தவர். எனவே, இராஜாஜி இல்லாமல் மந்திரிசபை அமைப்பது அவ்வளவு நன்றாக இருக்காது எனப் பல காங்கிரஸ் பிரமுகர்கள் கருதினார்கள். ஆனால், இராஜாஜியோ தேர்தலில் போட்டியிடவுமில்லை, வெற்றிபெறவுமில்லை. அப்போது, சௌந்திரம் ஒரு யோசனை கூறினார்கள். அதாவது இராஜாஜியைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராகக் கட்சியிலிருந்து நியமித்து அதன்மூலம் அவரை முதல்வராக்குவது என்பது அந்த யோசனையாகும். இது பலருக்கு சரியானதாகவும் தெரிந்தது. உடனடியாக சௌந்திரமும் சி. சுப்பிரமணியமும் டில்லி சென்று பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவைச் சந்தித்து, தங்களது கருத்துக்களைக் கூறினர். சௌந்திரத்தின் கருத்துக்களுக்கு நேருவும் செவிசாய்க்க, முயற்சி பழமாகியது. இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் கட்சி அரசமைத்தது.

தனது பத்தாண்டு உறுப்பினர் காலத்தில் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு சௌந்திரம் சிறந்த பணியாற்றினார். நாடு தொழில் மயமாவதை ஆதரித்தார். தொழிற்சாலைகள் ஓரிடத்தில் குவியாமல் பரவலாக்கப்பட வேண்டும் என்றார். சென்னை, திருச்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஜனநெருக்கடி அதிகமாக உள்ளபடியால், ரயில் மற்றும் போக்குவரத்து வசதியுள்ள கிராமப்புறங்களில் தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும். குறிப்பாக வறட்சிப் பகுதிகளில் தொழில் தொடங்குவதை ஆதரிக்கலாம். அப்போதுதான் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். வறுமை அகலும். எங்கெங்கு என்னென்ன மூலப்பொருள்கள் அதிகமாகக் கிடைக்கிறதோ அங்கங்கே அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளை நிறுவவேண்டும். அப்போதுதான் நாட்டின் இயற்கைவளம் முழுமையாகப் பயன்படுத்தப்படும். குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜிப்சம் அதிகமாகக் கிடைப்பதால் அது சம்பந்தமான தொழில்களை அங்கு ஆரம்பிக்கலாம். முதுகுளத்தூர் பகுதியில் சுண்ணாம்பு அதிகம் கிடைப்பதால் அங்கு சிமெண்ட் ஆலைகள் நிறுவ அரசு முயற்சி எடுக்கலாம். மானாமதுரை மண்பாண்டங்களுக்கு சிறப்பு பெற்று விளங்குவதால், நவீன முறையில் மண்பாண்டங்கள் செய்யும் தொழிற்சாலைகளை அங்கு ஆரம்பிக்கலாம். அதேபோன்று கைவண்ணத் தொழிலாளர்களின் நலனையும் அரசு பாதுகாக்கவேண்டும். தமிழ்நாட்டில் பரம்பரை பரம்பரையாக

கைத்தொழில் செய்வோர் பரவலாகப் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வருகிறார்கள். குறிப்பாக தஞ்சாவூர், கும்பகோணம், அம்பாசமுத்திரம் போன்ற இடங்களில் வெண்கல வார்ப்புச் சிற்பிகள் உள்ளனர். அவர்களது தொழிலும் திறமையும் அழியாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென அரசைச் சௌந்திரம் கேட்டுக் கொண்டார்.

சேலத்தில் புதிதாகத் துவங்கப்பட்டுள்ள அலுமினியத் தொழிற்சாலையை விரைவில் கட்டிமுடித்து உற்பத்தியைத் துவங்கத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு உற்பத்தி தொடங்கினால்தான் அப்பகுதியில் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதோடுமட்டுமல்லாது சென்னை மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கும் அது ஊக்கமளிக்கும் என்று சட்டசபையில் சௌந்திரம் எடுத்துரைத்தார். நெய்வேலித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி. அதன் உற்பத்தியை அதிகரிக்க வழிவகை செய்ய வேண்டும். பெருகிவரும் மின் தேவையைச் சமாளிக்க இதுபோன்ற அனல்மின் நிலையங்களை மேலும் ஏற்படுத்த வேண்டும். சில தனியார் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள விரும்புவதால் அவர்களுக்கு அனுமதி வழங்கினால் நல்லது என்ற யோசனையை முதன்முதலில் சட்டசபையில் வெளியிட்டது சௌந்திரம்தான். அதுமட்டுமல்லாது அணுமின் திட்டத்தை ஆராய்ந்து மத்திய அரசுடன் கலந்து ஆலோசித்து தமிழ்நாட்டில் அணுமின் நிலையம் உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் அரசைக் கேட்டுக்கொண்டார்.

கதர் மற்றும் கிராமச் சிறுதொழில் வளர்ச்சியிலும் சௌந்திரம் அதிகக் கவனம் செலுத்தினார். அரசு சிறுதொழில்களை ஊக்கப்படுத்த வேண்டும். சிறு தொழில்கள் சிறப்பாக நடைபெறும் இடங்களில் கைத்தொழில் பட்டறைகளை ஏற்படுத்தலாம். இதனால் சிறு கைத்தொழில்களும், சிறு எஞ்சினியரிங் தொழில்களும் அபிவிருத்தி அடையும் என்பது அவரது கருத்து. கதர் மற்றும் கைத்தறிப் பொருட்களுக்கு சலுகைகள் வழங்கி அத்தொழில் செய்வோரை மேன்மையுறச் செய்ய வேண்டும். கதரைப் பெருக்கவேண்டும். ஒரு மில் துணியால் ஒரு குடும்பம் பிழைக்கிறது. ஆனால், கதரில் அம்பர் இராட்டையென்றால் எட்டுப்பேர்களும், சாதாரண கிசான் இராட்டையென்றால் 15 முதல் 20 பேர்களும் பிழைக்கின்றார்கள் என்ற புள்ளி விபரத்தைச் சட்டசபையில் எடுத்துரைத்து கதர் அபிவிருத்திக்குத் தேவையான பல முயற்சிகளை மேற்கொள்ள அரசை சௌந்திரம் கேட்டுக்கொண்டார். மேலும், கதர், கைத்தறித் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கெனத் தனியாகக் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலம் பஞ்சு, நூல் போன்ற பொருட்கள் எளிதில் கிடைக்கவும், நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்றும்



கேட்டுக்கொண்டார். கதர் மற்றும் கைத்தறித் தொழிலை நம்பி ஆயிரக்கணக்கான மக்கள் பிழைப்பு நடத்துவதால் அவர்களுக்கு வேலைவாய்ப்புப் பெருக்கும் முகமாக கதர்த் துணிகள் அணிவதைப் பொதுமக்களிடம் ஊக்குவிக்க வேண்டும். அதோடு மட்டுமல்லாது சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் கதர்த் துணிகளை அணியும்படி கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் உரையின்போது நடைபெறும் விவாதத்தின்போது சிறுதொழில்கள் வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கவேண்டும். சிறுதொழில், கைத்தொழிலில் ஈடுபடுவோர்களின் சுகாதாரம், கல்வி, குடியிருப்பு வசதி போன்றவற்றை அரசு செய்துதர வேண்டுமென வலியுறுத்தினார்.

சிறுதொழில்கள் மற்றும் கனரகத் தொழில்களின் மேம்பாட்டிற்கு சௌந்திரம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்தாரோ அதேபோன்று விவசாய அபிவிருத்திக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்தார். விவசாயத்தில் சௌந்திரத்திற்கு ஆர்வம் அதிகம். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இன்னும் உணவுப் பொருட்களுக்கு வெளிநாட்டையே சார்ந்திருப்பதால், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவது அவசியம். எனவே, விவசாயம் செய்யப்படாத தரிசு நிலங்களை விவசாயத்திற்கு கொண்டுவரவேண்டும். விவசாயிகளுக்கு விதை, உரம், பூச்சிமருந்துகள், விவசாயக் கருவிகள் போன்றவை தாராளமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். கூட்டுறவு வங்கிகளை நிறுவி அதன்மூலம் விவசாயிகளுக்கு எளிய முறையில் கடன் வசதிகளைச் செய்துதரவேண்டும். மேலும், குறுகிய காலத்தில், குறைந்த நீரில் விளைந்து, அதிக மகசூல் தரும் தானியங்களைக் கண்டுபிடித்து விவசாயிகளுக்கு அறிமுகம் செய்யவேண்டும். இதற்கான ஆராய்ச்சிக் கூடமொன்றை ஏற்படுத்தவேண்டும். தரமான விதைகளையும் குறுகியகாலத்தில் விளைச்சல் தரும் பயிர்களுக்கான விதைகளையும் விவசாயிகளுக்கு வழங்க பல விதைப்பண்ணைகளை அரசு அமைக்க வேண்டும். விவாசாயத்துறையில் ஏராளமான இளைஞர்கள் படித்து பட்டம்பெற்று விவசாய வல்லுனர்களை உருவாக்கும் வகையில் பல விவசாயக் கல்லூரிகளை நிறுவவேண்டும். குறிப்பாக மதுரை அல்லது திருநெல்வேலியில் ஒரு விவசாயக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென அரசை சௌந்திரம் கேட்டுக்கொண்டார். விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆழ்கிணறுகளிலிருந்து மோட்டார் மூலம் தண்ணீர் இறைக்கும்போது சாதாரண நிலையைவிட அதிக மின்சாரம் செலவாகிறது. அதிகமாகச் செலவாகும் அந்த மின்சாரத்திற்கான கட்டணத்திற்கு மானியம் வழங்கப்பட வேண்டுமென அரசை வேண்டிக்கொண்டார். இவ்வாறு விவசாயிகளின் ஒவ்வொரு தேவைகளையும் நன்கு அறிந்து அவர்களின் நலனுக்காவும் சட்ட சபையில் குரல் எழுப்பினார்.

விவசாயத்திற்கும், தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கும் தண்ணீர் மிகவும் அவசியம். தண்ணீர் இறைவனால் படைக்கப்பட்ட அதிசயமான பொருள். இத்தகைய இயற்கையின் கொடையை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியம். மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளம் ஆறுவழியாக ஓடிச்சென்று எவ்விதப் பயனுமின்றி கடலில் கலந்துவிடுகின்றது. குறிப்பாக வேடசந்தூர்ப் பகுதியில் பாய்ந்து வரும் குடகனாறு நீர் அமராவதி மற்றும் காவேரி ஆற்றில் கலக்கிறது. இதனால், வேடசந்தூர்ப் பகுதிக்கு பயனேதுமில்லை. எனவே குடகனாற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டி, அப்பகுதியிலுள்ள குளங்களுக்கு நீரைத் திருப்பினால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும். அதனால்,அப்பகுதியில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்குமென அரசிற்குப் பரிந்துரை செய்தார். அதேபோன்று லட்சுமணப்பட்டி அணைக்கட்டுத் திட்டத்தையும் உருவாக்கி, அதைப் பற்றிய தெளிவான கருத்துக்களை வரையறுத்துக் கொடுத்து, அத்திட்டத்தைச் நடைமுறைக்குக் கொண்டுவந்தவர் சௌந்திரம்தான். திண்டுக்கல்லில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க குடகனாற்று நீரைப் பயன்படுத்தலாம் என்ற திட்டத்தையும் வகுத்துக்கொடுத்தார். இத்திட்டமானது உடனடியாக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டது. இதைப்போலவே மதுரை மாவட்டத்தில் சாத்தியாறு, மஞ்சள் ஆறு போன்ற திட்டங்களையும் உருவாக்கிக் கொடுத்து அம்மாவட்டத்தின் வேளாண்மை வளர்ச்சியடைய வழிவகுத்தார்.

சௌந்திரம் எப்போதும் தனது தொகுதியை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு செயல்பட்டது கிடையாது. மக்களுக்குப் பயன்படும் திட்டங்கள், எந்தத் தொகுதியாக இருந்தாலும் அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார். திருநெல்வேலி மாவட்டத்தில், மேற்கு மலைத் தொடர்ச்சி மலையில் உருவாகும் முக்கிய நதிகளில் கடனா நதியும் ஒன்றாகும். இந்நதியானது, அது உற்பத்தியாகி ஓடிவரும் பகுதிகளுக்குச் சரியாகப் பயன்படாமல், காட்டாறு போன்று ஓடிப் பயனற்றுப் போய்க் கொண்டிருந்தது. இவ்விஷயமானது சௌந்திரத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாக அப்பகுதிகளைச் சென்று பார்வையிட்டார். இப்பகுதியில் ஒரு அணைகட்டப்பட்டால் சுமார் 7500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும் என அப்பகுதி மக்கள் சௌந்திரத்திடம் முறையிட்டார்கள். அதனைத் தொடர்ந்து கடனாநதி பற்றிய திட்டம் அப்பகுதி விவாசயிகளின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்பட்டது. அதாவது கடனா நதி, அப்பகுதியில் பாய்ந்து செல்லும் வேறு இரு நதிகளான நல்லாறு, கிலுப்பை ஆறு ஆகிய மூன்று நதிகளும் சந்திக்குமிடத்தில் ஒரு அணையைக் கட்டுவதென அத்திட்டத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது. இத்திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டது.



முதலில் இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு தயங்கியது. சௌந்திரம் மீண்டும் அமைச்சர்களையும் உயர் அதிகாரிகளையும் சந்தித்து இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். இறுதியில் ஒப்புதல் கிடைத்தது. விவசாய மக்களுக்கு ஒரே மகிழ்ச்சி. சௌந்திரத்தை வரவழைத்து அவரைக் கொண்டே கடனா நதியில் அணை கட்ட அஸ்திவாரமிடச் செய்தார்கள். இவ்வாறு கட்டப்பட்டதினால் அம்பாசமுத்திரம், ஆழ்வார்குறிச்சி ஆகிய பகுதிகளில் வேளாண்மை பெருகியது. போக்குவரத்து அதிகரித்தது. மக்களின் வாழ்க்கைத்தரமும் முன்னேறியது.

அதேபோன்று சிறுமலையிலும் பழனிமலையிலும் மழைக்காலங்களில் ஏராளமான தண்ணீர் வழிந்து வீணாகப் போகிறது. அந்நீரைச் சேமித்து அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதிகளைச் செய்து கொடுக்க சௌந்திரம் முயற்சிகளை மேற்கொண்டார். சங்கரன்கோவில் பகுதியில் நிலவிவரும் வறட்சியைப் போக்குவதற்கு கீரியாறு பாசனத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். மேலும், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஏரி, குளங்களைச் செப்பனிட்டு மழைக்காலங்களில் கிடைக்கும் நீரை சேமித்துவைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென அரசை வலியுறுத்தினார். இவ்வாறாகத் தமிழ்நாட்டில் பல நீர்பாசனத் திட்டங்களை அரசிற்கு எடுத்துரைத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் நல்கி வந்தார்.

வறட்சியான பிரதேசங்களில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு அரசு தனது செலவிலேயே பல ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து நிலைமையைச் சமாளிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமெனவும் அதற்கான செலவுளை அபிவிருத்தி வரியின் மூலம் மக்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாமெனவும் அரசிற்கு ஆலோசனை கூறினார். அதேசமயம், தனியார்கள் கிணறு தோண்டவும், ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் அரசு கடன் வதிகளைச் செய்துதர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். நில உச்சவரம்பு சட்டத்தை அமல் செய்து குறிப்பிட்ட அளவிற்கு மேல் நிலம் வைத்திருப்பவர்களிடமிருந்து நிலத்தைப் பெற்று, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமெனவும் அரசிடம் எடுத்துக் கூறினார். அதேபோன்று, ஆண்கள் எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ள உரிமை உள்ளதோ அதே அளவு நிலம் பெண்களும் வைத்துக்கொள்ளலாம் என அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென அரசைக் கேட்டுக்கொண்டு பெண்களுக்கு சமஉரிமை கிடைக்கப் போராடினார். விவசாயிகளின் நலனுக்காகவும் சௌந்திரம் பல அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கிவந்தார். விவசாயிகள் எப்போதும் இரசாயன உரங்களையே நம்பியிருக்காமல் பசுந்தாள் உரமிட்டு மண்வளத்தைப் பாதுகாக்க வேண்டுமென

ஆலோசனை கூறினார். விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யும்பொழுது அப்போது நாட்டில் நிலவும் பொருளாதார மற்றும் விலைவாசிகள் நிலைக்கேற்ப கூலிநிர்ணயம் செய்யப்பட வேண்டும். கூலி விவசாயிகள் சுரண்டப்படுவதை அரசு தடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இவ்வாறு அதரவற்ற விவசாயக் கூலிகளின் உரிமைகளுக்காகவும் சட்டசபையில் குரல் எழுப்பியவர் சௌந்திரம்.

நீர்ப்பாசனத் திட்டங்கள், கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் பஞ்சாயத்துக்களின் பொறுப்பில் இருக்கவேண்டியதன் அவசியத்தை அரசிற்கு எடுத்துரைத்தார். எந்த ஒரு திட்டமானாலும் அதனைச் செயல்படுத்த மக்களின் ஆதரவு தேவை. குறிப்பாக நீர்ப்பாசனம் போன்ற திட்டங்கள் அந்தப் பகுதிகளில் வாழும் விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் இருத்தல்வேண்டும். ஏனெனில், அவர்கள்தான் அப்பகுதியில் வாழ்பவர்கள். திட்டத்தினால் பயனடைபவர்கள். ஆகவே, இத்தகைய பொறுப்புகள் பஞ்சாயத்திற்கே கொடுக்கப்பட வேண்டும். சர்க்கார் அதற்கு உதவியாக இருத்தல் வேண்டும். இதைப்போன்று, நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சௌந்திரம் புதியதோர் ஆலோசனையை மக்கள் மன்றத்தில் வைத்தார். அதாவது, ஒவ்வொரு மந்திரியும் ஒவ்வொரு ஜில்லாவை தங்களுடைய பொறுப்பில் எடுத்துக்கொண்டு அதில் விவசாய அபிவிருத்தி, கால்நடை அபிவிருத்தி, சமுதாயநலத் திட்டங்கள், சிறுதொழில் வளர்ச்சி போன்ற எல்லாவற்றையும் கவனிக்க வேண்டும். அம்மாவட்டதிற்குத் தேவையான புதிய திட்டங்களைத் தயாரித்து அதற்கான பட்ஜெட்டையும் அரசிற்குத் தாக்கல் செய்ய வேண்டும். அத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தும்போது கௌரவ திட்ட ஆணையராக அவர்கள் செயலாற்ற வேண்டும். அப்போதுதான் சகல துறைகளிலும் விரைவான வளர்ச்சி காணமுடியும். அத்தோடு மட்டுமல்லாது லஞ்சம், ஒழுங்கீனம் போன்றவைகள் தவிர்க்கப்பட்டு அரசின் வருவாயைச் சரியான முறையில் மக்களுக்குச் செலவு செய்ய முடியுமெனச் சௌந்திரம் ஆலோசனை கூறினார். சௌந்திரத்தின் கருத்துக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அரசும் அதில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

தனது பதவிக் காலத்தின்போது பெண்கள் முன்னேற்றம், குழந்தைகள் நலன் போன்றவற்றில் அதிக அக்கறை செலுத்தினார். பெண்களின் உரிமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் வாதாடினார். பல சிறப்புத் திட்டங்களையும் அரசிடம் சமர்ப்பித்தார். பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனில் சௌந்திரத்தின் ஆர்வத்தைக் கண்ட அரசு அவரது தலைமையில் ஆலோசனைக் கவுன்சில் ஒன்றை ஏற்படுத்தியது. இவ்வாலோசனைக் கவுன்சில் மூலம், பல்வேறு புதிய யோசனைகளையும் நலவாழ்வுத் திட்டங்களையும் அரசிற்கு எடுத்துரைத்து பல சாதனைகளையும் நிகழ்த்தினார். குறிப்பாக



நாட்டின் பல்வேறு பகுதிகளில், சமுதாயத்தால் பெண்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றன. வாழ்க்கையில் பெண்களுக்குப் பாதுகாப்பும் உத்திரவாதமுமில்லை என்பதை அரசிற்கு எடுத்துரைத்து பெண்களின் நலனுக்கென தனிஇலாகா ஒன்றை ஏற்படுத்தி நிரந்தரமாகச் செயல்பட வழிவகை செய்ய வேண்டுமென அரசைக் கேட்டுக்கொண்டார். அதன் பயனாகப் பெண்களின் நலனுக்காக ஒரு தனி இலாகாவை அரசு உடனடியாக அமைத்தது. மேலும் சமூகநலப் போர்டுகள் மூலம் ஒவ்வொரு வருடமும் நாடெங்கும் பல மையங்களை ஏற்படுத்தி கிராமப் பெண்களுக்கு நூல் நூற்றல், துணி நெய்தல், குடும்பக்கலை, சமூகக்கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கவேண்டும். இம்மையங்கள் சரியாகச் செல்படுகிறதா என்பதைக் கவனிக்க பல பெண் மேற்பார்வையாளர்களை நியமிக்க வேண்டும். அந்த மேற்பார்வையாளர்களை நிர்வகிப்பதற்கு தலைமைச் சமூகப் பணியாளர் ஒருவரை ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கவேண்டும். காந்தியடிகள் கூறியது போன்று பெண்கள் சம்பந்தப்பட்ட வேலையைப் பெண்களே செய்யவேண்டும்.மேற்கூறிய கிராமப்பயிற்சி நிலையங்களை நாடெங்கும் அமைத்தால்தான் கிராமப் பெண்கள் பல சிறுதொழில்களைக் கற்றுக் கொள்வதோடு உலக அறிவையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று அரசிற்கு ஆலோசனை கூறினார்.

கிராமப்புற பெண்களின் நிலை மிகவும் பின்தங்கியே காணப்படுகிறது. அவர்களுக்கான தேவைகள் பல புறக்கணிக்கப்படுகின்றன. இந்நிலையைத் தவிர்க்க கிராம நிர்வாகத்தில் பெண்கள் பங்கேற்க வேண்டும். சமூகம் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். பஞ்சாயத்துச் சபைகளில் பெண்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். அதுவும் 50 சதவீதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென அன்றே சட்டசபையில் சௌந்திரம் குரல் எழுப்பினார். அதுமட்டுமல்லாது பெண்கள், குழந்தைகள் முன்னேற்றம் சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனிப்பதற்கு, பெண் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு நிலைக்குழுவை ஒவ்வொரு பஞ்சாயத்திலும் அமைத்துச் செயல்படுத்த வேண்டுமென அரசை வற்புறுத்தினார். அச்சமயத்தில் சௌந்திரத்தால் வழங்கப்பட்ட ஆலோசனைகளும் திட்டங்களும் இன்று நடைமுறையில் இருந்து வருவதைக் காணலாம்.

நாடு முழுவதும், கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் குழந்தைகள், ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள் போன்றவர்களுக்கு விடுதியுடன் கூடிய பள்ளிகளை அரசு அமைத்துத் தரவேண்டும். அவர்களின் பாதுகாப்பிற்கு பல ஸ்தாபனங்களை ஏற்படுத்தவேண்டும். குறிப்பாக அதிகமான சொத்துக்களையும், வருவாயும் கொண்டுள்ள கோவில்கள் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன. அவைகள் தங்கள்

நிர்வாகத்தின் கீழ் பல அனாதை இல்லங்களை ஏற்படுத்தி அக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்ற போதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதே போன்று சமூக நலத்துறையும் பல்வேறு ஸ்தாபனங்களும் ஒருங்கிணைந்து ஊனமுற்ற குழந்தைகளின் படிப்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றிற்காகச் செயலாற்ற வேண்டுமென அரசைக் கேட்டுக் கொண்டார். உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கென தனி சிறப்புப் பள்ளிகளை அரசு உருவாக்கவேண்டுமெனவும் வேண்டினார்.

நகரங்களிலும், கிராமங்களிலும் பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள். சில சமயங்களில் பெண்கள் பாலியலுக்கு உட்படுத்தப்பட்டு வாழ்க்கையில் வழுக்கிவிழுந்து விடுகிறார்கள். அச்சமயங்களில் சம்மந்தப்பட்ட ஆண்களைச் சமுதாயம் பழிப்பதில்லை. மாறாகச் சமுதாயத்திலிருந்து பெண்கள் ஒதுக்கப்படுகிறார்கள்; விரட்டியடிக்கப்படுகிறார்கள். இதனால் சமுதாயத்தின் கொடுமைகளிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பெண்கள் தங்கள் வாழ்க்கையை மாய்த்துக் கொள்கிறார்கள். ஒரு பெண் கெட்டுப்போகிறாள் என்றால், அதற்கு அவள் மட்டும்தான் காரணமென உறுதியாகக் கூறமுடியாது. இச்சமுதாயத்தில் மலிந்து காணப்படும் மூடப் பழக்கவழக்கங்களும் ஆண்களின் இரக்கமற்ற சுபாவமுமே காரணமாகும். எனவே, அப்போது சட்டசபையில் கொண்டுவரப்பட்ட சென்னைமாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் திருத்த மசோதாவிற்குத் தனது ஒப்புதலையளித்த சௌந்திரம், மாநிலம் முழுவதும் திக்கற்ற பெண்களுக்காக தற்காப்பு இல்லங்களை அரசு நிறுவுதல் வேண்டுமெனவும், இவ்வில்லங்களில் அப்பெண்களின் வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் செய்துவைக்கும் பழக்கம் நம் நாட்டில் உள்ளதால் அப்பெண்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் பலவீனமாகவும், சரியான மூளைவளர்ச்சியின்றியும் காணப்படுகின்றன. தாய்மார்களும் பல உபாதைகளுக்கு ஆளாகின்றனர். மேலும், பெண்கள் தங்களைப் பற்றியும் தங்களது உரிமைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளும் முன்பே திருமணம் செய்து வைக்கப்படுவதால் அவர்களது வாழ்க்கை உறுதியற்றதாகவும் பாதுகாப்பு இல்லாமலும் போய்விடுகிறது. சில சமயங்களில் இளம் பெண்கள் தவறாகவும் பயன்படுத்தப்படுகிறார்கள். ஆகவே, பெண்களின் திருமண வயதை 18 என நிர்ணயம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அரசின் முன் சௌந்திரம் சமர்ப்பித்தார். இக்கோரிக்கை உடனடியாக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் இன்றும் நடைமுறையிலிருப்பதைக் காணலாம்.



அதே போன்று, சென்னை மாநில முறைகேடான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டபோது சௌந்திரம் அதில் பல மாற்றங்களைக் கொண்டுவரச் செய்தார். இச்சட்டத்தின் கீழ் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சட்டத்தை மீறி தகாத உறவு கொண்டிருந்தால், அவர்களைக் கைதுசெய்து நீதி மன்றங்களில் வழக்குத்தொடுக்கலாம். அதாவது, நகரங்களில் சிவப்புவிளக்குப் பகுதிகளில் வாழும் பெண்கள் அனைவருமே தாங்களாக விரும்பி அத்தொழிலைச் செய்வதில்லை. பல பெண்கள் கட்டாயப்படுத்தப் படுகிறார்கள். இத்தகைய குற்றங்களைப் புரிபவர்களைத் தடுக்கவே இச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டம் தொடர்பாக சௌந்திரம் பல கருத்துக்களைத் தெரிவித்தார். சிவப்புவிளக்குப் பகுதிகளில் போலீஸார் தேடுதல் நடவடிக்கைகளிலோ அல்லது கைது நடவடிக்கைகளிலோ இறங்கும்போது ஆண், பெண் இருவரும் அகப்பட்டால் ஆண்களை போலீஸார் ஒன்றும் செய்வதில்லை. பெண்களே போலீஸரால் இழிவு படுத்தப்படுகிறார்கள். இது வேலியே பயிரை மேய்ந்த கதையாகிறது. எனவே, போலீஸார் சோதனைகளுக்குச் செல்லும்போது அவர்களுடன் ஒரு சமூக சேவகியையும் அழைத்துச் செல்லவேண்டும் அப்போதுதான் பெண்களின் மானமும், கௌரவமும் பாதுகாக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்தார். சௌந்திரத்தின் கருத்தை ஏற்றுக் கொண்ட அரசு அதனை மசோதாவிலும் சேர்த்துக் கொண்டது. மேலும், தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்ட அப்பெண்களுக்கென ஒவ்வொரு ஜில்லாவிலும் கண்காணிப்பு இல்லங்களை ஏற்படுத்தவேண்டும். அவர்கள் குற்றம் செய்வதற்கான காரணங்களை ஆராய்ந்தறிந்து நல்வழிப்படுத்தும் முறையில் அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்ற சௌந்திரத்தின் கருத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநிலமெங்கும் பல கண்காணிப்பு மையங்களை ஏற்படுத்த அரசு ஆவனசெய்தது.

சென்னை மாநில சட்டசபை அங்கத்தினராக இருந்தபோது சௌந்திரம் செய்த மிகமுக்கியமான ஒரு காரியம் வாழ்க்கையில் வழுக்கி விழுந்த பெண்களின் குழந்தைகள் பற்றியதாகும். ஒரு பெண் தெரிந்தோ தெரியாமலோ சூழ்நிலை காரணமாக தவறிழைத்து விடுகிறாள். அப்பெண்ணை ஏற்றுக்கொள்ள எந்த ஆடவரும் முன்வருவதில்லை. பெறோர்களால் ஒதுக்கப்பட்டு, வாழ்நாள் முழுவதும் தனித்துவிடப்பட்டு, இவ்வுலகிலேயே நரக வாழ்க்கையை அனுபவிக்கிறாள். அவளுக்குப் பிறந்த குழந்தைகள் சமுதாயத்தால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட குழந்தைகளுக்குப் படிப்பு, வேலைவாய்ப்பு வழங்குவது அரசின் கடமை. இக்குழந்தைகள் சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்கள். எனவே, இவர்களுக்கு அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். மாநிலத்திலுள்ள எல்லாப்

பள்ளிகளிலும் இக்குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். பள்ளிகளில் சேர்க்கின்றபோது, குழந்தையின் தகப்பனார் பெயரை ஆசிரியர்களோ அல்லது அதிகாரிகளோ கேட்கக்கூடாது. தாயாரிடமும் குழந்தையின் தகப்பனார் பெயரைக் கூறும்படி கட்டாயப்படுத்தவோ நிர்ப்பந்திக்கவோ கூடாது. விண்ணப்பப் படிவங்களில் தகப்பனார் பெயருக்கான இடம் காலியாக விடப்பட வேண்டும். மேலும், இக்குழந்தைகள் சமுதாயத்தால் வஞ்சிக்கப்பட்டவர்களாக இருக்கின்ற படியால் இக்குழந்தைகளை "சமூகத்தால் ஊனமாக்கப்பட்டவர்கள்" என்ற ஒரு பிரிவின் கீழ் சேர்க்கப்பட்டு ஹரிஜனங்களுக்கான சலுகைகள் அனைத்தும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென அரசிடம் தெளிவாக எடுத்துரைத்தார். சௌந்திரத்தின் வேண்டுகோளை அரசு உடனடியாக ஏற்றுக்கொண்டு மாநிலத்திலுள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் உடனடியாக ஆணை பிறப்பித்தது. அதன்படி, ஒரு பெண் தன் குழந்தையைப் பள்ளியில் சேர்க்கும்போது அவளது கணவர் பெயரைக் கூற விரும்பாவிட்டால் பள்ளி நிர்வாகத்தினர் அதை அப்படியே விட்டுவிட வேண்டும். இச்சட்டம் இன்றும் நடைமுறையில் உள்ளது. இதுவரையிலுமில்லாத ஒரு விசேஷமான சமுதாயப் பிரிவு சௌந்திரத்தின் முயற்சியால் உருவாக்கப்பட்டதோடு மட்டுமல்லாது அவர்களின் உரிமைகளுக்கும், வேலைவாய்ப்பிற்கும் உத்தரவாதம் வழங்கப்பட்டது. ஆகவே, பெண்கள் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து வாழவேண்டும், அவர்களுக்கான உரிமைகளைப் பெற்று ஆண்களுக்கு நிகராகப் பணியாற்றவேண்டும் என்பதற்காக தனது பதவிக்காலத்தில் பல முயற்சிகளை மேற்கொண்டு அதில் வெற்றியும் பெற்றார்.

சௌந்திரம் ஒரு சிறந்த கல்வியாளர் ஆவார். ஒரு நாட்டின் மதிப்பு அந்நாட்டின் கல்வி கற்றோரின் எண்ணிக்கையைக் கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த சௌந்திரம், தன் வாழ்நாளில் பெரும்பகுதியைக் கல்வி வளர்ச்சிக்காகவே செலவு செய்தார். ஒரு ஆண் கல்விகற்றால் அது அவனுக்கு மட்டுமே உபயோகமாயிருக்கிறது. ஆனால், ஒரு பெண் கல்வி கற்றால் அக்குடும்பமே பயன் பெறுகிறது என்பதால் பெண்கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் கல்வி கற்கவேண்டும். பெண்கள் கற்றால்தான் தங்களது வாழ்க்கையை வளமுடன் அவர்களே அமைத்துக்கொள்ள முடியும். ஆகவே, பெண் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதை ஊக்குவிக்க வேண்டும். மக்கள் அனைவரும் இதில் கவனம் செலுத்தவேண்டும். காந்தியடிகளின் ஆதாரக்கல்வியைப் பள்ளிகளில் போதிக்கவேண்டும். சிறுவயதிலேயே மாணவர்கள் தொழிற்கல்வி பெறுவதால் படிப்பு முடிந்தபின் வேலைக்காகக் காத்திராமல் சுயமாக தொழில் செய்யமுடியும். இதனால் படித்த இளைஞர்களிடையே வேலையில்லாப் பிரச்சனை அகலும் என்ற கருத்தைச் சௌந்திரம் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.



இதன் காரணமாகப் பள்ளிகளில் தொழிற்கல்வியை அறிமுகப் படுத்தும்படி வேண்டிக்கொண்டார். எட்டாம் வகுப்புவரை இலவசக் கல்வியளிக்க வேண்டும் என்பதோடு மாணவர்களுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்கவேண்டுமெனவும் வேண்டினார். எல்லா வகுப்புகளிலும் சுகாதாரத்தை ஒரு பாடமாகக் கற்றுத்தரவேண்டும். இதனால் மாணவர்கள் தங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ள கற்றுக்கொள்கிறார்கள். மேலும், பள்ளிகளில் வகுப்பறைகளையும் வீட்டையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளும் பழக்கம் சிறுவயதிலேயே கற்றுக் கொடுக்கப்படுவதால் உண்டாகும் பயனை அரசிற்கு எடுத்துக்கூறினார். அதன் காரணமாக எல்லாப் பள்ளிகளிலும் சுகாதார வகுப்புகளை நடத்தவேண்டுமென அரசு ஆணையிட்டது. வாரத்தில் ஒருமணி நேரம் பள்ளிகளில் சுகாதார வகுப்புகள் நடத்தப்பட்டு வந்தது பலருக்கும் நினைவிருக்கலாம். அதுமட்டுமல்லாது, பள்ளிக்கூடங்களின் அடிப்படைத் தேவைகளான கட்டிடங்கள், குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளை அமைக்க சௌந்திரம் திட்டமொன்றை வரைந்து கொடுத்தார். அத்திட்டத்தின் அவசியத்தையும் தெளிவுபட எடுத்துக்கூறினார். அத்திட்டத்தையும் அரசு பரிசீலித்து நடைமுறைப்படுத்தியது. ஒவ்வொரு பள்ளியிலும் காய்கறித் தோட்டம் அமைக்கப்படவேண்டும். மாணவர்களைத் தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தி பள்ளியில் மதிய உணவிற்கான காய்கறிகளைத் தாங்களே பயிர் செய்ய அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இதனால், குழந்தைகளுக்கு சத்தான உணவு கிடைப்பதோடு மட்டுமல்லாது, விவசாயத்திலும் ஆர்வம் பிறக்க உதவும் எனச் சட்டமன்றத்தில் தெரிவித்தார். சௌந்திரத்தின் கருத்தைப் பல உறுப்பினர்களும் ஆமோதித்தார்கள். அதன்பின் ஒவ்வொரு பள்ளியிலும் காய்கறித் தோட்டங்கள் அமைக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு கல்வி வளர்ச்சிக்காக பல முன்னோடித் திட்டங்களை வகுத்துப் பயனுள்ள பல சீர்திருத்தங்களை சௌந்திரம் அறிமுகப்படுத்தினார்.

தொழில் ரீதியில் சௌந்திரம் ஒரு மருத்துவர். மருத்துவர் என்ற முறையிலும் அரசியல்வாதி என்ற நிலையிலும் தனது பதவிக்காலத்தில் சுகாதார மேம்பாட்டிற்காக சட்டசபையை நன்கு பயன்படுத்திக் கொண்டார். கிராமப்புறங்களில் சுகாதாரத்தைப் பேணிக்காப்பதில் தனிக்கவனம் செலுத்தினார். முதலாவதாக கிராமப்புற மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்கினாலே மக்கள் உடல்நலம் பேணிக் காக்கப்படும். ஆகையால், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் சுத்தமான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யும்படி அரசைக் கேட்டுக் கொண்டார். அடுத்தபடியாக கிராமப்புற மக்களுக்கு போதிய மருத்துவ வசதிகள் நம்நாட்டில் இன்னமும் செய்து தரப்படவில்லை. குறிப்பாகப் பெண்களும் குழந்தைகளும் பல்வேறு நோய்களால் பீடிக்கப்பட்டு

கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு சுகாதார வசதிகளைச் செய்துதருவது மட்டுமல்லாது சுகாதாரத்தைப்பற்றிக் கற்றுக் கொடுக்கவும் வேண்டும். இதற்கு முதியோர் கல்வித் திட்டத்தைப் பயன்படுத்தலாம். கல்வி பயில வரும் தாய்மார்களுக்குச் சுகாதாரம், நோய்தீர்க்கும் முறைகள் பற்றி சொல்லிக்கொடுக்கலாம் என அரசை வேண்டிக்கொண்டார். மேலும், ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒரு தாய் சேய் நலவிடுதி என மாநிலமெங்கும் அமைக்க வேண்டும். கர்ப்பகாலங்களில் தாய்மார்களுக்குத் தேவையான மருத்துவ மற்றும் ஊட்டச் சத்து உணவு போன்ற வசதிகளையும் அந்தத் தாய்சேய் நலவிடுதிகள் செய்து தர அரசு ஆவன செய்யவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். கிராம மக்களுக்குத் தேவையான சிகிச்சைகளையும், மருத்துவ ஆலோசனைகளையும் இலசவமாகக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். இப்போதிருக்கும் கிராம சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் இல்லையென்ற குறையை உடனடியாகத் தீர்த்துவைக்கவேண்டும். கிராம மருத்துவமனைகளில் பெண் மருத்துவர்களை அதிகளவில் நியமிக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் கிராமப் பெண்களுக்கு முறையான வைத்தியம் செய்ய ஏதுவாக இருக்கும். அதோடுமட்டுமல்லாது கிராமங்களில் வாழும் முஸ்லீம் பெண்கள் ஆண் மருத்துவர்களை அணுகுவது கிடையாது. இதனால், பெண் மருத்துவர்களை நியமித்தால் முஸ்லீம் பெண்களும் மருத்துவ வசதிகளைப் பெற்று மகிழ்வோடு வாழமுடியும். மேலும், அரசாங்கப் பணத்திலேயே படித்துமுடிக்கும் மருத்துவர்கள் கிராமங்களில் வைத்திய சேவை செய்யவேண்டுமென அரசு வலியுறுத்த வேண்டும். அதோடுமட்டுமல்லாது, புதிதாகப் படித்து முடிக்கும் மருத்துவர்களை குறைந்தது மூன்று வருட காலமாவது கிராமங்களில் பணியாற்றும்படி அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென சௌந்திரம் கேட்டுக்கொண்டார்.

நகரங்களில் மகப்பேறு மருத்துவமனைகளையும் சுகாதார மையங்களையும் ஏற்படுத்தி அங்குள்ள ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டுமென அரசைக் கேட்டுக்கொண்டார். நகராட்சிகளும்கூட இம்மாதிரி சேவைகளில் ஈடுபட அரசு ஊக்குவிக்கவேண்டுமென்றார். அதன்பின்தான் சென்னை மாநிலத்திலுள்ள நகராட்சிகள் தாங்களாகவே மருத்துவமனைகளை நடத்துவதற்கும் அரசால் அனுமதிக்கப்பட்டன. மேலும், நகரங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கி செயல்படவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறியபோது அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாக அரசு உறுதியளித்தது.



பொதுவாக, சுகாதாரத்தையும் மருத்துவ வசதிகளையும் மேம்படுத்த மாநில மருத்துவத்துறை நிர்வாகத்தில் சில மாற்றங்களைச் செய்ய சௌந்திரம் விரும்பினார். குறிப்பாக மருத்துவத்துறை இயக்குனரகமும் பொது சுகாதார அலுவலகமும் தனித் தனித்தனியாக இயங்கிவருகின்றன. இவை இரண்டையும் ஒன்றாக இணைத்தல் வேண்டும். அப்போதுதான், மருத்துவப் பணிகள் சீராகவும் சிறப்பாகவும் செயல்படமுடியும் என்பது சௌந்திரத்தின் கருத்து. இதுபோன்று எல்லா மருத்துவப் பணிகளையும் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்துச் செயலாற்ற வேண்டுமென்றார். அதாவது, நோய்த் தடுப்புப் பிரிவு என்றும், மற்றொன்று சுகமளிக்கும் மருத்துவப் பிரிவு என்றும் இரண்டாகச் செயல்படுத்துவதால் நாட்டில் அவ்வப்போது ஏற்படும் கொள்ளை நோய்களையும் தொற்று நோய்களையும் பரவாமல் தடுக்கவும், நோய் பரவும் முன் சரியான நேரத்தில் தடுப்பூசி போடுதல் போன்ற பணிகளையும் துரிதமாகச் செய்யமுடியும் என்ற தனது கருத்தை அவையில் தெரிவித்தார். மேலும், தற்போது உள்ள மருத்துவக் கல்லூரிகள் போதாதென்றும் இன்னும் பல புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டு நாட்டிற்குத் தேவையான மருத்துவர்களை உருவாக்கவேண்டும் என்று கூறினார். அதேபோன்று மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவர்களுக்கு ஆயுர்வேதமுறை, ஹோமியோபதி முறை முதலிய வைத்தியத்தில் சிறப்புப் பயிற்சிகள் கொடுக்கப்படவேண்டும். அப்போதுதான் நாம் வெளிநாட்டு மருத்துவமுறைகளை முற்றிலுமாக நம்பியிருக்கும் நிலை மாறும் என்று அரசிற்கு ஆலோசனை வழங்கினார். இவ்வாறு, தனது பதவிக்காலத்தின் போது அரசிற்குப் பல திட்டங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி சுகாதார மேம்பாட்டிற்கு சேவை செய்தார்.

இதுதவிர, பல பொதுவான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அவ்வப்போது அரசிற்கு சிறந்த ஆலோசனைகளையும் சௌந்திரம் வழங்கிவந்தார். பொதுவாக அரசுப் பணியாளர்களின் தேவைகளைப் பரிவுடன் கவனிக்கவேண்டுமென்றும் பிரச்சனைகளைப் பேச்சுவார்த்தையின்மூலம் தீர்த்துக்கொள்ள முயல வேண்டுமெனவும் கூறினார். அரசு ஊழியர்கள் தங்களது உரிமைகளுக்கு மட்டும் போராடாமல் மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு அரசின் திட்டங்களைச் சரியான முறையில் செயல்படுத்த வேண்டும். அதேபோன்று, ஒவ்வொரு அதிகாரியும் தாங்கள் வகிக்கின்ற பதவிகளில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளாவது தொடர்ந்து பணியாற்ற அரசு ஆவன செய்யவேண்டும். அப்போதுதான் அமல் செய்யப்படும் திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்தி நல்ல பலனைப் பெறமுடியுமென அரசை வலியுறுத்தினார். மேலும், ஒரு குறிப்பிட்ட துறையில் பணியாற்றும் அதிகாரிக்கு அத்துறையில் முன் அனுபவமும், தொடர்ந்து பணியாற்ற விருப்பமும் இருத்தல் வேண்டும். குறிப்பாக

பிளாக் டெவலெப்மெண்ட் அதிகாரிகளை நியமிக்கும் பொழுது அவர்கள் விவசாயம், தொழில் போன்ற துறைகளில் திறமை பெற்றவர்களாகவும், கிராமங்களில் தங்கி பணியாற்றும் மனப்பக்குவம் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் கிராம அபிவிருத்திப் பணிகளைத் திறமையோடு செய்து, அரசு எதிர்பார்க்கும் பலனையும் அடையமுடியும். அதேபோன்று அரசின் மூத்த அதிகாரிகள் ஏனைய அலுவலர்களுக்கு முன்மாதிரியாக ஒழுக்கசீலர்களாகத் திகழவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி குறிப்பிடும்போது, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்யும்போது சென்ற பகுதிகளுக்கே திரும்பத்திரும்ப செல்வதைத் தவிர்க்கவேண்டும். தங்கள் தொகுதி முழுவதும் தவறாது சென்று, குறிப்பாகக் கிராமப்புறங்களில் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அதனை நிவர்த்தி செய்யவேண்டும். அதேபோன்று, மந்திரிகளும் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று நிலமையை நேரில் கண்டறியவேண்டும். அமைச்சர்களும் அரசு அதிகாரிகளும் ஆடம்பரச் செலவைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். மேலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் தேவையான எல்லா வசதிகளையும் அரசே செய்துதரவேண்டும். அவ்வாறு செய்து கொடுத்தால் லஞ்சம் பெறுவது பெரிதும் கட்டுப்படுத்தப்படும். அரசு மிகக்குறைந்த சம்பளம் கொடுத்தாலும் போதுமானதாக இருக்கும் என்று அரசிற்குப் புதுவகையான ஆலோசனை வழங்கினார். சௌந்திரத்தின் கருத்தில் ஆழமான உண்மை பொதிந்திருப்பதை எல்லா உறுப்பினர்களுமே உணர்ந்தனர்.

1954 ம் ஆண்டு இந்தியாவிலிருந்து சீனாவிற்கு ஒரு நல்லெண்ணத் தூதுக்குழு சென்றது. சௌந்திரம் உட்பட பலர் இத்தூதுக்குழுவில் இடம் பெற்றிருந்தார்கள். இதனால் சீனாவிற்கு விஜயம் செய்யும் வாய்ப்பு சௌந்திரத்திற்கு கிடைத்தது. சீனாவில் பீக்கிங் உட்பட பல நகரங்களில் வாழும் மக்களைச் சந்தித்தார்கள். அந்நாட்டில் சௌந்திரத்தின் கவனத்தை உடனடியாகக் கவர்ந்தது, அங்குள்ள குழந்தைகள்தான். சௌந்திரம் உண்மையான தாயுள்ளம் கொண்டவராதலால் குழந்தைகள் மீது பார்வை முதலில் பட்டதில் வியப்பில்லை. சீனா விஜயம் முடிந்து தாயகம் திரும்பியபின் திருச்சியில் மாதர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அம் மாநாட்டிற்குத் தலைமைதாங்கி உரையாற்றும்போது, "குழந்தைகள் பிறந்தால் சீனாவில் பிறக்கவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் கொளுகொளுவென்று எவ்வளவு அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கிறது. மிகவும் சுறுசுறுப்பாக ஒடியாடி மகிழ்வதைப் பார்க்கையில் நமது நாட்டிலும் இப்படிப்பட்ட குழந்தைகள் வளர்க்கமுடியவில்லையே என்று வருந்தியதாக" சௌந்திரம் தனது உரையில் குறிப்பிட்டார். நமது நாட்டுப் பெண்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்குச் சத்தான ஆகாரங்களைக் கொடுத்து அவர்களது உடல் நலத்தைப் பேணவேண்டும்.



அப்போதுதான் அக்குழந்தைகள் நல்ல உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் உடையவர்களாக விளங்குவார்கள் என மாநாட்டில் பங்குபெற்ற மாதர்களைச் சௌந்திரம் கேட்டுக்கொண்டார்.

சௌந்திரம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய போதுதான் மதுரையில் காந்தி நினைவாலயம் அமைக்கப்பட்டது. அதாவது, 1948 ஜனவரி 30 ம் நாள் நமது தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள் நம்மைவிட்டுப் பிரிந்தார். அண்ணலின் மறைவு இந்திய மக்களுக்கு மட்டுமின்றி மனித குலத்திற்கே ஈடுகட்ட முடியாத பேரிழப்பாக அமைந்தது. அண்ணல் தம் வாழ்நாளில் நமக்குக் காட்டிய புனிதப் பாதையில் தொடர்ந்து சென்று அவரது கொள்கைகளைத் தொடர்ந்து செயல்படுத்துவதே, நாம் அனைவரும் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும் என்று தேசத்தலைவர்கள் உறுதிபூண்டனர். காந்தியடிகளின் கொள்கைகளைத் தொடர்ந்து பரப்பவும், அவரது கருத்துக்களையும் சிந்தனைகளையும் புத்தகங்களாகத் தொகுத்து வெளியிடவும் முடிவு செய்தார். அதற்காக நாடுமுழுவதும் நிதிவசூல் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிதி, காந்தி நினைவு நிதி என்று அழைக்கப்பட்டது. மதுரை காந்தி என்று அழைக்கப்பட்ட நா.ம.ரா. சுப்பராமன் சென்னை மாநிலத்தின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். மக்களிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய் வசூல் செய்யப்பட்டது. நிதிவசூல் முடிந்த பின், மாநிலங்கள் அளவிலும் தேசிய அளவிலும் காந்தியக் கொள்கைகளை எப்படிப் பரப்புவதென ஆராயப்பட்டது. அப்போது நாட்டின் முக்கிய நகரங்களில் காந்தி நினைவாலயம் அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. இந்தியாவில்



*தமிழக முன்னாள் முதல்வர்*
*மக்கள் திலகம் திரு. எம்.ஜி.ஆர் அவர்களுடன்*
*அம்மா அவர்கள்*

மொத்தம் நான்கு நினைவாலயங்கள் அமைப்பதென காந்தி நிதிக் கமிட்டி முடிவுசெய்தது. வடஇந்தியாவில் சபர்மதி, சேவாகிராமம் புதுடெல்லி ஆகிய இடங்களிலும் தென்னிந்தியாவில் ஒன்றும் அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது. தென்னிந்தியாவில் காந்தி நினைவாலயம் அமைப்பதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அக்கமிட்டியின் தலைவராகச் சௌந்திரம் நியமிக்கப்பட்டார். சௌந்திரத்தின் பெயரை முன்மொழிந்தவர் ராஜேந்திர பிரசாத் ஆவார். சௌந்திரத்தின் பணிகள் மீது அவர் கொண்டிருந்த நன்மதிப்பை இது காட்டுகிறது. தென்னிந்தியாவில் ஒரு நினைவாலயம் அமைக்கப்படும் என மத்திய கமிட்டி பொதுவாகக் கூறியதால் ஆந்திரப் பிரதேச அரசு ஹைதராபாத் நகரில் நினைவாலயம் அமைப்பதற்குத் தேவையான இடத்தையும், நிதிஉதவியையும் தருவதாகக் கூறியது. கர்நாடக அரசோ தென்னிந்தியாவில் மிகவும் நவீனமான, அழகான நகரம் பெங்களூர்தான். எனவே, இங்குதான் அமைக்கப்பட வேண்டுமெனவும் அதற்கான அனைத்து வசதிகளையும் செய்துவருவதாகக் கூறியது. அதேபோன்று கேரள அரசும் திருவனந்தபுரத்தில் நினைவாலயம் அமைக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தது. இவ்வாறு தென்மாநிலங்கள் அனைத்தும் எப்படியாவது காந்தி நினைவாலயத்தைத் தங்கள் மாநிலங்களுக்குள் கொண்டு வந்து விடவேண்டுமென போட்டி போட்டுக்கொண்டிருந்தன. அதேசமயம் தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் தலைவர்கள் சென்னையில் அமைக்கப்பட வேண்டுமெனக் கூறினர். காந்தி நினைவாலயக் கமிட்டியின் தலைவரான சௌந்திரம் அனைவரது கோரிக்கைகளையும் பரிசீலித்து இறுதியில் தென்னிந்தியாவில் காந்தி நினைவாலயம் அமைப்பதற்குப் பொருத்தமான இடம் மதுரைதான் என்ற கருத்தைத் தெரிவித்தார். அதற்கான காரணங்களையும் தெரிவித்தார். தென்னிந்தியாவில் மதுரை நகர் ஒரு முக்கியத் திருத்தலமாக விளங்குகிறது. அதோடுமட்டுமல்லாது தென்னிந்தியக் கோவில்களில் மதுரை மீனாட்சியம்மன் கோவில்தான் முதன்முதலாக ஹரிஜனங்களுக்காக திறந்துவிடப்பட்டது என்று மதுரை நகரின் முக்கியத்துவத்தை மத்திய கமிட்டிக்கு விளக்கினார். மத்திய கமிட்டியும் சௌந்திரத்தின் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு மதுரையில் காந்தி நினைவாலயம் அமைக்க அனுமதியளித்தது.

மதுரையில் காந்திநினைவாலயம் அமைக்க அனுமதி வழங்கப்பட்ட பின் மதுரையில் எவ்விடத்தில் அமைப்பதென சௌந்திரம் ஆராய்ந்தார். நத்தம் செல்லும் சாலையில் காலியாகக் கிடக்கும் இடத்தில் அமைப்பதென ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. பழைய பந்தயத்திடல் மைதானத்தில் அமைப்பதென மற்றொரு கருத்து நிலவியது. இதுதவிர மீனாட்சியம்மன் கோவிலுக்குள்ளேயே ஒரு பகுதியில் நினைவாலயம் அமைப்பதெனவும் சிலர் கருத்துக்



கூறினார்கள். இத்தருணத்தில் சௌந்திரம் ஒரு இடத்தை முன்மொழிந்தார். அதாவது, தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள இராணி மங்கம்மாளின் கோடைகால அரண்மனையில் நினைவாலயம் ஏற்படுத்தலாமெனக் கூறினார். இவ்வரண்மனை ஆங்கிலேயரின் ஆட்சியின்போது மாவட்டக் கலெக்டரின் பங்களாவாகப் பயன்படுத்தப்பட்டுவந்தது. சௌந்திரம் தேர்வுசெய்த இடம் கமிட்டி உறுப்பினர்கள் அனைவருக்கும் பிடித்திருந்தது. உடனே சௌந்திரம் அப்போது சென்னை மாநில முதலமைச்சராக இருந்த காமராஜர் அவர்களை நேரில் சந்தித்து கமிட்டியின் விருப்பத்தைத் தெரிவித்தார். காமராஜர் உடனடியாக இராணிமங்கம்மாள் கோடைகால அரண்மனையை காந்தி நினைவாலயம் அமைக்க அரசின் சார்பாக நன்கொடையாக வழங்கினார்.

உடனடியாக அரண்மனையைப் புதுப்பிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. கரடுமுரடான முட்புதர்கள் அகற்றப்பட்டு இடம் சீர்திருத்தப்பட்டது. அரண்மனையின் இடிந்தபகுதிகள் புதுப்பிக்கப்பட்டன. நினைவாலயத்துடன் ஒரு நூல் நிலையம் அமைக்கப்படவேண்டுமெனப் பலர் விரும்பினார்கள். அரண்மனையைச் சேர்ந்தாற்போல் வடக்குப் பகுதியில் ஒரு நூல் நிலையம் கட்டப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சிறந்த நூல்களைச் சௌந்திரமே வரவழைத்து நூலகத்திற்கு வழங்கினார். சௌந்திரத்தின் துரித முயற்சியின் காரணமாக இராணி மங்கம்மாளின் அரண்மனை காந்தி நினைவாலயமாக உருப்பெற்றது. எல்லாவிதப் புனரமைப்பு வேலைகளும் நிறைவுபெற்றபின் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேருவிற்கு சௌந்திரம் கடிதம் எழுதினார். 1959 ஏப்ரல் 15 ம் நாள் மதுரை காந்தி நினைவாலயத்தை நேரு திறந்துவைத்தார். இவ்வாறு மதுரையில் காந்தி நினைவாலயம் சௌந்திரத்தின் அயராத உழைப்பிற்குச் சான்றாக விளங்குகிறது. தினந்தோறும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வருகைதந்த வண்ணமாக இருக்கிறார்கள்.

சௌந்திரம் தனது பத்தாண்டு உறுப்பினர் காலத்தில் சென்னை மாநிலத்தின் தொழில், கல்வி, சுகாதாரம், வேளாண்மை போன்ற பல துறைகளின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். அரசிற்குப் பல திட்டங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி அரசு எந்திரம் நல்லமுறையில் சீராக இயங்க உதவினார். எவ்வித கட்சி வேறுபாடுமின்றி அனைத்து உறுப்பினர்களுடனும் நன்கு பழகி நன்மதிப்பையும் பெற்றார். 1967 ம் ஆண்டு சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தோல்வியடைந்தது. திரு. அண்ணதுரையின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்று அரசமைத்தது. அச்சமயம் சௌந்திரம் டெல்லிக்குச் செல்லும் வழியில் சென்னையில் அண்ணாதுரையை நேரில் சந்தித்து அவரைப்

பாராட்டினார். அப்போது, கதர் மற்றும் கிராமத் தொழில்களை நம்பி ஆயிரக்கணக்கான மக்கள் பிழைப்பு நடத்திவருகிறார்கள். ஆகவே, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் பாதிக்காவண்ணம் திட்டம் தீட்டிச் செயல்படுமாறு வேண்டிக்கொண்டார். அப்போது பூரண மதுவிலக்கை அமல்படுத்தும்படியும் புதிய முதலமைச்சரைக்கேட்டுக் கொண்டார். அண்ணதுரையும் சௌந்திரத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவரது விருப்படியே செயல்படுவதாக உறுதி கூறினார். இவ்வாறு சட்டமன்ற உறுப்பினராக இல்லாதபோதுங்கூட கிராம மக்களின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டார்.



மேடையில் மாமா அவர்கள் அமர்ந்திருக்க காந்திகிராம ஊழியர்களிடையே உரையாற்றும் அம்மா அவர்கள்



# அமைச்சராக அம்மா

சட்டசபையில் அங்கத்தினராக இருந்தபோது சௌந்திரம் ஆற்றிய பணிகள் மாநில மற்றும் மத்திய அரசின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லை. சௌந்திரத்தை பாராளுமன்ற உறுப்பினராகக் கொண்டுவந்து தேசிய அளவில் அவரது பணியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அப்போதைய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு விரும்பினார். நேருஜியும் இருமுறை காந்திகிராமத்திற்கு விஜயம் செய்து, சௌந்திரத்தின் கிராமப்புற சேவைகளையும் காந்திகிராமத்தின் வளர்ச்சியையும் நேரில்கண்டு மகிழ்ந்தார். 1962ம் ஆண்டு பாராளுமன்றத்திற்கான தேர்தல் அறிவிப்பு வெளியிட்டபோது நேருஜி அவர்கள் தமிழகக் காங்கிரஸ் தலைவர்களோடு தொடர்புகொண்டு சௌந்திரத்தைப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு தனிப்பட்ட முறையில் கேட்டுக்கொண்டார். நேருஜி அவர்கள் சௌந்திரத்திற்காக இவ்வாறு பரிந்துரை செய்வது பல தலைவர்களுக்கு ஆச்சரியத்தைத் கொடுத்தது. அப்போதே மற்றொன்றும் புலனாகியது. வெகுவிரைவில் சௌந்திரம் தேசிய அளவில் ஒரு முக்கிய பதவிக்கு வரப்போகிறார் என்பது பலரது கருத்து. 1962 ல் சௌந்திரத்திற்கு ஐம்பத்தேழு வயது. பத்து ஆண்டுகள் சட்டசபையில் பணியாற்றியதே போதும். இனி காந்திகிராமத்திலிருந்து கொண்டு அதன் பணிகளைக் கவனிக்கலாம் என்று அவர் கருதினார்.

தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டபோது, திண்டுக்கல் தொகுதியில் ஒரு முக்கிய கம்யூனிஸ்ட் தலைவர் மனு தாக்கல் செய்தார். இதனால் காங்கிரஸ்கட்சி அவருக்கு எதிராகப் போட்டியிடத் தகுதியான நபரைத் தேடியது. அவர்களது கண்ணில் தென்பட்டது சௌந்திரம்தான். காங்கிரஸ் தலைவர்கள் அவரிடம் வந்து நிலைமையைக் கூறினார்கள். நேருஜியின் விருப்பத்தையும் கூறினார்கள். அதன் காரணமாக காங்கிரஸ் கட்சி சார்பாகவே திண்டுக்கல் நாடாளுமன்றத் தெகுதியில் போட்டியிட மனு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கம்போல் எளிமையான பிரச்சாரம்தான். சௌந்திரத்திற்கு வாக்களிக்கவேண்டி பல பெரிய காங்கிரஸ் தலைவர்கள் திண்டுக்கல் தெகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். திண்டுக்கல் தொகுதி மக்களுக்கு சௌந்திரம் புதியவர் அல்லர். அவரது காந்திகிராமப் பணிகளை நேரில் கண்டு பயனடைந்து வருபவர்கள். இதனால், தேர்தலுக்கு முன்பே அவரது வெற்றி உறுதி செய்யப்பட்டது. தேர்தல் நாள் வந்தது வாக்குகள் எண்ணப்பட்டன.

எதிர்பார்த்தபடியே தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மூன்று வேட்பாளர்களையும் பல ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து அமோக வெற்றி பெற்றார்.

1962 ல் நடைபெற்ற இந்தத் தேர்தல் பாராளுமன்ற மக்களவைக்கு நடத்தப்பட்ட மூன்றாவது தேர்தலாகும். இத்தேர்தலில் இந்தியாமுழுவதும் காங்கிரஸ்கட்சி தனி மெஜாரிட்டியுடன் வெற்றி பெற்று நேருஜியின் தலைமையில் அரசு அமைக்கப்பட்டது. சௌந்திரம் தான் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் முதன் முறையாக கூடவிருந்த பாராளுமன்றக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ள புதுடெல்லிக்கு இரயிலில் பயணமானார். இரயில் புதுடெல்லி நிலையத்தை அடைந்தபோது கையில் மாலைகளைப் பிடித்துக்கொண்டு சௌந்திரத்தின் சில உறவினர்களும், நண்பர்களும் அவர் பயணம் செய்த பெட்டியை நோக்கி ஓடிவந்தனர். அவர் வண்டியிலிருந்து சரியாகக்கூட இறங்கவில்லை. அதற்குள் தாங்கள் கொண்டுவந்த மாலைகளை அவரது கையில் கொடுத்து வாழ்த்தினார்கள். சௌந்திரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. தான் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக வாழ்த்துக் கூறுகிறார்கள் என எண்ணிய அவர் "இந்த மாலைகளெல்லாம் எதற்கு? நாம் என்ன முன்பின் தெரியாதவர்களா?" என அன்போடு வினவினார். "அம்மா நீங்கள் மத்திய துணைக் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்ற இனிப்பான செய்தியைத் தனது நண்பர்கள் கூறித்தான் முதன்முறையாகக் கேட்டார்.

இரயிலில் பயணம் செய்துகொண்டிருந்த அன்றிரவில்தான் சௌந்திரம் மத்திய அமைச்சராக நியமிக்கப்பட்ட செய்தி வானொலியில் அறிவிக்கப்பட்டது. பயணம் செய்துகொண்டிருந்த சௌந்திரம் இச்செய்தியை அறிந்துகொள்ள வாய்ப்பில்லை "அப்படி எதுவும் இருக்காதே? இதுபற்றி எனக்கு எந்தத் தகவலும் இல்லையே?" என சௌந்திரம் கூறினார். இருப்பினும் நண்பர்கள் கூறுவது உண்மையாகவும் இருக்கலாமென எண்ணி மாலை அணிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு தனக்கென அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ள வீட்டிற்கு விரைந்தார்.

வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாக தனது கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார். அனைவருமே "அம்மா நீங்கள் அமைச்சராகியிருக்கிறீர்கள். எங்களது வாழ்த்துக்கள்" எனக்கூறினர். "எனக்கு மந்திரி பதவிகளெல்லாம் வேண்டாம். சாதாரண உறுப்பினராகவே இருக்க விரும்புகிறேன். ஏற்கனவே போதாது" என சௌந்திரம் கட்சிப் பிரமுகர்களிடம் கூறினார். அப்போது மத்திய நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தவர் டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஆவார். சௌந்திரம் தனக்கு மந்திரி பதவி



வேண்டாம் என்று கூறுகிறார் என்பதைக் கேள்விப்பட்ட அவர், உடனே புறப்பட்டு வந்து சௌந்திரத்தைச் சந்தித்தார். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறினார். இருப்பினும் சௌந்திரத்திற்கு மந்திரியாக விருப்பமில்லை. தான் கூறினால் கேட்கமாட்டார் என்று எண்ணி மதுரையிலுள்ள சௌந்திரத்தின் சகோதரர் டி.எஸ். ராஜத்துடன் போனில் தொடர்பு கொண்டு அவரது சகோதரிக்கு கிடைத்த பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென கிருஷ்ணமாச்சாரி வேண்டினார். ராஜம் உடனே சௌந்திரத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். அதன்பின், சௌந்திரம் நேரடியாக நேருஜி அவர்களைச் சந்தித்து, தனது சம்மதத்தைத் தெரிவித்தார். இதனால் நேருஜியின் வெகுநாள் விருப்பம் நிறைவேறியது எனக் கூறலாம். அமைச்சர் பதவியானது பெரும்பாலும் மூத்த அரசியல் தலைவர்களுக்கே வழங்கப்படும். அதோடு மட்டுமல்லாது இரண்டு மூன்று தடவைகள் தொடர்ச்சியாகப் பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றினால்தான் அத்தகைய வாய்ப்புகள் கிடைக்கும். ஆனால், சௌந்திரத்தைப் பொறுத்த வரையில் முதல் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே மந்திரி பதவி கொடுக்கப்பட்டது என்பதை அறிந்தபோது, அவருக்கு நேருஜி அவர்கள் எவ்வளவுதூரம் மதிப்புக் கொடுத்தார் என்பது நன்கு புலனாகும்.

பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சர் பதவியில் அமர்ந்த மகிழ்ச்சியைவிட மற்றொரு இனிய செய்தியும் அம்மாவிற்கு காத்திருந்தது. சௌந்திரத்தின் வெகுநாள் நண்பரான டாக்டர் சுசிலா நய்யாரும் பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய சுகாதார மந்திரியாக நியமிக்கப்பட்டார் என்பதே அச்செய்தியாகும். அதே டில்லியில் பல ஆண்டுகளுக்கு முன் சுசிலா நய்யாருடன் படிக்கும் போது ஏற்பட்ட பசுமையான நினைவுகள் மனதில் தோன்றின. தனது ஆருயிர்த் தோழி டாக்டர் சுசிலா நய்யாருடன் மற்றுமொரு ஐந்தாண்டுகாலம் பணிபுரியப் போகிறோம் என்பதில் சௌந்திரத்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. உடனே சுசிலா நய்யாருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தனது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இருவரும் ஒருவர்மீது மற்றொருவர் கொண்டிருந்த அன்பு சற்றும் குறையவில்லை. பழக்கத்திலும் தோற்றித்திலும் இருவரும் உடன்பிறந்த சகோதரிகளைப் போலவே என்றும் இருந்துவந்தனர். மத்திய மந்திரி சபையில் சௌந்திரமும் சுசிலா நய்யாரும் காட்சியளித்தவிதம் காங்கிரஸ் தலைமைக்கு பெருமையாக இருந்ததென்றால் அது மிகையாகாது.

சௌந்திரம் துணைக்கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்வித்துறையில் பல சீரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசியல்

அமைப்பில் கூறப்பட்டுள்ளதைப் போன்று ஐந்து வயதுமுதல் 11 வயது வரையிலான குழந்தைளுக்குக் கல்வியளிக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளைக்கேட்டுக் கொண்டார். கல்விக் கூடங்களில் குழந்தைகளின் வருகையை அதிகரிக்க வேண்டுமானால் அக்குழந்தைகளுக்குத் தேவையான நோட்டுப் புத்தகங்களை இலவசமாக வழங்க வேண்டும். படிப்பைப் பொறுத்தமட்டில் அதற்காக ஆகின்ற செலவிற்கு குழந்தைகள் தங்களது பெற்றோர்களின் வருமானத்தைச் சார்ந்திராவண்ணம் தேவையான அனைத்து உதவிகளையும் அரசே செய்துதர வேண்டுமென மாநிலங்களுக்கு எடுத்துரைத்தார். குழந்தைகள் வருகை அதிகரிக்காமாலிருப்பதற்கு பள்ளிகளில் போதிய ஆசிரியர்கள் இல்லாததுதான் காரணம் என்பதை அறிந்த சௌந்திரம், மாநிலங்களில் போதிய ஆசிரியர்களைக் குறிப்பாகப் பெண்களாக நியமிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். ஆதாரக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் அறிவியல் கல்வி போன்றவைகள் குழந்தைகளுக்குப் போதிக்கப்பட வேண்டுமென மாநிலங்களைக் கேட்டுக் கொண்டார். சௌந்திரத்தின் காலத்தில்தான் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் ஆரம்பக் கல்வியானது இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்ற திட்டம் செயல்படுத்தப்பட்டது.

பெண்கல்வி முன்னேற்றத்திற்கு சௌந்திரம் அதிகக் கவனம் செலுத்தி வந்தார். பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கென தேசிய அளவிலான கவுன்சில் ஒன்று அமைக்கப்பட்டது. இக்கவுன்சில் பெண்களின் கல்விப் பிரச்சனைகள், அவைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் போன்றவற்றை ஆராய்ந்து வந்தது. அதேபோன்று ஒவ்வொரு மாநிலத்திலும் பெண்களுக்கெனத் தனியாக ஒரு கவுன்சில் அமைத்து செயல்படவேண்டுமென மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டார். இது தவிர மத்திய கல்வி அமைச்சகத்தில் பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கான ஒரு தனிப்பிரிவு துவக்கப்பட்டு பல சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண்களுக்கான தேசியக் கவுன்சில் மூலம் நாடெங்கும் பல கருத்தரங்குகள் நடத்தப்பட்டு பெண்களின் முக்கியத்துவம் சமுதாயத்திற்கு எடுத்துக் கூறப்பட்டது. பெண்கல்வி முன்னேற்றத்திற்கெனப் பணியாற்றிவரும் தொண்டு நிறுவனங்களுக்கு அதன் செயலாக்கத்தை ஊக்கப்படுத்தவும் பள்ளிகளில் பெண் குழந்தைகளின் வருகையை அதிகரிக்கவும் மானிய உதவிகள் இக்கவுன்சில் மூலம் வழங்கப்பட்டன. பெண்கல்வி அபிவிருத்திக்கென ஏராளமான பணம் ஒதுக்கப்பட்டது. அதேசமயம் பெண் கல்விக்கென ஒதுக்கப்பட்ட பணம் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தலாகாது என எல்லா மாநிலங்களையும் சௌந்திரம் கேட்டுக்கொண்டார். அதேபோன்று கிராம மக்களிடையே கல்வியறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக பொதுநல ஸ்தாபனங்களில் பணியாற்றும்



பெண்களுக்குப் பயிற்சியளிக்க ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்மூலம் பல பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சிகளும் துவக்கப்பட்டன. இந்தப் பயிற்சிபெற்ற பெண்கள் கிராமம் தோறும் பெண் கல்வியின் பெருமையைக் கூறிச் சிறப்பு வகுப்புகளையும் நடத்திவந்தனர். இவ்வாறு சௌந்திரத்தின் பல தீவிர முயற்சிகள் காரணமாக பெண்கல்வியில் நிர்ணயிக்கப்பட்டிருந்த குறியீட்டைவிட அதிக சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அதாவது மூன்றாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் 68.1 லட்சம் பெண் குழந்தைகள் பயிலவேண்டுமென நிர்ணயிக்கப்பட்ட அளவு 85.5 லட்சமாக உயர்ந்தது.நடுநிலைப்பள்ளிகளில் 11.7 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது, 12.8 லட்சமாக அதிகரித்தது. உயர்நிலைப்பள்ளிகளில் 4.7 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது, 5.6 லட்சமாக உயர்ந்தது. சௌந்திரத்தின் தீவிர முயற்சிகளின் காரணமாக இத்தகைய சாதனைகள் நிகழ்த்தப்பட்டன.

பெண் கல்வி வளர்ச்சியில் தொண்டு ஸ்தாபனங்கள் ஆற்றிவரும் சிறந்த பணிகளைச் சௌந்திரம் பாராட்டினார். இந்தியாவிலுள்ள பெண் கல்விக்கான தொண்டு ஸ்தாபனங்களின் வளர்ச்சி நிதிக்காக மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சௌந்திரத்தின் முயற்சியால் சுமார் 6 கோடியே 48 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டதென்றால் அவர் பெண்கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார் என்பது நன்கு புலனாகும். இதுதவிர பெண்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் கருத்தரங்குகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றிற்காக சுமார் 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதேபோன்று தாராளமான நிதி உதவிகள் மூலம் பெண் கல்வியின் முன்னேற்றத்திற்குப் பல அரிய சேவைகளைச் சௌந்திரம் செய்துவந்தார். நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் கல்விக்கென சுமார் 1260 கோடிரூபாய் ஒதுக்கவும் அதில் பெண் கல்விக்காக 25.20 கோடி ரூபாய் ஒதுக்கவும் சௌந்திரம் காரணமாக இருந்தார்.

அதேபோன்று, மலைவாழ் குழந்தைகளின் கல்வி மீது சௌந்திரம் தனிக்கவனம் செலுத்திவந்தார். மலைவாழ் மக்கள் அதிகமாக வாழும் இடங்களில் பள்ளிக்கூடங்களைக் கட்ட, போதிய நிதியுதவிகளை மத்திய அரசு மாநிலங்களுக்குச் செய்துதரும் என உறுதியளித்தார். ஆதிவாசிகளின் குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், உணவு, உடை போன்றவை வழங்க மத்திய அரசின் பொருளாதார உதவி கிடைக்குமெனக் கூறினார். மேலும், மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு கற்பிக்கும் பாடங்கள் அனைத்தும் அவர்களின் தாய்மொழியிலேயே அச்சிட்டு வழங்கப்பட வேண்டுமெனவும் கூறி, அதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். பொதுவாக மும்மொழிக் கொள்கையைச் சௌந்திரம் ஆதரித்து


வந்தார். குறிப்பாக, குழந்தைகளின் ஆரம்பக் கல்வி அவர்களது தாய்மொழியிலேயே இருத்தல் வேண்டும் என்பது அவரது ஆணித்தரமான கருத்து. ஹிந்தி பற்றி குறிப்பிடும்போது அது பள்ளிகளில் விருப்பப் பாடமாக இருக்கலாம். விருப்பம் உடையவர்கள் படிக்கலாம் என்ற கருத்துடையவராக விளங்கினார்.

ஆதிவாசிகளின் கல்வியில் தனிக்கவனம் செலுத்தியது போன்று ஊனமுற்ற குழந்தைகளின் கல்விக்கும் சௌந்திரம் முக்கியத்துவம் கொடுத்துவந்தார். நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளும் ஊனமுற்ற குழந்தைகளை எவ்வித சாக்குப்போக்கும் கூறாமல் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று எல்லா மாநிலங்களுக்கும் ஆணை பிறப்பித்தார். அக்குழந்தைகள் கல்வி கற்பதற்கென உபகரணங்கள் வாங்குவதற்கு ஏராளமான மானியமும் ஒதுக்கப்பட்டது. அதேபோன்று படித்து முடித்த ஊனமுற்றோரின் வேலை வாய்ப்புகளுக்காகவும் சௌந்திரம் சில முயற்சிகளை மேற்கொண்டார். அவரது முயற்சியின் காரணமாக இந்தியாவில் எட்டு முக்கிய நகரங்களில் ஊனமுற்றவர்களுக்கான தனி வேலைவாய்ப்பு அலுவலகங்கள் துவக்கப்பட்டன. மாநில அரசுகளும் தனியார் நிறுவனங்களும் ஊனமுற்றோர்களுக்குத் தாராளமாக வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமெனவும் அவர்களது விண்ணப்பங்களைப் பரிவுடன் கவனிக்கும்படியும் கேட்டுக்கொண்டார். இதனால், ஏராளமான ஊனமுற்ற இளைஞர்கள் மத்திய மாநில மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற்றனர்.

இந்தியா முழுவதுமுள்ள கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஒரே வகையான பாடத்திட்டத்தை அமல்செய்ய சௌந்திரம் விரும்பினார். இதனால், இந்தியாவில் எப்பகுதியில் வாழும் மாணவர் ஆயினும் எந்தக் கல்லூரியிலும் சேர்ந்து படிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். ஒரேவிதமான பாடத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் கல்வியின் தரம் அதிகரிக்குமென அவர் கருதினார். மேலும், உயர் கல்விக்கூடங்களுக்குத் தகுதியான திறமைவாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்கு அகில இந்தியக் கல்விப் பணிக்குழு ஒன்று ஏற்படுத்துவதெனவும் கருத்துத் தெரிவித்தார். இதற்காக, ஒவ்வொரு மாநிலத்தின் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன. சௌந்திரத்தின் இக்கருத்துக்களை அனைத்து மாநிலங்களும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டன. அதேபோன்று கல்லூரிகளில் படித்துவரும் மாணவர்கள் குறைந்தது ஒருவருடகாலமாவது தேசிய நாட்டுநலப் பணித்திட்டத்தில் சேர்ந்து பணிபுரிய வேண்டும். அப்போதுதான், அவர்களால் கிராமப்புற மக்களின் அன்றாடத் தேவைகளையும் பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு செயல்படவும் வருங்கால இந்தியாவை நல்வழிப்படுத்தவும் தேவையான மனப்பக்குவம் அவர்களுக்கு கிடைக்குமென சௌந்திரம் எண்ணினார். இதன்



காரணமாக எல்லாக் கல்லூரிகளிலும் தேசிய நாட்டு நலப்பணித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் முகாம்கள் அமைத்து கிராம முன்னேற்றப் பணிகளில் மாணவர்களைப் பங்கு கொள்ளச் செய்வதற்காக அதற்கான நிதிஉதவிகளும் தாராளமாக ஒதுக்கப்பட்டன. இன்றும் இந்த தேசிய நாட்டு நலப்பணித் திட்டங்கள் அனைத்துக் கல்லூரிகளிலும் செயல்பட்டு வருவதைக் காணலாம். அதேபோன்று கல்லூரிக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான காரணங்களை ஆராய்ந்தறிவதற்காக மத்திய கல்வி அமைச்சகமும்



*நாட்டு நலப்பணித் திட்டத் துவக்க விழாவில் 'அம்மா' அவர்கள் மரக்கன்று நடும் காட்சி*

பல்கலைக்கழக மானியக் குழுவும் இணைந்து ஒரு கமிட்டியை ஏற்படுத்தின. இக்கமிட்டி சௌந்திரத்தின் ஆலோசனையின் பேரிலேயே ஏற்படுத்தப்பட்டதாகும். இக்கமிட்டி நாடெங்குமுள்ள கல்லூரிகளுக்கும், உயர்கல்விக் கூடங்களுக்கும் சென்று கல்வித்தரம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வெளிநாடுகளில் உயர் கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டார்கள். அச்சமயத்தில் சுமார் 14,500 இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் படித்து வந்தனர். அவர்களின் கல்விச் சலுகை, உபகாரச் சம்பளம் போன்றவற்றிற்காக ஒரு தனித்திட்டம் வகுக்கப்பட்டது. அதன் மூலம் அம்மாணவர்களுக்கு தாராளமான பல உதவிகள் கிடைக்க சௌந்திரம் ஏற்பாடு செய்தார். அதேபோன்று, நாட்டில் சிறந்து விளங்கிய கல்வியாளர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்குள்ள கல்விக் கொள்கைகளை ஆராய்ந்தறிந்து வரும் வகையில் அதற்கென ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அதன் மூலம் இந்தியக் கல்வியாளர்கள்

வெளிநாடுகளில் நடைபெறும் கருத்தரங்குகள், ஆய்வுக் கூட்டங்கள் போன்றவைகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். அதற்கென நிதி உதவிகளும் வழங்கப்பட்டு வந்தன. மேலும், காமன்வெல்த் நாடுகளின் கல்வித் தரத்தையும் அதனை மேம்படுத்துவதற்கான நடைமுறை சாத்திக்கூறுகள் போன்றவற்றையும் ஆராய்ந்தறிய ஏற்பாடு செய்யப்பட்டது. காமன்வெல்த் நாடுகளின் கல்வி வளர்ச்சிக்கு இந்தியா கணிசமான அளவு பண உதவி செய்யச் செளந்திரம் ஊக்குவித்து வந்தார்.

மாணவர்களுக்கு ஆசிரியர்கள் பாடம் சொல்லித் தருவதினால் மட்டும் மாணவர்களின் கல்வித்தரம் உயர்ந்து விடுவதில்லை. வீட்டிலும் அவர்கள் முறைப்படி வளர்க்கப்பட வேண்டும். குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு முக்கியமானது. ஆகவே, பெற்றோர்கள் ஆசிரியர்கள் இரு பிரிவினருமே குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதவர்கள் என்ற கருத்தை நன்கு அறிந்திருந்த செளந்திரம், ஒவ்வொரு பள்ளியிலும் ஆசிரியர்-பெற்றோர் சங்கம் தோற்றுவிக்கப்படவேண்டியதன் அவசியத்தை கல்வியாளர்களுடன் கலந்தாலோசித்தார். அவர்களின் ஒப்புதலுக்குப்பின் இந்தியா முழுவதுமுள்ள எல்லாப் பள்ளிகளிலும் ஆசிரியர் பெற்றோர் சங்கம் அமைக்கவேண்டுமென மாநிலங்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இச்சங்கத்தின்மூலம் இரு சாராரும் அடிக்கடி குழந்தைகளின் தேவைகள், கல்வித்தரம் போன்றவற்றை அறிந்து செயல்பட வகை செய்யப்பட்டது. இவ்வமைப்பு இன்றும் எல்லாப் பள்ளிகளிலும் செயல்பட்டு வருவதைக் காணலாம்.

செளந்திரம் கல்வித் துணை அமைச்சராக இருந்தபோது கல்வி வளர்ச்சிக்காக மட்டும் அல்லாமல் தேசிய நலப்பணிகளிலும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். 1962ல் சீனா நமது நிலப்பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டதோடு மட்டுமல்லாது போரும் தொடுத்தது. இந்திய இராணுவம் நமது எல்லைப் பகுதியை திறமையோடு பாதுகாத்து வந்தது. இந்திய மக்களின் கவனம் முழுவதும் இராணுவத்தின் மீதே பதிந்திருந்தது. யுத்தத்திற்கு ஏராளமான ஆயுதங்களும் பொருட்களும் தேவைப்பட்டன. ஏற்கனவே, அச்சமயத்தில் நாட்டில் உணவுப் பஞ்சம் நிலவிவந்தது. நிலைமையைச் சமாளிக்க "தேசிய பாதுகாப்பு நிதி" ஏற்படுத்தப்பட்டது. இதில் செளந்திரமும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். நாடெங்கும் நிதி திரட்டப்பட்டது. அந்நேரத்தில் செளந்திரமும் இந்திரா காந்தியும் மிக நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். இருவம் டில்லியிலும் மீரட் நகரிலும் நிதிவசூல் செய்யச் சென்று வந்தனர். காலையில் செல்லும் இருவரும், தங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவரது வீட்டிற்கும் சென்று நிதி வசூல்செய்து மாலையில்தான் வீடு திரும்புவர். அந்நேரத்தில் சரியான உணவோ, ஓய்வோ இருவருக்கும் கிடையாது.



தான் மேற்கொண்டுள்ள பணி முடியும்வரை செளந்திரத்தைப் போலவே இந்திரா காந்தியும் ஓய்வு இல்லாது வேலை செய்வார். இந்திராவிற்கு சிறுவயது முதலே கடின உழைப்பில் நம்பிக்கை உண்டு. இருவரும் சகோதரிகளாகவே பழகிவந்தனர். இருவரின் சுறுசுறுப்பையும் நிதிவசூலையும் கண்டு நேருஜி உட்பட எல்லாத் தலைவர்களுமே பாராட்டினர்.

தேசிய பாதுகாப்பு நிதிக்காக ஒவ்வொரு மாதமும் செளந்திரம் தனது சம்பளத்தில் பாதியைக் கொடுத்துவந்தார். இதுதவிர, அவரின் உதவிவேண்டி, ஏராளமான தபால்களும் மனுக்களும் பொதுமக்களிடமிருந்து வரும். மீதச் சம்பளத்தை, சம்பளம் வாங்கிய உடனே அவருக்கு அவ்வளவு அனுப்பு; இவருக்கு இவ்வளவு அனுப்பு என்று தனது உதவியாளரிடம் கூறிப் பணத்தை மணியார்டர் செய்துவிடுவார். செலவிற்கு என்ன செய்வது,? மிகச் சிக்கனமான வாழ்க்கையைத்தான் செளந்திரம் கடைபிடித்தார். காந்திகிராமத்தில் கட்டாந்தரையில் உறங்கி, கிடைத்ததைச் சாப்பிட்டது போன்றுதான் டில்லியில் அமைச்சராக இருந்தபோதும். தான் மட்டும் தேசிய நிதிக்குக் கொடுத்ததோடு மட்டுமல்லாது தனது அமைச்சகத்தில் பணியாற்றும் ஏனைய அதிகாரிகளையும் நிதியுதவி செய்யும்படி வேண்டிக்கொண்டார்.

மேலும், வழக்கமான அலுவலக நேரம் தவிர அதிகப்படியான அலுவல்கள் செய்தமைக்காக கிடைக்கும் பணத்தைத் தேசிய நிதிக்கு வழங்கும்படி பரிந்துரைப்பார். எல்லா அதிகாரிகளிடமும் அன்பாகப் பழகுவார். சமயம் கிடைக்கும்போதெல்லாம் அமைச்சராக ஊழியர்களுடைய வீட்டிற்குச் சென்று வருவார். அவர்களுடைய இன்ப துன்பங்களில் தானும் பங்கெடுத்துக்கொள்வார். இதனால் எல்லோரும் செளந்திரத்தின் மீது அதிக மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர். செளந்திரம் எப்பொழுதும் மிகத் துரிதமாகத் தனது அலுவல்களையும் ஏனைய பணிகளையும் செய்துவருவார். இடையில் சிறிது ஓய்வு கிடைத்தால் உடனே எப்போதும் தனது கைப்பையில் வைத்திருக்கும் ஊசி நூலை எடுத்து தலையில் அணியும் மப்ளர், காலில் அணியும் காலுறை போன்றவைகளைப் பின்ன ஆரம்பித்துவிடுவார். காரில் பயணம் செய்யும்போதும், யாருடனும் பேசிக்கொண்டிருக்கும்போதும் ஏதாவது பின்னிக்கொண்டிருப்பார். மேலும் சொல்லப்போனால், பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கூட உறுப்பினர்களின் பேச்சைக் காதால் கேட்டுக் கொண்டே கையால் மப்ளர் பின்னிக்கொண்டிருப்பார். சிறிது நேரங்கூட வீணாகச் செலவு செய்யமாட்டார். தான் பின்னிய மப்ளர்களையெல்லாம் இராணுவ வீரர்களுக்குக் கொடுப்பதற்காக இராணுவ மையங்களுக்கு அனுப்பிவைப்பார். ஜவான்கள் நலக் கமிட்டியிலும் செளந்திரம் ஒரு அங்கத்தினராகச் செயல்பட்டு வந்தார். போரில் பாதிக்கப்பட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு இக்கமிட்டி மூலம் பல உதவிகள்

செய்யப்பட்டு வந்தன. அமைச்சர் என்ற முறையில் இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கென ஒரு தனிக் கல்வித் திட்டத்தை சௌந்திரம் வகுத்தார். ஏனெனில், போர்க் காலங்களில் இராணுவத்தினர் ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டு வந்தனர். இதனால், அவர்களது குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டது. இந்நிலையைத் தவிர்ப்பதற்காக இராணுவத்தினரின் குழந்தைகளுக்கென இந்தியா முழுவதும் 25 பள்ளிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. இத்தகைய பள்ளிகளில் ஒன்று சென்னை தாம்பரத்தில் அமைக்கப்பட்டது.

போர்க்காலங்களில் சௌந்திரம் மிகவும் சிக்கனமான வாழ்கையைக் கையாண்டுவந்தார். மின்சாரத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவார். வீட்டில் எந்த இடத்தில் வெளிச்சம் வேண்டுமோ அங்குமட்டும், அதுவும் தேவைப்படும் போதுதான் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று வீட்டில் உள்ளவர்களிடம் கூறிவந்தார். தண்ணீரைக்கூட மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துவார். அதிகமாகத் தண்ணீர் செலவழித்தால் மோட்டார் அதிகநேரம் ஓடவேண்டி இருக்கும். மின்சாரத்தை அனாவசியமாக செலவுசெய்ய நேரிடும் என்பதாலேயே பல சிக்கன முறைகளைக் கையாண்டுவந்தார். சௌந்திரத்தின் வீட்டிலுள்ள மின்விசிறிகளும், குளிர்சாதனப் பெட்டிகளும் வருடக்கணக்கில் ஓய்வெடுத்துவந்ததை அவருடன் தங்கியிருந்த அனைவரும் நன்கு அறிவர். உண்பதோ மிகவும் எளிமையான உணவு, சாதாரண சப்பாத்தி அல்லது அரிசிச்சாதம். அதற்குத் தேவையான காய்கறிகளை சந்தைக்குப்போய் வாங்கும் பழக்கம் கிடையாது. வீட்டுத் தோட்டத்திலேயே விளைவித்துக் கொள்வார். சௌந்திரத்திற்கு விவசாயத்திலும் வீட்டுத் தோட்டம் அமைப்பதிலும் மிகுந்த ஆர்வம். விதை நடுவதிலிருந்து காய் பறிக்கும் வரையிலான எல்லா வேலைகளையும் அவரே செய்வார். தான் மட்டும் வீட்டுத்தோட்டம் அமைத்ததோடு மட்டுமல்லாது, பக்கத்துவீடுகள், தனக்குப் பழக்கமான மந்திரிகள், அதிகாரிகள், அலுவலர்கள், போன்றவர்களுக்கும் காய்கறிவிதைகளை ஏராளமாகக் கொடுத்து பயிரிடச் செய்வார். அதோடு மட்டுமல்லாது, நேரம் கிடைக்கும் போதெல்லாம் நேரடியாகவும் சென்று பயிர்களைப் பார்வையிட்டு ஆலோசனைகளையும் கூறிவருவார். காய்கறிகள் விதைக்காகவே சௌந்திரம் தனது சொந்தப் பணத்தை நிறைய செலவு செய்து வந்தார். தான் எவருக்கெல்லாம் காய்கறி விதைகள் கொடுத்தாரோ அவர்களிடமிருந்து அவர்கள் வீட்டில் காய்கறிக்காக செலவு செய்யும் பணத்தை தேசிய பாதுகாப்பு நிதிக்காக வசூல் செய்தும் விடுவார்.

இந்திய-சீன யுத்தத்தின்போது இந்திய எல்லைப் பகுதிகளில் வசித்துவந்த மக்கள் அனைவரும் அகதிகளாக அங்குமிங்கும் அலைந்து வந்தனர். ஆயிரக்கணக்கான குழந்தைகளின் கல்வி



இதனால் பாதிப்பிற்கு உள்ளாயிற்று. கல்வி மந்திரி என்ற முறையில் இக்குழந்தைகளின் கல்விக்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு செய்யவேண்டுமெனச் சௌந்திரம் எண்ணினார். அதன் காரணமாக ஒரு திட்டத்தை தயாரித்தார். அத்திட்டத்தின் மூலம் "ஆசிரியர் அணி" என்ற ஒரு அணி நிறுவப்பட்டது. அதாவது தேசியப் பணியில் ஆர்வமுள்ள நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு எல்லைப்புறப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கும் அகதிகள் முகாம்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர். இவ்வணியினர் கால்நடையாகவே மலைப் பகுதிகளிலுள்ள பல கிராமங்களுக்கும், இரவில் சில கிராமங்களுக்கும் சென்று, அங்குள்ள குழந்தைகளுக்கு கல்வி கற்பித்து வந்தனர். இதன் மூலம் ஆயிரக்கணக்கான பள்ளிக் குழந்தைகளின் படிப்பு பாதிக்கப்படாவண்ணம் செய்யப்பட்டது. இத்திட்டத்தை வகுத்து திறமையாகச் செயலாற்றிய சௌந்திரத்தையும் ஆசிரியர் அணியில் பணியாற்றிய ஆசிரியர்களையும் பாராட்டாதவர்கள் மத்திய அமைச்சரவையில் எவரும் இல்லையென்றே கூறலாம். அதன் மூலம் எல்லோருடைய அன்பையும் பாராட்டுதல்களையும் பெற்றார்.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட தாய்-சேய் நலத்திட்டக்கமிட்டியில் உறுப்பினராகவும், இந்திராகாந்தி தலைமையில் அமைக்கப்பட்டிருந்த இந்திய குடிமக்கள் மத்திய கமிட்டியிலும் சௌந்திரம் உறுப்பினராக இருந்து செயல்பட்டு வந்தார். பெண்கள் நலம், குழந்தைகள் முன்னேற்றம் என்றாலே சௌந்திரத்திற்கு மிகவும் விருப்பம். எனவே, மத்திய அரசு அவரை மத்தியக் குடும்பக் கட்டுப்பாடு போர்டின் தலைவராக நியமித்தது. இதன் மூலம் பல அரிய சேவைகளைச் செய்துவந்தார். தலைவராக நியமிக்கப்பட்ட சில காலத்திற்குள் குடும்பக் கட்டுப்பாட்டு போர்டு என்பது சரியில்லை என்று அரசிடம் தெரிவித்தார். அதாவது, ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் குடும்பக்கட்டுப்பாடுதான் முக்கியமானதெனக்கூற இயலாது. மாறாக அக்குடும்பத்திலுள்ள தாய், தந்தை, குழந்தைகள், பெரியவர்கள் அனைவரது நலன்களும் முக்கியமெனக் கூறி, மத்திய குடும்ப நல போர்டு என மாற்றியமைக்கும்படி சௌந்திரம் வேண்டவே மத்திய அரசும் அதனை ஏற்றுக்கொண்டு உடனே பெயர் மாற்றம் செய்தது. இப்பெயர் மாற்றம் சௌந்திரத்தின் அதிகாரத்தினால் செய்யப்பட்டதல்ல. வெகுகாலமாக குடும்பநலத்துறையில் சௌந்திரம் ஆற்றிவரும் பணிகளுக்கு மத்திய அரசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது என்பது இதிலிருந்து புலனாகிறது. குடும்ப நல போர்டின் தலைவராக இருந்தபோது நாடெங்கும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பல சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டன.

குடும்பக்கட்டுப்பாடு பிரச்சாரம் நாடெங்கும் செய்யப்பட்டது. அதேபோன்று, குழந்தைகள் நலனிலும் சௌந்திரம் தீவிரக் கவனம்


செலுத்திவந்தார். இந்தியா முழுவதும் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் ஒரு தாய்-சேய் நல இல்லம் திறப்பதற்கு ஒரு பெரிய திட்டம் தீட்டப்பட்டு, மாநில அரசுகளின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இவ்வாறு கல்வி அமைச்சராக இருந்தபோது மட்டுமல்லாது, பல்வேறு அரசுத் துறைகளிலும் செயலாற்றிப் பல சாதனைகளைச் சௌந்திரம் செய்து வந்தார்.

சௌந்திரம் தனது அலுவல்கள் நிமித்தம் தவிர வேறு வேலைகளுக்காக ஒருபோதும் அரசு வழங்கிய காரைப் பயன்படுத்தவே மாட்டார். தனது சொந்த வேலைகளுக்காக டி.வி.எஸ். கம்பெனியிலிருந்து கொடுத்துள்ள தனது சொந்த காரையே பயன்படுத்துவார். தான் காரில் வெளியே செல்கின்றபோது சாலையில் நடந்து செல்பவர்களில் தெரிந்தவர்கள் யாராவது கண்ணில் பட்டால் உடனே காரை நிறுத்தி வண்டியில் அமரச் செய்து அவர்கள் செல்லும் இடத்திற்குச் சென்று, இறக்கி விட்டுச் செல்வார். பணக்காரர்களாக இருந்தாலும் சரி, ஏழையாக இருந்தாலும் சரி, அல்லது உயர் அதிகாரிகளாகவே இருந்தாலும்கூட எல்லோரையும் சரிசமமாகவே கருதி காரில் ஏற்றிச் செல்வார். சௌந்திரம் மந்திரியாக இருக்கும்போது டில்லியிலிருக்கும் வீட்டிற்கு அவரது தொகுதியிலிருந்து ஏராளமான பார்வையாளர்கள் வருவார்கள். அவர்கள் அனைவருக்கும் உணவு, தங்குமிடம் எல்லாம் சௌந்திரம் வீட்டில்தான். வீட்டிற்கு வருபவர்கள் யாராயினும் சரி உடனடியாக முதலில் சாப்பிடவேண்டும் என்பார். சாப்பிடாமல் வெளியே அனுப்பமாட்டார்கள். சாப்பாட்டைத் தானே பரிமாறுவார். பல முக்கியமான தலைவர்கள் கூட சௌந்திரத்தின் வீட்டிற்கு வந்தால் சாப்பிடாமல் செல்லமாட்டார்கள். வந்தவர்களுக்கு உணவளித்ததோடு மட்டுமல்லாது, உடனே எடைபார்க்கும் கருவியின் மூலம் உடல் எடையை அறிவார். உங்கள் வயதிற்கு குறைந்தபட்சம் இவ்வளவு எடையாவது இருக்க வேண்டும். ஆனால், எடை இல்லை. எனவே, இன்றுமுதல் குறிப்பிட்ட நேரத்தில் சத்தான உணவுகளைச் சாப்பிடவேண்டும். காய்கறிகளையும், கீரை வகைகளையும் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளவேண்டுமென ஆலோசனையும் கூறுவார். தான் ஒரு மத்திய மந்திரி என்பதைச் சிறிதேனும் கண்டுகொள்ளாமல் அனைவரையும் சகோதர சகோதரிகளாகவே கருதி வந்தார்.

தனது தொகுதிக்கு விஜயம் மேற்கொள்ளும்போது எல்லா மக்களையும் சந்தித்து நலம் விசாரிப்பார். மக்களின் குறைகள் அனைத்தையும் பொறுமையோடு கேட்டறிந்து பதில் கூறுவார். பொதுவாக ஏழைகளைக் கண்டால் மந்திரிகள் ஒடுவார்கள். ஆனால், சௌந்திரம் எப்போதும் ஏழைகளுடனேயே இருப்பதை விரும்புவார். டில்லியில் மந்திரியாக இருப்பார். ஆனால், கவனம் முழுவதும் தனது தொகுதியின் மீதுதான் இருக்கும். குடிநீர் கிடைத்துவிட்டதா? சாலை போட்டாகிவிட்டதா? மின்சாரம் கிடைத்துவிட்டதா? என்று அங்கிருந்து



தொலைபேசி மூலம் அடிக்கடி விசாரித்து வருவார். தனது ஐந்தாண்டு பதவிக்காலத்தின் போது அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் அயராது உழைத்து பல முன்னேற்றத் திட்டங்களை வகுத்துக் கொடுத்து, திறமையாகச் செயலாற்றினார். அந்த ஐந்தாண்டு காலத்தில் நேருஜி, லால்பகதூர் சாஸ்திரி, இந்திராகாந்தி ஆகிய மூவரும் ஆட்சியமைத்தனர். இந்த மூவரின் மந்திரி சபையிலும் தொடர்ச்சியாக மந்திரியாக இருந்து பணியாற்றிய பெருமை சௌந்திரத்தைச் சாரும்.



*அயல் நாட்டினருடன் அளவளாவும் அம்மா அவர்கள்*

# தியாகச் சுடர்

*மரம் அதுதரும் கனிகளால் அறியப்படுகிறது ;*
*மனிதன் அவனது பணிகளால் அறியப்படுகிறான்.*

சௌந்திரம் உழைப்பால் உயர்ந்தவர். தன்னலமற்ற உழைப்பினால் தியாகத் திருவுருவாக விளங்கியவர். தான் செய்த காரியங்களிலெல்லாம் வெற்றி பெற்றார். அத்தகைய வெற்றிக்கு அவரது தெளிந்த சிந்தனையும், தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் முக்கிய காரணங்களாகும். உலகில் பல பெண்கள் பிறக்கிறார்கள், வாழ்கிறார்கள், மறைகிறார்கள். ஆனால், அந்தப் பெண்களிடமெல்லாம் காணப்படாத ஒரு தெய்வீகத் தன்மை சௌந்திரத்திடம் காணப்பட்டது. குழந்தைப்பருவம் முதல் அவரது வாழ்க்கை ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நோக்கிய ஒரு போராட்டமாகவே அமைந்திருந்தது. அவர் செய்த ஒவ்வொரு செயலும் சமுதாயத்தில் மலிந்து காணப்படும் மூடப்பழக்க வழக்கங்களையும் நடைமுறைக்குப் பொருத்தமில்லாத வேதாந்தங்களையும் தகர்த்தெறியும் சக்திகளாக விளங்கின. அவரது வாழ்க்கையை ஒரு புரட்சி எனக் கூறலாம். உயரிய இலட்சியத்திற்கான புரட்சி. பெண்கள் என்றால் இப்படித்தான் இருப்பார்கள் என்ற பழமைவாதிகளின் எண்ணங்களைப் பொய்க்கச் செய்து, பாரதியின் புதுமைப் பெண்ணாக, புரட்சிப் பெண்ணாக விளங்கியவர் சௌந்திரம்.

பாரதி கண்ட புதுமைப் பெண்ணின் இலக்கணங்களை முழுமையாகப் பெற்றவர் சௌந்திரம். தான் மட்டுமல்ல பெண்குலம் முழுவதுமே பாரதி காண விரும்பிய புதுமைப் பொலிவோடு விளங்க வேண்டுமென்று அவர் விரும்புவார்.

பாரதியின் புதுமைப் பெண் எனும் காவியத்தில் இடம்பெற்றுள்ள இந்த வரிகள் சௌந்திரத்திற்கு மிகவும் பிடித்தமானவை

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்,
அமிழ்ந்து பேரிரு ளாம் அறியாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டிரோ!



உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவு சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்ங்கள் பாரத
தேசங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

இந்த வரிகளின் உயிர் ஓவியமாகவே சௌந்திரம் விளங்கினார்.

சௌந்திரம் முதலில் தன்னை நன்கு அறிந்து கொண்டிருந்தார். அதைப் போன்றே தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களையும் தெளிவாகப் புரிந்திருந்தார். அதனால்தான், ஒரு பெண்ணாக இருந்த போதிலும் உலகச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டு பல சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. அவரது தாய்ப்பாசம் அவரோடு பணியாற்றும் ஊழியர்களைத் தன்வசப்படுத்திக் கொண்டது. சௌந்திரத்தின் ஒவ்வொரு பணிக்கும் திறமையான பல ஊழியர்கள் கிடைத்தார்கள். ஊழியர்களையும் தனது உறவினர்களாகக் கருதிய சௌந்திரத்தைப் போன்று வேறு யாரையும் நாம் காண முடியாது. ஊழியர்கள் மீது அவ்வளவு அன்பும், நம்பிக்கையும் வைத்திருந்தார்.

ஒரு நாள் பார்வையாளர் ஒருவர் சௌந்திரத்தைக் காண அவரது அலுவலகத்திற்கு வந்திருந்தார். அலுவலகத்திலிருந்த ஊழியர் ஒருவர் "ஐயா என்ன வேண்டும்? யாரைப் பார்க்க வேண்டும்? என்ன காரியம்?" எனக் கேட்டார்.

"நான் அம்மாவைப் பார்க்க வேண்டும். அவரிடம் நான் பேச வேண்டும்" என்றார் வந்தவர்.

உடனே, ஊழியர் சௌந்திரத்தின் அறைக்குச் சென்று விவரத்தைக் கூறினார்.

"என்ன காரியமாக வந்திருக்கிறார்?" என்று சௌந்திரம் ஊழியரிடம் கேட்டார். அதற்கு அந்த ஊழியர்,

"உங்களிடம்தான் பேசவேண்டுமென்று கூறுகிறார்" என்றார்.

"உங்களிடம் கூறாத செய்தியை என்னிடம் மட்டும் ஏன் கூறவேண்டும். அவரைத் திரும்பிப் போகச் சொல்லுங்கள்" என்றார் சௌந்திரம்.

வெளியிலிருந்தவாறு கேட்டுக்கொண்டிருந்த அந்தப் பார்வையாளர் ஊழியரிடமும் சௌந்திரத்திடமும் தனது தவறுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சி விளக்குவது என்னவென்றால், ஊழியர்களுக்கும்

தனக்கும் இடையில் எவ்வித இடைவெளியையும் ஏற்படுத்திக்கொள்ள சௌந்திரம் விரும்பவில்லை என்பதேயாகும். காந்திகிராம ஊழியர்களுக்கு மதிப்புக் கொடுக்காத இடத்திற்கு தானும் செல்லமாட்டார். தனது சகஊழியர்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வந்தார். அவரது பார்வைக்கு நல்லவைகள் மட்டுமே தென்பட்டன. இதனால், ஊழியர்கள் அனைவரும் அவர்மீது உயிரையே வைத்திருந்தனர். காந்திகிராமம் என்பது அன்பின் சரணாலயமாக விளங்கியது. இந்த அன்புக் களஞ்சியத்தின் நிர்வாகக் குழுவில் பல சுதந்திரப் போராட்டத் தியாகிகளும் தன்னலமற்ற தேசியத் தலைவர்களும் பணியாற்றி வந்தனர்; பணியாற்றி வருகின்றனர். நா.ம.ரா.சுப்பராமன், பொள்ளாச்சி நா.மகாலிங்கம், சி.சுப்பிரமணியம், முன்னாள் பாரதக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் போன்றவர்கள் காந்திகிராம நிர்வாகக் குழுவில் பணியாற்றிப் பெருமை சேர்த்தவர்கள். இவர்கள் அனைவரும் சௌந்திரத்தோடு தோளொடு தோள் நின்று காந்திகிராமத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்கள். அதேபோன்று காந்திகிராமத்திற்கு வருகைதராத தேசியத் தலைவர்கள் எவருமிலர் என்றே கூறலாம். அத்தனைபேரும் சௌந்திரத்தின் பணிகளை நேரில் கண்டு வாயாரப் புகழ்ந்தனர்.

1980 ல் சௌந்திரத்திற்கு எழுபத்தைந்து வயது. இந்த வயதில் கூட காந்திகிராமத்தின் பணிகளை சளைக்காமல் செய்து வந்தார். அதேசமயம் காந்திகிராம கிராமப் பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும் பதவி வகித்து வந்தார். நூற்றுக்கணக்கான கோப்புகளைப் படித்துப் பார்த்து கையொப்பமிடுவது, ஊழியர்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது போன்றவற்றில் எப்பொழுதும் போலவே சுறுசுறுப்புடன் இயங்கிவந்தார். ஆனால், நாட்கள் செல்லச் செல்ல அவரது உடல் நிலை அவரோடு ஒத்துழைக்கத் தயங்கியது. முன்புபோல ஓடியாடிப் பணியாற்ற இயலவில்லை. அடிக்கடி சுகவீனம் ஏற்பட்டுவந்தது. மருத்துவ வசதிகளை முன்னிட்டு மதுரையில் தனது சகோதரர் வீட்டில் தங்கியிருந்தார். குடியிருக்க வீடில்லாமல் தவித்த ஆயிரக்கணக்கான ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்த சௌந்திரத்திற்கு அவருக்கென இறுதிவரையிலும் ஒரு வீடுகூட இல்லை. காந்திகிராமம் தான் அவருக்கு எல்லாம். சௌந்திரம் மதுரையில் சிகிச்சை பெற்று வந்தபோது அவர் பிரியமாக வளர்த்த ஒரு மகளின் குழந்தைகள் அதாவது பேரக்குழந்தைகள் அவரை நன்கு கவனித்து வந்தனர். இருப்பினும் உடல்நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டே வந்தது.

சௌந்திரம் பதவியிலிருந்தபோது மிகுந்த சுறுசுறுப்போடு இயங்கக் கூடியவர். கணநேரம் கூட காலத்தை பயனில்லாமல் செலவழிக்க மாட்டார். தனது வாழ்நாளெல்லாம் அயராது உழைத்தார். ஆயிரக்கணக்கான ஏழைகளை உயரச் செய்தார். இப்போது ஒய்வு



தேவைப்படுகிறது. வெளியே சென்றுவருவதை வெகுவாகக் குறைத்துக் கொண்டார். முழு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் கூறி வந்தார்கள். இருந்தபோதிலும் சௌந்திரம் காந்திகிராமத்திற்கு வழக்கம்போல் வந்து போய்க் கொண்டிருந்தார். 1983 ல் உடல் மிகவும் தளர்ந்து விட்டது. நடக்கக்கூட இயலவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட காந்திகிராமம் வந்து, அலுவல்களை மேற்பார்வை செய்து கொண்டு ஆலோசனைகளையும் வழங்கிச் சென்றார். காந்திகிராமம் வரும்போதெல்லாம் முதலாவதாக சௌபாக்ய இல்லத்திற்குத்தான் செல்வார். அங்கு வளரும் ஒவ்வொரு குழந்தையின் ஜாதகமும் அவருக்கு நன்கு தெரியும். அக்குழந்தைகளை, காரில் உட்கார்ந்து கொண்டே அருகில் அழைத்து அணைத்து மகிழ்வார். தாய் தந்தை யார் என்று அறியாத அக்குழந்தைகளுக்கு தனக்குப்பின் யார் தாயாக இருந்து கவனிப்பார்கள்? என்ற எண்ணம் சௌந்திரத்திற்கு ஏற்படாமலில்லை. அதை எண்ணும்போது மனம் கசிந்து விடுவார். குழந்தைகளை இறுகத் தழுவிக் கொள்வார். நான் போய்விட்டால் "அம்மா" என்று நீங்கள் யாரை அழைப்பீர்கள்? என்ற ஏக்கம் அவரது கண்களில் தெரிந்தது. சௌந்திரத்திடம் ஒரு சிறப்பான குணம் யாதெனில், தான் சந்தோஷமடைந்தாலும் வருத்தமடைந்தாலும் வெளிக்காட்டவே மாட்டார். வழக்கம்போல் செயல்படுவார்.

தன் அருகிலிருக்கும் காந்திகிராம ஊழியர்களிடம், "குழந்தைகளை அடிக்கவோ அல்லது திட்டவோ கூடாது. தவறுகள் செய்தால் அத்தவறுகளை அன்போடு சுட்டிக்காட்டி, மீண்டும் பிழைசெய்யாமல் இருக்க அறிவுரை கூறவேண்டும்" எனக் கூறுவார். வெகுநேரம் குழந்தைகளுடனேயே விளையாடிக் கொண்டு மகிழ்ச்சியோடிருப்பார். அதன்பின் கஸ்தூரிபா சேவிகாசிரமம் செல்வார். அங்குள்ள பெண்களிடம் அவர்களது கல்வி, தொழிற்பயிற்சி போன்றவை பற்றி ஒவ்வொருவரிடமும் கேட்டறிவார்.

சேவிகாசிரமப் பெண்களுக்கு பல அறிவுரைகளை வழங்கி, அவர்கள் எப்போதும் மங்களகரமாகவும், சந்தோஷமாகவும் இருக்கவேண்டுமெனக் கூறுவார். அதன்பின் காந்திகிராமத்திலுள்ள ஒவ்வொரு தொழிற் பிரிவுகளுக்கும் செல்வார். அங்கு பணிபுரியும் ஒவ்வொரு ஊழியரையும் அழைத்து நலம் விசாரிப்பார். காந்திகிராமத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் தொடர்ந்து முனைப்புடன் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்வார். இவ்வாறு தனது தள்ளாத வயதில்கூட காந்திகிராமம் வரவேண்டும், இங்கு நடைபெறும் பணிகளைப் பார்க்கவேண்டும் என்ற பேராவல் அவரது மனதில் இருந்துகொண்டே வந்தது.

சௌந்திரம் ஒரு தைரியசாலி; மனவலிமை மிக்கவர்; உடல் உறுப்புகள் அனைத்தும் செயலிழந்து படுத்த படுக்கையாக

இருக்கும்போது தனது உயிர் இவ்வுடலைவிட்டு எத்தருணத்திலும் பிரியலாம் என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார். இருப்பினும் அதற்காக சிறிதும் வருந்தவே இல்லை. ஒரு நாள் காந்திகிராமத்தைக் கவனித்துக்கொண்டு வரும் திரு. பத்மநாபனை அழைத்து "நான் இன்னும் நாலு நாளில் போனாலும் போய்விடுவேன். நான்கு வருடங்கள் இருந்தாலும் இருப்பேன். நான் என்னை இரண்டிற்கும் தயார் செய்து கொண்டேன். நீங்களும் தயார்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சிரித்துக் கொண்டே கூறினார். சௌந்திரம் எவ்வளவு தூரம் மனபலம்படைத்தவராக விளங்கினார் என்பது இதிலிருந்து நன்கு தெரியவருகிறது.

அன்று 1984 ஜனவரி முதல் தேதி. சௌந்திரத்தின் சகோதரர் டி.எஸ். ராஜம் அவர்களின் பிறந்தநாள். ராஜம் சௌந்திரத்துடன் போனில் பேசினார். இருவரும் ஒருவரையொருவர் வாழ்த்திக் கொண்டனர். அப்போது ராஜம், "சௌந்திரம் ! நான், பங்கஜம், நீ மூவரில் ஒருவர் விரைவில் போகப் போகிறோம். போகிறவர்கள் சந்தோஷமாகப் போகணும். இருப்பவர்கள் தைரியமாக இருக்கணும்" என்று கூறினார். அவர் கூறியது போன்றே ஓரிரு மாதங்களில் ராஜம் விடைபெற்றச் சென்றார். "எங்கண்ணா தர்மபுத்திரன். பேசிக்கொண்டே போய்விட்டார். இந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கணுமே" எனச் சௌந்திரம் அடிக்கடி கூறிவந்தார்.

ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று சௌந்திரம் இப்போது தன்னை எதற்கும் தயார்படுத்திக் கொண்டார். தனது விருப்பங்களை ஒரு உயிலில் எழுதினார். தன் கண்கள் இரண்டையும் தானம் செய்ய வேண்டும். உடல்மீது எவ்வித மலர்களையோ அல்லது மலர் மாலைகளையோ அணிவிக்கக் கூடாது. உடலை எவரும் தொடவோ, தொட்டு அழவோ கூடாது. தான் வாங்கி வைத்திருக்கும் ஆடைகளைத் தான் அணிவிக்கவேண்டும். மதுரையில் தகனம் செய்து, அஸ்தியை திருப்புல்லாணியிலும் சேதுக்கரையிலும் கரைக்கவேண்டும் என்று தனது உயிலில் எழுதிவைத்தார். இதன்மூலம் தான் இவ்வுலகை விட்டுப் பிரியும் போதும் தனது உடல் எப்படியிருக்கும் என்பதைத் தனது மனக்கண்ணால் பார்த்துக்கொண்டார்.

ஒரு நாள் திரு. பத்மநாபன், அப்போது உபராஷ்டிரபதியாக இருந்த திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களைச் சந்தித்தார். அப்போது சௌந்திரத்தின் சேவைகளைப் பாராட்டி அவருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்தினால் நல்லது எனத் தனது கருத்தை திரு. வெங்கட்ராமன் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து பாராட்டு விழாகுழு ஒன்று அமைக்கப்பட்டது. சௌந்திரத்தின் மிகநெருங்கிய நண்பரும் தொழில் அதிபருமான பொள்ளாச்சி திரு.நா.மகாலிங்கம் அவர்கள் அக்குழுவின் தலைவராகவும், திருமதி. சரோஜினி வரதப்பன் அவர்கள் துணைத்



தலைவராகவும் டாக்டர் மரைக்காயர் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப்பட்டார்கள். பாராட்டுவிழா ஏற்பாடு செய்யப்படுவதைச் சௌந்திரத்திற்குத் தெரியப்படுத்தினால் அதற்கு அவர் சம்மதிக்கமாட்டார் என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். எனவே, சௌந்திரத்திற்கு தெரியாமலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு அதன்பின் சௌந்திரத்திடம் சம்மதம் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையிலேயே இவ்வாறு செய்தார்கள். பாராட்டு விழாவை மதுரையில் நடத்துவதெனவும் அப்போது சௌந்திரத்தின் பணிகளைப் பற்றி சிறப்பிதழ் ஒன்று வெளியிடவும் முடிவு செய்யப்பட்டது.

இச்சமயத்தில் சௌந்திரம் படுத்த படுக்கையாக இருந்தார். பாராட்டு விழாத் தலைவர் மற்றும் அக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் 1984 செப்டம்பர் முதல் நாள் சௌந்திரத்தை நேரில் சந்திக்கச் சென்றனர். தாங்கள் நடத்தப்போகும் பாராட்டுவிழா ஏற்பாட்டைக் கூறி அதற்கு அவரது சம்மதத்தையும் வேண்டிநின்றனர். அனைவரும் எதிர்பார்த்த படியே, "நான் என்ன அவ்வளவு பிரமாதமாக சேவை செய்துவிட்டேன். என்னால் இயன்ற ஒரு சில பணிகளை மட்டுமே செய்திருக்கிறேன். எனக்கு எதற்குப் பாராட்டுவிழா? பணச் செலவு" என்று சௌந்திரம் கூறினார். நாங்கள் மட்டுமல்ல, கிராம மக்கள் அனைவரும் தங்களைக் கௌரவித்து ஆசி பெறவேண்டுமென விரும்புவதால் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம் என்று அருகிலிருந்தவர்கள் கூறினார்கள். நீண்ட யோசனைக்குப்பின் தனக்காக இல்லாவிட்டாலும், விழாவிற்கு ஏற்பாடு செய்தவர்களுக்கு மன மகிழ்ச்சியைத் தரவேண்டுமென எண்ணி சௌந்திரம் சம்மதம் வழங்கினார். செப்டம்பர் 8 ம் தேதி விழா நடைபெற்றது. உபராஷ்டிரபதி ஆர். வெங்கட்ராமன் தன் துணைவியாருடன் வந்திருந்து விழாவிற்குத் தலைமை தாங்கினார். திருமதி. சரோஜினி வரதப்பன், திரு.ம.பொ. சிவஞானம், திரு. நெடுஞ்செழியன் ஆகியோர் உட்பட பல அமைச்சர்களும், அரசியல் பிரமுகர்களும் விழாவில் கலந்து கொண்டு சௌந்திரத்தை வாழ்த்திப் பேசினார்கள். சௌந்திரம் சக்கர நாற்காலியில் அமர்ந்த வண்ணம் மேடைக்கு வந்து உரையாற்றினார்.

அப்போது "என்னை கௌரவப்படுத்திப் பாராட்டும் வகையில் நீங்கள் அனைவரும் இங்கு கூடியிருக்கின்றீர்கள். இதனால் என் மனம் மிகுந்த சந்தோஷமடைகிறது. தமிழ்நாட்டு மக்கள் எப்போதும் உணர்ச்சிப் பூர்வமாகச் செயல்படுபவர்கள். உங்களைக் காணும்போது நானும் அன்புவயப்பட்டு உணர்ச்சியடைகிறேன். இங்கு கூடியிருக்கின்றவர்கள் பலர் என்னுடைய உற்ற நண்பர்கள். ஆனால், இப்போது அவர்களை அடிக்கடி சந்திக்க இயலவில்லை. அவர்களைப் பார்க்கும்போதெல்லாம் சந்தோஷமடைகிறேன். புத்துணர்ச்சி கிடைக்கிறது. அவர்களோடு இணைந்து பணியாற்ற விரும்புகிறேன்.

என் மனமும் அதற்காக விரும்புகிறது. ஆனால், உடல்நிலை ஒத்துழைப்புத்தர மறுக்கிறது. காந்திகிராமத்தை நடத்திச் செல்ல பல இளைஞர்கள் முன்வந்து செயலாற்றி வருகிறார்கள். கிராமப் பணிகளில் இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும் வகையில் காந்திகிராமம் செயல்படவேண்டும். அப்போதுதான் இதுவரை காந்திகிராமம் எவற்றையெல்லாம் சாதித்ததோ அவற்றை இளைஞர்களும் சாதிக்க முடியும். ஆகவே, இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும் வகையில் காந்திகிராமம் செயல்படவேண்டும். இளைஞர்களை அணுகவேண்டும். அவர்களிடம் கிராமப் பணிகளைப் பற்றிக் கலந்தாலோசித்து அவர்களைக் கிராமப் பணிகளுக்கு ஈர்க்க வேண்டும். இன்னமும் கிராமங்களில் செய்யவேண்டிய பணிகள் ஏராளமாயிருக்கின்றன. அப்பணிகளைச்செய்ய இளைஞர்களைத் தயார் செய்ய வேண்டும்" எனச் சுருக்கமாக உரையாற்றி விழாவில் கூடியிருந்த அனைவரையும் ஆசீர்வதித்தார். பெரும் திரளாக வந்திருந்த கிராம மக்கள் "அம்மா வாழ்க" என உரத்த குரலில் வாழ்த்தினார்கள்.



'அம்மா அவர்களின் பவளவிழாக் காட்சி'

இவ்விழாவிற்குப்பின் செளந்திரத்தின் உடல்நிலை சற்று தேறியது. காரிலேயே சிறிது நேரம் வெளியில் சென்று வந்து கொண்டிருந்தார். இருப்பினும் ஒருவாரம் கழித்து மீண்டும் நோய்வாய்ப்பட்டார். உணவு உண்ண இயலவில்லை. பேசவும் முடியவில்லை. பொருட்களைத் தெளிவாகக் காண இயலவில்லை. அவ்வப்போது கண்திறந்து பார்ப்பார். ஏதாவது பேசுவார். ஆனால், சிலவார்த்தைகள் தான் புரியும்படியாக இருக்கும். டியூப் மூலமாக உணவு செலுத்தப்பட்டது. மருத்துவர்கள் தீவிரமாகக் கவனித்து வந்தனர். அதன் பலனாக ஓரளவு நினைவு திரும்பியது. சந்தோஷமாகவும் இருந்தார். தனக்கு வைத்தியம் செய்த மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்தார். இந்நிலையிலும் கூட



காந்திகிராமத்திலுள்ள ஒவ்வொரு யூனிட்டுடன் போன் மூலம் தொடர்பு கொண்டு பேசிவந்தார். "பள்ளிக்கூடத்தில் எத்தனை குழந்தைகள் புதிதாகச் சேர்த்துள்ளீர்கள்?" என்பதை தலைமை ஆசிரியையிடம் கேட்டறிவார். "இம்மாதம் எத்தனை பிரசவ கேஸ்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன? எத்தனை குழந்தைகள் பிறந்துள்ளன? தடுப்பூசி போடப்பட்டுள்ளதா?" என்ற விவரங்களை கஸ்தூரிபா மருத்துவமனையுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்வார். அதேபோன்று "தொழிலாளர்கள் அனைவருக்கும் சம்பளம் கொடுத்தாகிவிட்டதா?" என்றெல்லாம் கேட்டறிவார். தான் மரணப்படுக்கையில் இருந்தபோது கூட காந்திகிராமப் பணிகள் மீது எவ்வளவுதூரம் செளந்திரம் கவனம் செலுத்தி வந்துள்ளார் என்பதை இதன் மூலம் அறிய முடிகிறது.

செளந்திரத்தின் வாழ்க்கை புனிதமானது. மக்கள் அனைவரும் தெய்வமாக மதித்துப் போற்றும் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்தார். பிறந்தது முதலே உயிருக்காகப் போராடிய நூற்றுக்கணக்கான அனாதைக் குழந்தைகளைக் காப்பாற்றி, தாய்ப்பாசத்தைப் பொழிந்து, கல்வி கொடுத்து, வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்தவர் செளந்திரம். "கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்" என்ற கோட்பாடு நிலவிய காலத்தில் பல இளம் விதவைகளை ஒன்று சேர்த்து, அவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களும் சமுதாயத்தில் பிறருக்குப் பயன்படத்தக்க வகையில் வாழ்ந்துகாட்ட முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார். உணவு, உடை, இருப்பிடமில்லாமல் வாடிய இலட்சக்கணக்கான கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்து மறுவாழ்வு கொடுத்தவர். குடியிருக்க வீடில்லாத நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு வீடுகட்டிக் கொடுத்தவர். குடிதண்ணீர்கூடக் கிடைக்காத ஏராளமான கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதியைச் செய்து கொடுத்தவர். நோயால் பீடிக்கப்பட்டு அல்லப்பட்டு வந்த கிராம மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய அருள்மழை பொழிந்தவர் இந்த செளந்திரம். செளந்திரத்திற்கு மிகவும் பிடித்தமான பாடல் ஒன்றுண்டு. நாமக்கல் கவிஞரின் அந்தப் பாடலை அவர் அடிக்கடி ஆர்வமாகப் பாடுவார். பாடத் தெரிந்தவர்களைப் பாடச் செய்து கேட்டு மகிழ்வார்.

பல்லவி

அவரே கடவுளை அறிந்தவ ராவார்
அனைவரும் மதித்திடத் தகுந்தவ ராவார்

அனுபல்லவி

துன்பப் படுவோர் துயரம் சகியார்
துடிதுடித்தோடித் துணைசெயப் புகுவார்
இன்பம் தனக்கென எதனையும் வேண்டார்
யாவரும் சுகப்பட சேவைகள் பூண்டார் (அவரே)

சரணங்கள்

நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தன்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தாமிருந்துதவும் (அவரே)

பசியால் வாடின எவரையும் பார்த்துப்
பட்டினி தனக்கென பரிதபித் தர்த்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண்உப சாரம் விளம்புதல் விடுப்பார் (அவரே)

ஆம்; இந்தப்பாடலில் பொதிந்தள்ள எல்லாக் குணநலன்களையும் ஒருங்கே பெற்ற சௌந்திரம் அனைவராலும் மதிக்கப்பட்டார் என்பதுடன் கடவுளை அறிந்தவராகவும் விளங்கினார்.

**இறுதியில் கடவுளே அவரை அறிந்து 1984ம் வருடம் அக்டோபர் மாதம் 21ம் நாள் தமது பாதாரவிந்தங்களில் ஏற்றுக் கொண்டார்.**

மதுரை அரவிந்தர் கண் மருத்துவமனைக்கு உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. அங்கிருந்து மருத்துவக் குழு ஒன்று விரைந்து வந்து சௌந்திரத்தின் இரண்டு கண்களையும் எடுத்துக்கொண்டது. பதிலாகச் செயற்கை விழிகளைப் பொருத்தினர். எடுத்துச்சென்ற கண்களை பார்வை இழந்த ஒருவருக்குப் பொருத்தினர். இதன்மூலம் சௌந்திரம் தொடர்ந்து இவ்வுலகைப் பார்த்துக்கொண்டுதான் வருகிறார். பெரியவர்கள் தங்கள் வாழ்நாளின்போது கண்களைத் தானம் செய்வதாகக் கூறுகின்றனர். ஆனால், அவர்கள் இறக்கிறபோது அவரது குடும்பத்தார்கள் கண்களை எடுக்க அனுமதிப்பதில்லை. ஆனால் சௌந்திரமோ, தான் உயிருடன் வாழ்ந்தபோதே கண் தானம் செய்ய வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். தனது இறப்பிற்குப் பின்னும் பிறருக்குப் பயன்படும் வகையில் தனது உடல் உறுப்புகள் பயன்படவேண்டும் என்ற சௌந்திரத்தின் உயரிய இலட்சியம் நிறைவேற்றப்பட்டது. சௌந்திரத்தின் உறவினர்கள் சந்தன மாலைகளை அணிவித்தார்கள். வேறு எவ்விதப் பூமாலைகளும் அணிவிக்கப்படவில்லை. இறுதிச் சடங்குகள் மிக எளிய முறையிலேயே நடத்தப்பட்டன.

22ம் தேதி மறுநாள் சௌந்திரத்தின் உடல் மதுரை தத்தனேரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்குதான் சௌந்திரத்தின் தாயும், தந்தையும் எரியூட்டப்பட்டனர். எனவே, தனது உடலும் அங்குதான் எரியூட்டப்படவேண்டுமெனச் சௌந்திரம் விரும்பினார். அவரது விருப்பப்படியே திரு. பத்மநாபன் எல்லாச் சடங்குகளையும் செய்து நெருப்பூட்டினார். வாழ்நாளெல்லாம் பிறருக்காகவே உழைத்த உடம்பு அக்கினியிடம் ஒப்படைக்கப்பட்டது. 23ம் தேதி சாம்பல் சேகரிக்கப்பட்டு




RURAL UNIVERSITY Dr. ... LIBRARY GANDHIGRAM

திருப்புல்லாணிக்குக் கொண்டு செல்லப்பட்டு கரைக்கப்பட்டது. எல்லாமே சௌந்திரத்தின் விருப்பப்படியே செய்யப்பட்டன.

சாம்பலின் ஒரு பகுதி ஒரு பாத்திரத்தில் காந்திகிராமம் கொண்டுவரப்பட்டு, சௌந்திரத்தின் உயிர் நாடியாக விளங்கிவரும் சௌபாக்கிய இல்லத்தின் மேற்குப்புறத்தில் பூமிக்கு அடியில் வைக்கப்பட்டது. அதன் மேல் பளிங்கு மேடை கட்டப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சௌந்திரம் இன்னும் காந்திகிராமத்திலேயே இருந்து வருகிறார் என மானசீகமாக நம்பப்படுகிறது.

98619



*காந்திகிராமத்தில் அன்னையின் நினைவுச் சின்னம்*

சௌந்திரத்துடன் பழகியவர்களும் அவரது அன்பில் திளைத்தவர்களும் சௌந்திரம் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார் என்று கூறினால் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். காரணம் சௌந்திரத்தின் அன்பு வார்த்தைகள் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. அவரது பணிகளின் பயன்கள் அவரது உருவத்தைத்தாங்கி நிற்கின்றன. அவரது தாய்ப்பாசம் இன்றும் அனைவரையும் ஒரே குடும்பமாக இயக்கிவருகிறது. அன்பே உருவாக இருந்த சௌந்திரம் இன்று தியாகச் சுடராகப் பிரகாசித்து வழி காட்டிக்கொண்டிருக்கிறார்.

தனது பிரிவின்மூலம் ஒரு பெரும் பொறுப்பை இளைய தலைமுறையினருக்கு விட்டுச் சென்றுள்ளார். அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் சுகாதாரம், அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்ற அவரது இலட்சியங்களைத் தொடர்ந்து செயல்படுத்த தன்னலமற்ற ஆண்களும் பெண்களும் முன்வரவேண்டும். அவ்வாறு செய்வோமேயானால் அதுவே அன்னை சௌந்திரத்திற்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

**வாழ்க அன்னை சௌந்திரம் ! வளர்க அவர்தம் புகழ் !!**



Deeply grieved to learn of the sudden demise of Soundaramma. Hers was a life of dedication for the cause of the nation and Gandhigram will, for centuries, be a standing monument to her services.

R. Venkataraman